T. 2315
to
2318

சிவ சிவ

திருக்குறள் பொருட்பால்

பரிமேலழகர் உரை — இலக்கணக் குறிப்பின் விளக்கம்

GOVERNMENT ORIENTAL ... LIBRARY
3 - AUG 1957
T. 2315

வெளியீடு :

குமர குருபரன் சங்கம்

ஸ்ரீவைகுண்டம் :: திருநெல்வேலி ஜில்லா

விஜய ஆண்டு, ஆவணித் திங்கள்

உ

திருப்பனந்தாள்

ஸ்ரீ காசிமடத்து வெளியீடுகள்

		ரூ.	அ.
1	விநாயகர் திருமுறை	0	1
2	ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பிரபந்தத் திரட்டு — டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் குறிப்புரையுடன்	6	0
3	சிவக்கொழுந்து தேசிகர் பிரபந்தம் ...	3	0
4	திருஞானசம்பந்தர் தேவாரம்	2	8
5	திருநாவுக்கரசர் தேவாரம்	1	0
6	சுந்தரர் தேவாரம்	1	0
7	திருவாசகம்	0	6
8	திருக்கோவையார் – பேராசிரியர் உரை ...	2	0
9	ஒன்பதாம் திருமுறை - திருவிசைப்பா, திருப்பல்லாண்டு	0	9
10	திருமந்திரம்	1	8
11	பதினோராந் திருமுறை	1	4
12	அம்மையார் – அற்புதத் திருவந்தாதி ...	0	4
13	திருக்கைலாய ஞானவுலா	0	8
14	பெரியபுராணம்	2	8
15	அகத்தியர் தேவாரத்திரட்டு குறிப்புரை ...	0	6
16	திருவிளையாடற் புராணம் ,, ...	3	0
17	தாயுமானசுவாமிகளின் பாடல் ,, ...	1	4
18	கந்தபுராணச் சுருக்கம் ,, ...	1	12
19	கந்தபுராணம் - முதல் மூன்று காண்டங்கள் ஆராய்ச்சிக் குறிப்புடன்	2	12
20	ஷை யுத்தகாண்டம், தேவகாண்டங்கள் ஆராய்ச்சிக் குறிப்புடன்	1	12
21	ஷை தக்ஷகாண்டம் - குறிப்புரை—ஆராய்ச்சிக் குறிப்புடன்	1	8
22	கந்தபுராண வசனம்	(அச்சில்)	
23	கந்தர் அலங்காரம் குறிப்புரை	0	4
24	கந்தர் அனுபூதி ஷை	0	2
25	கந்தர் கலிவெண்பா — ஆங்கிலமும் ஹிந்தியும் கூடியது	0	6
26	கந்தர் கலிவெண்பா – மூலம் மட்டும் ...	0	1
27	கந்தர் கலிவெண்பா – தி. பட்டுச்சாமி ஓதுவார் உரையுடன் கூடியது ...	(அச்சில்)	

ஸ்ரீவைகுண்டம் குமரகுருபரன் சங்கத்தார் வெளியீடு

T. 2315

உ

சிவ சிவ

திருக்குறள் – பொருட்பால்

பரிமேலழகர் உரை

இலக்கணக் குறிப்பின் விளக்கம்

*

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள்

அவர்கள் அருளாதரவு பெற்றது

*

Acc No 12848

விளக்கவுரை ஆசிரியர்

வித்துவான் திரு. வை. சுந்தரேச வாண்டையார்

திருவையாறு

*

பதிப்பாசிரியர்

வித்துவான் திரு. K. M. வேங்கடராமையா, M.A., B.O.L.,

பிரின்சிபால், செந்தமிழ்க் கல்லூரி

திருப்பனந்தாள்

உரிமைப் பதிவு] 1953 [விலை அணா 2

உண்மை அறிவு

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு

— **திருக்குறள்**

உ
சிவமயம்

முன்னுரை

சிந்திப் பரியன சிந்திப் பவர்க்குச் சிறந்துசெந்தேன்
முந்திப் பொழிவன முத்தி கொடுப்பன மொய்த்திருண்டு
பந்தித்து நின்ற பழவினை தீர்ப்பன பாம்புசுற்றி
அந்திப் பிறையணிந் தாடுமை யாறன் அடித்தலமே

— **திருநாவுக்கரசர்**

"**வள்ளுவன்** தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ் நாடு" என்று பாரதியாரால் சிறப்பிக்கப் பெற்ற **திருவள்ளுவர்** இயற்றியருளிய **திருக்குறள்** தமிழிலுள்ள அற நூல்களுள் தலைமையானதாகும். இந்நூல் மக்கள் பெறு தற்குரிய அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நால்வகைப் பேற்றையும், எக்காலத்தும் எல்லார்க்கும் ஏற்றவண்ணம் நடுவு நிலையாக எடுத்துக் கூறுவது; சாதி, மத, வேறுபாடின்றி நல் லொழுக்க முறையினை நன்கு விளக்குவது; வடமொழி, இந்தி, தெலுங்கு, ஆங்கிலம், இலத்தீன் முதலான மொழிகளிலும் மொழிபெயர்க்கப் பெற்றுளது. 'ஆலும் வேலும் பல்லுக் குறுதி, நாலும் **இரண்டும்** சொல்லுக்குறுதி' என்றும், 'பழகு தமிழ்ச் சொல்லருமை நாலி**ரண்டில்**' என்றும் சிறப்பிக்கப் பெறுத லால், இந்நூலின் பெருமையை உணரலாம்.

இந்நூலுக்குத் தருமர் முதலான பதின்மர் உரையெழுதி யுள்ளனர். அவர்களேயன்றி, நச்சினார்க்கினியர் முதலான உரையாசிரியர்கள் பலரும் இந்நூலினைத் தம் உரைகளில் பல் வேறிடங்களில் எடுத்துக் கையாண்டுள்ளனர். அவ்வுரைகள் அனைத்தினும் **பரிமேலழகர் உரையே** மிகத் திட்ப நுட்பம் பொருந்தியது; அழகிய பத சாரத்துடன் ஏற்ற இடங்களில் இலக்கணக் குறிப்புக்களையும் பெற்று விளங்குவது. இதனை "......நூலிற்–பரித்த உரையெல்லாம் பரிமேலழகன் தெரித்த உரையாமோ தெளி" என்ற ஆன்றோர் வாக்கு வலியுறுத்து கின்றது.

இத்தகைய பெருமை வாய்ந்த பரிமேலழகர், திருக்குறள் பொருட் பாலுக்கு எழுதியுள்ள உரையில் ஆங்காங்கே வரும்

இலக்கணக் குறிப்புக்களுக்குத் தகுந்த விளக்கம் காட்டி எழுதப் பெற்றதுதான் **திருக்குறள் - பொருட்பால் - பரிமேலழகர் உரை - இலக்கணக் குறிப்பின் விளக்கம்** என்ற இச்சிறு நூல் ஆகும். இவ்விளக்கங்கள் அனைத்தும் யான் என் இலக்கண ஆசிரியரா கிய புலவர் பெருந்தகை **உயர்திரு அ. கந்தசாமிப் பிள்ளை** அவர்களி டம் பெற்ற அருட்செல்வங்களாகும். யான் பெற்ற இவ்வின் பப் பேற்றினை ஏனைய தமிழ்ச் செல்வர்களும் பெற்றுச் சிறப் புறல்வேண்டும் என்ற அன்பு நோக்கங் கொண்டே இந்நூலினை **ஸ்ரீ வைகுண்டம் குமரகுருபரன் சங்கத்தார்** வாயிலாக வெளியிடத் துணிந்துள்ளேன். இச்சிறுநூல் தமிழ் வித்துவான் வகுப்பில் பயிலும் மாணவர்கட்குப் பெரிதும் துணைபுரியும் என்பது எளியேனது துணிபாகும்.

நம் பாரத நாடு முழுவதும் தங்கள் அருள் ஒளியைப் பரப் பிச் சைவ சமயத்தையும் தெய்வத் தமிழ் மொழியையும் ஏனைய பொதுநலப் பேரறங்களையும் பேணிவரும் திருப்பனந்தாள் ஸ்ரீகாசி மடத்தின் அதிபர் **ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களும்,** அவர்கள் அருள்வழி நின்றொழுகும் **வித்து வான் ஸ்ரீமத் மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அவர்களும்** எளியேனை இப்பணியில் ஈடுபடுமாறு திருவுளம் பாலித்தருளினார்கள். அவர் கட்கு எளியேன் எழுமையும் நன்றி செலுத்தும் கடப்பாடுடை யேன்.

இந்நூலினை வெளியிட முன்வந்துள்ள ஸ்ரீவைகுண்டம் குமரகுருபரன் சங்கத் தலைவர் **உயர் திருவாளர் T. M. குமரகுருபரன் பிள்ளை B.A., B.L., அவர்கட்கும்** இதனை நன்முறையில் செப்பஞ் செய்து பதிப்பித்துத்தந்த, திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரி பிரின்ஸிபால் **உயர்திருவாளர் வித்துவான் கே. எம். வேங்கடராமையா M.A., B.O.L., அவர்கட்கும்** என் நன்றி உரியதாகும்.

அடியவனை இந்நற்பணியில் புகுத்தியருளிய எம் இறைவன் ஐயாறப்பன் அடிமலர்களை என்றும் மனமொழி மெய்களால் வந்தித்து வழிபடுகின்றேன்.

திருவையாறு
20—8—1953

இங்ஙனம்

வை. சுந்தரேச வாண்டையார்

உ

செந்திலாண்டவன் துணை

திருக்குறள் - பொருட்பால்

பரிமேலழகர் உரை

இலக்கணக் குறிப்பின் விளக்கம்

—— oo ——

காப்பு

நற்குஞ் சரக்கன்று நண்ணிற் கலைஞானங்
கற்குஞ் சரக்கன்று காண்

—**திருவருட் பயன்**

392-ஆம் குறள் : அகல உரை—

"இவ்விருதிறமும் (=எண்ணும் எழுத்தும்) அறமுதற் பொருளைக் காண்டற்குக் கருவியாகலின், கண்எனப்பட்டன"— என்ற **பரிமேலழகர்** அவை கருவியாமாறு யாங்ஙனமெனலை இவ்விரு ("ஆதிமுதல்", "எழுத்தறிய்") பாடல்களாலும் விளக்குகிறார்.

ஆதி முதலொழிய அல்லா தனஎண்ணில்
நீதி வழுவா நிலைமையவான்—மாதே!
அறமார் பொருளின்பம் வீடென் றிவற்றின்
திறமாமோ எண்ணிறந்தாற் செப்பு.

இப்பாட்டின் கருத்து: மாதே! கணக்கு இன்றேல் எதனைத்தான் அறியமுடியும்? பெயரும் உருவமுமற்ற கடவுளைத் தவிரப் பிற அனைத்தும் எண்ணில் அடங்குவனவே. கணக்கு இன்றேல் அறம் பொருள் இன்பம் வீடென்றிவற்றின் திறம் அறியலாகுமோ?

எழுத்தறியத் தீரும் இழிதகைமை தீர்ந்தான்
மொழித்திறத்தின் முட்டறுப்பா னாகும்;—மொழித்திறத்தின்
முட்டறுத்த நல்லோன் முதனூல் பொருளுணர்ந்து
கட்டறுத்து வீடு பெறும்.

எண் — அறமுதற்பொருளைக் காண்டற்குரிய கருவியா மெனக்கூறி, இப்பாட்டில் எழுத்து (இலக்கணம்) கருவியாமாறு யாங்ஙனம் எனலைக் காட்டுகிறார். ஒருவன் இலக்கண நூலை அறிந்திருப்பதால், இச்சொல் இப்பொருளைக் குறித்தது, இதன் வினை முடிபு இஃது எனச் சொற்பொருளிற் சிக்கறுத்துணர் வான். உணரவே அது கருவியாக இறைவனூற் பொருளாகிய (சித்தாந்த சாத்திரக்) கருத்துக்களை உணர்வான். அதனால் கட்டறுத்து வீடு பேற்றையும் அறிவான். எனவே ஏனைய அறம் பொருள் இன்பநூற் கருத்துக்களையும் அறிய வல்லான் ஆவான். ஆகவே, எழுத்து அந்நூற் பொருள்களை அறிதற்குக் கருவியென்பது பெறப்பட்டது.

முன்னைய இரண்டும் அஃறிணைப்பன்மைப்பெயர். பின்னது உயர்திணைப் பன்மை வினை—எவை? எது?

எண் **என்ப**, எழுத்து **என்ப** என்னப்படுவன.

(என் + ப் + அ) அஃறிணைப் பன்மைப்பெயர். அகரவிகுதி பலவின்பாற் பெயர்.

கண் **என்ப** — (என்பர்) என் + ப. பகரவிகுதி பலர்பால்.

410-ஆம் குறள் : அகல உரை—

விலங்கு, நூல்—சாதிப்பெயர்.

விலங்கு — விலங்குகள். விலங்கின்வகை அனைத்தையும் கொள்க.

நூல்— நூல்கள். நூல்களின் வகையனைத்தையுங் கொள்க.

மயக்கநிரல் நிறை—விளக்கம் :

நேர் நிரல் நிறையாயின் —

உவமானம்	—	**உவமேயம்**
விலங்கு	—	கற்றார்
மக்கள்	—	கல்லார்

என் ஆகும். ஆதலால், மாறிக்கொள்ள வைத்தமையால் மயக்க நிரல் நிறையாற் பொருள் கொள்ளவைத்தார்.

உரையைக் கவனிக்க :

விலங்கை நோக்க மக்கள் எத்துணை நன்மை உடையர் அத்துணைத் தீமையுடையர், கற்றாரோடு நோக்கக் கல்லாதவர்.

415-ஆம் குறள் : அகல உரை—

'அவாய் நிலையான் வந்த உவமையடையாற் பொருளடை வருவிக்கப்பட்டது' — இதற்கு விளக்கம் :

உவமையடை — இயங்குவார் என வருவிக்கப்பட்டது. அதற்கேற்பப் பொருள் (உவமேய) அடை காவற்சாகாடு உகைப்பார் என்பது. காவற் சாகாடு உகைப்பார் என்பது அரசர்; இஃது அரசியலிலுள்ளதாதலின் அரசர்மேல் வைத்துக் கூறினார். கூறினாரேனும், அனைவர்க்கும் பொதுவாதல் கொள்ளப்படும்.

இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல் - என்பதால் ஆண்டைக்கேற்ப இயங்குவார் என்பது அவாய் நிலையான் வந்தது ஆகும். எல்லாம் மழை என்ற இடத்து **வல்லது** என்பது அவாய்நிலை ஆயினாற்போல.

425-ஆம் குறள் : அகல உரை —

'காரியங்கள் காரணமாக உபசரிக்கப்பட்டன' — இதற்கு விளக்கம் :

	காரியம்	**காரணம்**
1.	நட்பாக்குவது	ஒட்பம்
2.	மலர்தலும் கூம்பலுமின்றி ஒரு நிலையனாவது	அறிவு

ஒட்பம் காரணமாக ஒருவன் உலகத்தை நட்பாக்குவான். அறிவு காரணமாக ஒருவன் ஒருநிலையன் ஆவான் என்று சொல்ல வேண்டியதை,

ஒட்பம் — தழீஇயது எனவும்
அறிவு — மலர்தலும் கூம்பலுமில்லது எனவும்

அவற்றான் செய்வதை அவையே செய்வதாகக் கூறியதனால்.

உபசரித்தல் — ஒன்றை மற்றொன்றாகக் கூறுதல்.

474-ஆம் குறள் : அகல உரை—

"காரியத்தைக் காரணமாக உபசரித்து 'வியந்தான்' என்றார்"—இதற்கு விளக்கம் :

வியந்தான் — பகைத்தான் என்று பொருள்.

பகைத்தான் என்று சொல்லற்குரிய இடத்து **வியந்தான்** என்றது பகைத்தலாகிய காரியம் நிகழ்வது தன்னை வியத்தலாகிய காரணத்தால் ஆகின்றமையின் காரியம் காரணமாக உபசரித்துக் கூறப்பட்டது.

வியத்தல் — காரணம்.
பகைத்தான் — காரியம்.

475-ஆம் குறள் :

பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின்—

என்ற குறளின் அகல உரை. "இது **பிறிதுமொழிதல்** என்னும் அலங்காரம். இதை நுவலா நுவற்சி, ஒட்டு என்பாரும் உளர்".

இதற்கு விளக்கம் :

பிறிது மொழிதல்—உவமானத்தைச் சொல்லி அதுகொண்டு உவமேயத்தை(ச் சொல்லாமலே) பெற வைப்பது.

"நுனிக்கொம்பர்"—476-வது குறள்,

"இளைதாக முண்மரம்"—879-வது குறள், இவற்றிலும் காண்க.

இவ்வணியை ஒட்டு என்பர் **தண்டி ஆசிரியர்.** நுவலா நுவற்சி என்பதும் இதற்குப் பெயர்.

478-ஆம் குறள் : அகல உரை—

'இட்டிதெனவும், அகலாதெனவும் வந்த பண்பின் தொழில்கள் பொருள்மேல் நின்றன' – இதற்கு விளக்கம் :

பொருள் சிறுகி வருவதாயினும் கேடில்லை, அது பொருள் பெருகச் செலவழியாதெனின் என்பது கருத்து.

பண்பு	தொழில்
அளவு	இட்டிதாயினும்
அளவு	அகலாத கடை
	அளவு – (திரவியம்) பொருள்

487–ஆம் குறள் : அகல உரை—

பொள்ளென என்பது குறிப்புமொழி. வேரார் வேர்ப்ப ரெனக் காரணத்தைக் காரியமாக உபசரித்தார்'—இவற்றிற்கு விளக்கம் :

'பொள்ளென – அவர் அறிய என்பது' உரை. அச்சொல் லுக்கு அப்பொருள் இடத்தை ஒட்டிக் குறிப்பாகக் கொள்ள வேண்டிய தாயிற்று. வேரார் – வெகுளார் என்னும் பொருட்டு. வெகுளி காரணமாக வியர்வை (காரியம்) நிகழும். கோபிப்பார் என்னுங் காரணத்தை வேர்ப்பார் என்ற காரியத்தாற் கூறியது உபசரிப்பு.

498-ஆம் குறள் : அகல உரை—

'ஊக்கத்தின் அழிவு உடையான் மேல் ஏற்றப்பட்டது'— இதற்கு விளக்கம் :

உறுபடையானுடைய ஊக்கம் அழிந்துவிடும் என்பது கருத்து. அங்ஙனங்கூறின் எழுவாய்க்கேற்ற பயனிலை இல்லையாகி வழுவாகும். எப்படியெனின் உறுபடையான் என்பது எழுவாய். அதற்கேற்ப ஊக்கமழிவான் என்றுதான் கூறல் வேண்டும். செல்லிடம் சேர்பவன் யாவன், அவன் அழிவான் என்க. உரை யில் அழியும் என்பதற்கு அழிவான்'' என்று பொருள். ''உறு படையான் ஊக்கம் அழிவான் என்று வருவதே முறை; வழுவா மையுமாகும். ஆனல் அழிவது ஊக்கம்; அதனல் ஊக்கம் அழி யும் என்னுமல், ஊக்கமழிவான் என்று கூறினர்.

503-ஆம் குறள் : அகல உரை—

'காட்சியளவையாற் றெரிந்தால் அதுவுமில்லாதாரே தெளி யப்படுவரென்பது **குறிப்பெச்சம்**' — இதற்கு விளக்கம் :

51-ஆம் அதிகாரம்—தெரிந்து தெளிதல் :

அஃதாவது அமைச்சர் முதலாயினாரை அரசன் ஆராய்ந்து தெளிவது. (=வேலைக்கு வைத்துக்கொள்வது) 503. கருத்து — எத்தகையாரிடத்தும் ஓரோர் குறை இருந்தே தீரும். அரசன் ஓர் ஆளை (உத்தியோகஸ்தனை)த் தேருமிடத்து வெளிப்படையாகவே அவனிடத்துக் குற்றங் காணப்படின் அவனை ஒழிக்க வேண்டுமென்பது எச்சம்.

காட்சியளவையால் தெரிதல் — நேராகவே குற்றங் காணப்படுதல். அக்குற்றமில்லாதாரையே தேர்க என்பது பாட்டில் இன்மையால் இஃது எச்சம்.

521-ஆம் குறள் : அகல உரை—

சிறப்பும்மை வறியனாயவழி பாராட்டப்படாமை விளக்கி நின்றது.

சிறப்பு என்பது உயர்வு, இழிவு என்னும் இரண்டிற்கும் பொது. நன்னூல் சூத்திரமும், தொல்காப்பியச் சூத்திரமும் இடையியல்களிற் காண்க.

548-ஆம் குறள் : அகல உரை—

'எண்பதத்தா னென்னும் முற்றுவினையெச்சமும், ஓரா என்னும் வினையெச்சமும் செய்யாவென்னும் பெயரெச்ச எதிர் மறையுட் செய்தல் வினைகொண்டன.'

இவைகளுக்கு விளக்கம் :

வந்தனன் பெயர்ந்தான் — வந்து பெயர்ந்தான் என்பது முற்றுவினையெச்சம்.

எண்பதத்தானாகி—ஓர்தல் வேண்டும் என்று தழுவவில்லை ; எண்பதத்தானாகி ஓர்ந்து முறை செய்தல் வேண்டும் என்று தழுவுகிறது.

செய்யா என்பதனுட் செய்தல் வினைகொண்டது — என்பதன் விளக்கம் :

எண்பதத்தானாகி — ஓர்ந்து முறை **செய்**தல் வேண்டும். அங்ஙனம் **செய்**யாத அரசன் கெடும் என்பதாம்.

576-ஆம் குறள் : அகல உரை—

'ஓடாதவென்புழிச் சினைவினை முதன்மேனின்றது'—இதற்கு **விளக்கம் :**

கண் — சினை. அதன் தொழில் ஓடுதல். அஃதுடையார் முதல்.

ஓடாத — கண் என்றிருப்பின் சினைவினை, சினை வினை மேலேயே நின்றதாம்.

ஓடாத-**வர்** என்று வந்தமையால் ஓடுதலாகிய தொழில் முதல்மேல் நின்றதாம்.

643-ஆம் குறள் : அகல உரை—

'தகையவாய் என்பதற்கு எல்லாருந் தகுதியையுடையவாய் என்றுரைத்தார்; அவர் அப்பன்மை மொழிவதென்னும் ஒருமை யோடு இயையாமை நோக்கிற்றிலர்'—இதற்கு விளக்கம் :

தகை – அவாய் – என்று கூறுவது பரிமேலழகர் உரை. தகைய – ஆய் – என்பது பிறர் கூறுவது.

மொழிவது – சொல் – என்னும் ஒருமை முடிபு சரி. தகைய ஆய் – மொழிவது என்பது வழு. தகைய – தகையன.

அவர் கருத்துச் சரியாயின் மொழிவன என்றிருத்தல் வேண்டும்.

653-ஆம் குறள் : அகல உரை—

'செய்யென்னும் முதனிலைத் தொழிற் பெயர் மாற்றப்பட்டது. அன்றிச் செய்வினையென வினைத்தொகை ஆக்கிய வழிப் பொருளின்மை அறிக'.

இவற்றிற்கு விளக்கம் :

செய்தல் – விகுதி பெற்ற தொழிற் பெயர். செய் – முதனிலையே நின்று தொழிற்பெய ருணர்த்தினமையின் முதனிலைத் தொழிற் பெயர். செய் – செய்தல்.

செய்வினை – வினைசெய்தல் எனமாற்றப்பட்டது. செய்வினை என்பதை மாற்றுமற் கொண்டால் அது வினைத் தொகை ஆகும்.

ஆக்கினல் அதனுல் பொருள் வேறு இல்லை. ஒளிமாழ்கும் வினை என்பதைத் தவிர வேறு வினையின்மையின்.

660-ஆம் குறள் : அகல உரை—

‘அவர் அவை தன்வினையும் பிறிதின் வினையுமாய் உவமை இலக்கணத்தோடு மாறுகோடல் நோக்கிற்றிலர்’—இதற்கு விளக்கம் :

பொருள் செய்தல் — அமைச்சன் வினை.
ஏமம் ஆர்தல் — அரசன் வினை.
ஏமம் ஆர்த்தல் — அமைச்சன் வினை.

உவமானம்	**உவமேயம்**
பசுமட்குடம்	அரசன்
நீர்	பொருள்
இரீயமை	ஏமமார்த்தல்

i. தன் வினையும் பிறிதின் வினையுமாய் மாறுகோடல் அமைச்சன் பொருள் செய்து அரசனுக்கு ஏமம் உண்டாக்குதல் என்பது **வழாநிலை.** இது பரிமேலழகர் கூற்று.

இவ்வாறன்றி அமைச்சன் பொருள் செய்து அரசன் மகிழ்தல் என்று கொண்டால் (பிறர் கூற்று) **வழு.** எங்ஙனமெனின் செய்து என் வாய்பாட்டுவினையெச்சம் தன் கர்த்தாவின் வினையே கொண்டு முடியுமல்லது பிற கர்த்தா வினையைக் கொண்டு முடியாதாகலான். “முதலில் நான்கும் ஈற்றில்மூன்றும் வினைமுதல் கொள்ளும்” (நன்னூல்-344) என்ற சூத்திரவிதிக்கு மாறுகும்.

ii. உவமை இலக்கணத்தோடு மாறுகொளல் : ஏமமார்த்தல் என்பது உவமேயம். (ஏமமார்த்தல் – பாதுகாவல் செய்தல்) அதற்கு உவமானமும் பசுமட்குடத்துக்குப் பாதுகாவல் செய்தல் (போலும்) என இருக்க வேண்டும், இது பரிமேலழகர் உரை.

இவ்வாறன்றி அரசனுக்கு ஏமமார்த்தல் – குடத்தில் **நீர் வைத்தது** போலுமென்றால், (பிறர் கூற்று) உவமை இலக்கணம் மாறுபடும்.

689–ஆம் குறள் : அகல உரை—

'வாய்சோரா எனக் காரியங் காரணத்துள் அடக்கப்பட்டது'. வாய்சோரா – சொல்லாத – என்று பொருள். வாய் சோர்தல் வேறு. சொல்லுதல் வேறு.

வாய்சோர்தல் காரணம் – அது காரணமாகச் சொல்லுதலாகிய காரியம் நிகழும்.

சொல்லாத – என்றுரைக்கவேண்டியதற்கு **வாய் சோராத** என்றுரைத்தமையால் காரியங்காரணத்துள் அடக்கப்பட்டது.

708-ஆம் குறள் : அகல உரை—

'உணர்வாரெனக் காரியத்தைக் காரணமாக்கிக் கூறினர்' இதற்கு விளக்கம் :

உணர்வார் என்பதற்குத் தீர்ப்பார் என்று பொருள் கூறினர். உற்ற குறையை யுணர்தல் — காரணமாக அதனைத் தீர்த்தல் ஆகிய காரியம் நிகழும்.

உற்றது தீர்ப்பார் எனக் கூறவேண்டியதற்கு, உற்றதுணர்வாரெனக் கூறியது காரியத்தை (த்தீர்ப்பதை) (உணர்வாரென) க்காரணமாக்கிக் கூறியதாம்.

711-ஆம் குறள் : அகல உரை—

செஞ்சொல் — நேரே பொருளுணர்த்துபவை. மாடு, மரம் என்பன, அவ்வப்பொருளை யுணர்த்தல்

இலக்கணச்சொல் — ஆகுபெயர் போல்வது. ஊர் அடங்கிற்று—இதில் ஊர் என்னும் சொல்.

குறிப்புச்சொல் – பாயாவேங்கை–வேங்கை மரம்; பறவாக் கொக்கு – மாமரம் போல்வன.

செம்பொருள் இலக்கணப்பொருள் குறிப்புப்பொருள்	மேற்கூறிய சொற்களின் பொருளே இதற்கும் கொள்க. இவை சொல்லும் பொருளுமாம் வேறுபாடு காண்க.

720-ஆம் குறள் : அகல உரை—

'கொள் என்னும் முதனிலைத் தொழிற்பெயர் முன்னின்று, பின் எதிர்மறை அல் விகுதியோடு கூடி மகனெனல் என்பது போல் நின்றது'—இதற்கு விளக்கம் :

கொளல் — கொள்ளுதலைச் செய்யற்க.

கொள் + அல் — கொளல்.

கொள் — முதனிலைத் தொழிற்பெயர்.

கொள் — முன்னிற்றலாவது கொள்ளுதல் என நிற்பது. அதன்பின் எதிர்மறை அல் விகுதியோடு கூடிநிற்றல். கொளல் — கொள்ளேல் என நிற்பது. இங்கு அல்விகுதி எதிர்மறை வியங் கோளில் வந்தது என்பார், ஆட்சி வாயிலாக 'மகனெனல்' போல நின்றதென்றனர். மகனெனல் - மகனென்னற்க. (196-ஆம் குறள்)

725-ஆம் குறள் : அகல உரை—

வாதம் – உண்மையுணர்தல் வேட்கையோன் கூறுவது.

செற்பம் – சாதனமிரண்டுள்ளதன் கண் வெல்லும் வேட்கையுடையோன் கூறுவது.

விதண்டை – தன் கோட்பாட்டை நிலைபெறுத்தாத (ஸ்தாபிக்கமாட்டாத) கூற்று.

சலம் – ஒரு கருத்துப்பற்றிக் கூறிய மொழிக்கு வேறு பொருள் படைத்து இட்டுக்கொண்டு பழித்தல்.

சாதி–போலியுத்தரம் (விடை). இவை தர்க்க சங்கிரகத்துக் காண்க.

771-ஆம் குறள் : அகல உரை—

படைச்செருக்கு :

இப்பாட்டு நெடுமொழி வஞ்சி. இதற்கு விளக்கம் :

தன் ஆண்மையையேனும், தன் தலைவனது ஆண்மையை யேனும், ஒரு வீரன் (பகைஞர் போரில்) கூறுவது நெடுமொழி

வஞ்சியாம். இங்கே தலைவனது ஆண்மை கூறப்பட்டது. 'ஒன்னுதார் படைகெழுமித் தன்னுண்மை எடுத்துரைத்தன்று' என்பது புறப்பொருள் வெண்பாமாலைக் கொளு.

772–'கானமுயல் எய்த' } இவை இரண்டும் தழிஞ்சி;
773–'பேராண்மை என்ப' } இவற்றிற்கு விளக்கம்:

தழிஞ்சியாவது தன்னோடு பொரமாட்டாது புறங்கொடுத்தோடுவான்மேற் படை செலுத்தாமை.

772–கானமுயலெய்த அம்பு – என்பது மட்டும் தழிஞ்சி. அதன் உரையைக் கவனித்தால் மட்டும் விளங்கும். "இது மாற்றரசன் படையொடு பொருதானோர் வீரன்" அது புறங் கொடுத்ததாக நாணி" என்பதாற் காண்க.

773-ஆம் பாட்டு முழுவதும் தழிஞ்சி.

788–ஆம் குறள்: அகல உரை—

'உடையவன் தொழில் நட்பின் மேல் ஏற்றப்பட்டது'— இதற்கு விளக்கம்:

உடையவன் – நட்புடையவன். அவன் தொழில் இடுக்கண் களைவது.

இடுக்கண் களைபவனே நண்பன் என்றபாலது – இடுக்கண் களைவது நட்பு என்றமையால் உடையவன் தொழில் நட்பின் மேல் ஏற்றப்பட்டமை அறிக.

796–ஆம் குறள்: அகல உரை—

'இஃது ஏகதேச உருவகம்'—இதற்கு விளக்கம்:

கிளைஞராகிய **புலங்களைக்** கேடாகிய **கோலால்** அளந்தறியலாமெனின் முற்றுருவகமாகும். அங்ஙனமில்லாமல் கிளைஞரைக் கேடாகிய **கோலால்** அளந்தறியலாமென (இருபாலும் வாராமல்) ஒரு (பால்) பக்கம் வருதலால், ஏகதேச உருவகம்.

இவ்வாறே உரனென்னுந் **தோட்டியான்** ஐம்பொறி (களாகிய **யானையைக்** காப்பான் என்னுமல்) காப்பான் என்றதும் ஏகதேச உருவகம். திருக்குறள்–24.

821-ஆம் குறள் : அகல உரை—

பட்டடை — தட்டான்பட்டடை. பேச்சுவழக்கில் பட்டரை என வழங்கும்.

பட்டடை உருவம்:



இதனைத் தட்டான் உலைக்களத்துப் பொன் வேலை செய்யுமிடத்துக் காண்க.

861-ஆம் குறள் : அகல உரை—

“ வலியார்க்கு மாறேற்றல் ஓம்புக ; ஓம்பா
மெலியார்மேல் மேக பகை ”—‘ சிங்கநோக்காகிய இதனுள் பகைமாட்சி பொது வகையாற் கூறப்பட்டது ’—இதில் சிங்க நோக்கு எவ்வாறு ?

இதற்கு விளக்கம் :

வலியார், மெலியார் என்னும் இருதரத்தார்க்கும் இடைப்பட்ட தரமுடையார் ஏனை இருதிறத்தார் கண்ணும் செயற்பாலன இவையென்கின்றமையின் இத்திருக்குறள் **சிங்க நோக்கு.**

872-ஆம் குறள் : அகல உரை—

“ வில்லேர் உழவர் பகைகொளினும் கொள்ளற்க ;
சொல்லேர் உழவர் பகை”—இதை ‘ உருவக விசேடம் ’ என்கிறார். இதற்கு விளக்கம் :

உருவக விசேடம் — உருவகத்தில் ஒருவகை.

விசேடம்-என்பதற்கு வகை என்று பொருள் (Kind ; Sort)

கிளி — பறவை விசேடம். புலி — மிருக விசேடம் என்பன போல. மிருக விசேடம் — ஒருவகை மிருகம்.

888-ஆம் குறள் : அகல உரை—

"உரத்தின் தொழிலாயினும் குடிமேலேற்றுதலின் வினை முதல் வினையாயிற்று "—இதற்கு விளக்கம் :

வினையெச்சம் தன் கருத்தா வினை (வினைமுதல்வினை) கொள்வனவும், பிற கருத்தா வினை கொள்வனவும் உண்டு.

பொருது — செய்தென் வாய்பாட்டு வினையெச்சம். இது தன் கருத்தா வினை (வினைமுதல்வினை) கொள்ளவேண்டும்.

பொரப்பட்டு, உரம் தேயும் என்றுள்ளது. குடி உரம் தேயும் என்பதில், குடி – எழுவாய். தேயும் – பயனிலை.

பொரப்படுவது – உரம்; தேய்வதுவும் அஃதே. உரம் பொரப்பட்டுக் குடிதேயும் – என்றால் பிறகருத்தாவினை கொண்டதாக முடியும். முடியவே செய்தென் வினையெச்சம் வினைமுதல் வினையையே கொள்ளும் என்பதனோடு மாறுபடுகிறது. அது மாறுபடாவண்ணம் தன் கருத்தாவினையையே கொண்டதென்பார் உரத்தின்றொழில் குடிமேலேற்றப்படினும் (குடிதேயும் எனினும்) தேய்வது உரமே.

அது 'குடிவலிதேயும்' என்ற உரையாலறிக.

498-ஆம் குறள் உறுபடையான் ஊக்கம் அழிந்து விடும் : ஒப்பு நோக்குக.

1029-ஆம் குறள் : அகல உரை—

" இடும்பைக்கே கொள்கலம் கொல்லோ குடும்பத்தைக்
குற்றம் மறைப்பான் உடம்பு" என்ற குறளின் அகல உரை—
' இது குறிப்புமொழி '— இதற்கு விளக்கம் :

குடும்பத்தைக் குற்றம் மறைத்தலாகிய கருமமே கண்ணுயினுன், தனக்கெய்தும் மெய்வருத்தம், பசி, கண்துஞ்சல் முதலிய துன்பத்தை நோக்கான்-என்பது சொல்லப்படும் பொருள். அப்பொருள் குறிப்பால் தோன்றக் கூறியமொழி ' இடும்பைக்கே கொள்கலம் ' என்பது ஆகலின், அது குறிப்பு மொழி. மேல் 338-ஆம் குறள் உரையிலும் நட்பு குறிப்பு மொழி என்றதூஉம் காண்க.

1030-ஆம் குறள் :

"இடுக்கண்கால் கொன்றிட வீழும் அடுத்தூன்றும்
நல்லாண் இலாத குடி"—என்ற குறளின் அகல உரை—
இது குறிப்பு உருவகம்' – இதற்கு விளக்கம் :

உருவகம் : உவமையை மாற்றியுரைப்பது உருவகம்.

உ–ம் : குரங்கு **போன்ற** மனம். இஃது உவமை. (போன்ற உருபு)

இதை மாற்றினால் மனமாகிய குரங்கு – இஃது உருவகம். (ஆகிய, என்னும் முதலியன உருவக உருபுகள்.)

i. **முற்றுருவகம், ii. ஏகதேச உருவகம், iii. குறிப்பு உருவகம்** (பிறவும் உள) என்னும் மூன்றைப் பார்ப்போம்.

i. மனமாகிய குரங்கு துன்பமாகிய கனியை நுகர்கிறது. இங்குக் கூற எடுத்துக் கொண்ட இரு பொருளும் உருவகிக்கப் பட்டிருப்பதனால், **முற்றுருவகம்,** திருக்குறள் 1251—"காமக் கணிச்சி" போல.

ii. மனமாகிய குரங்கு துன்பத்தை நுகர்கிறது.

இங்கே கூற எடுத்துக்கொண்ட இருபொருளில் ஒரு பொருள் மட்டும் உருவகிக்கப்பட்டமையால், **ஏகதேச உருவகம்.** திருக்குறள் 24—"உரனென்னுந் தோட்டி"

iii. குறிப்பு உருவகம் :

இரண்டொரு சொற்களை மட்டுங் கூறி அதற்கேற்ப ஏனையனைத்தையும் உருவகமாக உய்த்துணர்ந்து கொள்ளவைப்பது.

இடுக்கண்கால்...வீழும். ஊன்றும்...குடி.

இங்கே : கால் – அடிமரம்.

வீழ்தல் – மரத்தின் செயல்.

ஊன்றுதல் – விழாமல் தாங்குவது.

இந்த மூன்று குறிப்புக்களை வைத்துக்கொண்டே குடியை மரமாக உருவகிக்க வேண்டியிருத்தலின், இது **குறிப்பு உருவகம்** ஆயிற்று.

வருமாறு: இடுக்கணாகிய குந்தாலி புகுந்து வெட்டிச் சாய்க்க வீழும்; அதைத் தாங்கும் நல்லாண் மகனாகிய முட்டுக் கட்டையில்லாத குடியாகிய மரம்.

1068-ஆம் குறள்: அகல உரை—

" இரவென்னும் ஏமாப்பில் தோணி கரவென்னும்
பார்தாக்கப் பக்கு விடும்—"

இஃது அவயவ வுருவகம் என்கிறார். இதற்கு விளக்கம்:

வறுமையாகிய கடல் என வறுமையைக் கடலாக உருவகிக்க வேண்டியது. அதுதான் அவயவி. குறளில் அவ்வாறு உருவகி யாமல் அவயவியை விடுத்து அதற்கு அவயவமாகிய இரவு, தோணி, கரவு, பார் என இவற்றை உருவகித்துள்ளமை காண்க.

முற்றிற்று

உ

"குமர குருபரன்"

[தமிழ்த் திங்கள் வெளியீடு]

ஸ்ரீ வைகுண்டம்

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் மடாலயத்திலிருந்து
விரோதி ஆண்டு தை மாதம் முதல்
மாதந்தோறும் வெளிவருகிறது

★

சைவசித்தாந்தம், ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள்
பிரபந்தம், பன்னிரு திருமுறை ஆராய்ச்சி,
இலக்கியம், பிறமொழிகள், கலாசாரம்
சம்பந்தமான கட்டுரைகள் கொண்டது

★

T. M. குமரகுருபரன் பிள்ளை, B.A., B.L.,
நிர்வாக ஆசிரியர் 'குமரகுருபரன்'
மானேஜிங் டிரஸ்டி, ஸ்ரீ குமரகுருபரசுவாமிகள் மடம்
(நிரந்தரத் தலைவர் குமரகுருபரன் சங்கம்)
ஸ்ரீவைகுண்டம்

வருட சந்தா ரூ. 1-8-0 — தனிப்பிரதி 0-2-0

		ரூ.	அ.
28	நீதிநெறி விளக்கம் – ஆங்கிலம், ஹிந்தி ...	0	8
29	சகலகலா வல்லி மாலை – ஆங்கிலமும் ஹிந்தியும் கூடியது	0	1
30	அபிராமி அந்தாதி - கி. வா. ஜ. குறிப்புரையுடன் கூடியது	(அச்சில்)	
31	சிவஞான சித்தியார் – ஆங்கிலமும் ஹிந்தியும் கூடியது	5	0
32	ஷை ஹிந்தி மட்டும்	1	0
33	திருக்குறள் - அறத்துப்பால்–ஹிந்தி மொழிபெயர்ப்பு	1	8
34	ஷை பொருட்பால் ஷை ஷை ...	2	8
35	ஷை காமத்துப்பால் ஷை ஷை ...	1	0
	ஷை மூன்று புத்தகங்களும் சேர்த்து ...	4	0
36	திருக்குறள் – கே. எம். வேங்கடராமையா, M.A., B.O.L. அவர்கள் – குறிப்புரையுடன் ...	0	12
37	முதுமொழிமேல் வைப்பு - ஸ்ரீவெள்ளியம்பலவாணத் தம்பிரான் சுவாமிகள்	0	7
38	திருவுசாத்தானக் கல்வெட்டுகள்	0	6
39	கந்தர் கலி வெண்பா, மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், மதுரைக் கலம்பகம், நீதிநெறி விளக்கம், மீனாட்சியம்மை குறம் முதலியன ..	2	12
40	திருவாரூர் நான்மணிமாலை – முத்துக்குமாரசுவாமி பிள்ளைத் தமிழ் ...	1	4
41	சிதம்பர மும்மணிக்கோவை – சிதம்பரச் செய்யுட் கோவை – தில்லைச் சிவகாமியம்மை இரட்டைமணி மாலை ...	1	0
42	பண்டார மும்மணிக் கோவை – காசிக் கலம்பகம் - சகலகலாவல்லி மாலை ...	1	0
43	தமிழிசைப் பாக்கள் ...	0	8

கிடைக்குமிடங்கள் :

1. **ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள், கலைக்கோயில், ஸ்ரீவைகுண்டம்.**
2. **தியாகராச விலாஸ், திருவல்லிக்கேணி, சென்னை.**

குறிப்பு: ஷை விற்பனைத்தொகை 'குமரகுருபரன்' பத்திரிக்கையைச் சாரும்.

இந்நூல் கிடைக்குமிடம்:

திரு. T. M. குமரகுருபரன் பிள்ளை, B.A., B.L., அவர்கள்

நிரந்தரத்தலைவர்

குமர குருபரன் சங்கம்

ஸ்ரீவைகுண்டம்

திருநெல்வேலி ஜில்லா.

திருச்சிராப்பள்ளி யுனைடெட் பிரிண்டர்ஸ் லிமிடெட், திருச்சி.

உ

செந்திலாண்டவன் துணை

T.23/6

திருவிசைப்பா

திருப்பல்லாண்டு

GOVERNMENT ORIENTAL MANUSCRIPTS ...
3-AUG 1957
MADRAS

ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள்
261-ம் ஆண்டு (13-6-49) நினைவு வெளியீடு

ஸ்ரீ காசி மடம் : திருப்பனந்தாள்

1949

உ

செந்திலாண்டவன் துணை

GOVERNMENT ORIENTAL MANUSCRIPTS
3-AUG 1957

ஒன்பதாந்திருமுறையாகிய

திருவிசைப்பா, திருப்பல்லாண்டு

T. 2316

இவை

திரு. வி. மு. சுப்பிரமணிய ஐயரவர்கள் B.O.L.,

எழுதிய குறிப்புரையுடன்

திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்துத் தலைவர்களாகிய

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருணந்தித்தம்பிரான் சுவாமிகள்

அவர்களுடைய கட்டளையின்படி

Acc No 128

மகாமகோபாத்தியாய

டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள்

குமாரர்

எஸ். கலியாணசுந்தரையரால்

சென்னை,

கபீர் அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பெற்றன.

விரோதி வருஷம், வைகாசி மாதம்.

உரிமைப்பதிவு] [ஜூன் 1949

திருச்சிற்றம்பலம்.

திருவிசைப்பா அருளிச்செய்த ஒன்பதுநாயன்மார் திருநாமமும் திருப்பதிகவகையும பண்ணின் வகையுந் தெரிவுமடைவும்.

செம்பொன்மணியம்பலத்துநிருத்தனார்க்குத்
திருவிசைப்பாவுரைத்தவர்தந்திருப்பேர்சொல்லிற்
பம்புபுகழ்செறிதிருமாளிகைமெய்த்தேவர்
பரிவுடையசேந்தனார்கருவூர்த்தேவர்
நம்பிகாடவர்கோனற்கண்டராதித்தர்
நன்குயர்வேணாட்டடிகடிருவாலியமுதர்
அம்புவியோர்புகழ்புருடோத்தமர்சேதிராய
ராகவிவரொன்பதின்மர்தாமுறைகண்டடைவே. (௧)

அடைவுறுமாளிகைத்தேவர்*நான்குசேந்த
ரன்புறுபல்லாண்டொன்றோடிசைப்பாமூன்று
திடமுடையகருவூரார்பத்துவீறிற்
சிறந்தகாடவரிரண்டுகண்டர்வேணாடர்
படிபுகழொவ்வொன்றுதிருவாலிநான்கு
பன்னுபுருடோத்தமனாரிரண்டுசேதிராயர்
உடையதிருக்கடைக்காப்பொன்றாகவிருபத்தொன்
பானோதுசெய்யுண்முந்நூற்றறுபதினோடைந்தே. (௨)

ஐந்துடனால்வருமுறைத்ததிருக்கடைக்காப்பிற்பண்
ணறையின்மாளிகைத்தேவர்†நான்கிலொன்றுகாந்தாரம்
முந்துகருவூரர்பத்தினிரண்டுபுறநீர்மை
மொழிந்திடுகாந்தாரமொன்றுகாடவர்கோனிரண்டின்
நந்தலில்சாளரபாணியொன்றுவேணாட்டடிக
ணவின்றதொன்றுபுறநீர்மைதிருவாலியமுதர்
பந்தமறச்சொன்னான்கினொன்றுநட்டராகம்
பகர்ந்திடினொன்றிந்தளமற்றெவையும்பஞ்சமமே. (௩)

சில திருப்பதிகங்களிலே
சில திருப்பாட்டுக்கள் இறந்துவிட்டன.

(பி-ம்.) * நாலு † நாலி

உ

செந்திலாண்டவன் துணை

முகவுரை

சைவத் திருமுறைகளுள் ஒன்பதாந் திருமுறையாக விளங்குவது திருமாளிகைத்தேவர் முதல் சேதிராயர் என்பவர் இறுதியாக உள்ள ஒன்பதின்மர் இயற்றிய திருவிசைப்பாவும் சேந்தனார் இயற்றிய திருப்பல்லாண்டும் அடங்கிய தொகுதியாகும். திருவிசைப்பா திருவிசைப் பாமாலையென்றும் வழங்கி வந்தது; இது திருமுறை கண்ட புராணம், 26-ஆம் செய்யுளால் அறியப்படும். இவற்றால் பாடப்பட்ட தலங்கள்: கங்கைகொண்ட சோளேச்சரம், தஞ்சையிராசராசேச்சரம், திருக்களந்தையாதித்தேச்சரம், திருக்கீழ்க்கோட்டூர் மணியம்பலம், திருச்சாட்டியக்குடி, திருப்பூவணம், திருமுகத்தலை, திருவாரூர், திருவாவடுதுறை, திருவிடைக்கழி, திருவிடைமருதூர், திருவீழிமிழலை, திரைலோக்கிய சுந்தரம், தில்லை (சிதம்பரம்) என்பன. இவற்றுட் பதினாறு பதிகங்கள் சிதம்பரத்துக்கு உரியன. இவை ஆதித்த சோழன் காலம் முதல் கங்கைகொண்ட சோழன் காலம் முடிய இயற்றப்பெற்றவை. கருவூர்த்தேவர் கங்கை கொண்ட சோளேச்சரத்தைப்பற்றிப் பாடியிருப்பதால் இஃது அறியப்படும்.

தேவாரத் திருமுறைகளைக்கண்டுபிடித்து அவற்றை ஏழாக வகுத்துத் தஞ்சை இராசராசேச்சரத்தில் ஓதும்படி நிவந்தம் அமைத்த முதலாம் இராசராசன் காலத்தே இவை சிறப்புற்றிருந்தனவென்பது, அவனால் தஞ்சைப் பெருவுடையார் கோயிலிற் பணிவிடையின் பொருட்டு நியமிக்கப்பட்ட தளிச்சேரிப்பெண்டுகளிற் சிலர் தரித்

திருந்த பெயர்களாகிய 'நீறணிபவளக் குன்றம்', 'எடுத்த பாதம்', 'மழலைச்சிலம்பு' என்பவற்றால் விளங்கும். இவை முறையே திருமாளிகைத் தேவரது திருவிசைப்பா முதற்பதிகத்து ஆறும் திருப்பாட்டிலும், திருவாலியமுதனார் இயற்றிய மூன்றும் பதிகத்து ஐந்தாம் திருப்பாட்டிலும் உள்ளன.

திருவிசைப்பாச் செய்யுட்களில் பல அருஞ் சொற்கள் காணப்படுகின்றன. திருவிடைக்கழி முருகப் பெருமான்மீது பாடப்பட்ட ஒரு பதிகமும் உள்ளது. சில திருவிசைப்பாக்கள் அந்தாதித்தொடையாக உள்ளன. இவற்றின் மூலங்கள் எந்தையாரவர்கள் பிரதிகளோடு ஒப்பிடப்பெற்றுத்திருத்தப்பெற்றுள்ளன.

பாராயணத்துக்குரிய ஒன்பதாந் திருமுறையாகிய திருவிசைப்பாவும் திருப்பல்லாண்டும் தமிழ்நேசர்கள் யாவரும் படித்துப் பெரும்பயனுறவேண்டுமென்னும் சிறந்த கருத்துடன் இவற்றைக் குறிப்புரையுடனும் ஆசிரியர் வரலாற்றுடனும் ஸ்ரீ ஆதி குமரகுருபரசுவாமிக ளுடைய நினைவுமலராக வெளிவரும்படி இப்போது திருப்பனந்தாள் காசிமடத்தில் இருபதாம் பட்டத்தில் எழுந்தருளி விளங்கும் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருணந்தித் தம் பிரான் சுவாமிகளவர்கள் ஏற்பாடு செய்திருப்பது தமிழ்மக்கள் யாவராலும் பெரிதும் போற்றத்தக்கது.

இவர்கள் பட்டத்துக்கு வந்தது முதல் நாளது வரை யில் தமிழ்மொழி, தேவாரத்திருமுறைகள், சைவசித்தாந் தம், வைத்தியம், ஜீவகாருண்யம், கல்வி, பொது நன்மை, அன்னதானம் முதலியவை சம்பந்தமாக அவ்வப்போது ஏற்படுத்தியுள்ள பேரறக் கட்டளைகளின் சுருக்கமான விவரங்கள் யாவரும் அறிந்து மகிழும்படி இப்புத்தகத் தின் அனுபந்தமாக வெளியிடப்பெற்றுள்ளன.

இவர்களுடைய திருமேனியாரோக்கியத்தையும் தீர்க் காயுளையும் குறித்து ஸ்ரீ செந்திலாண்டவன் திருவடிகளை இறைஞ்சுகின்றேன்.

திருப்பனந்தாள் காசிமடத்து, ஆயிரம் ரூபா தமிழ்ப் பரிசை முதன்முறை பெற்றவரும், சென்னை, கிறிஸ் தவக் கல்லூரி உயர்நிலைப்பள்ளியில் தமிழாசிரியருமாக உள்ள ஸ்ரீமான் வி. மு. சுப்பிரமணிய ஐயர் அவர்கள் B.O.L., இந்நூலுக்கு ஆசிரியர் வரலாற்றையும் குறிப் புரையையும் எழுதித் கொடுத்துதவினார்கள். அவர் களுக்கு என்மனமார்ந்த நன்றியைச் செலுத்துகின்றேன்.

இந்நற்காரியத்தில் நான் ஈடுபடும்படி நேர்ந்ததை ஒரு பெரும் பேறாக மதிக்கின்றேன்.

விரோதி ஸ்ரீ வைகாசிமீ ௩௧-ம் வ } இங்ஙனம் S. கலியாணசுந்தரம்

நூலாசிரியர்களைப்பற்றிய குறிப்புக்கள்

க. திருமாளிகைத் தேவர்: இவர் திருவிசைப்பா இயற்றிய ஒன்பதின்மர்களுள் ஒருவர்; போகரென்னும் சித்தருடைய மாணுக்கருள் ஒருவரென்பர்; இவர் திருவாவடுதுறையில் வாழ்ந்து வந்தவர்; நாரசிங்கனென்னும் கொடிய அரசனொருவனை வெல்லும்பொருட்டு ஸ்ரீகோமுத்தீசுவரர் திருக்கோயிலின் மதிலின்மேலிருந்த இடபங்களை இவர் ஓருருவாக்கி அனுப்பினரென்பர். இவருக்குத் திருவாவடுதுறை மடத்தினுள் கோயில் அமைந்துள்ளது. ஸ்ரீகோமுத்தீசுவரர்க்கு உச்சிக்காலத்திற் பூஜையான பின்பு இவருக்கும் ஆதிசைவர் இங்கே வந்து பூஜையை முடித்தபின் மடத்திற் பகற்போசனம் நடைபெறுவது வழக்கம். இது மகாவித்துவான் ஸ்ரீ மீனுட்சிசுந்தரம்பிள்ளை அவர்கள் ஒரு சமயம் இயற்றிய "பேசு புகழ்ச்சுப் பிரமணிய தேசிகன்பொன், வீசு கழற்கடியேன் விண்ணப்பம்—நேசம், வருதிரு மாளிகைத்தே வன்பூசை யாயே, கருதுபந்தி யாதல் வழக் கம்" என்னும் வெண்பாவால் அறியப்படும். திரு வீழிமிழலைக்கோயிற் சாசனம், அக்கோயிற்குத் திரு நுந்தாவிளக்கொன்று வைத்தவரும், சிவஞானியும் திரு மாளிகைத்தேவர் என்று வழங்கப் பெற்றவருமான ஜயந்தன் என்பவரைப்பற்றிக் கூறுதலால் இவரும் சேந்தனும் ஒருவரே யென்று கருத இடமுண்டென்பர்; சாஸனத் தமிழ்க்கவி சரிதம், பக்கம், 34–5. இவர் காலம் கி. பி. 10-11-ஆம் நூற்றுண்டாகும். இவர் பல அற்புதச் செயல்களை நிகழ்த்தினரென்பர்; அவை இன்னவென்பது பின்வரும் பாடலால் அறியப்படும்;

T. 23/6

"குடங்கர்விசும் பிடைசிறுவிக் குணபகடந் திடவியக்கிக்
கொடிஞ்சிப் பொற்றேர்
வடங்கழற்றி யோட்டிமதி னந்திகளை வரவழைத்து
வரைநன் காட்டின் [சுவற்றி
உடம்பினெழு புகைமாற்றிக் கொங்கணர்பாத் திரஞ்
யுணவ தாய்வெந்
திடும்பயறு முளைசெய்தெமக் கருடிருமா ளிகைத்தேவ
ரிணைத்தாள் போற்றி."

(மதுரகவி - தொட்டிக்கலை ஸ்ரீ சுப்பிரமணிய முனிவரியற்றியது.)

உ. சேந்தனார்: இவர் பட்டினத்து அடிகளுடைய காரியஸ்தரென்று பெரியோர் கூறுவர்; இவரைச் சோழன் சிறையிலிட்டபொழுது திருவெண்காடர் பாடிய "மத்தளை தயிருண்டானு மலர்மிசை மன்னினானும், நித்தமுந் தேடிக்காணா நிமலனே யமலமூர்த்தி, செய்த்தலைக் கயல்பாய் நாங்கூர்ச் சேந்தனை வேந்தனிட்ட, கைத்தளை நீக்கியென்முன் காட்டுவெண் காட்டுளானே" என்னும் பாடலால் இவர் நாங்கூரினரென்பது தெரிகிறது; அவ்வூர் திருவெண்காட்டுக்கு அணித்தாக உள்ளது. இவரும், திருவிசைப்பா, திருப்பல்லாண்டுகளை இயற்றியவரும் வேறென்று கூறுவாரும் உளர். இவர் ஒரு சமயம், ஸ்ரீ நடராசப் பெருமானுக்குத் தவிட்டை அமுதாக நிவேதனஞ் செய்தனரென்னும் அரிய செய்தி ஸ்ரீ சிவஞான சுவாமிகள் இயற்றிய, "வரையேற விட்டமுதஞ் சேந்தனிட வுண்டனைவல் லினமென் றாலும், உரையேற விட்டமுத லாகுமோ வெனைச்சித்தென் றுரைக்கினென்றும், நரையேற விட்டமுத னளவனைக் கொண்டு நறும் புலிசை மேவும், கரையேற விட்டமுதல் வாவுன்னை யன்றியுமோர் கதியுண் டாமோ" என்னும் பாடலால் அறியப்படும். திருப்பல்லாண்டை இயற்றிய பெருமை வாய்ந்தவரும் இவரே.

ங. கருவூர்த்தேவர்: இவர் சோழநாட்டிலுள்ள கருவூரினர்; சித்தருள் ஒருவரென்றும் இவரைக் கூறுவர்; தஞ்சாவூரில் முதலாம் இராஜராஜன் பெருவுடையாரைப் பிரதிட்டை செய்த போது அஷ்டபந்தன மருந்து இளகியதால் சிவலிங்கப் பெருமான் ஆவுடையாரோடு பொருந்தி நில்லாமை கண்டு கவலையுற அவனுடைய மந்திரி இவரை வருவித்தனனென்பதும் இவர் தம் பலத்தை உமிழ மருந்து இறுகிற்றென்பதும் கர்ண பரம்பரைச் செய்திகள். இவர் கங்கைகொண்ட சோளேச்சரத்திற்கும் திருவிசைப்பா இயற்றியிருத்தலால் கங்கைகொண்ட சோழன் காலத்தும் வாழ்ந்தவராதல் வேண்டும். இவருடைய திருவுருவம் கருவூர் ஆனிலைத் திருக்கோயிலிலும், தஞ்சைப் பெருவுடையார் கோயிலிலும் உள்ளது.

ச. பூந்துருத்தி நம்பிகாட நம்பி: முதல் ராஜராஜனது 35-ஆம் ஆட்சியாண்டில் அமைந்த சாஸனமொன்றால் நம்பிகாட நம்பி என்பார் ஆத்திரேய கோத்திரத்தவராக அவ்வரசன் காலத்து வாழ்ந்துவந்த அடியாரென்பது அறியப்படுதலால் இவர் அவ்வரசன் காலத்தவரென்பது தெரிகிறது. காடவர் கோனென்றும் கூறப்படுதலால் பல்லவர் வகையைச் சேர்ந்தவரென்றும் கூறுவர்.

ரு. கண்டராதித்தர்:—இவர் சோழ குலத்தவர்; இஃது இவரியற்றிய திருவிசைப்பாவின் திருக்கடைக் காப்புச் செய்யுளில், "சீரான்மல்கு தில்லைச் செம்பொ னம்பலத்தாடி தன்னைக், காரார் சோலைக் கோழி வேந்தன் தஞ்சையர்கோன் கலந்த, ஆராவின் சொற்கண்டராதித்தன்" என வருவதனால் தெரிகின்றது. தம் தந்தையான முதற் பராந்தகன் தில்லைச் சிற்றம்பலத்திற்குப் பொன்னோடு வேய்ந்ததைத் தம் திருப்பாட்டிற் குறிக்கின்றார்; "வெங்கோல் வேந்தன் றென்னாடு மீழமுங் கொண்ட திறற், செங்கோற் சோழன் கோழி வேந்தன் செம்பியன் பொன்னணிந்த, அங்கோல் வளையார் பாடியாடுமணி தில்லை" என்பது அச்செய்யுட் பகுதியாகும்; இவரைப்

பற்றிச் சாஸனம் 'சிவஞான கண்டராதித்தர்' என்று அடைமொழியோடு கூறுவதனால் இவருடைய சிவபக்திச் சிறப்பு விளங்கும்; இவர் இளமையிலிறந்தனரென்றும், இவருடைய கோப்பெருந் தேவியும், உத்தம சோழன். தாயுமான செம்பியன்மாதேவி நீண்ட நாள் வாழ்ந்திருந்து சிவாலயத் திருப்பணிகளைப் புரிந்து தம் நாளைக்கழித்தன ரென்றும் சாஸனங்கள் கூறுகின்றன. இவர் தம் தேவியா ரான செம்பியன் மாதேவியாரோடு சிவபெருமானை வணங் கும் பாவனையிற் பிம்பங்கள் வகுக்கப்பட்டுள்ளமையும், செம்பியன் மாதேவியாருருவை முதல் ராஜராஜன் பிரதிஷ்டித்து வணங்கியமையும் இவ்விருவருடைய அள விறந்த சிவபக்திப் பெருக்கை விளக்கும்.

௬. வேணாட்டடிகள்: இவர் கொடுந்தமிழ் நாடு பன் னிரண்டனுள் ஒன்றான வேணாட்டைச் சேர்ந்தவர்; வேணா டென்பது சாஸனங்களில் தென்திருவாங்கூர்ப் பகு திக்கு வழங்கப்பட்டுள்ளது; இவரும் அந்நாட் டரசருள் ஒருவர் போலும்; அடிகள் என்ற பெயர் இவர் துறவி யாதலைக் குறிக்கும். இந்நாட்டு அரசர்கள் 16-ஆம் நூற்றுண்டிலும் தமிழ்ப் புல்மை வாய்ந்தவரென்பது சாஸன வாயிலாக அறியப்படுகின்றது.

௭. திருவாலியமுதனார்: இவர் பெயரால் இவர் சோழ நாட்டிலுள்ள திருவாலி என்னும் ஊரினரென்று தெரி கின்றது. அமுதனாரென்பது இவர் பெயரென்பதும், இவர் தம்மை, "வரைசெய் மாமதின் மயிலையர் மன்னவன் மறைவல திருவாலி", "தூய நான்மறை யானமுதவாலி சொன்ன தமிழ் மாலை", "அறைசெந்நெல்வான் கரும்பி னணியாலைகள் சூழ்மயிலை, மறைவலவாலி" என்று கூறிக் கொள்வதால் இவர் அந்தணரென்பதும், மயிலையர் மன்ன னென்பதும் அறியக் கிடக்கின்றன. அமுதன் என்னும் பெயர் ஓரிடத்து மட்டும் காணப்படுகின்றது.

௮. புருடோத்தம நம்பி:—இவர் மறையவரென்பது இவர் இயற்றிய திருவிசைப்பாத் திருக்கடைக் காப்புச்

செய்யுளில் வரும் "மாசிலா மறை பல வோதுநாவன் வண்புருடோத்தமன்" என்னும் பகுதியால் அறியலாகும்; இவரைப் பற்றி வேறு யாதொன்றும் தெரியவில்லை.

கூ. சேதிராயர்: இவர் மலையமான்களுடைய பரம்பரையினர் போலும்; அறுபத்துமூன்று நாயன்மாருள் ஒருவரான மெய்ப்பொருள் நாயனுர் சேதிநாட்டரசரென்பதும்ஈண்டு உணரத் தக்கது; இவர் தம்மை, "ஏயுமாறெழிற் சேதிபர் கோன்றில்லை, நாயனுரை நயந்துரை செய்தன" என்பதனுல் இவர் அரசரென்பது அறியப் படும்; இவரது காலம் முதலிய பிற அறியக் கூடவில்லை.

உ

கணபதி துணை

திருச்சிற்றம்பலம்

திருவிசைப்பா

* திருமாளிகைத்தேவர் திருவிசைப்பா

க. கோயில்

பண் - பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

1 ஒளிவளர்விளக்கேயுலப்பிலாவொன்றே
யுணர்வுசூழ்கடந்ததோருணர்வே
தெளிவளர்பளிங்கின்றிரண்மணிக்குன்றே
சித்தத்துட்டித்திக்குந்தேனே
அளிவளருள்ளத்தானந்தக்கனியே
யம்பலமாடரங்காக
வெளிவளர்தெய்வக்கூத்துகந்தாயைத்
தொண்டனேன்விளம்புமாவிளம்பே. (க)

2 இடர்கெடுத்தென்னையாண்டுகொண்டென்னு
ளிருட்பிழம்பறவெறிந்தெழுந்த
சுடர்மணிவிளக்கினுள்ளொளிவிளங்குந்
தூயநற்சோதியுட்சோதீ
அடல்விடைப்பாகாவம்பலக்கூத்தா
வயனொடுமாலறியாமை
படரொளிபரப்பிப்பரந்துநின்றாயைத்
தொண்டனேன்பணியுமாபணியே. (உ)

3 தற்பரம்பொருளேசசிகண்டசிகண்டா
சாமகண்டாவண்டவாண
நற்பெரும்†பொருளேயுரைகலந்துன்னை
யென்னுடைநாவினாவில்வான்

(பிரதிபேதம்) * திருமாளிகைப் பெருமான் † பொருளா

அற்பனேனுள்ளத் தளவிலாவுன்னைத்
தந்தபொன்னம்பலத் தாடீ
கற்பமாயுலகாயல்லையானாயைத்
தொண்டனேன்கருதுமாகருதே. (௩)

4 பெருமையிற்சிறுமைபெண்ணொடாணாயென்
பிறப்பிறப்பறுத்தபேரொளியே
கருமையில்வெளியேகயற்கணாளிமவான்
மகளுமையவள்களைகண்ணே
அருமையின்மறைநான்கோலமிட்டரற்று
மப்பனேயம்பலத்*தமுதே
ஒருமையிற்†பலபுக்குருவினின்றாயைத்
தொண்டனேனுரைக்குமாறுரையே. (௪)

5 கோலமேமேலைவானவர்கோவே
குணங்குறியிறந்ததோர்குணமே
காலமேகங்கைநாயகாவெங்கள்
காலகாலாகாமநாசா
ஆலமேயமுதுண்டம்பலஞ்செம்பொற்
கோயில்கொண்டாடவல்லானே
ஞாலமேதமியேனற்றவத்தாயைத்
தொண்டனேனணுகுமாநணுகே. (௫)

6 நீறணிபவளக்குன்றமேநின்ற
நெற்றிக்கண்ணுடையதோர்நெருப்பே
வேறணிபுவனபோகமேயோக
வெள்ளமேமேருவில்வீரா
ஆறணிசடையெம்மற்புதக்கூத்தா
வம்பொன்செயம்பலத்தரசே
ஏறணிகொடியெம்மீசனேயுன்னைத்
தொண்டனேனிசையுமாறிசையே. (௬)

7 தனதனற்றோழாசங்கராசூல
பாணியேதாணுவேசிவனே
கனகநற்றூணேகற்பகக்கொழுந்தே
கண்கண்மூன்றுடையதோர்கரும்பே
அனகனேகுமரவிநாயகசனக
வம்பலத்தமரர்சேகரனே
நுனகழலிணையென்னெஞ்சினுளினிதாய்த்
தொண்டனேனுகருமாநுகரே. (௭)

(பி - ம்.) * தாடி † பலவுக்

8 திறம்பியபிறவிச்சிலதெய்வநெறிக்கே
திகைக்கின்றேனைத்திகையாமே
நிறம்பொன்னுமின்னுநிறைந்தசேவடிக்கீழ்
நிகழ்வித்தநிகரிலாமணியே
அறம்பலதிறங்கண்டருந்தவர்க்கரசா
யாலின்கீழிருந்தவம்பலவா
புறஞ்சமண்புத்தர்பொய்கள்கண்டாயைத்
தொண்டனேன்புணருமாபுணரே. (அ)

9 தக்கனற்றலையுமெச்சவன்றலையுந்
தாமரைநான்முகன்றலையும்
ஒக்கவிண்டுருளவொண்டிருப்புருவ
நெறித்தருளியவுருத்திரனே
அக்கணிபுலித்தோலாடைமேலாடை
யாடப்பொன்னம்பலத்தாடும்
சொக்கனேயெவர்க்குந்தொடர்வரியாயைத்
தொண்டனேன்றொடருமாதொடரே. (கூ)

10 மடங்கலாய்க்கனகன்மார்புகீண்டானுக்
கருள்புரிவள்ளலேமருளார்
இடங்கொண்மூப்புரம்வெந்தவியவைதிகத்தே
ரேறியவேறுசேவகனே
அடங்கவல்லரக்க*னரட்டிருவரைக்கீ
ழடர்த்தபொன்னம்பலத்தரசே
விடங்கொள்கண்டத்தெம்விடங்கனேயுன்னைத்
தொண்டனேன்விரும்புமாவிரும்பே. (க0)

11 மறைகளுமமரர்கூட்டமுமாட்டா
தயன்றிருமாலொடுமயங்கி
முறைமுறைமுறையிட்டோர்ப்பரியாயை
மூர்க்கனேன்மொழிந்தபுன்மொழிகள்
அறைகழலரன்சீரறிவிலாவெறுமைச்
சிறுமையிற்பொறுக்குமம்பலத்துள்
நிறைதருகருணைநிலயமேயுன்னைத்
தொண்டனேனினையுமாநினையே. (கக)

திருச்சிற்றம்பலம்

(பி - ம்.) * னருட்டிரு

௨. கோயில் - உயர்கொடியாடை

பண் - பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

பாதாதிகேசம்

12 உயர்கொடியாடைமிடைபடலத்தி
னேமதூமப்படலத்தின்
*பியர்நெடுமாடத்தகிற்புகைப்படலம்
பெருகியபெரும்பற்றப்புலியூர்ச்
சியரொளிமணி†ணிரந்தசெங்கனக
நிறைந்தசிற்றம்பலக்கூத்தா
மயர‡றுமமரர்மகுடந்தோய்மலர்ச்சே
வடிகளென்மனத்துவைத்தருளே. (௧)

13 கருவளர்மேகத்தகடுதோய்மகுடக்
கனகமாளிகைகலந்தெங்கும்
பெருவளமுத்தீநான்மறைத்தொழிலா
லெழின்மிகுபெரும்பற்றப்புலியூர்த்
திருவளர்தெய்வப்பதிவிதிநிதியந்
திரண்டசிற்றம்பலக்கூத்தா
உருவளரின்பச்சிலம்பொலியலம்பு
முன்னடிக்கீழதென்னுயிரே. (௨)

14 வரம்பிரிவாளைமிளிர்மடுக்கமலங்
கரும்பொடுமாந்திடுமேதி
¶பிரம்பிரிசெந்நெற்கழனிசெங்கழுநீர்ப்
பழனஞ்சூழ்பெரும்பற்றப்புலியூர்ச்
சிரம்புரைமுடிவானவரடிமுறையா
லிறைஞ்சுசிற்றம்பலக்கூத்தா
நிரந்தரமுனிவர்நினைதிருக்கணைக்கா
ணினைந்துநின்றொழிந்ததென்னெஞ்சே. (௩)

15 தேர்மலிவிழவிற்குழலொலிதெருவிற்
கூத்தொலியேத்தொலியோத்தின்
பேரொலிபரந்துகடலொலிமலியப்
பொலிதருபெரும்பற்றப்புலியூர்ச்
சீர்நிலவிலயத்திருநடத்தியல்பிற்
றிகழ்ந்தசிற்றம்பலக்கூத்தா
வார்மலிமுலையாள்வருடியதிரண்மா
மணிக்குறங்கடைந்ததென்மதியே. (௪)

(பி - ம்.) * பெயர் † ணிரந்துசேர் ‡ மயர்வறு ¶ பரம்பிரி

16 நிறைதழைவாழைநிழற்கொடிநெடுந்தெங்
இளங்கமுகுளங்கொணீள்பலமாப்
* பிறைதவழ்பொழில்சூழ்கிடங்கிடைப்பதண
முதுமதிற்பெரும்பற்றப்புலியூர்ச்
சிறைகொணீர்த்தரளத்திரள்கொணித்திலத்த
செம்பொற்சிற்றம்பலக்கூத்தா
பொறையணிநிதம்பப்புலியதளாடைக்
கச்சுநூல்புகுந்ததென்புகலே. (௫)

17 அதுமதியிதுவென் றலந்தலைநூல்கற்
றழைப்பொழிந்தருமறையறிந்து
பிதுமதிவழிநின் றொழிவிலாவேள்விப்
பெரியவர்பெரும்பற்றப்புலியூர்ச்
செதுமதிச்சமணுந்தேரருஞ்சேராச்
செல்வச்சிற்றம்பலக்கூத்தா
மதுமதிவெள்ளத்திருவயிற்றுந்தி
வளைப்புண்டென் னுளமகிழ்ந்ததுவே. (௬)

18 பொருவரைப்புயத்தின்மீமிசைப்புலித்தோல்
பொடியணிபூணநூலகலம்
பெருவரைபுரைதிண்டோளுடன்காணப்
பெற்றவர்பெரும்பற்றப்புலியூர்த்
திருமருவுதரத்தார்திசையடைப்ப
நடஞ்செய்சிற்றம்பலக்கூத்தா
உருமருவுதரத்தனிவடந்†தொடர்ந்து
கிடந்ததென் னுணர்வுணர்ந்துணர்ந்தே. (௭)

MADRAS

19 கணியெரிவிசிறுகரந்துடிவிடவாய்க்
கங்கணஞ்செங்கைமற்றபயம்
பிணிகெடவிவைகண்டரன்பெருநடத்திற்
பிரிவிலார்பெரும்பற்றப்புலியூர்த்
திணிமணிநீலகண்டத்தென்னமுதே
சீர்கொள்சிற்றம்பலக்கூத்தா
அணிமணிமுறுவற்பவளவாய்ச்செய்ய
சோதியுள்ளடங்கிற்றென்னறிவே. (௮)

20 திருநெடுமாலிந்திரனயன்வானோர்
திருக்கடைக்காவலினெருக்கிப்
பெருமுடிமோதியுகுமணிமுன்றிற்
பிறங்கியபெரும்பற்றப்புலியூர்ச்

(பி - ம்.) * பிறையணி † துடர்ந்து

செருநெடுமேருவில்லின்முப்புரந்தீ
விரித்தசிற்றம்பலக்கூத்தா
கருவடிகுழைகாதமலச்செங்கமல
மலர்முகங்கலந்ததென்கருத்தே. (௯)

21 ஏர்கொள்கற்பகமொத்திருசிலைப்புருவம்
பெருந்தடங்கண்கண்மூன்றுடையோன்
பேர்களாயிரநூறாயிரம்பிதற்றும்
பெற்றியோர்பெரும்பற்றப்புலியூர்ச்
சீர்கொள்கொக்கிறகுங்கொன்றையுந்துன்று
சென்னிச்சிற்றம்பலக்கூத்தா
நீர்கொள்செஞ்சடைவாழ்புதுமதிமத்த
நிகழ்ந்தவென்சிந்தையுணிறைந்தே. (௧௦)

22 காமனைக்காலன்றக்கன்மிக்கெச்சன்
படக்கடைக்கணித்தவனல்லாப்
பேய்மனம்பிறிந்தசிவப்பெருந்தொண்டர்
தொண்டனேன்பெரும்பற்றப்புலியூர்ச்
சேமநற்றில்லைவட்டங்கொண்டாண்ட
செல்வச்சிற்றம்பலக்கூத்தா
பூமலரடிக்கீழ்ப்புராணபூதங்கள்
பொறுப்பரென்புன்சொலின்பொருளே. (௧௧)

திருச்சிற்றம்பலம்

---

௩. கோயில் - உறவாகியயோகம்

பண் - பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

23 உறவாகியயோகமும்போகமுமா
யுயிராளியென்னுமென்பொன்னொருநாட்
சிறவாதவர்புரஞ்செற்றகொற்றச்
சிலைகொண்டுபன்றிப்பின்சென்றுநின்ற
மறவாவென்னும்மணிநீரருவி
மயேந்திரமாமலைமேலுறையும்
குறவாவென்னுங்குணக்குன்றேயென்னுங்
குலாத்தில்லையம்பலக்கூத்தனையே. (௧)

24 காடாடுபல்கணஞ்சூழக்கேழற்
கடிவிருணெடும்பகற்கானடந்த
வேடாமயேந்திரவெற்பாவென்னும்
வினையேன்மடந்தைவிம்மாவெருவும்
சேடாவென்னுஞ்செல்வமூவாயிரஞ்
செழுஞ்சோதியந்தணர்செங்கைதொழும்
கோடாவென்னுங்குணக்குன்றேயென்னுங்
குலாத்தில்லையம்பலக்கூத்தனையே. (உ)

25 கானேவருமுரணேனமெய்த
களியார்புளினநற்காளாயென்னும்
வானேதடவுநெடுங்குடுமி
மயேந்திரமாமலைமேலிருந்த
தேனேயென்னுந்தெய்வவாய்மொழியார்
திருவாளர்மூவாயிரவர்தெய்வக்
கோனேயென்னுங்குணக்குன்றேயென்னுங்
குலாத்தில்லையம்பலக்கூத்தனையே. (ங)

26 வெறியேறுபன்றிப்பின்சென்றொருநாள்
விசயற்கருள்செய்தவேந்தேயென்னும்
மறியேறுசாரன்மயேந்திரமா
மலைமேலிருந்தமருந்தேயென்னும்
நெறியேயென்னுநெறிநின்றவர்க
ணினைக்கின்றநீதிவேதாந்தநிலைக்
குறியேயென்னுங்குணக்குன்றேயென்னும்
குலாத்தில்லையம்பலக்கூத்தனையே. (ச)

27 செழுந்தென்றலன்றிலித்திங்கள்கங்கு
றிரைவீரைதீங்குழல்சேவின்மணி
எழுந்தின்றென்மேற்பகையாடவாடு
மெனைநீநலிவுதென்னென்னேயென்னும்
அழுந்தாமயேந்திரத்தந்தரப்புட்
கரசுக்கரசேயமரர்தனிக்
கொழுந்தேயென்னுங்குணக்குன்றேயென்னுங்
குலாத்தில்லையம்பலக்கூத்தனையே. (ரு)

28 வண்டார்குழலுமைநங்கைமுன்னே
மயேந்திரச்சாரல்வராகத்தின்பின்
* கண்டாரகலவில்லாடிவேடர்
கடிநாயுடன்கைவளைந்தாயென்னும்

(பி - ம்.) * கண்டார்கவல

பண்டாயமாலயன் றக்கனெச்சன்
பகலோனனல்பகற்பற்பசுங்கண்
கொண்டாயென் னுங்குணக்குன்றேயென் னுங்
குலாத்தில்லையம்பலக்கூத்தனையே. (௬)

29 கடுப்பாய்ப்பறைகறங்கக்கடுவெஞ்
சிலையுங்கணையுங்கவ ணுங்கைக்கொண்
டுடுப்பாயதோல்செருப்புசுரிகை
வராகமுன்னோடிவிளியுளைப்ப
நடப்பாய்மயேந்திரநாதநாதாந்தத்
தரையாவென்பார்க்குநாதாந்தபதம்
கொடுப்பாயென் னுங்குணக்குன்றேயென் னுங்
குலாத்தில்லையம்பலக்கூத்தனையே. (எ)

30 சேவேந்துவெல்கொடியானேயென் னுஞ்
சிவனேயென்சேமத்துணையேயென் னும்
மாவேந்துசாரன்மயேந்திரத்தில்
வளர்நாயகாவிங்கேவாராயென் னும்
பூவேந்திமூவாயிரவர்தொழப்
புகழேந்துமன்றுபொலியநின்ற
கோவேயென் னுங்குணக்குன்றேயென் னுங்
குலாத்தில்லையம்பலக்கூத்தனையே. (அ)

31 தரவார்புனஞ்சுனைதாழருவித்
தடங்கல்லுறையுமடங்கலமர்
மரவார்பொழிலெழில்வேங்கையெங்கு
மழைசூழ்மயேந்திரமாமலைமேற்
சுரவாவென் னுஞ்சுடர்நீண்முடிமா
லயனிந்திரன்முதற்றேவர்க்கெல்லாம்
குரவாவென் னுங்குணக்குன்றேயென் னுங்
குலாத்தில்லையம்பலக்கூத்தனையே. (௯)

32 திருநீறிடாவுருத்தீண்டேனென் னுந்
திருநீறுமெய்த்திருமுண்டந்தீட்டிப்
பெருநீலகண்டன்றிறங்கொண்டிவள்
பிதற்றிப்பெருந்தெருவேதிரியும்
வருநீரருவிமயேந்திரப்பொன்
மலையின்மலைமகளுக்கருளும்
குருநீயென் னுங்குணக்குன்றேயென் னுங்
குலாத்தில்லையம்பலக்கூத்தனையே. (௧௦)

33 உற்றாயென் னுமுனையன் றிமற்றொன்
றுணரேனென் னுமுணர்வுள்கலக்கப்
பெற்றாயவைந்தெழுத்தும்பிதற்றிப்
பிணிதீர்வெண்ணீறிடப்பெற்றேனென்னும்
சுற்றாயசோதிமயேந்திரஞ்சூழ
மனத்திருள்வாங்கிச்சூழாதநெஞ்சிற்
குற்றாயென் னுங்குணக்குன்றேயென் னுங்
குலாத்தில்லையம்பலக்கூத்தனையே. (௧௧)

34 வேறாகவுள்ளத்துவகைவிளைத்
தவனிச்சிவலோகவேதவென்றி
மாறாதமூவாயிரவரையு
மெனையுமகிழ்ந்தாளவல்லாயென்னும்
ஆறார்சிகரமயேந்திரத்துன்
னடியார்பிழைபொறுப்பாயமுதொர்
கூறாயென் னுங்குணக்குன்றேயென் னுங்
குலாத்தில்லையம்பலக்கூத்தனையே. (௧௨)

திருச்சிற்றம்பலம்

---

௪. கோயில் - இணங்கிலாவீசன்

பண் - காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

35 இணங்கிலாவீசனேசத்திருந்தசித்தத்தினேற்கு
மணங்கொள்சீர்த்தில்லைவாணன்மணவடியார்கள்வண்மைக்
குணங்களைக்கூறாவீறில்கோறைவாய்ப்பீறற்குண்டப்
பிணங்களைக்காணாகண்வாய்பேசாதப்பேய்களோடே. (௧)

36 எட்டுருவிரவியென்னையாண்டவனீண்டுசோதி
விட்டிலங்கலங்கற்றில்லைவேந்தனைச்சேர்ந்திலாத
துட்டரைத்தூர்த்தவார்த்தைத்தொழும்பரைப்பிழம்பும்பசும்
பிட்டரைக்காணாகண்வாய்பேசாதப்பேய்களோடே. (௨)

37 அருட்டிரட்செம்பொற்சோதியம்பலத்தாடுகின்ற
இருட்டிரட்கண்டத்தெம்மானின்பருக்கன்புசெய்யா
அரட்டரையரட்டுப்பேசுமழுக்கரைக்கழுக்களாய
பிரட்டரைக்காணாகண்வாய்பேசாதப்பேய்களோடே. (௩)

38 துணுக்கெனவயனுமாலுந்தொடர்வருஞ்சுடராயிப்பால்
அணுக்கருக்கணியசெம்பொனம்பலத்தாடிக்கல்லாச்
சிணுக்கரைச்செத்தற்கொத்தைச்சிதம்பரைச்சீத்தையூத்தைப்
பிணுக்கரைக்காணுகண்வாய்பேசாதப்பேய்களோடே. (ச)

39 திசைக்குமிக்குலவு*கீர்த்தித்தில்லைக்கூத்துகந்துதீய
நசிக்கவெண்ணீறதாடிநமர்களைநணுகாநாய்கள்
அசிக்கவாரியங்களோதுமாதரைப்பேதவாதப்
பிசுக்கரைக்காணுகண்வாய்பேசாதப்பேய்களோடே. (ரு)

40 ஆடரவாடவாடுமம்பலத்தமிர்தேயென்னும்
சேடர்சேவடிகள்சூடாத்திருவிலாவுருவினரைச்
சாடரைச்சாட்கைமோட்கச்சழக்கரைப்பிழக்கப்பிட்கப்
பேடரைக்காணுகண்வாய்பேசாதப்பேய்களோடே. (சு)

41 உருக்கியென்னுள்ளத்துள்ளேயூறலந்தேறன்மாறாத்
திருக்குறிப்பருளுந்தில்லைச்செல்வன்பாற்செல்லுஞ்செல்வின்
அருக்கரையள்ளல்வாயகள்ளரையவியாப்பாவப்
பெருக்கரைக்காணுகண்வாய்பேசாதப்பேய்களோடே. (எ)

42 செக்கரொத்திரவிநூறுயிரத்திரளொப்பாந்தில்லைச்
சொக்கரம்பலவரென்னுஞ்சுருதியைக்கருதமாட்டா
எக்கரைக்குண்டாமிண்டவெத்தரைப்புத்தராதிப்
பொக்கரைக்காணுகண்வாய்பேசாதப்பேய்களோடே. (அ)

43 எச்சனைத்தலையைக்கொண்டுசெண்டடித்திடபமேறி
அச்சங்கொண்டமரரோடநின்றவம்பலவற்கல்லாக்
கச்சரைக்கல்லாப்பொல்லாககயவரைப்பசுநூல்கற்கும்
பிச்சரைக்காணுகண்வாய்பேசாதப்பேய்களோடே. (கூ)

44 விண்ணவர்மகுடகோடிமிடைந்தொளிமணிகள்வீசும்
அண்ணலம்பலவன்கொற்றவாசலுக்காசையில்லாத்
தெண்ணரைத்தெருளாவுள்ளத்திருளரைத்திட்டைமுட்டைப்
பெண்ணரைக்காணுகண்வாய்பேசாதப்பேய்களோடே. (கo)

45 சிறப்புடையடியார்தில்லைச்செம்பொனம்பலவற்காளாம்
உறைப்புடையடியார்கீழ்க்கீழுறைப்பர்சேவடிநீறாடார்
இறப்பொடுபிறப்பினுக்கேயினியராய்மீண்டுமீண்டும்
பிறப்பரைக்காணுகண்வாய்பேசாதப்பேய்களோடே. (கக)

திருச்சிற்றம்பலம்

(பி - ம்.) * சீர்த்தித்

சேந்தனார் திருவிசைப்பா

க. திருவீழிமிழலை

பண் - பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

46 ஏகநாயகனையிமையவர்க்கரசை
யென்னுயிர்க்கமுதினையெதிரில்
போகநாயகனைப்புயல்வணற்கருளிப்
பொன்னெடுஞ்சிவிகையாவூர்ந்த
மேகநாயகனைமிகுதிருவீழி
மிழலைவிண்ணிழிசெழுங்கோயில்
யோகநாயகனையன்றிமற்றொன்று
முண்டெனவுணர்கிலேன்யானே. (க)

47 கற்றவர்விழுங்குங்கற்பகக்கனியைக்
கரையிலாக்கருணைமாகடலை
மற்றவரறியாமாணிக்கமலையை
மதிப்பவர்மனமணிவிளக்கைச்
செற்றவர்புரங்கள்செற்றவெஞ்சிவனைத்
திருவீழிமிழலைவீற்றிருந்த
கொற்றவன்றன்னைக்கண்டுகண்டுள்ளங்
குளிரவென்கண்குளிர்ந்தனவே. (உ)

48 மண்டலத்தொளியைவிலக்கியானுகர்ந்த
மருந்தையென்மாறிலாமணியைப்
பண்டவரயன்மாற்கரிதுமாயடியார்க்
கெளியதோர்பவளமால்வரையை
விண்டலர்மலர்வாய்வேரிவார்பொழில்சூழ்
திருவீழிமிழலையூராளுங்
கொண்டலங்கண்டத்தெங்குருமணியைக்
குறுகவல்வினைகுறுகாவே. (௩)

49 தன்னடிநிழற்கீழென்னையுந்தகைத்த
சசிகுலாமவுலியைத்தானே
என்னிடைக்கமலமூன்றினுட்டோன்றி
யெழுஞ்செழுஞ்சுடரினையருள்சேர்
மின்னெடுங்கடலுள்வெள்ளத்தைவீழி
மிழலையுள்விளங்குவெண்பளிங்கின்
பொன்னடிக்கடிமைபுக்கினிப்போக
விடுவனோபூண்டுகொண்டேனே. (௪)

50 இத்தெய்வநெறிநன்றென்றிருண்மாயப்
பிறப்பறாவிந்திரசாலப்
பொய்த்தெய்வநெறிநான்புகாவகைபுரிந்த
புராணசிந்தாமணிவைத்த
மெய்த்தெய்வநெறிநான்மறையவர்வீழி
மிழலைவிண்ணிழிசெழுங்கோயில்
அத்தெய்வநெறியிற்சிவமலாதவமு
மறிவரோவறிவுடையோரே. (௫)

51 அக்கனாவனையசெல்வமேசிந்தித்
தைவரோடழுந்தியானவமே
புக்கிடாவண்ணங்காத்தெனையாண்ட
புனிதனைவனிதைபாகனையெண்
டிக்கெலாங்குலவும்புகழ்த்திருவீழி
மிழலையான்றிருவடிநிழற்கீழ்ப்
புக்குநிற்பவர்தம்பொன்னடிக்கமலப்
பொடியணிந்தடிமைபூண்டேனே. (௬)

52 கங்கைநீரரிசிற்கரையிருமருங்குங்
கமழ்பொழிறழுவியகழனித்
திங்கணேர்தீண்டநீண்டமாளிகைசூழ்
மாடநீடுயர்திருவீழித்
தங்குசீர்ச்செல்வத்தெய்வத்தான்றோன்றி
நம்பியைத்தன்பெருஞ்சோதி
மங்கையோர்பங்கத்தென்னருமருந்தை
வருந்திநான்மறப்பனோவினியே. (௭)

53 ஆயிரங்கமலஞாயிறாயிரமுக்
கண்முககரசரணத்தோன்
பாயிருங்கங்கைபனிநிலாக்கரந்த
படர்சடைமின்னுபொன்முடியோன்
வேயிருந்தோளியுமைமணவாளன்
விரும்பியமிழலைசூழ்பொழிலைப்
போயிருந்தேயும்போற்றுவார்கழல்கள்
போற்றுவார்புரந்தராதிகளே. (௮)

54 எண்ணில்பல்கோடிசேவடிமுடிக
ளெண்ணில்பல்கோடிதிண்டோள்கள்
எண்ணில்பல்கோடிதிருவுருநாம
மேர்கொண்முக்கண்முகமியல்பும்
எண்ணில்பல்கோடியெல்லைக்கப்பாலாய்
நின்றைஞ்ஞூற்றந்தணரேத்தும்
எண்ணில்பல்கோடிகுணத்தரோர்வீழி
யிவர்நம்மையாளுடையாரே. (௯)

55 தக்கன்வெங்கதிரோன்சலந்தரன்பிரமன்
சந்திரனிந்திரனெச்சன்
மிக்கநெஞ்சரக்கன்புரங்கரிகருடன்
மறலிவேளிவர்மிகைசெகுத்தோன்
திக்கெலாநிறைந்தபுகழ்த்திருவீழி
மிழலையான்றிருவடிநிழற்கீழ்ப்
புக்கிருந்தவர்தம்பொன்னடிக்கமலப்
பொடியணிந்தடிமைபூண்டேனே. (கய)

56 உளங்கொளமதுரக்கதிர்விரித்துயிர்மே
லருள்சொரிதருமுமாபதியை
வளங்கிளர்நதியுமதியமுஞ்சூடி
மழவிடைமேல்வருவானை
விளங்கொளிவீழிமிழலைவேந்தேயென்
றுந்தனைச்சேர்ந்தன்றுறைதையையான்
களங்கொளவழைத்தாற்பிழைக்குமோவடியேன்
கைக்கொண்டகனககற்பகமே. (கக)

57 பாடலங்காரப்பரிசில்காசருளிப்
பழுத்தசெந்தமிழ்மலர்சூடி
நீடலங்காரத்தெம்பெருமக்க
ளெஞ்சினுணிறைந்துநின்றானை
வேடலங்காரக்கோலத்தினமுதைத்
திருவீழிமிழலையூராளும்
கேடிலங்கீர்த்திக்கனககற்பகத்தைக்
கெழுமுதற்கெவ்விடத்தேனே. (கஉ)

திருச்சிற்றம்பலம்

உ. திருவாவடுதுறை

பண் - பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

58 பொய்யாதவேதியர்சாந்தைமெய்ப்புகழாளராயிரம்பூசுரர்
மெய்யேதிருப்பணிசெய்சீர்மிகுகாவிரிக்கரைமேய
ஐயாதிருவாவடுதுறையமுதேயென்றுன்னையழைத்தக்கால்
மையார்தடங்கண்மடந்தைக்கொன்றருளாதொழிவதுமாதிமை
[யே.

59 மாதிமணங்கமழும்பொழின் மணிமாடமாளிகைவீதிசூழ்
சோதிமதிலணிசாந்தைமெய்ச்சுருதிவிதிவழியோர்தொழும்
ஆதியமரர்புராணனுமணியாவடுதுறைநம்பிநின்ற
நீதியறிகிலள்பொன்னெடுந்திண்டோள்புணரநினைக்குமே. (௨)

60 நினைக்குநிரந்தரனேயென்னுநிலாக்கோலச்செஞ்சடைக்கங்
கைநீர், நனைக்குநலங்கிளர்கொன்றைமேனயம்பேசுநன்னுதனங்கை
மீர், மனக்கின்ப வெள்ளமலைமகண்மணவாளநம்பிவண்சாந்தையூர்,
தனக்கின்பனாவடுதண்டுறைத்தருணேந்துசேகரனென்னுமே. (௩)

61 தருணேந்துசேகரனேயெனுந்தடம்பொன்னித்தென்கரைச்
சாந்தையூர்ப், பொருணோர்ந்தசிந்தையவர்தொழப்புகழ்செல்வமல்கு
பொற்கோயிலுள், அருணோர்ந்தமர்திருவாவடுதுறையாண்டவாண்ட
கையம்மானே,தெருணோர்ந்தசித்தம்வலியவாதிலகநுதலிதிறத்திலே.
(௪)

62 திலகநுதலுமைநங்கைக்குந்திருவாவடுதுறைநம்பிக்கும், குல
கவடியவர்க்கென்னையாட்கொடுத்தாண்டுகொண்டகுணக்கடல், அல
தொன்றறிகின்றிலேமெனுமணியும்வெண்ணீறஞ்செழுத்தலால், வல
தொன்றிலளிதற்கென்செய்கேன்வயலந்தண்சாந்தையர்வேந்தனே.

63 வேந்தன்வளைத்ததுமேருவில்லரவுநாண்வெங்கணைசெங்கண்
மால், போந்தமதிலணிமுப்புரம்பொடியாடவேதப்புரவித்தேர், சாந்
தைமுதலயன்சாரதிகதியருளென்னுமித்தையலை, ஆந்தண்டிருவா
வடுதுறையரன்செய்கையாரறிகிற்பரே. (௬)

64 கிற்போமெனத்தக்கன்வேள்விபுக்கெடுத்தோடிக்கெட்டவத்
தேவர்கள், சொற்போலுமெய்ப்பயன்பாவிகாளென்சொல்லிச்சொல்
லுமித்தமொழி, கற்போன்மனங்கனிவித்தவெங்கருணாலயாவந்திடா
யென்றாற்,பெற்போபெருந்திருவாவடுதுறையாளிபேசாதொழிவதே.
(௭)

65 ஒழிவொன்றிலாவுண்மைவண்ணமுமுலப்பிலளாநின்ப
வெள்ளமும், ஒழிவொன்றிலாப்பொன்னித்தீர்த்தமுமுனிகோடி
கோடியாமூர்த்தியும்,அழிவொன்றிலாச்செல்வச்சாந்தையூரணியாவடு
துறையாடினாள், இழிவொன்றிலாவகையெய்திநின்றிறுமாக்குமென்
னிளமானனே. (௮)

66 மானேர்கலைவளையுங்கவர்ந்துளங்கொள்ளைகொள்ளவழக்
குண்டே, தேனேயமுதேயென்சித்தமேசிவலோகநாயகச்செல்வமே,
யானேயலம்புனற்பொன்னியணியாவடுதுறையன்பர்தம், கோனே
நின்மெய்யடியார்மனக்கருத்தைமுடித்திடுங்குன்றமே. (௯)

67 குன்றேந்திகோகனதத்தயனறியாநெறியென்னைக்கூட்டினாய்
என்றேங்கியேங்கியழைக்கின்றாளிளவல்லியெல்லைகடந்தனள்
அன்றேயலம்புனற்பொன்னியணியாவடுதுறையாடினாள்
நன்றேயிவணம்பரமல்லணவலோகநாயகன்பாலளே. (௧௦)

68 பாலுமமுதமுந்தேனுமாயானந்தந்தந்துள்ளேபாலிப்பான்
போலுமெனுருயிர்ப்போகமாம்புரகாலகாமபுராந்தகன்
சேலுங்கயலுந்திளைக்குநீர்த்திருவாவடுதுறைவேந்தனோ
டாலுமதற்கேமுதலுமாமறிந்தோமரிவைபொய்யாததே. (௧௧)

திருச்சிற்றம்பலம்

---

௩. திருவிடைக்கழி

பண் - பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

69 மாலுலாமனந்தந்தென்கையிற்சங்கம்வவ்வினான்மலைமகள் மதலை, மேலுலாந்தேவர்குலமுழுதாளுங்குமரவேள்வள்ளிதன்மணாளன், சேலுலாங்கழனித்திருவிடைக்கழியிற்றிருக்குராநீழற்கீழ்நின்ற, வேலுலாந்தடக்கைவேந்தனென்சேந்தனென்னுமென்மெல்லியலிவளே. (௧)

70 இவளைவாரிளமென்கொங்கைபீர்பொங்கவெழில்கவர்ந்தானிளங்காளை, கவளமாகரிமேற்கவரிசூழ்குடைக்கீழ்க்கனகக்குன்றெனவருங்கள்வன், திவளமாளிகைசூழ்திருவிடைக்கழியிற்றிருக்குராநீழற்கீழ்நின்ற, குவளைமாமலர்க்கண்ணங்கையாணயக்குங்குழகனல்லழகனங்கோவே. (௨)

71 கோவினைப்பவளக்குழமணக்கோலக்குழாங்கள்சூழ்கோழிவெல்கொடியோன், காவனற்சேனையென்னக்காப்பவனென்பொன்னைமேகலைகவர்வானே, தேவினற்றலைவன்றிருவிடைக்கழியிற்றிருக்குராநீழற்கீழ்நின்ற, தூவிநற்பீலிமாமயிலூருஞ்சுப்பிரமண்ணியனானே. (௩)

72 தானமர்பொருதவானவர்சேனைமடியச்சூர்மார்பினைத்தடிந்தோன், மானமர்தடக்கைவள்ளறன்பிள்ளைமறைநிறைசட்டறம்வளரத், தேனமர்பொழில்சூழ்திருவிடைக்கழியிற்றிருக்குராநீழற்கீழ்நின்ற, கோனமர்கூத்தன்குலவிளங்களிறென்கொடிக்கிடர்பயப்பதுங்குணமே. (௪)

73 குணமணிக்குருளைக்கொவ்வைவாய்மடந்தைபடுமிடர்குறிக்கொளாதழகோ, மணமணிமறையோர்வானவர்வையமுய்யமற்றடியனேன்வாழத், திணமணிமாடத்திருவிடைக்கழியிற்றிருக்குராநீழற்கீழ்நின்ற, கணமணிபொருநீர்க்கங்கைதன்சிறுவன்கணபதிபின்னிளங்கிளையே. (௫)

74 கிளையிளஞ்சேயக்கிரிதனைக் *கீண்டவாண்டகைகேடில்வேற்செல்வன், வளையிளம்பிறைச்செஞ்சடையரன்மதலைகார்நிறமாறிருமருகன், திளையிளம்பொழில்சூழ்திருவிடைக்கழியிற்றிருக்குராநீழற்கீழ்நின்ற, முளையிளங்களிறென்மொய்குழற்சிறுமிக்கருளுங்கொன்முருகவேள்பரிந்தே. (௬)

75 பரிந்தசெஞ்சுடரோபரிதியோமின்னோபவளத்தின்குழவியோபசும்பொன், சொரிந்தசிந்துரமோதூமணித்திரளோசுந்தரத்தரசிதுவென்னத், தெரிந்தவைதிகர்வாழ்திருவிடைக்கழியிற்றிருக்குராநீழற்கீழ்நின்ற, வரிந்தவெஞ்சிலைக்கைமைந்தனையஞ்சொன்மையல்கொண்டையுறும்வகையே. (௭)

76 வகைமிகுமசுரர்மாளவந்துழிஞைவாளமர்விளைத்ததாளாளன், புகைமிகுமனலிற்புரம்பொடிபடுத்தபொன்மலைவில்லிதன்புதல்வன், திகைமிகுகீர்த்தித்திருவிடைக்கழியிற்றிருக்குராநீழற்கீழ்நின்ற, தொகைமிகுநாமத்தவன்றிருவடிக்கென்றுடியிடை†மடலெருடங்கினளே. (௮)

77 தொடங்கினண்மடலென்றணிமுடித்தொங்கற்புறவிதழாகிலுமருளான், இடங்கொளக்குறத்திதிறத்திலுமிறைவன்மறத்தொழில்வார்த்தையுமுடையன், திடங்கொள்வைதிகர்வாழ்திருவிடைக்கழியிற்றிருக்குராநீழற்கீழ்நின்ற, மடங்கலைமலரும்பன்னிருநயனத்தறுமுகத்தமுதினைமருண்டே. (௯)

78 மருண்டுறைகோயின்மல்குநன்குன்றப்பொழில்வளர்மகிழ்திருப்பிடவூர், வெருண்டமான்விழியார்க்கருள் செயாவிடுமேவிடலையேயெவர்க்குமெய்யன்பர், தெருண்டவைதிகர்வாழ்திருவிடைக்கழியிற்றிருக்குராநீழற்கீழ்நின்ற, குருண்டபூங்குஞ்சிப்பிறைச்சடைமுடிமுக்கண்ணனுடைக்கோமளக்கொழுந்தே. (௧௦)

79 கொழுந்திரள்வாயார் தாய்மொழியாகத்தூய் மொழியமரர்கோமகனைச், செழுந்திரட்சோதிச் ‡செப்புறைச்சேந்தன்வாய்ந்தசொல்லிவைசுவாமியையே, செழுந்தடம் ¶ பொழில்சூழ்திருவிடைக்கழியிற்றிருக்குராநீழற்கீழ்நின்ற, எழுங்கதிரொளியையேத்துவார்கேட்பாரிடர்கெடுமொலுலாமனமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்

(பி - ம்.) * கீன்ற † மயலெருடங் ‡ செப்புரைச் ¶ புடைசூழ்

*கருவூர்த்தேவர் திருவிசைப்பா

க. கோயில்

பண் - புறநீர்மை

திருச்சிற்றம்பலம்

80 கணம்விரிகுடுமிச்செம்மணிக்கவைநாக்
கறையணற்கட்செவிப்பகுவாய்ப்
பணம்விரிதுத்திப்பொறிகொள்வெள்ளெயிற்றுப்
பாம்பணிபரமர்தங்கோயில்
மணம்விரிதருதேமாம்பொழின்மொழுப்பின்
மழைதவழ்வளரிளங்கமுகம்
திணர்நிரையரும்புபெரும்பற்றப்புலியூர்த்
திருவளர்திருச்சிற்றம்பலமே. (க)

81 இவ்வரும்பிறவிப்பௌவநீர்நீந்து
மேழையேற்கென்னுடன்பிறந்த
ஐவரும்பகையேயார்துணையென்று
லஞ்சலென்றருள்செய்வான்கோயில்
கைவரும்பழனங்குழைத்தசெஞ்சாலிக்
கடைசியர்களைதருநீலம்
செய்வரம்பரும்புபெரும்பற்றப்புலியூர்த்
திருவளர்திருச்சிற்றம்பலமே. (உ)

82 தாயினேரிரங்குந்தலைவவோவென்றுந்
தமியனேன்றுணைவவோவென்றும்
நாயினேனிருந்துபுலம்பினாலிரங்கி
நலம்புரிபரமர்தங்கோயில்
வாயினேரரும்புமணிமுருக்கலர
வளரிளஞ்சோலைமாந்தளிர்செந்
தீயினேரரும்புபெரும்பற்றப்புலியூர்த்
திருவளர்திருச்சிற்றம்பலமே. (ந)

83 துந்துபிகுழல்யாழ்மொந்தைவானியம்பத்
தொடர்ந்திருடியர்கணந்துதிப்ப
நந்திகைமுழவமுகிலெனமுழங்க
நடம்புரிபரமர்தங்கோயில்
அந்தியின்மறைநான்காரணம்பொதிந்த
வரும்பெறன்மறைப்பொருண்மறையோர்
சிந்தையிலரும்புபெரும்பற்றப்புலியூர்த்
திருவளர்திருச்சிற்றம்பலமே. (ச)

(பி - ம்.) * கருவூர்ப்பிரான்

84 கண்பனியரும்பக்கைகண்மொட்டித்தென்
 களைகணேயோலமென்றோலிட்
டென்பெலாமுருகுமன்பர்தங்கூட்டத்
 தென்னையும்புணர்ப்பவன்கோயில்
பண்பலதெளிதேன்பாடிநின்றாடப்
 பனிமலர்ச்சோலைசூழ்மொழுப்பிற்
செண்பகமரும்புபெரும்பற்றப்புலியூர்த்
 திருவளர்திருச்சிற்றம்பலமே. (ரு)

85 நெஞ்சிடரகலவகம்புகுந்தொடுங்கு
 நிலைமையோடிருள்கிழித்தெழுந்த
வெஞ்சுடர்சுடர்வபோன்றொளிதுளும்பும்
 விரிசடையடிகடங்கோயில்
அஞ்சுடர்ப்புரிசையாழிசூழ்வட்டத்
 தகம்படிமணிநிரைபரந்த
செஞ்சுடரரும்புபெரும்பற்றப்புலியூர்த்
 திருவளர்திருச்சிற்றம்பலமே. (சா)

86 பூத்திரளுருவஞ்செங்கதிர்விரியாப்
 புந்தியில்வந்தமால்விடையோன்
தூத்திரட்பளிங்கிற்றோன்றியதோற்றந்
 தோன்றநின்றவன்வளர்கோயில்
நாத்திரண்மறையோர்ந்தோமகுண்டத்து
 நறுநெயான்மறையவர்வளர்த்த
தீத்திரளரும்புபெரும்பற்றப்புலியூர்த்
 திருவளர்திருச்சிற்றம்பலமே. (எ)

87 சீர்த்ததிண்புவனமுழுவதுமேனைத்
 திசைகளோடண்டங்களனைத்தும்
போர்த்ததம்பெருமைசிறுமைபுக்கொடுங்கும்
 புணர்ப்புடையடிகடங்கோயில்
ஆர்த்துவந்தமரித்தமரரும்பிறரு
 மலைகடலிடுதிரைப்புனிதத்
தீர்த்தநீரரும்பும்பெரும்பற்றப்புலியூர்த்
 திருவளர்திருச்சிற்றம்பலமே. (அ)

88 பின்னுசெஞ்சடையும்பிறைதவழ்மொழுப்பும்
 பெரியதங்கருணையுங்காட்டி
அன்னதேன்கலந்தின்னமுதுகந்தளித்தாங்
 கருள்புரிபரமர்தங்கோயில்
புன்னைதேன்சொரியும்பொழிலகங்குடைந்து
 பொறிவரிவண்டினம்பாடும்
தென்னதேனரும்பும்பெரும்பற்றப்புலியூர்த்
 திருவளர்திருச்சிற்றம்பலமே. (கூ)

89 உம்பர்நாடிம்பர்விளங்கியாங்கெங்கு
மொளிவளர்திருமணிச்சுடர்கான்
றெம்பிரானடஞ்செய்சூழலங்கெல்லா
மிருட்பிழம்பறவெறிகோயில்
வம்புலாங்கோயில்கோபுரங்கூடம்
வளர்நிலைமாடமாளிகைகள்
செம்பொனலரும்பும்பெரும்பற்றப்புலியூர்த்
திருவளர்திருச்சிற்றம்பலமே. (க௦)

90 இருந்திரைத்தரளப்பரவைசூழகலத்
தெண்ணிலங்கண்ணில்புன்மாக்கள்
திருந்துயிர்ப்பருவத்தறிவுறுகருவூர்த்
துறைவளர்தீந்தமிழ்மாலை
பொருந்தருங்கருணைப்பரமர்தங்கோயிற்
பொழிலகங்குடைந்துவண்டுறங்கச்
செருந்திநின்றரும்பும்பெரும்பற்றப்புலியூர்த்
திருவளர்திருச்சிற்றம்பலமே. (கக)

திருச்சிற்றம்பலம்

உ. திருக்களந்தையாதித்தேச்சரம்

பண் - புறநீர்மை

திருச்சிற்றம்பலம்

91 கலைகடம்பொருளுமறிவுமாயென்னைக்கற்பினிற்பெற்றெடுத்தெனக்கே,முலைகடந்தருளுந்தாயினுநல்லமுக்கணனுறைவிடம்போலும், மலைகுடைந்தனையநெடுநிலைமாடமருங்கெலாமறையவர்முறையோத், தலைகடன்முழங்குமந்தணீர்க்களந்தையணிதிகழாதித்தேச்சரமே.(க)

92 சந்தனகளபந்துதைந்தநன்மேனித்தவளவெண்பொடிமுழுதாடும், செந்தழலுருவிற்பொலிந்துநோக்குடையதிருநுதலவர்க்கிடம்போலும், இந்தனவிலங்கலெறிபுனந்தீப்பட்டெரிவதொத்தெழுநிலைமாடம்,அந்தணரழலோம்பலைபுனற்களந்தையணிதிகழாதித்தேச்சரமே. (உ)

93 கரியரேயிடந்தான்செய்யரேயொருபாற்கழுத்திலோர்தனிவடஞ்சேர்த்தி, முரிவரேமுனிவர்தம்மொடானிழற்கீழ்முறைதெரிந்தோருடம்பினராம், இருவரேமுக்கணாற்பெருந்தடந்தோளிறைவரேமறைகளுந்தேட, அரியரேயாகிலவரிடங்களந்தையணிதிகழாதித்தேச்சரமே. (௩)

94 பழையராந்தொண்டர்க்கெளியரேமிண்டர்க்கரியரேபாவி யேன்செய்யும், பிழையெலாம்பொறுத்தென்பிணிபொறுத்தருளாப் பிச்சரேநச்சராமிளிரும், குழையராய்வந்தென்குடிமுழுதாளுங் குழக ரேயொழுகுநீர்க்கங்கை, அழகரேயாகிலவரிடங்களந்தையணிதிகழா தித்தேச்சரமே. (ச)

95 பவளமேமகுடம்பவளமேதிருவாய்பவளமேதிருவுடம்பதனில், தவளமேகளபந்தவளமேபுரிநூறவளமேமுறுவலாடரவம், துவளுமேக லையுந்துகிலுமேயொருபாற்றுடியிடையிடமருங்கொருத்தி, அவளுமே யாகிலவரிடங்களந்தையணிதிகழாதித்தேச்சரமே. (ரு)

96 நீலமேகண்டம்பவளமேதிருவாய்நித்திலநிரைத்திலங்கினவே, போலுமேமுறுவனிறையவானந்தம்பொழியுமேதிருமுகமொருவர், கோலமேயச்சோவழகிதேயென்றுகுழைவரேகண்டவருண்ட, தால மேயாகிலவரிடங்களந்தையணிதிகழாதித்தேச்சரமே. (சா)

97 திக்கடாநினைந்துநெஞ்சிடிந்துருகுந்திறத்தவர்புறத்திருந்தல ச,மைக்கடாவனையவென்னையாள்விரும்பிமற்றொருபிறவியிற்பிறந்து, பொய்க்கடாவண்ணங்காத்தெனக்கருளேபுரியவும்வல்லரேயெல்லே, அக்கடாவாகிலவரிடங்களந்தையணிதிகழாதித்தேச்சரமே. (எ)

98 மெய்யரேமெய்யர்க்கிடுதிருவானவிளக்கரேயெழுதுகோல்வ ளையாள், மையரேவையம்பலிதிரிந்துறையுமயானரேயுளங்கலந்திருந் தும், பொய்யரேபொய்யர்க்கடுத்தவான்பளிங்கின்பொருள்வழியிருள் கிழித்தெழுந்த, ஐயரேயாகிலவரிடங்களந்தையணிதிகழாதித்தேச் சரமே. (அ)

99 குமுதமேதிருவாய்குவளையேகளமுங்குழையதேயிருசெவி யொருபால், விமலமேகலையுமுடையரேசடைமேன்மிளிருமேபொறி வரிநாகம்,கமலமேவதனங்கமலமேநயனங்கனகமேதிருவடிநிலைநீர், அ மலமேயாகிலவரிடங்களந்தையணிதிகழாதித்தேச்சரமே. (கூ)

100 நீரணங்கசும்புகழனிசூழ்களந்தை நிறைபுகழாதித்தேச்சரத் து,நாரணன்பரவுந்திருவடிநிலைமேனலமலிகலைபயில்கருவூர், ஆரண மொழிந்தபவளவாய்சுரந்தவமுதமூறியதமிழ்மாலை, ஏரணங்கிருநான் கிரண்டிவைவல்லோரிருள்கிழித்தெழுந்தசிந்தையரே. (க0)

திருச்சிற்றம்பலம்

௩. திருக்கீழ்க்கோட்டூர்மணியம்பலம்

பண் - பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

101 தளிரொளிமணிப்பூம்பதஞ்சிலம்பலம்பச்
சடைவிரித்தலையெறிகங்கைத்
தெளிரொளிமணிநீர்த்திவலைமுத்தரும்பித்
திருமுகமலர்ந்துசொட்டட்டக்
கிளரொளிமணிவண்டறைபொழிற்பழனங்
கெழுவு * கம்பலஞ்செய்கீழ்க்கோட்டூர்
வளரொளிமணியம்பலத்து † ணின்றாடு
மைந்தனென்மனங்கலந்தானே. (க)

102 துண்டவெண்பிறையும்படர்சடைமொழுப்புஞ்
சுழியமுஞ்சூலமுநீல
கண்டமுங்குழையும்பவளவாயிதழுங்
கண்ணுதற்றிலகமுங்காட்டிக்
கெண்டையுங்கயலுமுகளுநீர்ப்பழனங்
கெழுவுகம்பலஞ்செய்கீழ்க்கோட்டூர்
வண்டறைமணியம்பலத்து ‡ ணின்றாடு
மைந்தனென்மனங்கலந்தானே. (உ)

103 திருநுதல்விழியும்பவளவாயிதழுந்
திலகமுமுடையவன்சடைமேற்
புரிதருமலரின்றாதுநின்றூதப்
போய்வருந்தும்பிகாளிங்கே
கிரிதவழ்முகிலின்கீழ்த்தவழ்மாடங்
கெழுவுகம்பலஞ்செய்கீழ்க்கோட்டூர்
வருதிறன்மணியம்பலவனைக்கண்டென்
மனத்தையுங்கொண்டுபோதமினே. (௩)

104 தெள்ளுநீறவனீறென்னுடல்விரும்புஞ்
செவியவனறிவுநூல்கேட்கு
மெள்ளவேயவன்பேர்விளம்பும்வாய்கண்கள்
விமானமேநோக்கிவெவ்வுயிர்க்கும்
கிள்ளைபூம்பொதும்பிற்கொஞ்சிமாம்பொழிற்கே
கெழுவுகம்பலஞ்செய்கீழ்க்கோட்டூர்
வள்ளலேமணியம்பலத்து ¶ ணின்றாடு
மைந்தனேயென்னுமென்மனனே. (ச)

(பி - ம்.) * கம்பலை † நின்றாடு ‡ நின்றாடு ¶ நின்றாடு

105 தோழியாஞ்செய்ததொழிலெனெம்பெருமான்
றுணைமலர்ச்சேவடிகாண்பான்
ஊழிதோறூழியுணர்ந்துளங்கசிந்து
நெக்குநைந்துளங்கரைந்துருக்கும்
கேழலும்புள்ளுமாகிநின்றிருவர்
கெழுவுகம்பலஞ்செய்கீழ்க்கோட்டூர்
வாழியமணியம்பலவனைக்காண்பான்
மயங்கவுமாலொழியோமே. (ரு)

106 என்செய்கோந்தோழிதோழிநீதுணையா
யிரவுபோம்பகல்வருமாகில்
அஞ்சலோவென்னுளுழியுந்திரையு
மலமருமாறுகண்டயர்வன்
இஞ்சுகமணிவாயரிவையர்தெருவிற்
கெழுவுகம்பலஞ்செய்கீழ்க்கோட்டூர்
மஞ்சணிமணியம்பலவவோவென்று
மயங்குவன்மாலையம்பொழுதே. (சு)

107 தழைதவழ்மொழுப்புந்தவளநீற்றொளியுஞ்
சங்கமுஞ்சகடையின்முழக்கும்
குழைதவழ்செவியுங்குளிர்சடைத்தெண்டுங்
குண்டையுங்குழாங்கொடுதோன்றும்
கிழைதவழ்கனகம்பொழியுநீர்ப்பழனங்
கெழுவுகம்பலைசெய்கீழ்க்கோட்டூர்
மழைதவழ்மணியம்பலத்துணின்றாடு
மைந்தர்தம்வாழ்வுபோன்றதுவே. (எ)

108 தன்னகமழலைச்சிலம்பொடுசதங்கை
தமருகந்திருவடிதிருநீ
றின்னகைமழலைக்கங்கைகொங்கிதழி
யிளம்பிறைகுழைவளரிளமான்
இன்னரமுழவமழலையாழ்வீணை
கெழுவுகம்பலைசெய்கீழ்க்கோட்டூர்
மன்னவன்மணியம்பலத்துணின்றாடு
மைந்தனென்மனத்துள்வைத்தனனே. (அ)

109 யாதுநீநினைவதெவரையாமுடைய
தேவர்களும்யாவையுந்தானாய்ப்
பாதுகைமழலைச்சிலம்பொடுபுகுந்தென்
பனிமலர்க்கண்ணுணின்றகலான்
கேதகைநிழலைக்குருகெனமருவிக்
கெண்டைகள்வெருவுகீழ்க்கோட்டூர்
மாதவன்மணியம்பலத்துணின்றாடு
மைந்தனென்மனம்புகுந்தானே. (கூ)

GOVERNMENT ORIENTAL MANUSCRIPTS
3 AUG 1957
MADRAS

110 அந்திபோலுருவுமந்தியிற்பிறைசே
ரழகியசடையும்வெண்ணீறும்
சிந்தையானினையிற்சிந்தையுங்காணேன்
செய்வதென்றெளிபுனலலங்கற்
கெந்தியாவுகளுங்கெண்டைபுண்டரிகங்
கிழிக்குந்தண்பணைசெய்கீழ்க்கோட்டூர்
வந்தநாண்மணியம்பலத்துணின்றாடு
மைந்தனையறியுமென்மனமே. (க௦)

111 கித்திநின்றாடுமரிவையர்தெருவிற்
கெழுவுகம்பலைசெய்கீழ்க்கோட்டூர்
மத்தனைமணியம்பலத்துணின்றாடு
மைந்தனையாரணம்பிதற்றும்
பித்தனேன்மொழிந்தமணிநெடுமாலை
பெரியவர்க்ககலிருவிசும்பின்
முத்தியாமென்றேயுலகரேத்துவரேன்
முகமலர்ந்தெதிர்கொளுந்திருவே. (கக)

திருச்சிற்றம்பலம்

---

௫. திருமுகத்தலை

பண்-பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

112 புவனநாயகனேயகவுயிர்க்கமுதே
பூரணாவாரணம்பொழியும்
பவளவாய்மணியேபணிசெய்வார்க்கிரங்கும்
பசுபதீபன்னகாபரணா
அவனிஞாயிறுபோன்றருள்புரிந்தடியே
னகத்திலுமுகத்தலைமூதூர்த்
தவளமாமணிப்பூங்கோயிலுமமர்ந்தாய்
தனியனேன்றனிமைநீங்குதற்கே. (க)

113 புழுங்குதீவினையேன்வினைகெடப்புகுந்து
புணர்பொருளுணர்வுநூல்வகையால்
வழங்குதேன்பொழியும்பவளவாய்முக்கண்
வளரொளிமணிநெடுங்குன்றே
முழங்குதீம்புனல்பாய்ந்திளவராலுகளு
முகத்தலையகத்தமர்ந்தடியேன்
விழுங்குதீங்கனியாயினியவானந்த
வெள்ளமாயுள்ளமாயினையே. (உ)

114 கன்னகாவுள்ளக்கள்வனேனின்கட்
கசிவிலேன்கண்ணினீர்சொரியேன்
முன்னகாவொழியேனாயினுஞ்செழுநீர்
முகத்தலையகத்தமர்ந்துறையும்
பன்னகாபரணாபவளவாய்மணியே
பாவியேனாவியுள்புகுந்த
தென்னகாரணநீயேழைநாயடியேற்
கெளிமையோபெருமையாவதுவே. (௩)

115 கேடிலாமெய்ந்நூல்கெழுமியுஞ்செழுநீர்க்
கிடையனாருடையவென்னெஞ்சிற்
பாடிலாமணியேமணியுமிழ்ந்தொளிரும்
பரமனேபன்னகாபரணா
மேடெலாஞ்செந்நெற்பசுங்கதிர்விளைந்து
மிகத்திகழ்முகத்தலைமூதூர்
நீடனாயெனினுமுள்புகுந்தடியே
னெஞ்செலாநிறைந்துநின்றாயே. (௪)

116 அக்கனாவனையசெல்வமேசிந்தித்
தைவரோடென்னொடும்விளைந்த
இக்கலாமுழுதுமொழியவந்துள்புக்
கென்னையாளாண்டநாயகனே
முக்கணாயகனேமுழுதுலகிறைஞ்ச
முகத்தலையகத்தமர்ந்தடியேன்
பக்கலானந்தமிடையறாவண்ணம்
பண்ணினாய்பவளவாய்மொழிந்தே. (௫)

117 புனல்படவுருகிமண்டழல்வெதும்பிப்
பூம்புனல்பொதிந்துயிரளிக்கும்
வினைபடுநிறைபோனிறைந்தவேதகத்தென்
மனநெகமகிழ்ந்தபேரொளியே
முனைபடுமதின்மூன்றெரித்தநாயகனே
முகத்தலையகத்தமர்ந்தடியேன்
வினைபடுமுடனீபுகுந்துநின்றமையால்
விழுமியவிமானமாயினதே. (௬)

118 விரியுநீராலக்கருமையுஞ்சாந்தின்
வெண்மையுஞ்செந்நிறத்தொளியும்
கரியுநீறுடங்கனலுமொத்தொளிருங்
கழுத்திலோர்தனிவடங்கட்டி
முரியுமாறெல்லாமுரிந்தழகியையாய்
முகத்தலையகத்தமர்ந்தாயைப்
பிரியுமாறுளதேபேய்களோஞ்சிசெய்த
பிழைபொறுத்தாண்டபேரொளியே. (௭)

119 என்னையுன்பாதபங்கயம்பணிவித்
தென்பெலாமுருகநீயெளிவந்
துன்னையென்பால்வைத்தெங்குமெஞ்ஞான்று
மொழிவறநிறைந்தவொண்சுடரே
முன்னையென்பாசமுழுவதுமகல
முகத்தலையகத்தமர்ந்தெனக்கே
கன்னலும்பாலுந்தேனுமாரமுதுங்
கனியுமாயினியையாயினையே. (௮)

120 அம்பராவனலாவனிலமேபுவிநீ
யம்புவேயிந்துவேயிரவி
உம்பராலொன்றுமறியொணுவணுவா
யொழிவறநிறைந்தவொண்சுடரே
மொய்ம்பராய்நலஞ்சொன்மூதறிவாளர்
முகத்தலையகத்தமர்ந்தெனக்கே
எம்பிரானாகியாண்டநீமீண்டே
யெந்தையுந்தாயுமாயினையே. (௯)

121 மூலமாய்முடிவாய்முடிவிலாமுதலாய்
முகத்தலையகத்தமர்ந்தினிய
பாலுமாயமுதாம்பன்னகாபரணன்
பனிமலர்த்திருவடியிணைமேல்
ஆலையம்பாகினனையசொற்கருவூ
ரமுதுறழ்தீந்தமிழ்மாலை
சீலமாப்பாடுமடியவரெல்லாஞ்
சிவபதங்குறுகிநின்றாரே. (௧௦)

திருச்சிற்றம்பலம்

---

௫. திரைலோக்கியசுந்தரம்

பண்-காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

122 நீரோங்கிவளர்கமலநீர்பொருந்தாத்தன்மையன்றே
யாரோங்கிமுகமலர்ந்தாங்கருவினையேன்றிறமறந்தின்
றாரோங்கும்பழிபாரா துன்பாலேவிழுந்தொழிந்தேன்
சீரோங்கும்பொழிற்கோடைத்திரைலோக்கியசுந்தரனே. (௧)

123 நையாதமனத்தினனைநைவிப்பானித்தெருவே
ஐயாநீயுலாப்போந்தவன்றுமுதலின்றுவரை
கையாரத்தொழுதருவிகண்ணாரச்சொரிந்தாலும்
செய்யாயோவருள்கோடைத்திரைலோக்கியசுந்தரனே. (௨)

124 அம்பளிக்குபகலோன்பாலடைபற்றுயிவண்மனத்தின்
முன்பளிந்தகாதலுநின்முகந்தோன்றவிளங்கிற்றால்
வம்பளிந்தகனியேயென்மருந்தேநல்வளர்முக்கட்
செம்பளிக்கேபொழிற்கோடைத்திரைலோக்கியசுந்தரனே. (௩)

125 மைஞ்ஞின்றகுழலாடன்மனந்தரவும்வளைதாரா
திஞ்ஞின்றகோவணவனிவன்செய்ததியார்செய்தார்
மெய்ஞ்ஞின்றதமர்க்கெல்லாமெய்ஞ்ஞிற்கும்பண்பினுற
செய்ஞ்ஞன்றியிலன்கோடைத்திரைலோக்கியசுந்தரனே. (௪)

126 நீவாராதொழிந்தாலுநின்பாலேவிழுந்தேழை
கோவாதமணிமுத்தங்குவளைமலர்சொரிந்தனவால்
ஆவாவென்றருள்புரியாயமரர்கணந்தொழுதேத்தும்
தேவாதென்பொழிற்கோடைத்திரைலோக்கியசுந்தரனே. (௫)

127 முழுவதுநீயாயினுமிம்மொய்குழலாண்மெய்ம்முழுதும்
பழுதெனவேநினைந்தோராள்பயில்வதுநின்னொருநாமம்
அழுவதுநின்றிறநினைந்தேயதுவன்றேபெறும்பேறு
செழுமதில்சூழ்பொழிற்கோடைத்திரைலோக்கியசுந்தரனே. (௬)

128 தன்சோதியெழுமேனித்தபனியப்பூஞ்சாய்க்காட்டாய்
உன்சோதியெழில்காண்பானேவிடவுமுருக்காட்டாய்
துஞ்சாகண்ணிவளுடையதுயர்தீருமாறுரையாய்
செஞ்சாலிவயற்கோடைத்திரைலோக்கியசுந்தரனே. (௭)

129 அரும்பேதைக்கருள்புரியாதொழிந்தாய்நின்னவிர்சடைமேல்
நிரம்பாதபிறைதூவுநெருப்பொடுநின்கையிலியாழ்
நரம்பாலுமுயிரீர்ந்தாய்தளிர்புரிசைக்குளிர்வனம்பா
திரம்போதுசொரிகோடைத்திரைலோக்கியசுந்தரனே. (௮)

130 ஆறுதபேரன்பினவருள்ளங்குடிகொண்டு
வேறுகப்பலர்சூழவீற்றிருத்தியதுகொண்டு
வீறுடியிவளுன்னைப்பொதுநீப்பான்விரைந்தின்னம்
தேறுடென்பொழிற்கோடைத்திரைலோக்கியசுந்தரனே. (௯)

131 சரிந்ததுகிறளர்ந்தவிடையவிழ்ந்தகுழலிளந்தெரிவை
இருந்தபரிசொருநாள்கண்டிரங்காயெம்பெருமானே
முரிந்தநடைமடந்தையர்தம்முழங்கொலியும்வழங்கொலியும்
திருந்துவிழவணிகோடைத்திரைலோக்கியசுந்தரனே. (௧௦)

132 ஆரணத்தேன்பருகியருந்தமிழ்மாலைபகரவரும்
காரணத்தினிலைபெற்றகருவூரன்றமிழ்மாலை
பூரணத்தாலீரைந்தும்போற்றிசைப்பார்காந்தாரம்
சீரணைத்தபொழிற்கோடைத்திரைலோக்கியசுந்தரனே. (௧௧)

திருச்சிற்றம்பலம்

௯. கங்கைகொண்டசோளேச்சரம்

பண்-பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

133 அன்னமாய்விசும்புபறந்தயன்றேட
வங்ஙனேபெரியநீசிறிய
என்னையாள்விரும்பியென்மனம்புகுந்த
வெளிமையையென்றுநான்மறக்கேன்
முன்னமாலறியாவொருவனா*மிருவா
முக்கணாநாற்பெருந்தடந்தோட்
கன்னலேதேனேயமுதமேகங்கை
கொண்டசோளேச்சரத்தானே. (௧)

134 உண்ணெகிழ்ந்துடலநெக்குமுக்கண்ணா
வோலமென்றோலமிட்டொருநாள்
மண்ணினின்றலறேன்வழிமொழிமாலை
மழலையஞ்சிலம்படிமுடிமேற்
பண்ணிநின்றுருகேன்பணிசெயேனெனினும்
பாவியேனாவியுள்புகுந்தென்
கண்ணினின்றகலானென்கொலோகங்கை
கொண்டசோளேச்சரத்தானே. (௨)

135 அற்புதத்தெய்வமிதனின்மற்றுண்டோ
வன்பொடுதன்னையஞ்செழுத்தின்
சொற்பதத்துள்வைத்துள்ளமள்ளூறுந்
தொண்டருக்கெண்டிசைக்கனகம்
பற்பதக்குவையும்பைம்பொன்மாளிகையும்
பவளவாயவர்பணைமுலையும்
கற்பகப்பொழிலுமுழுதுமாங்கங்கை
கொண்டசோளேச்சரத்தானே. (௩)

136 ஐயபொட்டிட்டவளகவாணுதலு
மழகியவிழியும்வெண்ணீறும்
சைவம்விட்டிட்டசடைகளுஞ்சடைமேற்
றரங்கமுஞ்சதங்கையுஞ்சிலம்பும்
மொய்கொளெண்டிக்குங்கண்டநின்றொண்டர்
முகமலர்ந்திருகணீரரும்பக்
கைகண்மொட்டிக்குமென்கொலோகங்கை
கொண்டசோளேச்சரத்தானே. (௪)

(பி - ம்.) * மருவா

137 சுருதிவானவனுந்திருநெடுமாலுஞ்
சுந்தரவிசும்பினிந்திரனும்
பருதிவானவனும்படர்சடைமுக்கட்
பகவனுமகவுயிர்க்கமுதாம்
எருதுவாகனனுமெயில்கண்மூன்றெரித்த
வேறுசேவகனுமாம்பின்னும்
கருதுவார்கருதுமுருவமாங்கங்கை
கொண்டசோளேச்சரத்தானே. (௬)

138 அண்டமோரணுவாம்பெருமைகொண்டணுவோ
ரண்டமாஞ்சிறுமைகொண்டடியேன்
உண்டவூணுனக்காம்வகையெனதுள்ள
முள்கலந்தெழுபரஞ்சோதி
கொண்டநாண்பாம்பாம்பெருவரைவில்விற்
குறுகலர்புரங்கண்மூன்றெரித்த
கண்டனேநீலகண்டனேகங்கை
கொண்டசோளேச்சரத்தானே. (௬)

139 மோதலைப்பட்டகடல்வயிறுதித்த
முழுமணித்தரளமதாங்கே
காய்தலைப்பட்டங்குருகியொன்றாய
தன்மையிலென்னைமுன்னின்ற
நீதலைப்பட்டாலியானுமவ்வகையே
நிசிசரரிருவரோடொருவர்
காதலிற்பட்டகருணையாய்கங்கை
கொண்டசோளேச்சரத்தானே. (எ)

140 தத்தையங்கனையார்தங்கண்மேல்வைத்த
தயாவைநூறுயிரங்கூறிட்
டத்திலங்கொரு கூ*றுன்கண்வைத்தவருக்
கமருலகளிக்குநின்பெருமை
பித்தனென்றொருகாற்பேசுவரேனும்
பிழைத்தவைபொறுத்தருள்செய்யும்
கைத்தலஞ்சென்னிமேல்வைத்தகங்கை
கொண்டசோளேச்சரத்தானே. (அ)

141 பண்ணியதழல்காய்பாலுளாநீர்போற்
பாவமுன்பறைந்துபாலனைய
புண்ணியம்பின்சென்றறிவினுக்கறியப்
புகுந்ததோர்யோகினிற்பொலிந்து

(பி - ம்.) * றுன்றன்மேல்வைக்கிலமருல

நுண்ணியையெனினுநம்பநின்பெருமை
நுண்ணிடையொடுக்கநீவந்தென்
கண்ணினுண்மணியிற்கலந்தனைகங்கை
கொண்டசோளேச்சரத்தானே. (கூ)

142 அங்கைகொண்டமரர்மலர்மழைபொழிய
வடிச்சிலம்பலம்பவந்தொருநாள்
உங்கைகொண்டடியேன்சென்னிவைத்தென்னை
யுய்யக்கொண்டருளினைமருங்கிற்
கொங்கைகொண்டனுங்குக்கொடியிடைகாணிற்
கொடியளென்றவிர்சடைமுடிமேற்
கங்கைகொண்டிருந்தகடவுளேகங்கை
கொண்டசோளேச்சரத்தானே. (கo)

143 மங்கையோடிருந்தேயோகுசெய்வானை
வளரிளந்திங்களைமுடிமேற்
கங்கையோடணியுங்கடவுளைக்கங்கை
கொண்டசோளேச்சரத்தானை
அங்கையோடேந்திப்பலிதிரிகருவூ
ரறைந்தசொன்மாலையாலாழிச்
செங்கையோடுலகிலரசுவீற்றிருந்து
திளைப்பதுஞ்சிவனருட்கடலே. (கக)

திருச்சிற்றம்பலம்

எ. திருப்பூவணம்

பண் - பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

144 திருவருள்புரிந்தாளாண்டுகொண்டிங்ஙன்
சிறியனுக்கினியதுகாட்டிப்
பெரிதருள்புரிந்தானந்தமேதருநின்
பெருமையிற்பெரியதொன்றுளதே
மருதரசிருங்கோங்ககின்மரஞ்சாடி
வரைவளங்கவர்ந்திழிவையைப்
பொருதிரைமருங்கோங்காவணவீதிப்
பூவணங்கோயில்கொண்டாயே. (க)

145 பாம்பணைத்துயின்றோனயன்முதற்றேவர்
பன்னெடுங்காலநிற்காண்பான்
எம்பலித்திருக்கவென்னுளம்புகுந்த
வெளிமையையென்றுநான்மறக்கேன்

தேம்புனற்பொய்கைவாளைவாய்மடுப்பத்
தெளிதருதேறல்*பாய்ந்தொழுகும்
பூம்பணைச்சோலையாவணவீதிப்
பூவணங்கோயில்கொண்டாயே. (௨)

146 கரைகடலொலியிற்றமருகத்தரையிற்
கையினிற்கட்டியகயிற்றால்
இருதலையொருநாவியங்கவந்தொருநா
ளிருந்திடாயெங்கள்கண்முகப்பே
விரிதிகழ்விழவின்பின்செல்வோர்பாடல்
வேட்கையின்வீழ்ந்தபாதவிழ்ந்த
புரிசடைதுகுக்குமாவணவீதிப்
பூவணங்கோயில்கொண்டாயே. (௩)

147 கண்ணியன்மணியின்சூழல்புக்கங்கே
கலந்துபுக்கொடுங்கினேற்கங்ஙன்
நுண்ணியையெனினுநம்பநின்பெருமை
நுண்ணிமையிறந்தமையறிவன்
மண்ணியன்மரபிற்றங்கிருண்மொழுப்பின்
வண்டினம்பாடநின்றாடும்
புண்ணியமகளிராவணவீதிப்
பூவணங்கோயில்கொண்டாயே. (௪)

148 கடுவினைப்பாசக்கடல்கடந்தைவர்
கள்ளரைமெள்ளவேதுரந்துன்
அடியிணையிரண்டுமடையுமாறடைந்தே
னருள்செய்வாயருள்செயாதொழிவாய்
நெடுநிலைமாடத்திரவிருள்கிழிக்க
நிலவிளக்கலகில்சாலேகப
புடைகிடந்திலங்குமாவணவீதிப்
பூவணங்கோயில்கொண்டாயே. (௫)

149 செம்மனக்கிழவோரன்புதாவென்றுன்
சேவடிபார்த்திருந்தலச
எம்மனங்குடிகொண்டிருப்பதற்கியானா
ரென்னுடையடிமைதானியாதே
அம்மனங்குளிர்நாட்பலிக்கெழுந்தருள
வரிவையரவிழ்குழற்சுரும்பு
பொம்மெனமுரலுமாவணவீதிப்
பூவணங்கோயில்கொண்டாயே. (௬)

(பி - ம்) * பேர்ந்தொ

150 சொன்னவின்முறைநான் காரணமுணராச்
        சூழல்புக்கொளித்தநீயின்று
கன்னவின்மனத்தென்கண்வலைப்படுமிக்
        கருணையிற்பெரியதொன்றுளதே
மின்னவில்கனகமாளிகைவாய்தல்
        விளங்கிளம்பிறைதவழ்மாடம்
பொன்னவில்புரிசையாவணவீதிப்
        பூவணங்கோயில்கொண்டாயே. (௭,௮,௯)

151 பூவணங்கோயில்கொண்டெனையாண்ட
        புனிதனைவனிதைபாகனைவெண்
கோவணங்கொண்டுவெண்டலையேந்துங்
        குழகனையழகெலாநிறைந்த
தீவணன்றன்னைச்செழுமறைதெரியுந்
        திகழ்கருவூரனேனுரைத்த
பாவணத்தமிழ்கள்பத்தும்வல்லார்கள்
        பரமனதுருவமாகுவரே. (௧௦)

திருச்சிற்றம்பலம்

---

௮. திருச்சாட்டியக்குடி

பண் - பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

152 பெரியவாகருணையிளநிலாவெறிக்கும்பிறைதவழ்சடைமொழுப் பவிழ்ந்து, சரியுமாசுழியங்குழைமிளிர்ந்திருபாற்றாழ்ந்தவாகாது கள்கண்டம், கரியவாதாமுஞ்செய்யவாய்முறுவல்காட்டுமாசாட் டியக்குடியார், இருகைகூம்பினகண்டலர்ந்தவாமுகமேழிருக்கை யிலிருந்தவீசனுக்கே. (௧)

153 பாந்தள்பூணாரம்பரிகலங்கபாலம்பட்டவர்த்தனமெருதன்பர் வார்ந்தகண்ணருவிமஞ்சனசாலைமலைமகண்மகிழ்பெருந்தேவி சாந்தமுந்திருநீறருமறைகீதஞ்சடைமுடிசாட்டியக்குடியார், ஏந் தெழிலிதயங்கோயின்மாளிகையேழிருக்கையுளிருந்தவீசனுக்கே.

154 தொழுதபின்செல்வதயன்முதற்கூட்டந்தொடர்வனம றைகளுன்கெனினும், கழுதுறுகரிகாடுறைவிடம்போர்வைகவந்திகை கரியுரிதிரிந்தூண், தழலுமிழரவங்கோவணம்பளிங்குசெபவடஞ்சாட் டியக்குடியார், இழுதுநெய்சொரிந்தோம்பழலொளிவிளக்கேழிருக் கையிலிருந்தவீசனுக்கே. (௩)

155 பதிகநான்மறை தும்புருவுநார தரும்பரிவொடுபோடுகொந்தர்ப்பர், கதியெலாமரங்கம்பிணையன் மூவுலகிற்கடியிருட்டிருநடம்புரியும், சதியிலார்கதியிலொலிசெயுங்கையிற்றமருகஞ்சாட்டியக்குடியார், இதயமாங்கமலங்கமலவர்த்தணையேழிருக்கையிலிருந்தவீசனுக்கே. (௬)

156 திருமகன்முருகன்றேவியேலுமையாடிருமகண்மருமகன்றூயாம், மருமகன்மதனன்மாமனேலிமவான்மலையுடையரையர்தம்பாவை, தருமலிவளனுஞ்சிவபுரான்றேழன்றனபதிசாட்டியக்குடியார், இருமுகங்கழன்மூன்றேழுகைத்தலமேழிருக்கையிலிருந்தவீசனுக்கே.

157 அனலமேபுனலேயனிலமேபுவனியம்பராவம்பரத்தளிக்கும், கனகமேவெள்ளிக்குன்றமேயென்றன்களைகணேகளைகண்மற்றில்லாத், தனியனேனுள்ளங்கோயில்கொண்டருளுஞ்சைவனேசாட்டியக்குடியார்க், கினியதீங்கனியாயொழிவறநிறைந்தேழிருக்கையிலிருந்தவாறியம்பே. (௬)

158 செம்பொனேபவளக்குன்றமேநின்றதிசைமுகன்மான்முதற்கூட்டத், தன்பரானவர்கள்பருகுமாரமுதேயத்தனேபித்தனேனுடைய, சம்புவேயணுவேதாணுவேசிவனேசங்கராசாட்டியக்குடியார்க், கின்பனேயெங்குமொழிவறநிறைந்தேழிருக்கையிலிருந்தவாறியம்பே. (எ)

159 செங்கணுபோற்றிதிசைமுகாபோற்றிசிவபுரநகருள்வீற்றிருந்த, அங்கணாபோற்றியமரனேபோற்றியமரர்கடலைவனேபோற்றி, தங்கணன்மறைநூல்சகலமுங்கற்றோர்சாட்டியக்குடியிருந்தருளும், எங்கணாயகனேபோற்றியேழிருக்கையிறைவனேபோற்றியேபோற்றி. (அ)

160 சித்தனேயருளாய்செங்கணாவருளாய்சிவபுரநகருள்வீற்றிருந்த, அத்தனேயருளாயமரனேயருளாயமரர்களதிபனேயருளாய், தத்துநீர்ப்படுகர்த்தண்டலைச்சூழற்சாட்டியக்குடியுளேழிருக்கை, முத்தனேயருளாய்முதல்வனேயருளாய்முன்னவாதுயர்கெடுத்தெனக்கே. (௯)

161 தாட்டரும்பழனப்பைம்பொழிற்படுகர்த்தண்டலைச்சாட்டியக்குடியார், ஈட்டியபொருளாயிருக்குமேழிருக்கையிருந்தவன்றிருவடிமலர்மேற், காட்டியபொருட்கலைபயில்கருவூரான்கழறுசொன்மாலையீரைந்தும், மாட்டியசிந்தைமைந்தருக்கன்றேவளரொளிவிளங்குவானுலகே. (௧௦)

திருச்சிற்றம்பலம்

௬௦. தஞ்சையிராசராசேச்சரம்

பண் - பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

GOVERNMENT ORIENTAL MANUSCRIPTS
3 - AUG 1957
MADRAS

162 உலகெலாந்தொழவந்தெழுகதிர்ப்பரிதி
யொன்றுநூறாயிரகோடி
அலகெலாம்பொதிந்ததிருவுடம்பச்சோ
வங்ஙனேயழகிதோவரணம்
பலகுலாம்படைசெய்நெடுநிலைமாடம்
பருவரைஞாங்கர்வெண்டிங்கள்
இலைகுலாம்பதணத்திஞ்சிசூழ்தஞ்சை
யிராசராசேச்சரத்திவர்க்கே. (௧)

163 நெற்றியிற்கண்ணென்கண்ணினின்றகலா
நெஞ்சினிலஞ்சிலம்பலைக்கும்
பொற்றிருவடியென்குடிமுழுதாளப்
புகுந்தனபோந்தனவில்லை
மற்றெனக்குறவென்மறிதிரைவடவாற்
றிடுபுனன்மதகில்வாழ்முதலை
எற்றுநீர்க்கிடங்கிலிஞ்சிசூழ்தஞ்சை
யிராசராசேச்சரத்திவர்க்கே. (௨)

164 சடைகெழுமகுடந்தண்ணிலாவிரிய
வெண்ணிலாவிரிதருதரளக்
குடைநிழல்விடைமேற்கொண்டுலாப்போதுங்
குறிப்பெனோகோங்கிணரனைய
குடைகெழுநிருபர்முடியொடுமுடிதேய்ந்
தக்கசெஞ்சுடர்ப்படுகுவையோங்
கிடைகழிமாடத்திஞ்சிசூழ்தஞ்சை
யிராசராசேச்சரத்திவர்க்கே. (௩)

165 வாழியம்போதத்தருகுபாய்விடையம்
வரிசையின்விளக்கலினடுத்த
சூழலம்பளிங்கின்பாசலாதிச்
சுடர்விடுமண்டலம்பொலியக்
காழகில்கமழுமாளிகைமகளிர்
கங்குல்வாயங்குலிகெழும
யாழொலிசிலம்புமிஞ்சிசூழ்தஞ்சை
யிராசராசேச்சரத்திவர்க்கே. (௪)

166 எவருமாமறைகளைவையும்வானவர்க
ளீட்டமுந்தாட்டிருக்கமலத்
தவருமாலவனுமறிவரும்பெருமை
யடலழலுமிழ்தழற்பிழம்பர்
உவரிமாகடலினொலிசெய்மாமறுகி
லுறுகளிற்றரசினீட்டம்
இவருமால்வரைசெயிஞ்சிசூழ்தஞ்சை
யிராசராசேச்சரத்திவர்க்கே. (௫)

167 அருளுமாறருளியாளுமாறாள
வடிகடமழகியவிழியும்
குருளும்வார்காதுங்காட்டியான்பெற்ற
குயிலினைமயல்செய்வதழகோ
தரளவான்குன்றிற்றண்ணிலாவொளியுந்
தருகுவால்பெருகுவான்றெருவில்
இருளெலாங்கிழியுமிஞ்சிசூழ்தஞ்சை
யிராசராசேச்சரத்திவர்க்கே. (௬)

168 தனிப்பெருந்தாமேமுழுதுறப்பிறப்பின்
றளிரிறப்பிலையுதிர்வென்றால்
நினைப்பருந்தம்பாற்சேறலின்றேனு
நெஞ்சிடிந்துருகுவதென்னோ
சுனைப்பெருங்கலங்கற்பொய்கையங்கழுநீர்ச்
சூழன்மாளிகைசுடர்வீசும்
எனைப்பெருமணஞ்செயிஞ்சிசூழ்தஞ்சை
யிராசராசேச்சரத்திவர்க்கே. (௭)

169 பன்னெடுங்காலம்பணிசெய்துபழையோர்
தாம்பலரேம்பலித்திருக்க
என்னெடுங்கோயினெஞ்சுவீற்றிருந்த
வெளிமையையென்றுநான்மறக்கேன்
மின்னெடும்புருவத்திளமயிலனையார்
விலங்கல்செய்நாடகசாலை
இன்னடம்பயிலுமிஞ்சிசூழ்தஞ்சை
யிராசராசேச்சரத்திவர்க்கே. (௮)

170 மங்குல்சூழ்போதினொழிவறநிறைந்து
வஞ்சகர்நெஞ்சகத்தொளிப்பார்
அங்கழற்சுடராமவர்க்கிளவேன
லலர்கதிரனையர்வாழியரோ
பொங்கெழிற்றிருநீறழிபொசிவனப்பிற்
புனறுளும்பவிர்சடைமொழுப்பர்
எங்களுக்கினியரிஞ்சிசூழ்தஞ்சை
யிராசராசேச்சரத்திவர்க்கே. (௯)

171 தனியரெத்தனையொராயிரவருமாந்
தன்மையரென்வயத்தினராம்
கனியரத்தருதிங்கரும்பர்வெண்புரிநூற்
கட்டியரட்டவாரமிர்தர்
புனிதர்பொற்கழலர்புரிசடாமகுடர்
புண்ணியர்பொய்யிலாமெய்யர்க்
கினியரெத்தனையுமிஞ்சிசூழ்தஞ்சை
யிராசராசேச்சரத்திவர்க்கே. (௧௦)

172 சரளமந்தாரசண்பகவகுள
சந்தனநந்தனவனத்தின்
இருள்விரிமொழுப்பினிஞ்சிசூழ்தஞ்சை
யிராசராசேச்சரத்திவரை
அருமருந்தருந்தியல்லறீர்கருவூ
ரறைந்தசொன்மாலையீரைந்தின்
பொருண்மருந்துடையோர்சிவபதமென்னும்
பொன்னெடுங்குன்றுடையோரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்

---

௧௦. திருவிடைமருதூர்

பண் - பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

173 வெய்யசெஞ்சோதிமண்டலம் பொலியவீங்கிருணடு நல்யாமத்தோர், டையசெம்பாந்தள் பருமணியுமிழ்ந்து பாவியேன் காதல்செய்காதில், ஐயசெம்பொற்றோட்ட விர்சடைமொழுப்பினழிவழகிய திருநீற்று, மையசெங்கண்டத்தண்டவானவர்கோன்மருவிடந்திருவிடைமருதே. (௧)

174 இந்திரலோகமுழுவதும்பணிகேட்டிணையடிதொழுதெழத் தாம்போய், ஐந்தலைநாகமேகலையரையாவகங்தொறும்பலிதிரியடிகள், தந்திரிவீணைகீதமும்பாடச்சாதிகின்னரங்கலந்தொலிப்ப, மந்திரகீதந் தீங்குழலெங்குமருவிடந்திருவிடைமருதே. (௨)

175 பனிபடுமதியம்பயில்கொழுந்தன்னபல்லவமவல்லியென்றிங்ஙன், வினைபடுகனகம்போலயாவையுமாய்வீங்குலகொழிவறநிறைந்து, தனிபடுகலவிமலைமகளுடனாய்த்தூங்கிருணடுநல்யாமத்தென், மனனிடையணுகி நணுகியுள்கலநீதோன்மருவிடந்திருவிடைமருதே. (௩)

176 அணியுமிழ்சோதிமணியினுள்கலந்தாங்கடியனேனுள்கலந்தடியேன், பணிமகிழ்ந்தருளுமரிவைபாகத்தன்படர்சடைவிடமிடற்றடிகள், துணியுமிழாடையரையிலோராடைசுடருமிழ்தரவதனருகே, மணியுமிழ்நாகமணியுமிழ்ந்திமைப்பமருவிடந்திருவிடைமருதே. (௪)

177 பந்தமும்பிரிவுந்தெரிபொருட்பனுவற்படிவழிசென்றுசென்றேறிச், சிந்தையுந்தானுங்கலந்ததோர்கலவிதெரியினுந்தெரிவுறாவண்ணம், எந்தையுந்தாயும்யானுமென்றிங்ஙனெண்ணில்பல்லூழிகளுடனாய், வந்தணுகாதுநுணுகியுள்கலந்தோன்மருவிடந்திருவிடைமருதே. (௫)

178 எரிதருகரிகாட்டிடுபிணநிணமுண்டேப்பமிட்டிலங்கெயிற்றழல்வாய்த், துருகழகனடும்பேய்க்கணமெழுந்தாடுந்தூங்கிருணடுநல்யாமத்தே, அருள்புரிமுறுவன் முகிழ்நிலாவெறிப்பவந்திபோன்றொளிர்திருமேனி, வரியரவாடவாடுமெம்பெருமான்மருவிடந்திருவிடைமருதே. (௬)

179 எழிலையாழ்செய்கைப்பசுங்கலன்விசும்பினின்றுளிபடநனைந்துருகி, அழலையாழ்புருவம்புனலொடுங்கிடந்தாங்காதனேன்மாதரார்கலவித், தொழிலையாழ்நெஞ்சமிடர்படாவண்ணந்தூங்கிருணடுநல்யாமத்தோர், மழலையாழ்சிலம்பவந்தகம்புகுந்தோன்மருவிடந்திருவிடைமருதே. (௭)

180 வையவாம்பெற்றம்பெற்றமேறுடையார்மாதவர்காதல்வைத்தென்னை, வெய்யவாஞ்செந்தீப்பட்டவிட்டிகைபோல்விழுமியோன்முன்புபின்பென்கோ, நொய்யவாறென்னவந்துள்வீற்றிருந்தநூறுநூறாயிரகோடி, மையவாங்கண்டத்தண்டவானவர்கோன்மருவிடந்திருவிடைமருதே. (௮)

181 கலங்கலம்பொய்கைப்புனற்றெளிவிடத்துக்கலந்தமண்ணிடைக்கிடந்தாங்கு, நலங்கலந்தடியேன்சிந்தையுட்புகுந்தநம்பனேவம்பனேனுடைய, புலங்கலந்தவனேயென்றுநின்றுருகிப்புலம்புவாரவம்புகாரருவி, மலங்கலங்கண்ணிற்கண்மணியனையான்மருவிடந்திருவிடைமருதே. (௯)

182 ஒருங்கிருங்கண்ணினெண்ணில்புன்மாக்களுறங்கிருணடுநல்யாமத்தோர், கருங்கணின்றிமைக்குஞ்செழுஞ்சுடர்விளக்கங்கலந்தெனக்கலந்துணர்கருவூர், தருங்கரும்பனையதீந்தமிழ்மாலைதடம்பொழின்மருதயாழுதிப்ப, வருங்கருங்கண்டத்தண்டவானவர்கோன்மருவிடந்திருவிடைமருதே. (௧௦)

திருச்சிற்றம்பலம்

* பூந்துருத்திநம்பிகாட நம்பி திருவிசைப்பா

க. திருவாரூர்

பண் - பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

183 கைக்குவான்முத்தின்சரிவளைபெய்துகழுத்திலோர்தனிவடங்
கட்டி, முக்கணாயகராய்ப்பவனிபோந்திங்ஙன்முரிவதோர்முரிவு
மையளவும். தக்கசீர்க்கங்கையளவுமன்றென்னே தம்மொருப்பாடு
லகதன்மேல், மிக்கசீராரூராதியாய்வீதிவிடங்கராய்நடங்குலாவி
னரே. (க)

184 பத்தியாயுணர்வோரருளைவாய்மடுத்துப்பருகுதோறமுதமொத்
தவர்க்கே, தித்தியாவிருக்குந்தேவர்காளிவர்தந்திருவுருவிருந்த
வாபாரீர், சத்தியாய்ச்சிவமாயுலகெலாம்படைத்ததனிமுழுமுத
லுமாயதற்கோர், வித்துமாயாரூராதியாய்வீதிவிடங்கராய்நடங்
குலாவினரே. (உ)

திருச்சிற்றம்பலம்

உ. கோயில்

பண் - சாளரபாணி

திருச்சிற்றம்பலம்

185 முத்துமணிவயிரமாணிக்கமாலைகண்மேற்
றொத்துமிளிர்வனபோற்றூண்டுவிளக்கேய்ப்ப
எத்திசையும்வானவர்களேத்துமெழிற்றில்லை
அத்தனுக்குமம்பலமேயாடரங்கமாயிற்றே. (க)

186 கடியார்கணம்புல்லர்கண்ணப்பரென்றுன்
அடியாரமருலகமாளநீயாளாதே
முடியாமுத்தீவேள்விமூவாயிரவரொடும்
குடிவாழ்க்கைகொண்டுநீகுலாவிக்கூத்தாடினையே. (உ)

187 அல்லியம்பூம்பழனத்தாமூர்நாவுக்கரசைச்
செல்லநெறிவகுத்தசேவகனேதென்றில்லைக்
கொல்லைவிடையேறிகூத்தாடரங்காகச்
செல்வநிறைந்தசிற்றம்பலமேசேர்ந்தனையே. (ஙு)

(பி - ம்.) * நம்பிகாட நம்பி.

188 எம்பந்தவல்வினைநோய்தீர்த்திட்டெமையாளும்
சம்பந்தன்காழியர்கோன் றன்னையுமாட்கொண்டருளி
அம்புந்துகண்ணாளுந் தானுமணிதில்லைச்
செம்பொன்செயம்பலமேசேர்ந்திருக்கையாயிற்றே. (௪)

189 களையாவுடலோடுசேரமானாரூரன்
விளையாமதமாருவெள்ளானைமேல்கொள்ள
முளையாமதிசூடிமூவாயிரவரொடும்
அளையாவிளையாடுமம்பலநின்றாடரங்கே. (௫)

190 அகலோகமெல்லாமடியவர்கடற்சூழப்
புகலோகமுண்டென்றுபுகுமிடநீதேடாதே
பவலோகநெறிபடைத்தபுண்ணியங்கண்ணியசீர்ச்
சிவலோகமாவதுவுந்தில்லைச்சிற்றம்பலமே. (௬)

191 களகமணிமாடஞ்சூளிகைசூழ்மாளிகைமேல்
அளகமதிநுதலாராயிழையார்போற்றிசைப்ப
ஒளிகொண்டமாமணிகளோங்கிருளையாங்கற்றும்
தெளிகொண்டதில்லைச்சிற்றம்பலமேசேர்ந்தனையே. (௭)

192 பாடகமுநூபுரமும்பல்சிலம்பும்பேர்ந்தொலிப்பச்
சூடகக்கைநல்லார்தொழுதேத்தத்தொல்லுலகில்
நாடகத்தின்கூத்தைநவிற்றுமவர்நாடோறும்
ஆடகத்தான்மேய்ந்தமைந்தவம்பலநின்றாடரங்கே. (௮)

193 உருவத்தெரியுருவாயூழிதோறெத்தனையும்
பரவிக்கிடந்தயனுமாலும்பணிந்தேத்த
இரவிக்குநேராகியேய்ந்திலங்குமாளிகைசூழ்ந்
தரவிக்குமம்பலமேயாடரங்கமாயிற்றே. (௯)

194 சேடருறைதில்லைச்சிற்றம்பலத்தான்றன்
ஆடலதிசயத்தையாங்கறிந்துபூந்துருத்திக்
காடன்றமிழ்மாலைபத்துங்கருத்தறிந்து
பாடுமிவைவல்லார்பற்றுநிலைபற்றுவரே. (௧௦)

திருச்சிற்றம்பலம்

* கண்டராதித்தர் திருவிசைப்பா

கோயில்

பண் - பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

195 மின்னாருருவமேல்விளங்கவெண்கொடிமாளிகைசூழப்
பொன்னார்குன்றமொன்றுவந்துநின்றதுபோலுமென்னாத்
தென்னாவென்றுவண்டுபாடுந்தென்றில்லையம்பலத்துள்
என்னாரமுதையெங்கள்கோவையென்றுகொலெய்துவதே. (௧)

196 ஓவாமுத்தீயஞ்சுவேள்வியாறங்கநான்மறையோர்
ஆவேபடுப்பாரந்தணாளராகுதிவேட்டுயர்வார்
மூவாயிரவர்தங்களோடுமுன்னரங்கேறிநின்ற
கோவேயுன்றன்கூத்துக்காணக்கூடுவதென்றுகொலோ. (௨)

197 முத்தீயாளர்நான்மறையர்மூவாயிரவர்நின்னோ
டொத்தேவாழுந்தன்மையாளரோதியநான்மறையைத்
தெத்தேயென்றுவண்டுபாடுந்தென்றில்லையம்பலத்துள்
அத்தாவுன்றனாடல்காணவணைவதுமென்றுகொலோ. (௩)

198 மானைப்புரையுமடமென்னோக்கிமாமலையாளோடும்
ஆனஞ்சாடுஞ்சென்னிமேலோரம்புலிசூடுமரன்
தேனைப்பாலைத்தில்லைமல்குசெம்பொனினம்பலத்துக்
கோனைஞானக்கொழுந்துதன்னைக்கூடுவதென்றுகொலோ. (௪)

199 களிவானுலகிற்கங்கைநங்கைகாதலனேயருளென்
றொளிமான்முன்னேவரங்கிடக்கவுன்னடியார்க்கருளும்
தெளிவாரமுதேதில்லைமல்குசெம்பொனினம்பலததுள்
ஒளிவான்சுடரேயுன்னைநாயேனுறுவதுமென்றுகொலோ.
(௫)

200 பாரோர்முழுதும்வந்திறைஞ்சப்பதஞ்சலிக்காட்டுகந்தான்
வாரார்முலையாண்மங்கைபங்கனமாமறையோர்வணங்கச்
சீரான்மல்குதில்லைச்செம்பொனம்பலத்தாடுகின்ற
காரார்மிடற்றெங்கண்டனாரைக்காண்பதுமென்றுகொலோ. (௬)

201 இலையார்கதிர்வேலிலங்கைவேந்தனிருபதுதோளுமிற
மலைதானெடுத்தமற்றவற்குவாளொடுநாள்கொடுத்தான்
சிலையாற்புரமூன்றெய்தவில்லிசெம்பொனினம்பலத்துக்
கலையார்மறிபொற்கையினானைக்காண்பதுமென்றுகொலோ. (௭)

(பி-ம்.) * கண்டராதித்தப்பெருமான்

202 வெங்கோல்வேந் தன்றென்னா டுமீழமுங்கொண்ட திறற்
செங்கோற்சோழன் கோழிவேந் தன்செம்பியன்பொன்னணிந்த
அங்கோல்வளையார்பாடியாடுமணிதில்லையம்பலத்துள்
எங்கோனீசனெம்மிறையையென் றுகொலெய்துவதே. (௮)

203 நெடியானோ டுநான்முகனும்வானவருநெருங்கி
முடியான்முடி கண்மோதியுக்கமுழு மணியின்றிரளை
அடியாரலகினாற்றிரட்டுமணிதில்லையம்பலத்துக்
கடியார்கொன்றைமாலையானைக்காண்பதுமென் றுகொலோ. (௯)

204 சீரான்மல்குதில்லைச்செம்பொனம்பலத்தாடி தன்னைக்
காரார்சோலைக்கோழிவேந் தன்றஞ்சையர்கோன்கலந்த
ஆராவின்சொற்கண்டராதித்தனருந்தமிழ்மாலைவல்லார்
பேராவுலகிற்பெருமையோடும்பேரின்பமெய்துவரே. (௧௦)

திருச்சிற்றம்பலம்

வேணாட்டடிகள் திருவிசைப்பா

கோயில்

பண்-புறநீர்மை

திருச்சிற்றம்பலம்

205 துச்சானசெய்திடினும்பொறுப்பரன்றேயாளுகப்பார்
கைச்சாலுஞ்சிறுகதலியிலைவேம்புங்கறிகொள்வார்
எச்சார்வுமில்லாமைநீயறிந்துமெனதுபணி
நச்சாய்காண்டிருத்தில்லைநடம்பயிலுநம்பானே. (௧)

206 தம்பானைசாயப்பற்றாரென் னுமுதுசொல்லும்
எம்போல்வார்க்கில்லாமையென்னளவேயறிந்தொழிந்தேன்
வம்பானார்பணியுகத்திவழியடியேன்றொழிலிறையும்
நம்பாய்காண்டிருத்தில்லைநடம்பயிலுநம்பானே. (௨)

207 பொசியாதோகீழ்க்கொம்புநிறைகுளமென் றதுபோலத்
திசைநோக்கிப்பேழ்கணித்துச்சிவபெருமானோவெனினும்
இசையானாலென்றிறத்துமெனையுடையாளுரையாடாள்
நசையானேன்றிருத்தில்லைநடம்பயிலுநம்பானே. (௩)

208 ஆயா தசமயங்களவரவர்கண்முன்பென்னை
நோயோடுபிணிநலியவிருக்கின்றவதனாலே
பேயாவித்தொழும்பனைத்தம்பிரானிகழுமென்பித்தாய்
நாயேனைத்திருத்தில்லைநடம்பயிலுநம்பானே. (௪)

209 நின்றுநினைந்திருந்துகிடந்தெழுந்துதொழுந்தொழும்பனேன்
ஒன்றியொருகானினையாதிருந்தாலுமிருக்கவொட்டாய்
கன்றுபிரிகற்றாப்போற்கதறுவித்திவரவுநில்லாய்
நன்றிதுவோதிருத்தில்லைநடம்பயிலுநம்பானே. (௫)

210 படுமதமுமிடவயிறுமுடையகளிறுடையபிரான்
அடியறியவுணர்த்துவதுமகத்தியனுக்கோத்தன்றே
இடுவதுபுல்லோரெருதுக்கொன்றினுக்குவையிடுதல்
நடுவிதுவோதிருத்தில்லைநடம்பயிலுநம்பானே. (௬)

211 மண்ணோடுவிண்ணளவுமனிதரொடுவானவர்க்கும்
கண்ணாவாய்கண்ணாகாதொழிதலுநான்மிகக்கலங்கி
அண்ணாவோவென்றண்ணாந்தலமந்துவிளித்தாலும்
நண்ணாயாற்றிருத்தில்லைநடம்பயிலுநம்பானே. (௭)

212 வாடாவாய்நாப்பிதற்றியுனைநினைந்துநெஞ்சுருகி
வீடாஞ்செய்குற்றேவலெற்றேமற்றிதுபொய்யிற்
கூடாமேகைவந்துகுறுகுமாறியானுன்னை
நாடாயாற்றிருத்தில்லைநடம்பயிலுநம்பானே. (௮)

213 வாளாமாலயன்வீழ்ந்துகாண்பரியமாண்பிதனைத்
தோளாரக்கையாரத்துணையாரத்தொழுதாலும்
ஆளோநீயுடையதுவுமடியேனுன்றாள்சேரும்
நாளேதோதிருத்தில்லைநடம்பயிலுநம்பானே. (௯)

214 பாவார்ந்ததமிழ்மாலைபத்தரடித்தொண்டனெடுத்
தோவாதேயழைக்கின்றானென்றருளிநன்றுமிகத்
தேவேதென்றிருத்தில்லைக்கூத்தாடீநாயடியேன்
சாவாயுநினைக்காண்டலினியுனக்குத்தடுப்பரிதே. (௧௦)

திருச்சிற்றம்பலம்

திருவாலியமுதனார் திருவிசைப்பா

க. கோயில் - பாதாதிகேசம்

பண்-பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

215 மையன்மாதொருகூறன்மால்விடையேறிமான்மறியேந்தியதட
கையன்கார்புரையுங்கறைக்கண்டன்*கனன்மழுவன் [ங்
ஐயனாரழலாடுவானணிசீர்வயற்றில்லையம்பலத்தான்
செய்யபாதம்வந்தென்சிந்தையுள்ளிடங்கொண்டனவே. (௧)

(பி - ம்.) * கனமழுவ

216 சலம்பொற்றாமரை தாழ்ந்தெழுந்த தடமுந் தடம்புனல்வாய்மலர்
அலம்பிவண்டறையுமணியார் தில்லையம்பலவன் [தழீஇ
புலம்பிவானவர் தானவர்புகழ்ந்தேத்தவாடுபொற்கூத்தனார்கழற்
சிலம்புகிங்கிணியென்சிந்தையுள்ளிடங்கொண்டனவே. (௨)

217 குருண்டவார்குழற்கோதைமார்குயில்போன்மிழற்றிய கோலமா
திரண்டதில்லை தன்னுட்டிருமல்குசிற்றம்பலவன் [ளிகை
மருண்டுமாமலையான்மகடொழவாடுங்கூத்தன்மணிபுரைதரு
திரண்டவான்குறங்கென்சிந்தையுள்ளிடங்கொண்டனவே. (௩)

218 போழ்ந்தியானை தன்னைப் பொருப்பன் மகளுமையச்சங்கண்ட
வன், தாழ்ந்ததண்புனல்சூழ் தடமல்குசிற்றம்பலவன், சூழ்ந்தபாய்புலி
த்தோன்மிசைத்தொடுத்தவீக்கும்பொன்னாணொடு, தாழ்ந்த
கச்சதன்றேதமியேனைத்தளர்வித்ததே. (௪)

219 பந்தபாசமெலாமறப்பசுபாசநீக்கியபன்முனிவரோ
டந்தணர்வணங்குமணியார் தில்லையம்பலவன்
செந்தழல்புரைமேனியுந்திகழுந் திருவயிறும்வயிற்றினுள்
உந்திவான்சுழியென்னுள்ளத்துள்ளிடங்கொண்டனவே. (௫)

220 குதிரைமாவொடுந்தேர்பலகுவிந்தீண்டுதில்லையுட்கொம்பனா
மதுரவாய்மொழியார்மகிழ்ந்தேத்துசிற்றம்பலவன் [ரொடு
அதிரவார்கழல்வீசிநின்றழகாநடம்பயில்கூத்தன்மேல்
திகழுதரபந்தனமென்னுள்ளத்துள்ளிடங்கொண்டனவே. (௬)

221 படங்கொள்பாம்பணையானொடுபிரமன்பரம்பரமாவருளென்று,
தடங்கையாற்றொழவுந் தழலாடுசிற்றம்பலவன், நடங்கைநான்குமத்
தோள்களுந் தடமார்பினிற்பூண்கண்மேற்றிசை, விடங்கொள்கண்ட
மன்றேவினையேனைமெலிவித்ததே. (௭)

222 செய்யகோடுடன்கமலமலர்சூழ்தருதில்லைமாமறையோர்கடாந்
தொழ, வையமுய்யநின்றுமகிழ்ந்தாடுசிற்றம்பலவன்
செய்யவாயின்முறுவலுந்திகழுந்திருக்காதுங்காதினின்மாத்திரை
களோ, டையதோடுமன்றேயடியேனையாட்கொண்டனவே. (௮)

223 செற்றவன்புரந்தீயெழச்சிலைகோலியாரழலூட்டினனவன்
எற்றிமாமணிகளெறிநீர்த்தில்லையம்பலவன்
மற்றைநாட்டமிரண்டொடுமலருந்திருமுகமுமுகத்தினுள்
நெற்றிநாட்டமன்றேநெஞ்சுளே* திளைக்கின்றனவே. (௯)

224 தொறுக்கள்வான்கமலமலருழக்கக்கரும்புநற்சாறுபாய்தர
மறுக்கமாய்க்கயல்கண்மடைபாய்தில்லையம்பலவன்
முறுக்குவாசிகைதன்னொடுமுகிழ்த்தவவ்வகத்திமொட்டொடுமத்
தமும், பிறைக்கொள்சென்னியன்றேபிரியாதென்னுணின்றன
[வே. (௧௦)

(பி - ம்.) * நினைக்கின்றனவே

225 தூவிநீரொடுபூவவைதொழுதேத்துகையினராகிமிக்கதோர்
ஆவியுண்ணிறுத்தியமர்ந்தறியவன்பினராய்த் [வை
தேவர்தாந்தொழவாடியதில்லைக்கூத்தனைத்திருவாலி சொல்லி
மேவவல்லவர்கள்விடையானடிமேவுவரே. (கக)

திருச்சிற்றம்பலம்

உ. கோயில் - பவளமால்வரை

பண்-நட்டராகம்

திருச்சிற்றம்பலம்

226 பவளமால்வரையைப்பனிபடர்ந்தனையதோர்படரொளிதரு திருநீறும், குவளைமாமலர்க்கண்ணியுங்கொன்றையுந்துன்றுபொற்குழற்றிருச்சடையும்,திவள்மாளிகைசூழ்தருதில்லையுட்டிருநடம்புரிகின்ற, தவளவண்ணனைநினைதொறுமென்மனந்தழன்மெழுகொக்கின்றதே. (க)

227 ஒக்கவோட்டந்தவந்தியுமதியமுமலைகடலொலியோடு, நெக்குவீழ்தருநெஞ்சினைப்பாய்தலுநிறையழிந்திருப்பேனைச், செக்கர்மாளிகைசூழ்தருதில்லையுட்டிருநடம்வகையாலே, பக்கமோட்டந்தமன்மதன்மலர்க்கணைபடுந்தொறுமலந்தேனே; (உ)

228 அலந்துபோயினேனம்பலக்கூத்தனேயணிதில்லைநகராளீ,சிலந்தியையரசாள்கவென்றருள்செய்ததேவதேவீசனே, உலந்தமார்க்கண்டிக்காகியக்காலனையுயிர்செகவுவதைகொண்ட, மலர்ந்தபாதங்கள்வனமுலைமேலொற்றவந்தருள்செய்யாயே. (ங)

229 அருள்செய்தாடுநல்லம்பலக்கூத்தனேயணிதில்லைநகராளீ,மருள்செய்தென்றனைவனமுலைபொன்பயப்பிப்பதுவழக்காமோ, திரளுநீண்மணிக்கங்கையைத்திருச்சடைச்சேர்த்தியச்செய்யாளுக்,குருவம்பாகமுமீந்துநல்லந்தியையொண்ணுதல்வைத்தோனே. (ச)

230 வைத்தபாதங்கண்மாலவன் காண்கிலன்மலரவன்முடிதேடி, எய்த்துவந்திழிந்தின்னமுந்துதிக்கின்றனெழின்மறையவற்றாலே,செசெய்த்தலைக்கமலம்மலர்ந்தோங்கியதில்லையம்பலத்தானைப்,பத்தியாற்சென்றுகண்டிடவென்மனம்பதைபதைப்பொழியாதே. (ரு)

231 தேய்ந்துமெய்வெளுத்தகம்வளைந்தரவினையஞ்சித்தானிருந்தேயும், காய்ந்துவந்துவந்தென்றனைநலிசெய்துகதிர்நிலாவெரிதூவும், ஆய்ந்தநான்மறையந்தணர்தில்லையுளம்பலத்தரனாடல், வாய்ந்தமாமலர்ப்பாதங்கள்காண்பதோர்மனத்தினையுடையேற்கே. (சு)

232 உடையும்பாய்புலித்தோலுநல்லரவுமுண்பதும்பலிதேர்ந்து, விடையதூர்வதுமேவிடங்கொடுவரையாகினுமென்னெஞ்சம், மடைகொள்வாளைகள்குதிகொளும்வயற்றில்லையம்பலத்தனலாடும், உடைய கோவினையன்றிமற்றுரையுமுள்ளுவதறியேனே. (எ)

233 அறிவுமிக்கநன்றுணைமுநிறைமையுமாசையுமிங்குள்ள, உறவும் பெற்றநற்றாயொடுதந்தையுமுடன்பிறந்தவரோடும், பிரியவிட்டுனை யடைந்தனனேன்றுகொள்பெரும்பற்றப்புலியூரின், மறைகணான்குங் கொண்டந்தணரேத்தநன்மாநடமகிழ்வானை. (அ)

234 வானநாடுடைமைந்தனேயோவென்பன்வந்தருளாயென்பன்
பானெயைந்துடனாடியபடர்சடைப்பால்வண்ணனேயென்பன்
தேனமர்பொழில்சூழ்தருதில்லையுட்டிருநடம்புரிகின்ற
ஏனமாமணிப்*பூணணிமார்பனேயெனக்கருள்புரியாயே. (௯)

235 புரியும்பொன்மதில்சூழ்தருதில்லையுட்பூசுரர்பலர்போற்ற
எரியதாடுமெம்மீசனைக்காதலித்திளையவண்மொழியாக
வரைசெய்மாமதின்மயிலையர்மன்னவன்மறைவலதிருவாலி
பரவல்பத்திவைவல்லவர்பரமன†தடியிணைபணிவாரே. (௧௦)

திருச்சிற்றம்பலம்

---

௩. கோயில்

பண் - இந்தளம்

திருச்சிற்றம்பலம்

236 அல்லாய்ப்பகலாயருவாயுருவாயாராவமுதமாய்க்
கல்லானிழலாய்கயிலைமலையாய்காணவருளென்று
பல்லாயிரம்பேர்பதஞ்சலிகள்பரவவெளிப்பட்டுச்
செல்வாய்மதிற்றில்லைக்கருளித்தேவனாடுமே. (௧)

237 அன்னநடையாரமுதமொழியாரவர்கள்பயிறில்லைத்
தென்னன்றமிழுமிசையுங்கலந்தசிற்றம்பலந்தன்னுட்
பொன்னுமணியுநிரந்ததலத்துப்புலித்தோல்பியற்கிட்டு
மின்னினிடையாளுமையாள்காணவிகிர்தனாடுமே. (௨)

238 இளமென்முலையாரெழின்மைந்தரொடுமேராரமளிமேல்
திளையுமாடத்திருவார்தில்லைச்சிற்றம்பலந்தன்னுள்
வளர்பொன்மலையுள்வயிரமலைபோல்வலக்கைகவித்துநின்
றளவில்பெருமையமரர்போற்றவழகனாடுமே. (௩)

(பி - ம்.) * பூணெழின் † தடிநிழல்

239 சந்தமகிலுந்தழைப்பீலிகளுஞ்சாதிபலவுங்கொண்
டுந்தியிழியுநிவவின்கரைமேலுயர்ந்தமதிற்றில்லைச்
சிந்திப்பரியதெய்வப்பதியுட்சிற்றம்பலந்தன்னுள்
நந்திமுழவங்கொட்டநட்டநாதனாடுமே. (௪)

240 ஓமப்புகையுமகிலின்புகையுமுயர்ந்துமுகிறோயத்
தீமெய்த்தொழிலார்மறையோர்மல்குசிற்றம்பலந்தன்னுள்
வாமத்தெழிலாரெடுத்தபாதமழலைசிலம்பார்க்கத்
தீமெய்ச்சடைமேற்றிங்கள்சூடித்தேவனாடுமே. (௫)

241 குரவங்கோங்கங்குளிர்புன்னைகைதைகுவிந்தகரைகண்மேல்
திரைவந்துலவுந்தில்லைமல்குசிற்றம்பலந்தன்னுள்
வரைபோன்மலிந்தமணிமண்டபத்துமறையோர்மகிழ்ந்தேத்த
அரவமாடவனல்கையேந்தியழகனாடுமே. (௬)

242 சித்தர்தேவரியக்கர்முனிவர்தேனார்பொழிற்றில்லை
அத்தாவருளாயணியம்பலவாவென்றென்றவரேத்த
முத்துமணியுநிரந்ததலத்துண்முளைவெண்மதிசூடிக்
கொத்தார்சடைகடாழநட்டங்குழகனாடுமே. (௭)

243 அதித்தவரக்கனெரியவிரலாலடர்த்தாயருளென்று
துதித்துமறையோர்வணங்குந்தில்லைச்சிற்றம்பலந்தன்னுள்
உதித்தபோழ்திலிரவிக்கதிர்போலொளிர்மாமணியெங்கும்
பதித்ததலத்துப்பவளமேனிப்பரமனாடுமே. (௮)

244 மாலோடயனுமமரர்பதியும்வந்துவணங்கிநின்
றாலகண்டாவரனேயருளாயென்றென்றவரேத்தச்
சேலாடும்வயற்றில்லைமல்குசிற்றம்பலந்தன்னுள்
பாலாடுமுடிச்சடைகடாழப்பரமனாடுமே. (௯)

245 நெடியசமணுமறைசாக்கியருநிரம்பாப்பல்கோடிச்
செடியுந்தவத்தோரடையாத்தில்லைச்சிற்றம்பலந்தன்னுள்
அடிகளவரையாரூர்நம்பியவர்களிசைபாடக்
கொடியும்விடையுமுடையகோலக்குழகனாடுமே. (௧௦)

246 வானோர்பணியமண்ணோரேத்தமன்னிநடமாடும்
தேனார்பொழில்சூழ்தில்லைமல்குசிற்றம்பலத்தானைத்
தூநான்மறையானமுதவாலிசொன்னதமிழ்மாலைப்
பானேர்பாடல்பத்தும்பாடப்பாவநாசமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்

௪. கோயில்

பண் - பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

247 கோலமலர்நெடுங்கட்கொவ்வைவாய்க்கொடியேரிடையீர்
பாலினையின்னமுதைப்பரமாயபரஞ்சுடரைச்
சேலுகளும்வயல்சூழ்தில்லைமாநகர்சிற்றம்பலத்
தேலவுடையெம்மிறையையென்றுகொல்காண்பதுவே. (௧)

248 காண்பதியானென்றுகொல்கதிர்மாமணியைக்கனலை
ஆண்பெண்ணருவுருவென்றறிதற்கரிதாயவனைச்
சேண்பணைமாளிகைசூழ்தில்லைமாநகர்ச்சிற்றம்பலம்
மாண்புடைமாநடஞ்செய்மறையோன்மலர்ப்பாதங்களே. (௨)

249 கள்ளவிழ்தாமரைமேற்கண்டயனொடுமால்பணிய
ஒள்ளெரியின்னடுவேயுருவாய்ப்பரந்தோங்கியசீர்த்
தெள்ளியதண்பொழில்சூழ்தில்லைமாநகர்ச்சிற்றம்பலத்
துள்ளெரியாடுகின்றவொருவனையுணர்வரிதே. (௩)

250 அரிவையோர்கூறுகந்தானழகன்னெழில்மால்கரியின்
உரிவைநல்லுத்தரியமுகந்தானும்பரார்தம்பிரான்
புரிபவர்க்கின்னருள்செய்புலியூர்த்திருச்சிற்றம்பலத்
தெரிமகிழ்ந்தாடுகின்றவெம்பிரானென்னிறையவனே. (௪)

251 இறைவனையென்கதியையென்னுளேயுயிர்ப்பாகிநின்ற
மறைவனைமண்ணும்விண்ணுமலிவான்சுடராய்மலிந்த
சிறையணிவண்டறையுந்தில்லைமாநகர்ச்சிற்றம்பல
நிறையணியாமிறையைநினைத்தேனினிப்போக்குவனே. (௫)

252 நினைத்தேனினிப்போக்குவனோநிமலத்திரளைநினைப்பார்
மனத்தினுளேயிருந்தமணியைமணிமாணிக்கத்தைக்
கனைத்திழியுங்கழனிக்கணகங்கதிரொண்பவளம்
சினத்தொடுவந்தெறியுந்தில்லைமாநகர்க்கூத்தனையே. (௬)

253 கூத்தனைவானவர்தங்கொழுந்தைக்கொழுந்தாயெழுந்த
மூத்தனைமூவுருவின்முதலைமுதலாகிநின்ற
ஆத்தனைத்தான்படைக்குமந்தணர்தில்லையம்பலத்துள்
ஏத்தநின்றாடுகின்றவெம்பிரானடிசேர்வன்கொலோ. (௭)

254 சேர்வன்கொலோவன்னைமீர்திகழும்மலர்ப்பாதங்களை
ஆர்வங்கொளத்தழுவியணிநீறென்முலைக்கணியச்
சீர்வங்கம்வந்தணையுந்தில்லைமாநகர்சிற்றம்பலத்
தேர்வங்கைமான்மறியனெம்பிரானென்போனேசனையே. (௮)

255 நேசமுடையவர் தந்நெஞ்சுளேயிடங்கொண்டிருந்த
காய்சினமால்விடையூர்கண்ணுதலைக்காமருசீர்த்
தேசமிகுபுகழோர் தில்லைமாநகர்ச்சிற்றம்பலத்
தீசனையெவ்வுயிர்க்குமெம்மிறைவனென்றேத்துவனே. (க௯)

256 இறைவனையேத்துகின்றவிளையாண்மொழியின்றமிழால்
மறைவலநாவலர்கண்மகிழ்ந்தேத்துசிற்றம்பலத்தை
அறைசெந்நெல்வான்கரும்பினணியாலைகள்சூழ்மயிலை
மறைவலவாலிசொல்லைமகிழ்ந்தேத்துகவானெளிதே. (க0)

திருச்சிற்றம்பலம்

*புருடோத்தமநம்பி திருவிசைப்பா

க. கோயில்

பண் - பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

257 வாரணிநறுமலர்வண்டுகெண்டுபஞ்சமஞ்செண்பகமாலைமாலை,
வாரணிவனமுலைமெலியும்வண்ணம்வந்துவந்திவைநம்மைமயக்கு
மாலோ, சீரணிமணிதிகழ்மாடமோங்குதில்லையம்பலத்தெங்கள்
செல்வன்வாரான், ஆரெனையருள்புரிந்தஞ்சலென்பாராவியின்ப
ரமன்றெனாதரவே. (க)

258 ஆவியின்பரமன்றெனாதரவுமருவினையேனைவிட்டம்மவம்ம, பா
விவன்மனமிதுபையவேபோய்ப்பனிமதிச்சடையரன்பாலதா
லோ, தீவியுநெகிழ்ச்சியுநிறையழிவுநெஞ்சமுந்தஞ்சமிலாமையா
லே, ஆவியின்வருத்தமிதாரறிவாரம்பலத்தருநடமாடுவானே.
(உ)

259 அம்பலத்தருநடமாடவேயுமியாதுகொல்விளைவதென்றஞ்சிநெ
ஞ்சம், உம்பர்கள்வன்பழியாளர்முன்னேயூட்டினர்நஞ்சையென்
றேயுமுய்யேன், வன்பலபடையுடைப்பூதஞ்சூழவானவர்கணங்க
ளைமாற்றியாங்கே, என்பெரும்பயலைமைதீரும்வண்ணமெழுந்
தருளாயெங்கள்வீதியூடே. (௩)

260 எழுந்தருளாயெங்கள்வீதியூடேயேதமின்முனிவரோடெழுந்த
ஞானக், கொழுந்ததுவாகியகூத்தனேநின்குழையணிகாதினின்மாத்
திரையும், செழுந்தடமலர்புரைகண்கண்மூன்றுஞ்செங்கனிவாயுமென்
சிந்தைவௌவ, அழுந்துமென்னாருயிர்க்கென்செய்கேனோவரும்புன
லமருஞ்சடையினானே. (௪)

(பி-ம்.) * புருடோத்தமன்

261 அரும்புனலலமருஞ்சடையினானையமரர்களடிபணிந்தரற்றவந்நாட், பெரும்புரமெரிசெய்தசிலையின்வார்த்தைபேசவுநையுமென்பேதைநெஞ்சம், கருந்தடமலர்புரைகண்டவண்டார்காரிகையார்முன்பென்பெண்மைதோற்றேன், திருந்தியமலரடிநசையினாலேதில்லையம்பலத்தெங்கடேவதேவே. (௫)

262 தில்லையம்பலத்தெங்கடேவதேவைத்தேறியவந்தணர்சிந்தைசெய்யும், எல்லையதாகியவெழில்கொள்சோதியென்னுயிர்காவல்கொண்டிருந்தவெந்தாய், பல்லையார்பசுந்தலையோடிடறிப்பாதமென்மலரடிநோவநீபோய்,அல்லினிலருநடமாடிலெங்களாருயிர்காவலிங்கரிதுதானே. (௬)

263 ஆருயிர்காவலிங்கருமையாலேயந்தணர்மதலைநின்னடிபணியக், கூர்நுனைவேற்படைக்கூற்றஞ்சாயக்குரைகழல்பணிகொளமலைந்ததென்றால், ஆரினியமரர்கள்குறைவிலாதாரவரவர்படுதுயர்களையநின்ற, சீருயிரேயெங்கடில்லைவாணாசேயிழையார்க்கினிவாழ்வரிதே.

264 சேயிழையார்க்கினிவாழ்வரிதுதிருச்சிற்றம்பலத்தெங்கள்செல்வனேநீ, தாயினுமிகநல்லையென்றடைந்தேன்றனிமையைநினைகிலைசங்கராவுன், பாயிரும்புலியதளின்னுடையும்பையமேலெடுத்தபொற்பாதமுங்கண்: டேயிவளிழந்ததுசங்கமாவாவெங்களையாளுடையீசனேயோ. (௮)

265 எங்களையாளுடை யீசனேயோவிளமுலைமுகநெக முயங்கிநின்பொற், பங்கயம்புரைமுகநோக்கிநோக்கிப்பனிமதிநிலவதென்மேற்படரச், செங்கயல்புரைகண்ணிமார்கண்முன்னே திருச்சிற்றம்பலமுடனேபுகுந்து, அங்குனபணிபலசெய்துநாளுமருள்பெறினகலிடத்திருக்கலாமே. (௯)

266 அருள்பெறினகலிடத்திருக்கலாமென்றமரர்கடலைவனுமயனுமாலும், இருவருமறிவுடையாரின்மிக்காரேத்துகின்றாரின்னமெங்கள்கூத்தை, மருள்படுமழலைமென்மொழியுமையாள்கணவனைவல்வினையாட்டியேனான்,அருள்பெறவலமருநெஞ்சமாவாவாசையையளவறுத்தாரிங்காரே. (௧௦)

267 ஆசையையளவறுத்தாரிங்காரேயம்பலத்தருநடமாடுவானை, வாசநன்மலரணிகுழன்மடவார்வைகலுங்கலந்தெழுமாலைப்பூசல், மாசிலாமறைபலவோதுநாவன்வண்புருடோத்தமன்கண்டுரைத்த, வாசகமலர்கள்கொண்டேத்தவல்லார்மலைமகள்கணவனையணைவர்தாமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்

உ. கோயில்

பண் - பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

268 வானவர்கள்வேண்டவளர்நஞ்சையுண்டார்தாம்
ஊனமிலாவென்கையொளிவளைகள்கொள்வாரோ
தேனல்வரிவண்டறையுந்தில்லைச்சிற்றம்பலவர்
நானமரோவென்னாதேநாடகமேயாடுவரே. (௧)

269 ஆடிவருங்காரரவுமைம்மதியும்பைங்கொன்றை
சூடிவருமாகண்டேன்றோள்வளைகடோற்றாலும்
தேடியிமையோர்பரவுந்தில்லைச்சிற்றம்பலவர்
ஆடிவரும்போதருகேநிற்கவுமோவொட்டாரோ. (௨)

270 ஒட்டாவகையவுணர்முப்புரங்களோரம்பாற்
பட்டாங்கழல்விழுங்கவெய்துகந்தபண்பினார்
சிட்டார்மறையோவாத்தில்லைச்சிற்றம்பலவர்
கொட்டாநடமாடக்கோல்வளைகள்கொள்வாரே. (௩)

271 ஆரேயிவைபடுவாரையங்கொளவந்து
போரேடியென்றுபுருவமிடுகின்றார்
தேரார்விழவோவாத்தில்லைச்சிற்றம்டலவர்
தீராநோய்செய்வாரையொக்கின்றார்காணீரே. (௪)

272 காணீரேயென்னுடையகைவளைகள்கொண்டார்தாம்
சேணார்மணிமாடத்தில்லைச்சிற்றம்பலவர்
பூணார்வனமுலைமேற்பூவம்பார்காமவேள்
ஆணாடுகின்றவாகண்டுமெருளாரே. (௫)

273 எயிவரேவானவர்க்கும்வானவரேயென்பாரால்
தாயிவரேயெல்லார்க்குந்தந்தையுமாமென்பாரால்
தேய்மதியஞ்சூடியதில்லைச்சிற்றம்பலவர்
வாயினகேட்டறிவார்வையகத்தாராவாரே. (௬)

274 ஆவாவிவர்தந்திருவடிகொண்டந்தகன்றன்
மூவாவுடலவியக்கொன்றுகந்தமுக்கண்ணர்
தேவாமறைபயிலுந்தில்லைச்சிற்றம்பலவர்
கோவாவினவளைகள்கொள்வாரோவென்னையே. (௭)

275 என்னைவலிவாராரென்றவிலங்கையர்கோன்
மன்னுமுடிகணெரித்தமணவாளர்
செங்நெல்விளைகழனித்தில்லைச்சிற்றம்பலவர்
முன்னந்தான்கண்டறிவாரொவ்வாரிம்முத்தரே. (௮)

276 முத்தர்முதுபகலேவந்தென் றனில்புகுந்து
பத்தர்பலியிடுகவென்றெங்குப்பார்க்கின்றார்
சித்தர்கணம்பயிலுந்தில்லைச்சிற்றம்பலவர்
கைத்தலங்கள்வீசிநின்றாடுங்காணேக்காரே. (௯)

277 நோக்காததன்மையானோக்கிலோமியாமென்று
மார்காழியீந்துமலரோனை நிந்தித்துச்
சேக்காதலித்தேறுந்தில்லைசசிற்றம்பலவர்
ஊர்க்கேவந்தென்வளைகள்கொள்வாரோவொண்ணுதலீர்.(௧௦)

278 ஒண்ணுதலிகாரணமாவும்பர்தொழுதேத்தும்
கண்ணுதலான்றன்னைப்புருடோத்தமன்சொன்ன
பண்ணுதலைப்பத்தும்பயின்றாடிப்பாடினார்
எண்ணுதலைப்பட்டங்கினிதாவிருப்பாரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்

---

* சேதிராயர் திருவிசைப்பா

கோயில்

பண் - பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

279 சேலுலாம்வயற்றில்லையுளீருமைச்
சாலநாளயன்சார்வதினாலிவள்
வேலையார்விடமுண்டுகந்தீரென்று
மாலதாகுமென்வாணுதலே. (௧)

280 வாணுதற்கொடிமாலதுவாய்மிக
நாணமற்றனனானறியேனினிச்
சேணுதற்பொலிதில்லையுளீருமைக்
காணிலெய்ப்பிலள்காரிகையே. (௨)

218 காரிகைக்கருளீர்கருமால்கரி
ஈருரித்தெழுபோர்வையினீர்மிகு
சீரியற்றில்லையாய்சிவனேயென்று
வேரிநற்குழலாளிவள்விம்முமே. (௩)

282 விம்மிவிம்மியேவெய்துயிர்த்தாளென
உம்மையேநினைந்தேத்துமொன்றாகிலள்
செம்மலோர்பயிறில்லையுளீரெங்கள்
அம்மெலோதியயர்வுறுமே. (௪)

(பி - ம்.) * சேதியர், சேதிராயபிரான்

283 அயர்வுற்றஞ்சலிகூப்பியந்தோவெனை
உயவுன்கொன்றையந்தாரருளாயெனும்
செயலுற்றார்மதிற்றில்லையுளீரிவண்
மயலுற்றாளென்றன்மாதிவளே. (௫)

284 மாதொர்கூறன்வண்டார்கொன்றைமார்பனென்
றோதிலுய்வனொண்பைங்கிளியேயெனும்
சேதித்தீர்சிரநான்முகனைத்தில்லை
வாதித்தீரென்மடக்கொடியையே. (௬)

285 கொடியைக்கோமளச்சாதியைக்கொம்பிளம்
பிடியையென்செய்திட்டீர்பகைத்தார்புரம்
இடியச்செஞ்சிலைகால்வளைத்தீரென்று
முடியுநீர்செய்தமூச்சறவே. (௭)

286 அறவனேயன்றுபன்றிப்பின்னேகிய
மறவனேயெனைவாதைசெய்யேலெனும்
சிறைவண்டார்பொழிற்றில்லையுளீரெனும்
பிறைகுலாநுதற்பெய்வளையே. (௮)

287 அன்றருக்கனைப்பல்லிறுத்தானையைக்
கொன்றுகாலனைக்கோளிழைத்தீரெனும்
தென்றலார்பொழிற்றில்லையுளீரிவள்
ஒன்றுமாகிலளும்பொருட்டே. (௯)

288 எயுமாறெழிற்சேதிபர்கோன்றில்லை
நாயனாரைநயந்துரைசெய்தன.
தூயவாறுரைப்பார்துறக்கத்திடை
ஆயவின்பமெய்தியிருப்பரே. (௧௦)

திருச்சிற்றம்பலம்

திருவிசைப்பா முற்றிற்று.

உ

கணபதி துணை

திருச்சிற்றம்பலம்

சேந்தனாருளிச்செய்த

திருப்பல்லாண்டு

கோயில்

பண் - பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

289 மன்னுகதில்லைவளர்கநம்பத்தர்கள்வஞ்சகர்போயகல, பொன்னின்செய்மண்டபத்துள்ளேபுகுந்துபுவனியெல்லாம்விளங்க, அன்னநடைமடவாளுமைகோனடியோமுக்கருள்புரிந்து, பின்னைப்பிறவியறுக்கநெறிதந்தபித்தற்குப்பல்லாண்டுகூறுதுமே. (௧)

290 மிண்டுமனத்தவர்போமின்கண்மெய்யடியார்கள்விரைந்துவம்மின், கொண்டுங்கொடுத்துங்குடிகுடியீசற்காட்செய்மின்குழாம்புகுந், தண்டங்கடந்தபொருளளவில்லதோரானந்தவெள்ளப்பொருள், பண்டுமின்றுமென்றுமுள்ளபொருளென்றேபல்லாண்டுகூறுதுமே. (௨)

291 நிட்டையிலாவுடனீத்தென்னையாண்டநிகரிலாவண்ணங்களும், சிட்டன்சிவனடியாரைச்சீராட்டுந்திறங்களுமேசிந்தித், தட்டமூர்த்திக்கென்னகவூறுமமிர்தினுக்காலநிழற், பட்டனுக்கென்னைத்தன்பாற்படுத்தானுக்கேபல்லாண்டுகூறுதுமே. (௩)

292 சொல்லாண்டசுருதிப்பொருள்சோதித்ததூய்மனத்தொண்டருள்ளீர். சில்லாண்டிற்சிதையுஞ்சிலதேவர்சிறுநெறிசேராமே, வில்லாண்டகனகத்திரண்மேருவிடங்கன்விடைப்பாகன், பல்லாண்டென்னும்பதங்கடந்தானுக்கேபல்லாண்டுகூறுதுமே. (௪)

293 புரந்தரன்மாலயன்பூசலிட்டோலமிட்டின்னம்புகலரிதாய், இரந்திரந்தழைப்பவென்னுயிராண்டகோவினுக்கென்செயவல்லமென்றும், கரந்துங்கரவாதகற்பகனாகிக்கரையில்கருணைக்கடல், பரந்நிரந்தும்வரம்பிலாப்பாங்கற்கேபல்லாண்டுகூறுதுமே. (௫

294 சேவிக்கவந்தயனிந்திரன்செங்கண்மாலெங்குந்திசைதிசைய
ன,கூவிக்கவர்ந்துநெருங்கிக்குழாங்குழாமாய்நின்றுகூத்தாடும், ஆவிக்
கமுதையென்னார்வத்தனத்தினையப்பனையொப்பமரர், பாவிக்கும்பா
வகத்தப்புறத்தானுக்கேபல்லாண்டுகூறுதுமே. (௬)

295 சீருந்திருவும்பொலியச்சிவலோகநாயகன்சேவடிக்கீழ்
ஆரும்பெறாதவறிவுபெற்றேன்பெற்றதார்பெறுவாருலகில்
ஊருமுலகுங்கழறவுழறியுமைமணவாளனுக்காட்
பாரும்விசும்புமறியும்பரிசுநாம்பல்லாண்டுகூறுதுமே. (௭)

296 சேலுங்கயலுந்திளைக்குங்கண்ணாரிளங்கொங்கையிற்செங்குங்கு
மம்,போலும்பொடியணிமார்பிலங்குமென்றுபுண்ணியர்போற்றிசைப்
ப,மாலுமயனுமறியாநெறிதந்துவந்தென்மனத்தகத்தே,பாலுமமுதமு
மொத்துநின்றானுக்கேபல்லாண்டுகூறுதுமே. (௮)

297 பாலுக்குப்பாலகன்வேண்டியழுதிடப்பாற்கடலீந்தபிரான்,மா
லுக்குச்சக்கரமன்றருள்செய்தவன்மன்னியதில்லைதன்னுள், ஆலிக்கு
மந்தணர்வாழ்கின்றசிற்றம்பலமேயிடமாகப், பாலித்துநட்டம்பயில
வல்லானுக்கேபல்லாண்டுகூறுதுமே. (௯)

298 தாதையைத்தாளறவீசியசண்டிக்கிவ்வண்டத்தொடுமுடனே,
பூதலத்தோரும்வணங்கப்பொற்கோயிலும்போனகமுமருளிச், சோதி
மணிமுடித்தாமமுநாமமுந்தொண்டர்க்குநாயகமும், பாதகத்துக்குப்
பரிசுவைத்தானுக்கேபல்லாண்டுகூறுதுமே. (௧௦)

299 குழலொலியாழொலிகூத்தொலியேத்தொலியெங்குங்குழாம்
பெருகி,விழவொலிவிண்ணளவுஞ்சென்றுவிம்மிமிகுதிருவாரூரில், ம
ழவிடையாற்குவழிவழியாளாய்மணஞ்செய்குடிப்பிறந்த, பழவடியா
ரொடுங்கூடியெம்மானுக்கேபல்லாண்டுகூறுதுமே. (௧௧)

300 ஆரார்வந்தாரமரர்குழாத்திலணியுடையாதிரைநாள்
நாராயணனொடுநான்முகனங்கியிரவியுமிந்திரனும்
தேரார்வீதியிற்றேவர்குழாங்கடிசையனைத்துநிறைந்து
பாரார்தொல்புகழ்பாடியுமாடியும்பல்லாண்டுகூறுதுமே. (௧௨)

301 எந்தையெந்தாய்சுற்றமுற்றுமெமக்கமுதாமெம்பிரானென்
றென்றுமே, சிந்தைசெய்யுஞ்சிவன்சீரடியாரடிநாயன்செப்புறை,அந்
தமிலானந்தச்*சேந்தனெனைப்புகுந்தாண்டுகொண்டாருயிர்மேற்,
பந்தம்பிரியப்பரிந்தவனேயென்றுபல்லாண்டுகூறுதுமே. (௧௩)

திருச்சிற்றம்பலம்

திருப்பல்லாண்டு முற்றிற்று

(பி - ம்.) * செந்தே

குறிப்புரை

1. தித்திக்கும் தேன்: தித்திக்குமென்னும் பெயரெச்சம் இத்தன்மைத்தெனும் நிகழ்காலம்பட நின்றது. 2. இருள் - அஞ்ஞானம். 3. சசிகண்ட சிகண்டா - பிறைச் சந்திரனை அணிந்த திருமுடியை யுடையோய். 5. நற்றவம் - பிறவி அறும்படி செய்யும் தவம். 7. தனதன் - குபேரன். சனக - தந்தையே. அமரர் சேகரன் - தேவர்களது முடிமீது உள்ளவன். 8. பிறவி - பிறப்பு. 9. எச்சம் - யாகம். சொக்கன் - பேரழகுடையவன். 10. கனகன் - இரணியன். ஏறுசேவகன் - உயர்ந்த வீரன். அரட்டு - குறும்பு. 12. பியர் - கழுத்து; போலி. மயர் - மயக்கம். 14. பிரம்பிரி - ஒருவகைநெல். 15. ஓத்து - வேதம். இலயம் - தாளம். 16. பதணம் - மதிலுள் மேடை. 17. அழைப்பு - பொருள் புணராத ஓசை. செதுமதி - அழிதற்குக் காரணமான புத்தி; "செதுமதித்தக்கன்" **(தேவாரம்: திருஞானசம்பந்தர்.)** 20. குழைகாது - குழைந்த காது. 23. பொன் - மகள். மறவன் - வீரன். குலாத்தில்லை : **திருவாசகம்,** குலாப்பத்து. 24. என்னும் - என்பாள். 26. மறி - மான்குட்டி. 27. வீரை - கடல். சே - காளை. 29. கடுப்பு - மிகுதி. 31. மரவு - மரவமரம். சுரவா - தேவனே. 32. முண்டம் - நெற்றி. 34. உயர்ந்த மூவாயிரவரையும் தாழ்ந்த என்னையும் ஒப்ப மகிழ்ந்து. அமுது : உமாதேவியார். 35. இணங்கு - ஒப்பு. குண்டப்பிணங்கள் - தாழ்ந்த பிணங்கள் போன்றவர். 36. எட்டு உரு - அஷ்டமூர்த்தம். பிரட்டர் - பிரஷ்டர். 37. அரட்டர் - குறும்பர். 39. அசிக்க - சிரிக்க. 40. திரு - பாக்கியம். 42. எக்கர் : "எக்கராமமண்கையர்" **(தே. திருஞான.)** 43. செண்டடித்து : "அயன்றலை கொண்டு செண்டாடல் பாடி" **(திருவாசகம்.)** 44. கொற்றவாசல் - கோயிலின் வாசல். தெண்ணா : "தெண்ணர் கற்பழிக்கத் திருவுள்ளமே" **(தே. திருஞான.)** 45. உறைப்பு - உறுதி. 46. புயல்வணற்கு அருளி - திருமாலுக்குச் சக்கரம் அளித்து. 49. சசி - சந்திரன். 50. புராணம் - பழமை. 51. கஞஅனைய செல்வம் : 16. ஐவர்-ஐம்பொறிகள். 52. கங்கையைப்போன்ற புனித நீரையுடைய அரிசில். தான்றோன்றி - ஸ்வயம்புமூர்த்தி. 54.

ஏர்கொள் முக்கண் : பிறர்கண்போலாது மூன்றாயிருப்பினும் அவை ஓரழகுடையன என்பது கருத்து. 55. வேள் - மன்மதன். 56. ஆம்தனை - இயன்ற அளவு. சேந்தன் - முருகக் கடவுள். 57. வேடு : சாதியை யுணர்த்தியது. 58-68. அந்தாதித் தொடையோடு மண்டலித்து வந்தன. 58. சாந்தை - சாத்தனூர் என்பதன் மரூஉ. 60. தருண இந்து - இளம்பிறை. 62. வலது - வன்மை. 64. கிற்போம் - செய்து முடிப்போம்; இது தேவாரத உட்கோள். 61. குன்று எந்தி - திருமால். பரம் - அளவு. 69-79. அந்தாதித் தொடையோடு மண்டலித்து வந்தன. 69. குரா : தலவிருட்சம். 70. பீர் - பசலை. நயக்கும் - விரும்பும். 71. காப்பவன் - காக்கத் தக்கவன். 73. கொளாது - கொள்ளாதது. திணம் - திண்ணம். 76. உழிஞை - மதிலைவளைத்தல். திகை - திசை. 77. மடல் - மடலேறுதலை. 78. குருண்ட - சுருண்ட; 217; "குருண்டவார் குழற்சடையுடைக் குழகனை" (**தே. திருஞான.**); 80. கவை-பிளவு. அணல் - கழுத்து. மொழுப்பு - முகப்பு; தொகுதி தொழுதி என்றாற் போன்றது இது. திணர் - நெருங்கிய; "வண்டு, திணர்த்த வயல்" (**திவ்யப்பிரபந்தம்,** தனியன்.) 81. நீலம் - நீலப்பூ. செய்யினது வரம்பில் ; செய் - வயல். 82. முருக்கு - முள்ளு முருங்கை. மாந்தளிர்க்குத் தீ ; "சீதப்புனலுண்டெரியைக்காலும், சூதப்பொழில்" (**தே. சுந்தரர்.**) 83. வான் - தேவர் ; ஆகு பெயர். 84. மொட்டித்து - குவித்து. என்பெலாம் உருகும் அன்பர் ; "கூம்பலங் கைத்தலத் தன்பரென் பூடுருகக் குனிக்கும், பாம்பலங் காரப் பரன்"(**கோவையார்.**) 87. அமரித்து-விரும்பி. தீர்த்தநீர் - பரிசுத்தமான நீர். 91. கடல்போல் முழங்கும். நோக்கு - கண். ஆதித்தேச்சரம் : பொன் விளைந்த களத்தூரிலுள்ள ஆதித்தேச்சுரமென்று கூறுவர். 93. ஒருபாற் செய்யர் ; ஒருபால் - வலப்புறம். 94. அராக்குழை : "பாம்பிணை யாக் குழைகொண்டோன்" (**கோவையார், 38.**) 95. களபம் - பூச்சு. 96. அச்சோ - அழகிதே; "மழவிடையுடையான் மேனி வனப்பினை நோக்கியச்சோ, அழகிய பிரானோ வென்னா" (**திருவிளையாடல், 36:29.**) 97. மைக்கடா - கரிய நிறமுள்ள கடா ; மேகம் போன்ற கடா எனினுமாம் ; "ஈரநீர்படிந்திந்நிலத்தே சில, கார்களென்னவருங்கருமேதிகள் (**கம்பராமாயணம்.**) 99. களம் - கழுத்து ; "குவளைக்களத்தம் பலவன்" (**கோவையார், 33.**) திருவடி நிலை - பாதுகை. 100. இருள் - அஞ்ஞானம்.

101. பதம் - பாதம். அலம்ப - ஒலிக்க. கம்பலம் - கம்பலை; உரிச்சொல் ஈறு திரிந்தது; **சீவக.** 56, 1197, **ந.** 103. இது வண்டுவிடுதூது. 105. புள் - அன்னப்பறவை; தோழி...போம்; "இரவெல்லாந், தோழி துணையாத்துயர் தீரும்" (**காரிகை, 44,** மேற்.) 106. ஆழி - கடல். கிஞ்சுகம் - முள்ளுமுருங்கைப்பூ. 107. சகடை - ஒருவகை வாத்தியம்; ஜயகண்டையென்பதன் சிதைவு போலும்; "சகடையோ டார்த்த வன்றே" (**கம்ப.** பிரமாத்திர. 5.) தெண்டு - கற்றை. குண்டை - எருது. கிழை - கிளையென்பதன் போலிபோலும். 108. யாழும் வீணையும் வேறு வேறு; "இன்னிசை வீணையர் யாழினரொருபால்" (**திருவாசகம்.**) 109. கேதகை - தாழை. தாழையின் நிழலைக் கெண்டை குருகு என்று அஞ்சுதல்: "மடல்விண்ட முடத்தாழை மலர்நிழலைக்குருகென்று, தடமண்டு துறைக்கெண்டை தாமரையின் பூமறைய" (**தே. திருஞான.**) 110. அந்தி - செவ்வான்; "செவ்வானன்ன மேனி" (**அகநானூறு,** கடவுள்.) சிந்தையுங்காணுமை: ஒரு கால் நினைத்தமாத்திரத்திற் சித்த விருத்தி யொடுங்குதல் பற்றி. கெந்தியா - தத்தி. 111. கித்தி- ஒற்றைக்காலால் தாவி நடந்து. 112. ஆரணம் - வேதம். 113. விழுங்குதீங்கனி: "கற்றவர் விழுங்குங் கற்பகக்கனியை" (**தே.**); 47. 114. கல்லைப்போல் நகாத. 115. கிடை - நெட்டி. பாடு - ஒளியவிதல். 116. கலாம் - கலகம். 117. நிறை- சால்; "பீரிவர்பு பரந்த நீரறு நிறைமுதல்" (**பதிற்றுப்பத்து,** 15 : 10.) 118. ஆலம் - விஷம். தனிவடம் - ஒற்றைவடம்; இதனை ஏகாவலி யென்பர்; **தக்கயாகப்பரணி,** 340, உரை. 121. ஆலை - கரும்பு ஆலையிலுள்ள. 122. கோடை: கோட்டூரென்பதன் மரூஉ. திரைலோக்கிய சுந்தரன்: இக்காலத்துத் திரைலோக்கியென வழங்கும் ஊரிலுள்ள இறைவன் திருநாமம். 124. வம்பு - புதியதாக. அளிந்த - கனிந்த. 126. முத்தம் - கண்ணீர்த்துளி; "பூப்போலுண் கண் புலம்புமுத்துறைப்ப" (**முல்லைப்பாட்டு,** 23.) ஆவா: இரக்கப் பொருளதோர் இடைச்சொல். 129. நெருப்பென்றது நிலவை. நின்கையில் யாழ்; "வருங்கடன் மீளநின்றெம்மிறை நல்வீணை வாசிக்குமே" (**தே.** அப்பர்.) பாதிரம்போது - பாதிரிப்பூ. 130. ஆருத - தணியாத. 133. பெரிய தன்மை சொல்லற்கு அருமையின் 'அங்ஙனே' என்றார். வழி மொழிமாலை - வழிபாடு கூறும் பாமாலை. 136. தரங்கம் - கங்கையின் அலை. அகவுயிர்: 112. ஏறுசேவகன் - உயர்ந்த வீரன். 138 : 1. "அண்டங்க

ளெல்லா மணுவாக வணுக்களெல்லாம், அண்டங்களர்கப் பெரி தாய்ச்சிறிதாயினனும்" (திருவிளை. கடவுள். 1.) 139. தாளம் - முத்து. நிசிசரரிருவரோடு ஒருவர் : திரிபுரத்தலைவர்; தே. சுந்தரர், திருப்புன்கூர். 140. தத்தை அங்கனையார் - கிளி போன்ற மொழி களையுடைய மகளிர். 141. பறைந்து - தேய்ந்து ; பாவத்திற்கு நீர் உவமை. 142. மருங்கில் - இடப்பக்கத்தில். அனுங்கும் - வருந் தும். கொடியிடை : உமாதேவியார். 143. அங்கை-உள்ளங்கையில். ஆழி - ஆஞ்ஞா சக்கரம்; சக்கரரேகையுமாம். 144. ஆளாக ஆண்டு. 145. 1 - 2. : 133, 169. 146. முகப்பு - முன்னே. 148. ஐவர் - ஐம்பொறிகள். சாலேகம் - பலகணி; "சாலேகஞ் சார நட" (நன் னூல், 396, மயிலை. மேற்.) 149. யான் ஆர் - யான் எந்த இயை புடையேன். பொம்மென : ஒலிக் குறிப்பு. 150. வாய்தல் - வாசல்.

151. குழகன் - இளையவன். 152. சாட்டியம் - ஜாட்டியம் ; இத்தலத்தில் ஜ்வரதேவதை இறைவனைப் பூசித்த காரணத்தால் இத் தலம் இப்பெயர் பெற்றது. காதுகள் தாழ்ந்தவா பெரியவா என்ன வியப்பு என்க. பின் வருவனவற்றையும் இங்ஙனமே கொள்க; பெரியவா - பெரியவாறு. 153. பரிகலம் - உண்கலம். பட்டவர்த் தனம் - ஏறும் யானை. சடையே முடி. 154. கவந்திகை - கந்தை களால் ஆகிய ஒருவகைப் போர்வை; இச்சொல் கவந்தி எனவும் வழங் கும் ; "ஒடுங்கவந்தியுமே யுறவென்றிட்டுள்கசிந்து" (திருவாசகம்.) அரவம் கோவணம். 156. சிவபுரன் : சிவபுரமென்னும் திருப் பதியையுடையவன். 159. தோழன் தனதன் : 7, 160; தனதன் - குபேரன். "முப்புரங்கள் செற்ற, சேவலோன் றுணைவனன செங்கை யோன்றங்கை"(கம்ப. சூர்ப்ப.)157. அனிலம் - காற்று.161. படுகர்- படுகை. 162. உலகு - உயிர்கள். அச்சோ : வியப்பிடைச் சொல். பதணம் - மதிலுள் மேடை. இஞ்சி - மதில். 163. வெளியேபோந் தனவில்லை. கிடங்கு - அகழி. 164. குடைநிழலில். முத்தினொளிக்கு வெண்ணிலா. கோங்கு இணர் குடைக்கு : "குடைமாக மென வேந்திக் கோங்கம் போதவிழ்ந்தனவே" (சூளாமணி, இரதநூ புரச். 52.) 165. அங்குலி - விரல். 166. களிற்றீட்டத்திற்கு மலைகள் உவமை. 167. குருளும் - சுருளும். குவால் - குவியல். 169. என் நெஞ்சு நெடுங்கோயிலாக வீற்றிருந்த. 172. சாளம் - ஒரு மரம். 175. வினைபடுகனகம்-பல ஆபரணங்களாகத் தொழிற்பட்ட பொன். தூங்கு இருள் - செறிந்த இருளையுடைய. 176. மணியினுள் சோதி கலந்தாங்கு. 179. ஆதனேன் அறிவில்லாதேன். 181. புலம் -

அறிவு. 183. சரியாகிய வளை. வீதி விடங்கர் - வீதியிலும் எழுந்தருளும் விடங்கர்; விடங்கர் - உளியாற் செய்யப்படாதவர்; 187. விடையேறி : விளி 189. சேரமான்நண்பரான ஆரூரன்; ஆரூரன் - சுந்தரமூர்த்தி நாயனுர். 191. களகம் - சாந்து; "திண் களகமதிள்புடை சூழ்திருநறையூர்" (பெரிய திருமொழி.) 192. ஆடகம் - நால்வகைப்பொன்னுள் ஒன்று. 193. அரவிக்கும் - ஒலிக்கும்; "அரவித்துக் கடைய" (தே.) 196. அஞ்சுவேள்வி : விருந்தோம்பல் முதலிய ஐவகை யாகங்கள்; ஆவேபடுப்பார் : 253. 198. ஆன்ஐஞ்சு=ஆன் ஐந்து - பஞ்சகவ்வியம்; ஐந்து - அஞ்சு. 199. மால் வரங்கிடத்தல்: "மற்றூங்கதுங்காட்டிடென்று, வரங் கிடந் தான்றில்லை யம்பல முன்றிலம் மாயவனே" (கோவையார், 86.)

204. சோழன் - முதற்பராந்தகன். கோழி-உறையூர். தஞ்சை. தஞ்சாவூர். ஆரா - தெவிட்டாத. 205. துச்சு = துச்சம் - இழிவு. நச்சுதல் - விரும்புதல். 206. என்அளவே - என்மட்டில். வம்பு - புதுமை. நம்புதல் - விரும்புதல். 207. எரியில் நீரிருந்தால் புறவாயில் பொசியுமென்பது ஒரு பழமொழி. 208. நம்பான் - நம்பன்; "நம்பான் மேய நன்னகர் போலு நமரங்காள்" (தே. திருஞான.) 210. களிறு - அயிராவணம் என்னும் யானை. 215. கார் - மேகம். 216. அலம்பி - ஒலித்து. 220. மா - ஈண்டு யானை. 222. மாத்திரை - ஒருவகையணி; 260. ஐய - வியக்கத்தக்க. 223. திளைக்கின்றன - இடைவிடாமல் தங்குகின்றன. 224. தொறுக்கள்-பசுக்கள். 225. நீரொடு பூ அவை தூவித் தொழுது. 226–35. இப்பதிகம் அந்தாதித் தொடையாக அமைந்துள்ளது. 226. பனி திருநீற்றுக்கு உவமை. திவள - விளங்க. தழல்மெழுகு - தழலில் இடப்பட்ட மெழுகு. 227. ஒட்டந்த - ஒட்டந்தந்த என் பதன்மரூஉ. அலந்தேன் - துன்பமுற்றேன். 228. சிலந்தியை அரசாள்கவென்றது கோச்செங்கட் சோழராக்கியதை. 229. பொன் - பசலை நிறம். 231. அரவுக்கு அஞ்சுதல் பிறையின் செயல். 233. நிறைமை - நிறை; மை : பகுதிப்பொருள் விகுதி. 234. ஏனம் - பன்றி. 235. இளையவள் - தலைவி. 236. செல்வாய் - மேகம் பொருந்திய. 237. நிரந்த - வரிசையாக உள்ள. பியல் - பின்புறம். 239. தழையாகிய பீலிகள்; "விழிக்குந் தழைப் பீலி யொடேலமுந்தி" (தே. சுந்தரர்.) நிவவு - வெள்ளாறு. "கௌவைக் களிற்றின் மருப்பும் பொருப்பில் கமழ்சந்து முந்தி

சிவாவலங் கொள், தெய்வப் புனல்சூழ்ந் தழகாயதில்லை" (திவ்ய. பெரிய. 3.2 : 7) வாமம் - இடப்பக்கம். 244. அமரர்பதி - இந்திரன். 246. பால்நேர் பாடல் - பாலை ஒத்த இனிய பாடல். 247-56. இப்பத்தும் அந்தாதித் தொடை. 248. பணைமாளிகை - பெருத்த மாளிகை. 250. உத்தரியம் - மேலாடை.

253. மூத்தன் - எல்லார் யாக்கைக்கும் முன்னே தனதிச்சையாற் கொள்ளப்பட்ட திருமேனியையுடையனாதலின் எல்லார்க்கும் மூத்தவன். நின்றஎம்பிரான் என இயைக்க. 254. வங்கம் - கப்பல். 256. செங்நெலும் வான் கரும்பின் அணிஆலைகளும். 257-67. இவை அந்தாதித் தொடையன. 257. வார் - நீட்சி. பஞ்சமம் - ஒரு ஸ்வரம். வார் - கச்சு. ஆவியின் பரம் - உயிரின் அளவு. 259. பயலைமை - பசலைநிறம்; மகளிர்க்குப் பிரிவின்கண் வரும் நிற வேறுபாடு; மை. பகுதிப் பொருள் விகுதி. 260. அலமரும் - சுழலும். 263. அந்தணர் மதலை - மார்க்கண்டேயர். 264. ஆவா: இரக்கக்குறிப்பு இடைச்சொல். 265. உன்பணி - உன்னுடைய பணிவிடைகள். 267. மாலைப்பூசல் - மாலையில் உண்டாகும் பூசலை. 268-78. அந்தாதித்தொடை. 269. ஐமதி - அழகிய பிறை. 270. பட்டு - அழிந்து. 274. அந்தகன் - யமன். கோவா - கோவாத. 275. வலிவார் - துன்புறுத்துவார். 277. சே - விடை. 279-88. அந்தாதித்தொடை. 279. மால் - மயக்கம்; அயன்சார்வதனால் இவள் திருமால் ஆவளென்பது வேறு பொருள். 280. எய்ப்பு - இளைப்பு. 281. வேரி - இருவேரி. 283. எனை உய - என்னை உய்யச் செய்ய. 285. கால் - வில்லின்கால். 288. தில்லை நாயனார்: 'திருக்கோயில் திருவாயில்......என்பவற்றிற்கு நாயகராகிய நாயனாரைத் திருநாயனா ரென்னுதது போலக் கொள்க' (**கோவையார், 1. பேர்.**) 289. அகல : வியங்கோள்வினை. 291. அட்டமூர்த்தி - எட்டுவகை வடிவமுடையவன்; "அட்டமூர்த்தி யண்ணாமலை கைதொழ" (**தே. அப்பர்.**) பட்டன் - ஆசாரியன். 292. பதம் - பதவி. 293. புகல் அரிதாய் - இன்ன தன்மையென்று சொல்லுதற்கு அரிதாகி. பாங்கன் - நன்மையுடையவன். 294. பாவகம் - எண்ணம். 297. பாலகன்: உபமன்யுமுனிவர். பாலித்து - காத்து. 298. பாதகமென்றது தந்தை தாளறவெறிந்ததனை. 299. குழலையடுத்து யாழைக்கூறியது இசைத் தமிழின் நுட்பம். 301. எந்தாய்=எம்தாய்.

செய்யுள் முதற்குறிப்பகராதி

திருவிசைப்பா

[எண் - செய்யுள் எண்]

அக்கணா...டமு 51
அக்கணா...டென் 116
அகலோகமெல் 190
அங்கைகொண்ட 142
அண்டமோரணு 138
அணியுமிழ்சோ 176
அதித்தவரக்க 243
அதுமதியிதுவென் 17
அந்திபோலுருவு 110
அம்பராவனலா 120
அம்பலத்தருந 259
அம்பளிங்குபக 124
அயர்வுற்றஞ்சலி 283
அரிவையோர் 250
அருட்டிரட்செம் 37
அரும்புனலலம 267
அரும்பேதைக் 161
அருளுமாறருளி 192
அருள்செய்தாடு 229
அருள்பெறினக 266
அல்லாய்ப்பக 236
அல்லியம்பூம்பழ 187
அலந்துபோயி 228
அற்புதத்தெய்வ 135
அறவனே 286
அறிவுமிக்கநன் 233
அன்றருக்கனை 287
அன்னநடையா 237
அன்னமாய் 133
அனலமேபுனலே 157
ஆசையையளவ 267
ஆடரவாடவாடு 40
ஆடிவருங்கா 269
ஆயாதசமயங்க 208
ஆயிரங்கமல 53
ஆரணத்தேன் 132
ஆருயிர்காவ 263
ஆரேயிவைபடு 271
ஆவாவிவர் 274
ஆவியின்பரம 258
ஆறாதபேரன்பி 130
இடர்கெடுத் 2
இணங்கிலாவீச 35
இத்தெய்வநெறி 50
இந்திரலோகமு 174
இருந்திரைத்தர 90
இலையார்கதிர்வே 201
இவ்வரும்பிறவிப் 81
இவளைவாரிளமெ 70
இளமென்முலை 238
இறைவனையென் 251
இறைவனையேத் 256
உடையும்பாய் 232
உண்ணெகிழ் 134
உம்பர்நாடிம்பர் 89
உயர்கொடியாடை 12
உருக்கியென்னுள் 41
உருவத்தெரி 193
உலகெலாந்தொ 162
உளங்கொளமது 56
உற்றாயென்னை 33
உறவாகியயோக 23
எங்களையா 265
எச்சனைத்தலை 43
எட்டுருவிரவி 36
எண்ணில்பல் 54
எம்பந்தவல்வி 188
எரிதருகரிகாட் 178
எவருமாமறை 166

எழிலையாழ்	179	கற்றவர்விழுங்கு	47	சீரான்மல்கு	204
எழுந்தருளா	260	கன்னகாவுள்	114	சுருதிவானவனு	137
என்செய்கோந்	106	காடாடுபல்கணஞ்	24	செக்கரொத்திர	42
என்னையுன்பர்த	119	காண்பதியா	248	செங்கணு	159
என்னைவலி	275	காணீரேயெ	272	செம்பொனே	158
ஏகநாயகனை	46	காமனைக்கால	22	செம்மனக்கிழ	149
எயிவரேவான	273	காரிகைக்க	281	செய்யகோடுட	222
எயுமாறெழிற்	288	கானேவரு	25	செழுந்தென்ற	27
எர்கொள்கற்பக	21	கித்திநின்றாடு	111	செற்றுவன்புர	223
ஐயபொட்டிட்ட	136	கிளையிளஞ்சேய	74	சேடருறைதில்	194
ஒக்கவோட்டந்த	227	கிற்போமெனத்	64	சேயிழையார்க்	264
ஒட்டாவகை	270	குணமணிக்குரு	73	சேர்வன்கொ	254
ஒண்ணுதலிகா	278	குதிரைமாவொடு	220	சேலுலாம்வய	279
ஒருங்கிருங்	182	குமுதமே	99	சேவேந்துவெல்	30
ஒழிவொன்றிலா	65	குரவங்கோங்	241	சொன்னவின்	150
ஒளிவளர்	1	குருண்டவார்	217	தக்கன்வெங்க	55
ஒமப்புகையு	240	குன்றேந்தி	67	தக்கனற்றலையு	9
ஓவாமுத்தீயஞ்சு	196	கூடத்தனை	253	தத்தையங்கனை	140
கங்கைநீரரிசிற்	52	கேடிலாமெய்ந்	115	தம்பானைசாயப்	206
கடியார்கணம்	186	கைக்குவான்	183	தரவார்புனஞ்	31
கடுப்பாய்ப்பறை	29	கொடியைக்	285	தருணேந்துசே	61
கடுவினைப்பாசக்	148	கொழுந்திரள்	79	தழைதவழ்மொ	107
கண்ணியன்	147	கோலமலர்	247	தளிரொளிமணி	101
கண்பனியரும்ப	84	கோலமே	5	தற்பரம்பொரு	3
கணம்விரிகுடுமி	80	கோவினைப்	71	தன்சோதியெழு	128
கணியெரிவிசிறு	19	சடைகெழுமகுட	164	தன்னகமழலை	108
கரியரேயிடந்	93	சந்தனகளபந்	92	தன்னடிநிழற்கீ	49
கருவளர்மேகத்	13	சந்துமகிலுந்	239	தனதனற்றோ	7
கரைகடலொலி	146	சரளமந்தார	172	தனிப்பெருந்தா	168
கலங்கலம்பொ	181	சரிந்ததுகிறளர்	131	தனியரெத்தனை	171
கலைகடம்பொரு	91	சலம்பொற்று	216	தாட்டரும்பழன	161
கள்ளவிழ்தாம	249	சித்தர்தேவரிய	242	தாயினேரிரங்கு	82
களகமணி	191	சித்தனேயருளா	160	தானமர்பொருது	72
களிவானுலகிற்	199	சிறப்புடையடியார்	45	திக்கடாநினைந்து	97
களையாவுடலோ	189	சீர்த்ததிண்புவ	87	திசைக்குமிக்குல	39

திருநீறிடாவுரு 32
திருநுதல்விழியு 103
திருநெடுமாலி 20
திருமகன்முருகன் 156
திருவருள்புரிந் 144
தில்லையம்பலத் 262
திலகநுதலுமை 62
திறம்பியபிறவி 8
தீத்திரளுருவ 86
துச்சானசெய்தி 205
துண்டவெண் 102
துணுக்கென 38
துந்துபிகுழல் 83
தூவிநீரோடு 225
தெள்ளுநீற 104
தேய்ந்துமெய் 231
தேர்மலிவிழவிற் 15
தொடங்கினண் 77
தொழுதுபின்செ 154
தொறுக்கள்வா 224
தோழியாஞ்செ 105
நிறைதழைவாழை 16
நின்றுநினைந்தி 209
நினைக்குநிரந்தர 60
நினைத்தேனினி 252
நீரணங்கசும் 100
நீரோங்கிவளர் 122
நீலமேகண்டம் 96
நீவாராதொ 126
நீறணிபவளக் 6
நெஞ்சிடரகல 85
நெடியசமணு 245
நெடியானோடு 203
நெற்றியிற்கண் 163
நேசமுடையவர் 255
நையாதமனத் 123
நோக்காததன் 277
படங்கொள் 221
படமெதழுமிடவ 210
பண்ணியத 141
பத்தியாயுணர் 184
பதிகநான் 155
பந்தபாச 219
பந்தமும்பிரிவு 177
பரிந்தசெஞ்சு 75
பவளமால் 226
பவளமேமரு 95
பழையராந் 94
பன்னெடுங் 169
பனிபடுமதிய 175
பாடகமுநூபு 192
பாடலங்கார 57
பாந்தள்பூணா 153
பாம்பணைத்து 145
பாரோர்முழு 200
பாலுமமுதமு 68
பாவார்ந்த 214
பின்னுசெஞ்ச 88
புரியும்பொன் 235
புவனநாயகனே 112
புழுங்குதீவினை 113
புனல்படவுருகி 117
பூவணங்கோயில் 151
பெரியவாகரு 152
பெருமையிற் 4
பொசியாதோ 207
பொய்யாதவேதி 58
பொருவரைப் 18
போழ்ந்தியானை 218
மங்குல்சூழ் 170
மங்கையோடி 143
மடங்கலாய்க் 10
மண்டலத்தொ 48
மண்ணோடு 211
மருண்டுறை 78
மறைகளுமமரர் 11
மாதிமணங்கம 59
மாதோர்கூ 284
மாலுலாமனந்த 69
மாலோடயனு 244
மானேர்கலைவ 66
மானைப்புரையு 198
மின்னுருருவ 195
முத்தர்முதுபக 276
முத்தியாளர் 197
முத்துவயிரம 185
முழுவதுமீயாயி 127
மூலமாய்முடிவ 121
மெய்யரேமெய்ய 98
மைஞ்ஞின்ற 125
மையன்மா 215
மோதலைப்பட்ட 139
யாதுநீநினைவ 109
வகைமிகுமசுரர் 76
வண்டார்குழலு 28
வரம்பிரிவாளை 14
வாடாவாய் 212
வாணுதற்கொடி 280
வாரணிநறும 257
வாழியம்போத 165
வாளாமாலய 213
வானநாடுடை 234
வானவர்கள் 268
வானோர்பணிய 246
விண்ணவர்மகுட 44

விம்மிவிம்மி	282	வெய்யசெஞ்	173	வேழுகவுள்ளத்து	34
விரியுநீராலக்	118	வெறியேற	26	வைத்தபாதங்	230
வெங்கோல்வே	202	வேந்தன்வளைத்	63	வையவாம்பெ	180

திருப்பல்லாண்டு

ஆரார்வந்தா	300	சேவிக்கவந்	294	பாலுக்குப்பாலக	297
எந்தையெந்தா	301	சொல்லாண்ட	292	புரந்தரன்மா	293
குழலொலி	299	தாதையைத்தா	298	மன்னுகதில்லை	289
சீருந்திருவும்	295	நிட்டையிலா	291	மிண்டுமனத்தவ	290
சேலுங்கயலு	296				

திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்துத் தலைவர்களாக
இருபதாம் பட்டத்தில் எழுந்தருளியிருக்கும்

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி
அருணந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்

தமிழ்க்கல்வி, சைவசித்தாந்தம், தேவாரத் திருமுறைகள், இசைத்தமிழ், அன்னதானம், வைத்தியம் இவற்றின் அபி விருத்திக்காகவும் பொது ஜனங்களின் அனுகூலத்துக் காகவும் மனமுவந்தமைத்திருக்கும் பேரறக் கட்டளைகள்.

தொடர் எண்	தரும விவரம்	மூலதனம் ரூ
1	சிவஞானசித்தியார் உபன்னியாசக் கட்டளை அண்ணாமலைப் பல்கலைக் கழகம் ...	15,000
2	கொட்டையூரில் நடுத்தரக் கல்விச்சாலை ஏற்படுத்த ...	11,500
3	திருவாங்கூர் மகாராஜா தேவாரப் பரிசு ...	5,000
4	சேரமான் பெருமாள் தேவாரப் பரிசு ...	5,000
5	மூவர் தேவாரப்பரிசு : சீகாழி, திருவாரூர், திருவையாறு, திருப்பனந்தாள் ...	10,000
6	ஸ்ரீகாசிப் பல்கலைக் கழகத்தில் சைவ சித்தாந்தப் போதகாசிரியர் நியமிக்க ...	60,000
7	அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் சைவ சித்தாந்த உபகாரச் சம்பளம் அளிக்க ...	30,000
8	திருப்பனந்தாளில் தமிழ்க்கல்லூரி நிறுவ ...	1,50,000
9	இசைத்தமிழ்க் கல்விக்கு ...	1,00,000
10	திருப்பனந்தாளில் கால்நடை வைத்தியசாலை ஏற்படுத்தவும், குடந்தைக் கல்லூரியில் உபகாரச் சம்பளமளிக்கவும் ...	20,000
11	ஸ்ரீ காசியில் ஸ்ரீ குமரகுருபரசுவாமிகள் நினைவு நாள் அன்னதானம் ...	10,000

தொடர் எண்	தரும விவரம்		மூலதனம் ரூ
12	இராமேசுவரத்தில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவு நாள் அன்னதானம்	...	10,000
13	திருநள்ளாற்றில் ஆவணிமூல அன்னதானம்	...	3,000
14	ஸ்ரீ காசியில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவு மார்கழி மாத அன்னதானம்	...	17,000
15	திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரி மாணவர்கள் உணவு நிதி	...	1,00,000
16	திருப்பனந்தாளில் ஜன வைத்தியசாலை நிறுவ நிலப் பெறுமானம்	...	66,000
17	திருப்பனந்தாள் மண்ணியாற்றங்கரையில் கேதார கட்டம்	...	2,900
18	திருப்பனந்தாள் மண்ணியாற்றங்கரையில் அரிச்சந்திர கட்டம்	...	3,000
19	கும்பகோணத்தில் மணிக்கூண்டு	...	25,000
20	தஞ்சையில் காசநோய் வைத்தியசாலை	...	21,000
21	ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீகுமரகுருபரர் நினைவு நாள் அன்னதானம்	...	9,000
22	மைசூர் மகாராஜா தேவாரப் பரிசு	...	5,000
23	தருமை ஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள் நினைவுத் தேவாரப் பரிசு, மாயூரம்	...	5,000
24	சென்னை விவேகாநந்தா கல்லூரியில் ராஜாஜி சைவ சித்தாந்தக் கட்டளை	...	10,000
25	ஸ்ரீ காசிப் பல்கலைக் கழகத்தில் சர். எஸ். ராதா கிருஷ்ணன் சைவ சித்தாந்தக் கட்டளை	...	20,000
26	ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவுத் தேவாரப் பரிசு, ஸ்ரீ வைகுண்டம்	...	5,000
27	மதுரைத் திருமலைநாயக்கர் தேவாரப் பரிசு	...	10,000
28	ஸ்ரீ செந்திலாண்டவன் அன்னதானம் - ஸ்ரீ வைகுண்டம், திருச்செந்தூர், திருநெல்வேலி மாணவி கட்கு	...	1,00,000
29	ஸ்ரீ காசியில் மகாத்மா காந்தியடிகள் நினைவு அன்னதானம்	...	5,000

தொடர் எண்	தரும விவரம்	மூலதனம் ரூ
30	ஸ்ரீ செந்திலாண்டவன் அன்னதானம் - ஸ்ரீ காசி, மதுரை, குடந்தை மாணவிகட்கு ...	1,50,000
31	டாக்டர் சுவாமிநாத ஐயர் நினைவுத் திருக்குறட் பரிசு, சென்னை ...	3,500
32	குடந்தையில் காந்தியடிகள் பசுப் பரிசு ...	1,000
33	காந்தியடிகள் நினைவு அரியநாயகிபுரத்தில் ஹரிஜன மாணவ உபகார நிதி ...	3,000
34	ஸ்ரீ வைகுண்டத்தில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நித்திய மகேசுவர பூசை ...	10,000
35	திருப்பனந்தாள் ஸ்ரீ அருணஜடேசுவர சுவாமிக்கு வெள்ளிக் கவசம் ...	4,000
36	விஷ்ணுபுரத்தில் ஹைஸ்கூல் படிப்பக நிதி ...	1,000
37	குடந்தையில் ராஜாஜி அபிராமி அந்தாதிப் பரிசு ...	3,500
38	திருநெல்வேலியில் ஸ்ரீ அரியநாயக முதலியார் நினைவு அபிராமி அந்தாதிப் பரிசு ...	3,500
39	திருப்பனந்தாளில் அப்பூதி அடிகள் நினைவு தண்ணீர்ப் பந்தல் தருமம் ...	3,500
40	ஸ்ரீ வைகுண்டத்தில் படிப்பகநிதி ...	3,500
41	சிதம்பரம் உயர்தரப்பாடசாலை மாணவர்களுக்கு உணவு நிதி ...	35,000
42	சிதம்பரத்தில் மார்கழித் திருவாதிரை, ஆனி உத்தர நாட்களில் அன்னதானம் ...	12,000
43	இராமேசுவரத்தில் ஆடி, தை அமாவாசைகளில் அன்னதானம் ...	3,500
44	ஸ்ரீ வைகுண்டத்தில் நூல் நிலயக்கட்டிடம் ...	12,825
45	பஞ்சாப் அகதிகளுக்கு நன்கொடை ...	5,000
46	அரியநாயகிபுரத்தில் நூல் நிலய நிதி ...	3,500
47	ஸ்ரீகாசி கேதாரீசுவரர் கோவிலில் ஸ்ரீ குமாரசாமி அன்னதானம் ...	5,000
48	ஸ்ரீ வில்லிபுத்தூரில் தேவாரப் பரிசு ...	3,500
49	திருப்பனந்தாள் ஸ்ரீ அருணஜடேசுவர சுவாமி கோவிலில் மின்சார தீபம் போட ...	7,500

தொடர் எண்	தரும விவரம்	மூலதனம் ரூ
50	காஞ்சியில் மூவர் தேவாரப் பரிசு ...	5,000
51	திருவஞ்சைக்களத்தில் சேரமான் பெருமாள் நினைவு அன்னதானம் ...	7,000
52	28-வது ஸ்ரீ செந்திலாண்டவன் அன்னதானம் - ஸ்ரீ வைகுண்டம் முதல் ஆண்டு உதவி நிதி ...	5,000
53	30-வது ஸ்ரீ செந்திலாண்டவன் அன்னதானம் - ஸ்ரீ காசிப் பல்கலைக் கழகத்திற்கு முதல் இரண்டு ஆண்டு மூலதனம் ...	14,000
54	28-வது ஸ்ரீ செந்திலாண்டவன் அன்னதானம்- திருச்செந்தூர் முதல் ஆண்டு உதவி மூலதனம் ...	5,000
55	ஸ்ரீ வைகுண்டம் ஸ்ரீகுமரகுருபர சுவாமிகள் படிப் பகப் பராமரிப்புக்காகக் கட்டிடமும் நிலமும் ...	15,000
56	மாளவியாஜீ பெயரால் கல்கத்தா, டெல்லி, அலகாபாத், லக்னோ, ஆக்ரா, அலிகார் முதலிய பல்கலைக்கழகங்களில் சைவ சித்தாந்த உபன்னியாசக் கட்டளை ...	5,000
57	ஸ்ரீ செந்திலாண்டவன் அன்னதானம் - சிதம்பரம், மதுரை, திருச்செந்தூர் ...	60,000
58	திருப்பனந்தாள் மண்ணியாற்றங்கரையில் சோமேசர் ஸ்நான கட்டம் நிறுவ ...	1,500
59	ஸ்ரீ வைகுண்டத்தில் பெண்கள் உயர்நிலைப் பள்ளி நிறுவ ...	45,000
60	ஸ்ரீ வைகுண்டம் தேவார மாணவர்கள் காசி யாத்திரை நிதி ...	5,000
61	பனசைக் கல்லூரியில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவுப் பரிசு ...	5,000
62	(6) ஸ்ரீ காசிப் பல்கலைக் கழகத்தில் சைவசித்தாந்த நிதிக்கு அதிகப்படியாக அளித்தது ...	16,000
63	30-வது ஸ்ரீ செந்திலாண்டவன் அன்னதானம்— மதுரை முதலாண்டுதவி மூலதனம் ...	7,000

T. 2317

GOVERNMENT ... LIBRARY
3 AUG 1957
MADRAS

செந்திலாண்டவன் துணை

திருச்சிற்றம்பலம்

திருக்கயிலைத் திருமுறை

[முதல் ஏழு திருமுறை]

குறிப்புரையுடன்

★

ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி சாமிநாத சுவாமிகள்

13-வது ஆண்டு நினைவு வெளியீடு

2—4—1957

★

ஸ்ரீ காசி மடம் :: திருப்பனந்தாள்

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் வெளியீடுகள்

		ரூ.	அ.
1	விநாயகர் திருமுறை	0	1
2	ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பிரபந்தத் திரட்டு டாக்டர் சாமிநாத ஐயர் குறிப்புரையுடன் ...	6	0
3	சிவக்கொழுந்து தேசிகர் பிரபந்தம்	3	0
4	திருஞானசம்பந்தர் தேவாரம்	2	8
5	திருநாவுக்கரசர் தேவாரம் விரைவில் வெளிவரும்		
6	சுந்தரர் தேவாரம்	1	0
7	திருவாசகம்	0	6
8	திருக்கோவையார்	2	0
9	ஒன்பதாம் திருமுறை — திருவிசைப்பா திருப்பல்லாண்டு	0	9
10	திருமந்திரம்	2	8
11	பதினோராந் திருமுறை	1	4
12	திருக்கைலாய ஞானவுலா உரையுடன் ...	0	8
13	பெரிய புராணம்	2	8
14	அகத்தியர் தேவாரத் திரட்டு	0	6
15	திருவிளையாடற் புராணம்	3	0
16	தாயுமான சுவாமிகள் பாடல்	1	4
17	கந்த புராணச் சுருக்கம்	1	12
18	கந்த புராணம்—முதல் மூன்று காண்டங்கள் ...	2	12
19	,, யுத்த தேவகாண்டம் ...	2	0
20	,, தக்ஷ காண்டம்	1	8
21	கந்த புராண வசனம்	2	8
22	கந்தர் அலங்காரம் குறிப்புரையுடன் ...	0	4
23	கந்தர் அநுபூதி ஷை	0	2
24	கந்தர் கலிவெண்பா—ஆங்கிலம், ஹிந்தி மொழிபெயர்ப்புக்களுடன்	0	6
25	கந்தர் கலிவெண்பா—மூலம் மட்டும்	0	1
26	நீதிநெறி விளக்கம்—ஆங்கிலம், ஹிந்தி மொழிபெயர்ப்புக்களுடன்	0	8
27	சகலகலாவல்லி மாலை—ஆங்கிலமும், ஹிந்தியும் கூடியது	0	1
28	சிவஞான சித்தியார்—ஹிந்திமட்டும் ...	1	0
29	திருக்குறள்-அறத்துப்பால் ஹிந்தி மொழிபெயர்ப்பு	1	8

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து வெளியீடு

T. 2317

GOVERNMENT ORIENTAL MANUSCRIPTS LIBRARY
3 - AUG 1957
MADRAS

உ
சிவசிவ
திருச்சிற்றம்பலம்

திருக்கயிலைத் திருமுறை

[முதல் ஏழு திருமுறை]

குறிப்புரையுடன்

★

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்துத் தலைவர்
ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள்
அவர்களுடைய திருவுளப்பாங்கின்படி

★

Acc No 128464

ஸ்ரீ காசிமடம் இளவரசு
ஸ்ரீமத் மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள்
அவர்களால் வெளியிடப்பெற்றது

துன்முகி ஆண்டு பங்குனித் திங்கள் 20-ம் நாள்

ஸ்ரீ காசிமடம்] 1957 [திருப்பனந்தாள்

முதற் பதிப்பு—1957

உ

சிவசிவ

வேண்டுகோள்

குதுகுதுப் பின்றிநின்று என்குறிப் பேசெய்து நின்குறிப்பில்
விதுவிதுப் பேனை விடுதிகண் டாய்;விரை யார்ந்துஇனிய
மதுமதுப் போன்றுஎன்னை வாழைப் பழத்தின் மனங்கனிவித்து
எதிர்வதுஎப் போது? பயில்விக் கயிலைப் பரம்பரனே!

அளித்து வந்தெனக்கு 'ஆவ'என்று அருளி
அச்சம் தீர்த்தநின் அருட்பெருங் கடலில்
திளைத்தும் தேக்கியும் பருகியும் உருகேன்;
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே!
வளைக்கை யானொடு மலரவன் அறியா
வான வா!மலை மாதொரு பாகா!
களிப்பெ லாம்மிகக் கலங்கிடு கின்றேன்
கயிலை மாமலை மேவிய கடலே!

திருந்துவார் பொழில்சூழ் திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
இருந்தவாறு எண்ணி ஏசறா நினைந்திட்டு
என்னுடைய எம்பிரான் என்றென்று
அருந்தவா நினைந்தே ஆதரித்து அழைத்தால்
அலைகடல் அதனுளே நின்று
பொருந்தவா கயிலை புகுநெறி இதுகாண்
போதராய் என்றரு ளாயே.

— திருவாசகம்

தியோடர் பிரஸ், திருச்சிராப்பள்ளி.

T. 2317

உ
சிவசிவ

முன்னுரை

ஆறுடையர் நஞ்சுடையர் ஆடும் அரவுடையர்
ஆறுடையர் காலம் அமைவுடையர்—ஆறுடைய
சித்தத்தீர் செல்வத் திருக்கயிலை சேர்கின்ற
சித்தத்தீர் எல்லார்க்குஞ் சேர்வு.

— *11-ஆம் திருமுறை சிவபெருமான் திருவந்தாதி*

"ஊழிதோ றூழிமுற்றும் உயர்பொன் னொடித்தான்மலை" என்னும் **திருக்கயிலைமலை** சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் பெருமையினையுடையது: மெய்யடியார்களின் உள்ளம்போல மிகுந்த வெண்ணிறத்தினையுடையது; அடியும் முடியும் காணுதற்கரியதாய் விளங்குவது. இக்கயிலைமலை நம் இந்திய நாட்டின் வட எல்லையாக வீறுடன் விளங்கும் இமயப் பெருவெற்பின் வடசரிவில் கடல் மட்டத்திற்குமேல் 22,028 அடி உயரத்தில் இயற்கைக் கோயிலாகத் திகழ்கின்றது: மிகுந்த பரப்பினையும் ஆழத்தினையுமுடைய மானஸசரோவரம் என்ற தடாகத்தினைத் தன் தென்புறத்தில் பெற்று என்றும் அம்மை அப்பனைக் காட்சியளித்துக்கொண்டு யாவராலும் புகழும்படி விளங்குகின்றது.

இத்தகைய மாண்புடைய கயிலைமலையினைத் தேவார ஆசிரியர் மூவரும், பிறரும் போற்றித் துதித்துள்ளனர். அவற்றுள் மூவர் தேவாரத்தில்மட்டும் திருக்கயிலைமலை போற்றப்படுவதைச் சைவமக்கள் எளிதில் பெற்றுப் பயனடையும் பொருட்டுத் "**திருக்கயிலைத் திருமுறை**" என்ற பெயருடன் **ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி சாமிநாத சுவாமிகள் அவர்களின் 13-ஆம் ஆண்டு நினைவு மலராகத் துன்முகி ஆண்டு பங்குனித் திங்கள் 20-ஆம் நாள் ஆகிய** இன்று திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்தின் வெளியீடாக வெளிவருகின்றது.

இச் சிறு தொகுப்பு நூலில், முதல் ஏழு திருமுறைகளில் திருக்கயிலை மலையினைக் குறிக்கும் தேவாரப் பாடல்களே இடம் பெற்றுள்ளன. இறுதியில் **திரு அனேகதங்காவதம், திருக்கேதாரம்** இவற்றிற்குரிய தேவாரப் பதிகங்களும் இணைக்கப்பெற் றுள்ளன. திருக்கயிலைமலைக்குச் செல்லும் வழிமுறைகளைத் '**திருக்கயிலைச் செலவு**' என்ற தலைப்பில் முன்னர் சேர்க்கப்பெற் றுள்ளது. தேவாரப் பாடல்களுக்கு ஆங்காங்கே இன்றியமை யாக் குறிப்புரைகளும் கொடுக்கப்பெற்றுள்ளன. சைவசமயத் திற்கும் தமிழ்மொழி வளர்ச்சிக்கும் ஏனைய பொது அறங் கட்கும் நாளும் அருட்கொண்டு வழங்கி வருகின்ற **ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களின்** பேரறக் கட்டளைகள் 237-ம் ஈற்றில் சேர்க்கப் பெற்றுள்ளன.

இவ்வெளியீடு நன்கு அமையுமாறு உறுதுணைபுரிந்த திருச்சி **வித்துவான் திருமுறைக்கலைஞர் திரு. தி. பட்டுச்சாமி ஓதுவார்** அவர்களுக்கும், திருப்பனந்தாள் **வித்துவான் சிவநெறிச் செல்வர் திரு. K. M. வேங்கடராமையா, M.A., B.O.L.,** அவர்களுக்கும் செந்திலாண்டவன் திருவருள் துணை செய்க.

இந்தச்சீரிய சைவப்பணியை அடியேற்கருளிய **ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களின்** பொன்னார் திருவடிக் கமலங்களை அடியவன் சிரத்திற்கு அணி எனக் கொண்டு மன மொழி மெய்களால் வாழ்த்தி வணங்குகின்றேன்.

குமரகுருபரன் சங்கம்
ஸ்ரீவைகுண்டம்
2—4—1957.

இங்ஙனம்
T. M. குமரகுருபரன் பிள்ளை, B.A., B.L.

உ

சிவமயம்

திருக்கயிலைச் செலவு

[திருமுறைக் கலைஞர் வித்துவான் தி. பட்டுச்சாமி ஓதுவார்]

T. 237

இமயமும் புண்ணியத் தலங்களும் :

இந்தியாவின் வடபுறத்தில் இயற்கை அமைப்பிலே கிழக்கு வடக்காகச் சுமார் 2000 மைல் நீளங்கொண்டு பரத கண்டத்தின் சிகரம்போல் அழகுக்கு இருப்பிடமாக விளங்குவது இமய மலை (மேருமலை). இமம் - பனி. இது 'மலையரசு' என்பதற்கு ஏற்ற பெருமையுடன் திகழ்கின்றது. இந்த இமயமலை சிறிய இமயம், பெரிய இமயம், எல்லை கடந்த இமயம் என முப்பிரிவுகளாகப் பிரிக்கப்பெற்றுள்ளது. பெரிய இமயத்திலே திருக்கேதாரம், அனேகதங்காவதம் (கௌரீ குண்டம்), பத்திரிகாசிரமம், கங்கோத்திரி, யமுனோத்திரி, அமரநாத் (காஷ்மீர்), பசுபதிநாத் (நேபாளம்) என்னும் சிறந்த புண்ணியத் தலங்கள் திகழ்கின்றன. எல்லை கடந்த இமயத்திலேதான் கயிலைமலை இருக்கின்றது. இதற்குப் பேரிமயத்தைக் கடந்தே செல்ல வேண்டும். இமயமலையைக் கோயிலாகவும், கயிலையை அதனுள் இருக்கும் மூலத்தான மூர்த்தியாகவும் கூறலாம். கயிலைமலை இந்துக்களுக்கே அன்றிப் பௌத்தர்களுக்கும் புண்ணியத் தலமாகத் திகழ்கின்றது. இமயத்தின் அடிவாரம் சென்னையிலிருந்து சுமார் 1700 மைல் தூரமாகும்.

கயிலையும் மானஸசரோவரமும் :

திருக்கயிலைமலை, பேரிமயத்தின் வடசரிவில் மேற்குத் திபேத்துநாட்டின் எல்லையிலே இயற்கைக்கோயில்போல்பனிக் கட்டிகளின் வடிவோடு கடல் மட்டத்திற்குமேல் 22,028 அடி உயரமும், 32மைல் சுற்றளவுங்கொண்ட தெய்வத்தன்மைவிளங்கும் ஒரு கொடுமுடியாகும். இதன் காட்சி நேரில் கண்டுகளிக்கத்தக்கதே. மக்கள் யாவரும் இக்காட்சியைச் சிவபெருமான் வடிவாகவே கண்டு வழிபடுகின்றனர். கயிலை சிவபெருமானுக்கு உறைவிடமாகவும் சிவபெருமான் அங்கிருந்தே தன் மூர்த்திகரத்தை எங்கும் விளங்கச்செய்கின்றதாகவும் நூல்கள் கூறும்.

கயிலையின் தென்புறம் சுமார் 40 மைல் தூரத்தில் 56 மைல் சமசதுரமும் 250 அடி ஆழமுங்கொண்டு பசுமை நிறத்துடன் **மானஸசரோவரம்** என்ற தடாகம் ஒன்றும் உள்ளது. கயிலைமலை சிவன் வடிவு; மானஸசரோவரம் சத்திவடிவு. இவ்விரண்டு வடிவையும் சேர்த்துக் **கௌரி சங்கர்** என்று கூறுகின்றனர். கயிலைமலை திபேத்து நாட்டில் ஆட்சிபுரியும் **தலைலாமா** என்ற பௌத்த மதத் தலைவர் பாதுகாப்பில் இருந்து வருகிறது.

கயிலைமலைக்குச் செல்லும் நேர்வழியும் காலமும் :

கயிலை செல்வதற்குக் காஷ்மீர் தலைநகராகிய **ஸ்ரீநகர்வழி**, டெஹரி சமஸ்தானத்திலுள்ள **கர்வால்வழி**, சிம்லாவினின்றும் **ஷிப்கிகணவாய் வழி**, கங்கோத்திரி என்ற தலத்திலிருந்து **நீலக் கணவாய்வழி**, பத்திரிகாசிரமம் என்று தலத்தினின்றும் **மானக் கணவாய் வழி**, அல்மோராவினின்றும் **லிப்புலெக்குக் கணவாய் வழி** முதலிய பல வழிகள் உள்ளன. இவற்றுள் லிப்புலெக்குக் கணவாய் வழியிலுள்ள **லிப்புத் தடாகக் கணவாய்** வழியே எல்லோர்க்கும் ஏற்ற குறைந்த தூரமுள்ள வழியாகும். இது கயிலைக்கு அமைந்த வாயில் போன்றது. மற்றைய வழிகள் யாவும் மிக்க தூரம் உள்ளன. அவை மிகச்சிரமத்துடன் மலை ஏறுவதில் பயிற்சி உடையவர்களுக்கே ஏற்றவையாகும்.

முதுவேனிற் காலத்தில்தான் லிப்புத்தடாகக் கணவாயில் பனிக்கட்டி உருகி வழி திறக்கும். ஆகவே, ஆனி, ஆடி, ஆவணி ஆகிய இம்மூன்று மாதங்களே **கயிலை யாத்திரைக்கு** ஏற்றதாகும். இக்காலத்திற்குள் யாத்திரையை முடித்துக்கொண்டு மீளுதல் நலம்:

சென்னை - அல்மோரா :

கயிலைக்குச் சென்னையிலிருந்து செல்வோர் முதலில் **டில்லி** நகரிலும், பின்னர். **மொராதாபாத், பரீலி** என்ற சந்திப்புக்களிலும் வண்டி மாற வேண்டும். அதன் பின்னர் **காத்கோடம்** என்னும் இடத்தில் இறங்கி மோட்டார் வண்டி மூலம் 100 மைல் தூரமுள்ள **அல்மோரா** என்ற பெரிய நகருக்குச் செல்ல வேண்டும். அல்மோரா கடல் மட்டத்துக்குமேல் 5,600 அடி உயரத்தில் இருக்கிறது; **இப்பகுதி சிறியஇமயத்தின் அடிவாரம்**

ஆகும். அல்மோராவினின்றும் கயிலை அடிவாரம் சென்று திரும்பிவர 500 மைல் தூரமாகும். இதற்கு 50 நாட்கள் செல்லும். இந்தக் கயிலைச்செலவு அரிய தவப் பேறுடையார்க்கே கிட்டும். "**தவமும் தவமுடையார்க்கு ஆகும்**" என்பது திருக்குறள்.

அல்மோராவிலிருந்து கயிலை செல்லும் இடைவழிகளில் கரடுமுரடான குறுகிய வழிகளும், பெரிய பெரிய ஏற்றங்களும், இறக்கங்களும், சிறியமேடுகளும், பள்ளங்களும், காடுகளும், மணல் சரிவுகளும் வழுக்கு நிலங்களும், பாறைகளும், பனிக்கட்டிகளும், சமதரைகளுமாக உள்ளன. பொதுவாகவே கயிலை மலையின் அடிவாரம் சென்று திரும்பி வருதல் மக்கட்கு மிக அருமையான செயலாகும். இங்கே "**கயிலைமால்வரை யாவது காசினி மருங்கு, பயிலு மானுடப் பான்மையோர் அடைவதற்கு எளிதோ ? அயில்கொள் வேற்படை அமரரும் அணுகுதற்கு அரிதால்**" என்வரும் பெரிய புராண அடிகள் கருதற்பாலன. வழிகளின் கடுமையினுல் நாள் ஒன்றுக்குச் சராசரி 10 மைலே நடந்துசெல்ல இயலும். பணம் மிகச்செலவாகும். எப்பொழுதும் இதற்குத் துணையாளோடு பல மக்களுடன் கூட்டம்கூட்டமாகத்தான் செல்லவேண்டும்.

முன்னர் கயிலை செல்வோர், கயிலையின் அடிவாரம் சென்று வந்தவரின் அனுபவங்களைக் கேட்டறிந்துகொள்தது மிகநலம். கயிலைச் செலவில் கோதுமை உணவுதான் உட்கொள்ள வேண்டும். வேெற்ரு பொருளும் கிடைக்காது. தேவையா்ன சில உணவுப்பொருளைச்சிறிதளவுதான் கொண்டுசெல்லமுடியும். கம்பள உடை, போர்வை. உட்சட்டை, காற்சட்டை, கையுறை, காலுறை, விரிப்பு, பூட்சு, இருப்பாணியுடைய ஊன்றுகோல், குடை, சிறுநோய்களுக்கு மருந்துவகை ஸ்டவ் முதலியன அவசியம் கைக்கொண்டு செல்லவேண்டும். வழியிற் காணும் பழங்களைப்பறித்து உண்ணலாகாது. முன்நோக்கிச் செல்வோர் பின்புறம் திரும்பித்திரும்பிப் பார்த்துச் செல்லலாகாது; மிகக் கவனத்துடன் கடவுள் சிந்தையுடையவராய்ச் செல்லவேண்டும். அப்போதுதான் யாத்திரை இடையூறு இன்றி இனிது முடிவுற்று நன்மை அளிக்கும்.

அல்மோரா - கர்பியாங் :

முன்னர் அல்மோராவிலிருந்து 8-மைல் சமநிலத்தில் காடுகளின் வழியே சென்று **பரிச்சீனு** என்ற ஊரையும், 14-மைலிலுள்ள **கனெரிச்சீனு** என்ற ஊரையும், 5-மைலிலுள்ள தொங்கு பாலமுடைய **சரயுநதி**யையும், அதன்மேல் 4-மைல் தூரம் ஓர் ஏற்றமும், 2-மைல் தூரம் ஓர் இறக்கமும் கடந்து **கனுய்** என்ற ஊரையும், அங்குநின்றும் 3-மைல் தூரம் பெரிய ஏற்றத்தில் ஏறிப் **பெரிய நாகு** என்ற ஊரையும், 7-மைல் சாய்வான இறக்கமும், 3-மைல் சாமானிய ஏற்றமும் கடந்து, தொங்கு பாலத்தின் வழியாக **ராம்கங்கா** நதியைத் தாண்டித் **தால்** என்ற ஊரையும், 5-மைல் பெரியஏற்றமும், 7-மைல் காடுகளின் வழியும்கடந்து **டிடிஹாட்** என்ற ஊரையும், 12-மைல் சமதரையைக் கடந்து **ஆஸ்கோட்டை** என்ற ஊரையும், அதற்குமேல் **பெரிய இமயப்பரப்பில்** 3-மைல் கீழ்நோக்கிய இறக்கமும், 2-மைல் கௌரி கங்கையாற்றின் கரையோரமும் சென்று, **ஜலஜீவி** என்ற ஊரையும், 12-மைலில் **டார்ச்சுலா** என்ற ஊரையும், 4 மைல் சமவழியும், 3-மைல் கரடுமுரடான மேடுபள்ள வழியில் பெரிய ஏற்றமும் தாண்டிக் **கேலா** என்ற ஊரையும், 1½ மைல் ஏணிபோன்று செங்குத்தாகப் பெரிய இறக்கமும், இறக்கத்தின் அடியில் மரப்பாலத்தின்மூலம் **தவளகங்கை** என்ற நதியையும், அதன்மேல் 5-மைல் பெரிய ஏற்றமும் தாண்டிப்போய்ச் **சிர்க்கா** என்ற சிற்றூரையும், 3-மைல் சாமானிய தரையும், 3-மைல் பெரிய ஏற்றமும், அதன் 3-மைல் பெரிய இறக்கமும் உள்ள இருண்ட காட்டின் வழியே சென்று **ஜிப்தி** என்ற ஊரையும், 1½-மைல் நல்லவழியிலும், பின்பு இருபெரும் பாறைகளுக்கு இடையே எமலோக வாயில் போன்ற வழியிலும் சென்று **பிந்துக்கோட்டை**யையும், 22-மைல்ஏற்றமும் இறக்கமும் உள்ள கடுவழியிலும். 3-மைல் பெரிய இறக்கத்திலும் சென்று **மால்ப்பா** என்ற தருமசாலையையும், 9-மைலில் **பூதி** என்ற ஊரையும் 2-மைல் சம நிலமும் 3-மைல் இறக்கமும் கடந்து சென்றால் இந்தியாவின் கடைசிக் கிராமமாகிய **கர்ப்பியாங்** என்ற ஊர் எதிர்ப்படும். இது கடல் மட்டத்திற்குமேல் 10,500 அடி உயரம் ஆகும். இவ்வூர் உறைபனிமலைகள் சூழ்ந்துள்ள குளிர்மிகுந்த இடமாகும்.

GOVERNMENT ORIENTAL ... MADRAS

அல்மோராவிலிருந்து கர்பியாங் வரை 150-மைல் தூரம் வந்ததாகும். இன்னும் கயிலை அடிவாரம் 100-மைல் தூரம் கடந்துசெல்லவேண்டும்.

லிப்புத்தடாகக் கணவாய் :

கர்பியாங் என்ற கிராமத்தினின்றும் 10-மைல் கடந்து சென்று **காலபாணி** என்ற சமதரையையும், பின்பு 3-மைலில் 16,800-அடி உயரமான **லிப்புலெக்குக் கணவாயின்** அடிவாரத்தையும், 4-மைல் ஏற்றத்தில் ஏறி **லிப்புத்தடாகக் கணவாயையும்** அடையலாம். இஃது இந்தியா, நேபாளம், திபேத்து ஆகிய மூன்று தேசங்கள் கூடும் இடத்தில் இருக்கிறது. இக்கணவாயின் வழி இருபது அடி அகலங்கொண்டு கயிலைக்கு அமைந்த வாயில் போன்று உள்ளது.

தக்களக்கோட்டை :

பின்னர், லிப்புத்தடாகக் கணவாயிலிருந்து 3-மைல் பேரிமயத்தின் வடசாரலில் திபேத்துப் பக்கம் வழி இறங்குகிறது. இறக்கத்தின் முடிவிலிருந்து **எல்லைகடந்த இமயப்பரப்புத்** தொடங்குகின்றது. இதிலிருந்து 9-மைலில் **தக்களக்கோட்டை** இருக்கிறது. இது கடல் மட்டத்திற்குமேல் 12,000 அடி உயரத்தில் **புராங்** என்ற பள்ளத்தாக்கில் பிரம்மபுத்திராவின் உபநதியான **கர்னலி** என்ற நதிக்கரையில் உள்ளது. இத் தக்களக்கோட்டை திபேத்து எல்லையில் உள்ளது, இது திபேத்து நாட்டு ஊர்களில் மிகப் பெரியது; சிறந்த வியாபாரத் தலமாக விளங்குவது.

தக்களக்கோட்டையிலிருந்து கயிலைக்குச்செல்ல இரண்டு வழிகள் உண்டு. ஒன்று **தீர்த்தபுரி தர்ச்சன்** வழியாகக் கயிலை செல்கிறது. மற்றொன்று மாந்தாதாமலைச்சார்பாக மானஸ சரோவரத்தின் வழியாகக் கயிலை செல்கிறது. முதல் வழியே நேர்வழி. இவ்வழியினின்றும் கயிலை செல்லும் வரை பனிக் கட்டிகளையும், சிற்றோடைகளையும் ஆறுகளையும் கடந்து செல்ல வேண்டும். முன்பு கடந்து வந்த வழியைக்காட்டிலும் இவ்வழி

மிகக்கடுமையும் துன்பமும் அளிக்கவல்லது. ஆதலால், "**ஆளும் நாயகன் கயிலையில் இருக்கைகண் டல்லால் மாளும் இவ்வுடல் கொண்டு மீளேன்**" (பெரிய புராணம்) என்ற மனவுறுதியையும் திடபக்தியையும் உடல் உறுதியையும் கடவுள் நம்பிக்கையும் கொண்டால்தான் கயிலைதரிசனம் கிட்டும் என்பதை யாத்திரிகர் மனத்தில் கொள்ள வேண்டும்.

திபேத்திய அரசாங்கம் கயிலை யாத்திரை செல்லும் இந்தியர்களுக்கு வேண்டிய பாதுகாப்புக்கள் அளித்து உதவி செய்து வருவது போற்றத்தக்கதாம்.

கயிலை அடிவாரம் :

தக்களக்கோட்டையின்றும் திபேத்தின் உள்நாட்டிலே நுழைந்து எட்டிய தூரம் வெட்ட வெளியிலே திருத்தமில்லாத வழியில் சுமார் 31 மைல் கடந்து சென்று சிந்துநதியைத் தாண்டித் **தீர்த்தபுரியை** அடையலாம். அதற்குமேல் கிழக்கே ஒரு மலைச்சாரலின் வழியாக அதன் உச்சிக்கு 3 மைல் தூரம் ஏறி நின்று பார்த்தால் 37 மைல் தூரத்தில் விளங்கும் **கயிலைமலையின் தரிசனம்** கிடைக்கும். அப்போது யாத்திரிகர் களைப்பு நீங்கி உவகைமிக்கு வாய்விட்டுக் "**கயிலாயபதீ! கயிலாயபதீ!**" என்று கதறி அத்திசை நோக்கி வணங்குவர். அதன்பின்பு நான்கு நாட்களில் கயிலையின் அடிவாரமாகிய **தர்ச்சன்** என்னும் மேற்கு வாயிலாகிய இடத்தை அடையலாம். இது கடல் மட்டத்திற்கு மேல் 15,000 அடி உயரத்தில் உள்ளது.

விசுவலிங்கம் :

கயிலை அடிவாரத்தினின்று கயிலைமலையை நோக்கில் துவார பாலகர் போன்ற **வச்சிரபாணி, அவலோகிதேசுரம்** என்ற இரு பெருங் குன்றுகளின் இடையே அது மிக உன்னதத்தில் வெள்ளிய இலிங்க வடிவாகக் காட்சி அளிக்கின்றது. இந்த லிங்கவடிவம் "**விசுவலிங்கம்**" எனப் பெயர் பெறும். இதன் அருகு எவரும் அணுக இயலாது; வெறும் பனிக்கட்டிகள் நிறைந்த இடமாகும். சுற்றி வலம் வருவது ஒன்றுமட்டுமே யாவரும் செய்யத்தக்கது. 32 மைல் சுற்றளவுள்ள இக்கயிலை

மலையை வலமாக வருவதற்கு மூன்று நாட்கள் செல்லும். வலம் வருதல் உறைபனியுள்ள இடங்களில் வரவேண்டியதால் மிகக் கடுமையான கஷ்டத்துடன்தான் வரவேண்டும். கயிலையை வலம் வருவதே அதற்குச் செய்யும் சிறந்த வழிபாடாகும்.

கயிலையினை வலம்வரும்போது கீழ்த்திசையில் கௌரிகுளம் ஒன்று உள்ளது. இவ்வழியினின்றும் 4-மைல் தூரம் மேட்டில் ஏறிச் சென்று கௌரி குளத்தை அடையவேண்டும். இது 18,000 அடி உயரத்தில் அமைந்துள்ள புண்ணிய தீர்த்தம். இதன் நீர்ப்பரப்பை உறைபனி மூடிக்கொண்டிருக்கும் இங்கு உடல் முழுவதும் எண்ணெய் பூசிக்கொண்டு நீராடவேண்டும். கௌரி இறைவனின் இடப்பாகத்தில் விளங்குவதுபோல் இக் குளமும் கயிலையின் இடப்பாகத்தில் திகழ்கின்றது. கயிலைப் பிரதட்சிணம் முடிந்ததும் கயிலைக்குத் தெற்கே சுமார் 40 மைலி லுள்ள மானஸசரோவரம், மாந்தாதாமலை, இராட்சத தடாகம் முதலியவற்றையும், கண்டு ஸ்நானம் செய்துகொண்டு முடிவாகக் கயிலைமலையையும் அங்கு நின்றே தரிசித்துக்கொண்டு திரும்பி வருதல் வேண்டும்.

கயிலைச் செலவின் பயன் :

கயிலை யாத்திரையில் இறைவன் நினைப்பில் மனம் ஒன்றி நிற்றலால் உடற் களைப்பின் நினைவு இல்லாமல் போகிறது. உறைபனியில் செல்வதால் உடலிலுள்ள கிருமிகள் எல்லாம் அழிகின்றன; உடல் நலமும் உண்டாகிறது. பற்பல இயற்கைக் காட்சிகளைக் காணுதலால் அறிவு தெளிவுபடுகிறது. ஆகவே கயிலைச் செலவில் உடல் நலமும் அறிவு நலமும் திகழ்வதோடு ஆன்ம நலமும் உண்டாகின்றது; அன்றியும் இயற்கையின் வாயிலாக இறைவனைக் காணும் முறையினையும் அறிந்து மகிழ ஏதுவாகின்றது.

உ

சிவசிவ

திருக்கேதாரம் செல்லும் வழி*

ஹரத்துவாரிலிருந்து ரிஷிகேசம்	14	மைல்	பஸ் மூலம்
ரிஷிகேசமிருந்து கீர்த்தி நகர்	60	,,	,,
கீர்த்தி நகரிலிருந்து ஸ்ரீநகர்	3	,,	கால் நடை
ஸ்ரீநகரிலிருந்து ருத்திரப் பிரயாகை (ஸ்ரீநகர்-இது காஷ்மீரத்தின் தலைநகர் அன்று: அது வேறு)	18	,,	பஸ் மூலம்
ருத்திரப்பிரயாகையிலிருந்து சதோலி	$4\frac{1}{2}$	,,	கால் நடை
அகஸ்தமுனி சட்டி (சட்டி-மலைநாட்டிலுள்ள சிற்றூர்)	6	,,	,,
சந்திராபுரி	$4\frac{1}{2}$	,,	,,
குண்டு சட்டி	7	,,	,,
குப்த காசி	2	,,	,,
வ்யூங் சட்டி	$4\frac{1}{2}$	,,	,,
பாட்டா சட்டி	3	,,	,,
ராம்பூர்	$4\frac{3}{4}$	,,	,,
கௌரி குண்டு (அனேகதங்காவதம்)	5	,,	,,
ராம் பாடா	4	,,	,,
கருடியா சட்டி	2	,,	,,
திருக்கேதாரம்	1	,,	,,
ஆக	$143\frac{1}{4}$	மைல்	

ஹரத்துவாரிலிருந்து திருக்கேதாரம் பஸ்மூலம் 92 மைலும் கால்நடை $51\frac{1}{4}$ மைலும் ஆக $143\frac{1}{4}$ மைல் செல்லவேண்டும். இந்த யாத்திரை 16 தினங்களில் முடிவுபெறும்.

---

* இக்குறிப்பு. காசி கேதாரக் கட்டம் ஸ்ரீ குமாரசாமி மடம் ஏஜண்டு **திரு. வி, கலியாணசுந்தரம் பிள்ளை** அவர்கள் எழுதிய **திருக்கேதார யாத்திரை** என்ற நூலிலிருந்து எடுக்கப்பெற்றது.

2. ஹரத்துவாருக்குச் சென்னையிலிருந்து ஆக்ரா, லக்னோ மூலமாகவும் சென்னை, இட்டார்சி, அலகாபாத்- காசி, லக்னோ மூலமாகவும் செல்லலாம். ஹரத்துவார் என்பது புகைவண்டி நிலையமுள்ள ஒரு பெரிய நகர் ஆகும்.

3 - AUG 1957
MADRAS



"மானக் கயிலை மலையாய் போற்றி!"

— திருவாசகம்

T. 2317

உ
சிவசிவ
திருச்சிற்றம்பலம்

திருக்கயிலைத் திருமுறை

[முதல் ஏழு திருமுறை]

கணபதி துதி

[கட்டளைக் கலித்துறை]

புந்தித் தடத்துப் புலக்களி றோடப் பிளிறுதொந்தித்
தந்திக்குத் தந்தை தமிழ்க்குத(வு) என்பதுஎன்? தண்மலர்தூய்
வந்திப் பதுந்தனி வாழ்த்துவ தும்முடி தாழ்த்துநின்று
சிந்திப் பதுமன்றிச் சித்தி விநாயகன் சேவடியே. *

— மதுரைக் கலம்பகம் — ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள்

திருஞானசம்பந்த சுவாமிகள்

தேவாரம்

திருவீழிமிழலை பண்-நட்டபாடை 1-ஆம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

முன்னிற்பவர் இல்லாமுரண் அரக்கன்வட கயிலை
தன்னைப்பிடித் தெடுத்தான்முடி தடந்தோளிற வூன்றிப்
பின்னைப்பணிந் தேத்தப்பெரு வாள்பேரொடுங் கொடுத்த
மின்னிற்பொலி சடையானிடம் வீழிம்மிழ லையே. 8

---

* புந்தி - மனம். புலக்களிறு - ஐம்புலன்களாகிய யானைகள். பிளிறு - பிளிறும். தொந்தி - பெருவயிறு. தந்தி - விநாயகக் கடவுள். என் - எதற்கு. உதவு - உதவிபுரிவாயாக.

8. வீழிமிழலை - மிழலை என்பது ஊரின் பெயர். வீழி என்பது தலத்திற்குரிய செடியின் பெயர். முன்நிற்பவர் - எதிர்த்து நிற்பவர். இற - நசுங்கும்படி. பெருவாள் - இது சந்திரகாசம் என்ற வாள். பேர் - இராவணன்.

திருநெய்த்தானம் பண்-நட்டபாடை 1-ஆம் திருமுறை

அறையார்கடல் இலங்கைக்கிறை அணிசேர்கயி லாயம்
இறையாரமுன் எடுத்தான்இரு பதுதோளிற வூன்றி
நிறையார்புனல் நெய்த்தானனன் நிகழ்சேவடி பரவக்
கறையார்கதிர் வாளீந்தவர் கழலேத்துதல் கதியே. 8

திருவீழிமிழலை: திருவிராகம் பண்-நட்டபாடை 1-ஆம் திருமுறை

அரனுறை தருகயி லையைநிலை குலைவது செய்ததச முகனது
கரமிரு பதுநெரி தரவிரல் நிறுவிய கழலடி யுடையவன்
வரன்முறை யுலகவை தருமலர் வளர்மறை யவன்வழி வழுவிய
சிரமது கொடுபலி திரிதரு சிவனுறை பதிதிரு மிழலையே. 8

திருச்சிவபுரம்: திருவிராகம் பண்-நட்டபாடை 1-ஆம் திருமுறை

அசைவுறு தவமுயல் வினில்அயன் அருளினில் வருவலி கொடுசிவன்
இசைகயி லையையெழு தருவகை இருபது கரமவை நிறுவிய
நிசிசரன் முடியுடை தரவொரு விரல்பணி கொளுமவ னுறைபதி
திசைமலி சிவபுர நினைபவர் செழுநில னினில்நிகழ் வுடையரே. 8

---

8. நெய்த்தானம் - இது திருவையாற்றிற்கு மேற்கே ஒரு மைலில் உள்ளது; தற்போது தில்லை ஸ்தானம் என வழங்குகிறது. அறை - ஓசை. இறை-மணிக்கட்டு. நெய்த்தானனன்-இதில் அன்சாரியை. நெய்த்தானன் நல் என்றும் பிரிக்கலாம், கறையார் கதிர்வாள் - சந்திரகாசம் என்ற வாள். கதி - அடையத்தக்க கதியாம்.

8. தசமுகன் - இராவணன். வரன் முறை - அந்தந்த ஆன்மாக் களுக்கு வகுக்கப்பெற்ற நியதி முறைமை. மலர் வளர் மறையவன் - பிரமதேவன், வழி வழுவிய - நன்முறையினின்று தவறிய; இறுமாப் படைந்த.

8. அசைவு உறு தவம் - மிக வருந்திச் செய்த தவம். முயல்வினில் - முயன்றதால். நிசிசரன் - அரக்கன்; இராவணன். திசைமலி - எத் திசைப் பொருளும் நிறைந்துள்ள.

திருமறைக்காடு: திருவிராகம் பண்-நட்டபாடை 1-ஆம் திருமுறை

இழைவளர் தருமுலை மலைமகள்
இனிதுறை தருமெழில் உருவினன்
முழையினின் மிகுதுயி லுறுமரி
முசிவொடும் எழமுள ரியொடெழு
கழைநுகர் தருகரி இரிதரு
கயிலையின் மலிபவன் இருளுறும்
மழைதவழ் தருபொழில் நிலவிய
மறைவனம் அமர்தரு பரமனே. 3

திருவலிவலம் பண்-பழந்தக்கராகம் 1-ஆம் திருமுறை

பொதியிலானே பூவணத்தாய் பொன்றிகழுங் கயிலைப்
பதியிலானே பத்தர்சித்தம் பற்றுவிடா தவனே
விதியிலாதார் வெஞ்சமணர் சாக்கியரென் றிவர்கள்
மதியிலாதார் என்செய்வாரோ வலிவலமே யவனே. 10

திருக்கயிலாயம் பண்-தக்கேசி 1-ஆம் திருமுறை

பொடிகொளுருவர் புலியினதளர் புரிநூல் திகழ்மார்பில்
கடிகொள்கொன்றை கலந்தநீற்றர் கறைசேர் கண்டத்தர்
இடியகுரலால் இரியுமடங்கல் தொடங்கு முனைச்சாரல்
கடியவிடைமேற் கொடியொன் றுடையார் கயிலைமலையாரே. 1

---

3. திருமறைக்காடு - வேதாரண்யம். இழை - ஆபரணம். எழில் உருவினன் - மணவாளப் பெருமான். முழை - குகை. அரி - சிங்கம். முசிவு - மெலிவு ; களைப்புமாம். முளரி - தாமரை. கழை - கரும்பு.

10. வலிவலம் - இது வலியன் (கரிக்குருவி) பூசித்ததால் பெற்ற பெயர். சுவாமி சந்நிதி, கட்டுமலைமேலுள்ள மாடக் கோயில் ஆகும். பொதியிலான் - பொதியமலையைத் தனக்கு இடமாக உடையவன். சித்தம் - மனம். சாக்கியர் - புத்தர்.

1. கயிலாயம் - இஃது இமயமலையின் வடசாரலில் மேற்குத் திபத்தில் தென் திசையை நோக்கியதாக அமைந்துள்ள மலை. கொடி - உமை. பொடி - விபூதி. அதள் - தோல். கடி - வாசனை. கறை - விஷம். இரியும் - அஞ்சிக் கலங்கும். கடிய விடை - வேகமாகச் செல்லும் இடபம்.

புரிகொள்சடையர் அடியர்க்கெளியார் கிளிசேர் மொழிமங்கை
தெரியவுருவில் வைத்துகந்த தேவர் பெருமானார்
பரியகளிற்றை அரவுவிழுங்கி மழுங்க இருள்கூர்ந்த
கரியமிடற்றர் செய்ய மேனிக் **கயிலைமலையாரே.** 2

மாவினுரிவை மங்கைவெருவ மூடி முடிதன்மேல்
மேவுமதியு நதியும்வைத்த இறைவர் கழலுன்னும்
தேவர்தேவர் திரிசூலத்தர் திரங்கன் முகவன்சேர்
காவும்பொழிலுங் கடுங்கற் சுனைசூழ் **கயிலைமலையாரே.** 3

முந்நீர்சூழ்ந்த நஞ்சமுண்ட முதல்வர் மதனன்றன்
தென்னீருருவம் அழியத்திருக்கண் சிவந்த நுதலினார்
மன்னீர்மடுவும் படுகல்லறையின் உழுவை சினங்கொண்டு
கன்னீர்வரைமேல் இரைமுன் தேடுங் **கயிலைமலையாரே.** 4

ஒன்றும்பலவும் ஆயவேடத் தொருவர்கழல் சேர்வார்
நன்றுநினைந்து நாடற்குரியார் கூடித் திரண்டெங்கும்
தென்றியிருளில் திகைத்தகரிதண் சாரல் நெறியோடிக்
கன்றும்பிடியும் அடிவா ரஞ்சேர் **கயிலைமலையாரே.** 5

தாதார்கொன்றை தயங்குமுடியர் முயங்கு மடவாளைப்
போதார்பாக மாகவைத்த புனிதர் பனிமல்கும்
மூதாருலகின் முனிவருடனாய் அறநான் கருள்செய்த
காதார்குழையர் வேதத் திரளர் **கயிலைமலையாரே.** 6

---

2. புரிகொள் - கட்டமைந்த. மங்கை - உமை. பரிய களிறு - பெரிய யானை. மழுங்க - மறைய.

3. மாவின் உரிவை – யானைத் தோலை. வெருவ - அஞ்ச. கழல் – திருவடி. உன்னும் - நினைக்கின்ற. திரங்கல் முகவன் - குரங்குகள். கா - காடு.

4. முந்நீர் - (பாற்) கடல். மதனன் - மன்மதன். தென் நீர் - அழகிய நீர்மையுடன் (கூடிய). சிவந்த - கோபத்தால் சிவந்த. மன் – நிலைபெற்ற. மடு - சுனை. கல்லறை - குகை. உழுவை - புலி, இரை - உணவு.

5. ஒருவர் ஒப்பற்ற இறைவர். சேர்வார்-இடைவிடாது நினைப்பவர். நன்று - நன்மை : பேரின்பம். தென்றி - சிதறிய. சாரல் - மலைச்சாரல். களிறு - ஆண் யானை.

6. தாது - மகரந்தம். போதார் பாகம் - மெல்லிய இடப்பாகம். உலகின் மூதார் முனிவர் - உலகில் மிக வயதான சனகாதி முனிவர். அறம் நான்கு - அறம் பொருள் இன்பம் வீடு என்ற நான்கு.

கொடுத்தார்புரமூன் றெரியச்சிலைமேல் எரியொண் பகழியார்
எடுத்தான்திரள்தோள் முடிகள்பத்தும் இடியவிரல் வைத்தார்
கொடுத்தார்படைகள் கொண்டாராளாக் குறுகிவருங் கூற்றைக்
கடுத்தாங்கவனைக் கழலாலுதைத்தார் கயிலைமலையாரே. 7, 8

ஊணாப்பலிகொண் டுலகிலேற்றார் இலகு மணிநாகம்
பூணாணார மாகப்பூண்டார் புகழும் இருவர்தாம்
பேணாவோடி நேடஎங்கும் பிறங்கு மெரியாகிக்
காணாவண்ணம் உயர்ந்தார் போலுங் கயிலைமலையாரே. 9

விருதுபகரும் வெஞ்சொற் சமணர் வஞ்சச் சாக்கியர்
பொருதுபகரு மொழியைக்கொள்ளார் புகழ்வார்க் கணியராய்
எருதொன் றுகைத்திங்கிடுவார் தம்பால் இரந்துண் டிகழ்வார்கள்
கருதும் வண்ணம் உடையார் போலுங் கயிலைமலையாரே. 10

போரார்கடலிற் புனல்சூழ்காழிப் புகழார் சம்பந்தன்
காரார்மேகங் குடிகொள்சாரற் கயிலைமலையார்மேல்
தேராவுரைத்த செஞ்சொன்மாலை செப்பும் அடியார்மேல்
வாராபிணிகள் வானோருலகில் மருவு மனத்தாரே. 11

திருநறையூர்ச்சித்தீச்சரம் பண்-தக்கேசி 1-ஆம் திருமுறை

கரையார்கடல்சூழ் இலங்கைமன்னன் கயிலைமலைதன்னை
வரையார்தோளால் எடுக்கமுடிகள் நெரித்துமனமொன்றி
உரையார்கீதம் பாடநல்ல உலப்பிலருள்செய்தார்
திரையார்புனல்சூழ் செல்வநறையூர்ச் சித்தீச் சரத்தாரே. 8

---

7. இடிய - நசுங்க. படைகள் - வாள், வாழ்நாள் முதலியன. ஆளாக்கொண்டார் - ஆட்கொண்டார். கடுத்து - கோபித்து.

9. ஊணா-உணவாக. பூண் நாண் ஆரமாக-பூணத் தகும் மாலையாக. இருவர் - பிரம விஷ்ணுக்கள். பேணா - விரும்பி. நேட - தேட. பிறங்கும் - விளங்கும்.

10. விருது - வெற்றிச் சின்னங்கள். வெஞ்சொல் - பயனற்ற சொல். பொருது – சண்டை செய்வதுபோல். எருது – இடபம். உகைத்தல் - ஏறிச் செலுத்தல்.

11. போரார் - மோதுகின்ற- காரார் - கருமை பொருந்திய. தேரா - தெளிந்து. செப்பும் - சொல்லும்.

8. திருநறையூர்ச்சித்தீச்சரம் - நறையூர் - தலத்தின் பெயர். சித்தீச்சரம் - ஆலயத்தின் பெயர். இது சித்தர்கள் பூசிக்கப்பெற்றது. கரையார்-கரை பொருந்திய. வரையார் - மலைபோன்ற. உலப்பில் - வற்றாத

திருப்புறவம் பண்-தக்கேசி 1-ஆம் திருமுறை

விண்டானதிர வியனார்கயிலை வேரோடெடுத்தான்றன்
திண்டோளுடலு முடியுநெரியச் சிறிதேயூன்றிய
புண்டானொழிய அருள்செய்பெருமான் புறவம்பதியாக
எண்டோளுடையான் இமையோரேத்த உமையோ டிருந்தானே. 8

திருவெங்குரு பண்-குறிஞ்சி 1-ஆம் திருமுறை

பாங்கிலா அரக்கன் கயிலையன் றெடுப்பப்
பலதலை முடியொடு தோளவை நெரிய
ஓங்கிய விரலால் ஊன்றியன் றவற்கே
ஒளிதிகழ் வாளது கொடுத்தழ காய
கோங்கொடு செருந்தி கூவிள மத்தங்
கொன்றையுங் குலாவிய செஞ்சடைச் செல்வர்
வேங்கைபொன் மலரார் விரைதரு கோயில்
வெங்குரு மேவியுள் வீற்றிருந் தாரே. 8

திருக்கழுமலம் பண்-குறிஞ்சி 1-ஆம் திருமுறை

அயிலுறுபடையினர் விடையினர்முடிமேல்
அரவமும்மதியமும் விரவியஅழகர்
மயிலுறுசாயல வனமுலையொருபால்
மகிழ்பவர்வானிடை முகில்புல்குமிடறர்
பயில்வுறுசரிதையர் எருதுகந்தேறிப்
பாடியுமாடியும் பலிகொள்வர்வலிசேர்
கயிலையும்பொதியிலும் இடமெனவுடையார்
கழுமலநினையநம் வினைகரிசறுமே. 1

---

8. புறவம் - சீகாழியின் பன்னிரு நாமங்களுள் ஒன்று; அக்னிதேவன் புறு வடிவு கொண்டு பூசித்ததால் பெற்ற பெயர் ஆகும். வியன் ஆர் - இடம் அகன்ற. சிறிதே-மிகச் சிறியதாக. புண்-உடற்புண் உள்ளப் புண்.

8. வெங்குரு - சீகாழியின் பன்னிரு நாமங்களுள் ஒன்று; சுக்கிரன் பூசித்துத் தேவகுருவுக்கு இணையாகப்பெற்றமையால் இப்பெயர்பெற்றது.

1. திருக்கழுமலம் - சீகாழி; உரோமச முனிவர் தம் மலம் போக்கப் பூசித்தமையால் பெற்ற பெயர். அயில் - கூர்மை. உறு - போன்ற. சாயல-சாயலையுடைய. வன முலை - உமாதேவி. முகில்புல்கும் - மேகத்தை ஒத்த. வினை கரிசு - வினையின் தீமை.

திருநல்லம் பண்-குறிஞ்சி 1-ஆம் திருமுறை

பெண்ணார் திருமேனிப் பெருமான் பிறைமல்கு
கண்ணார் நுதலினன் கயிலை கருத்தினால்
எண்ணா தெடுத்தானை இறையே விரலூன்றி
நண்ணார் புரமெய்தான் நல்லம் நகரானே. 8

திருக்கழுமலம் 1-ஆம் திருமுறை

திருத்தாளச்சதி பண்-வியாழக்குறிஞ்சி

பந்தத்தால் வந்தெப்பால் பயின்றுநின்ற உம்பரப்
பாலேசேர்வா யேனோர்கான் பயில்கண முனிவர்களுஞ்
சிந்தித்தே வந்திப்பச் சிலம்பின்மங்கை தன்னொடுஞ்
சேர்வார்நாள்நாள் நீள்கயிலைத் திகழ்திரு பரிசதெலாம்
சந்தித்தே இந்தப்பார் சனங்கள்நின்று தங்கணால்
தாமேகாணா வாழ்வாரத் தகவுசெய்த வனதிடங்
கந்தத்தால் எண்டிக்குங் கமழ்ந்திலங்கு சந்தனக்
காடார்பூவார் சீர்மேவுங் கழுமல வளநகரே. 1

திருவையாறு பண்-மேகராகக்குறிஞ்சி 1-ஆம் திருமுறை

கங்காளர் கயிலாய மலையாளர்
கானப்பே ராளர்மங்கை
பங்காளர் திரிசூலப் படையாளர்
விடையாளர் பயிலுங்கோயில்

---

8. நல்லம் - இது கோனேரி ராஜபுரம் என வழங்குகிறது. பெண்ணார் திருமேனிப் பெருமான் - அர்த்தநாரீசுவரர். எண்ணாது - பின்வரும் தீமையைக் கருதாது. இறையே - சிறிது. நண்ணார் - பகைவர்; திரிபுரர்.

1. பந்தத்தால் - ஆணவ மலக் கட்டினால். எப்பால் - எவ்விடத்தும். உம்பர் - பிரமன், இந்திரன் முதலியோர். அப்பாலே சேர்வாய் ஏனோர் - புறம்பான நெறிகளில் சேர்ந்த பிறர். கான் - காடு. சிலம்பு - இமயமலை. பரிசது - தன்மை. பார் - பூமி. தாமே காணா - தாங்களே கண்டு. கந்தம் - வாசனை.

3. கங்காளர் - எலும்பைத் தாங்கியவர். கானப்பேர் - ஒரு சிவத்தலம். கொங்கு ஆர்-தேன் நிறைந்த. கூர் - கூர்மையான. கூதல் - குளிர்.

கொங்காளப் பொழில்நுழைந்து கூர்வாயால்
இறகுலர்த்திக் கூதல்நீங்கிச்
செங்கால்நல் வெண்குருகு பைங்கானல்
இரைதேருந் திருவையாறே. 3

திருமுதுகுன்றம் பண்-மேகராகக்குறிஞ்சி 1-ஆம் திருமுறை

கதிரொளிய நெடுமுடிபத் துடையகடல்
இலங்கையர்கோன் கண்ணும்வாயும்
பிதிரொளிய கனல்பிறங்கப் பெருங்கயிலை
மலையைநிலை பெயர்த்தஞான்று
மதிலளகைக் கிறைமுரல மலரடியொன்று
ஊன்றிமறை பாடஆங்கே
முதிரொளிய சுடர்நெடுவாள் முன்னீந்தான்
வாய்ந்தபதி முதுகுன்றமே. 8

திருவீழிமிழலை பண்-மேகராகக்குறிஞ்சி 1-ஆம் திருமுறை

கருப்பமிகும் உடலடர்த்துக் காலூன்றிக்
கைமறித்துக் கயிலை யென்னும்
பொருப்பெடுக்க லுறும்அரக்கன் பொன்முடிதோள்
நெரித்தவிரற் புனிதர் கோயில்
தருப்பமிகு சலந்தரன்றன் உடல்தடிந்த
சக்கரத்தை வேண்டி யீண்டு
விருப்பொடுமால் வழிபாடு செய்யஇழி
விமானஞ்சேர் மிழலை யாமே. 8

வெண்குருகு - நாரை. இது மருத நிலத்துப் பறவை. கானல் - கடற்கரைச் சோலை.

8. முதுகுன்றம்-இஃது இறைவனால் முதலில் படைக்கப்பெற்றதால் பெற்ற பெயர், தற்போது விருத்தாசலம் என வழங்குகிறது. பிதிர் ஒளிய - நசுங்கி விளங்க. ஞான்று - காலத்தில். மதில் அளகைக்கு இறை - குபேரன். முரல - (மகிழ்ச்சி கொண்டு) ஆரவாரிக்க. மறை-சாமவேதம்.

8. கருப்பமிகும் உடல் - கருப்பையில் இருந்து வளர்ந்து வந்த உடல். தருப்பம் - செருக்கு. சலந்தரன் - ஓர் அசுரன். சக்கரம் - சுதரிசனம் என்ற சக்கராயுதம். வேண்டி - விரும்பி. மால் - திருமால். இழி விமானம் - விண்ணிழி விமானம்: இத் தலத்து ஸ்தூபி விமானம்.

திருக்காருயில் பண்-இந்தளம் 2-ஆம் திருமுறை

கலையானே கலைமலி செம்பொற் கயிலாய
மலையானே மலைபவர் மும்மதில் மாய்வித்த
சிலையானே சீர்திக ழுந்திருக் காருயில்
நிலையானே யென்பவர் மேல்வினை நில்லாவே. 5

கடுத்தானே காலனைக் காலாற் கயிலாயம்
எடுத்தானை ஏதமா கம்முனி வர்க்கிடர்
கெடுத்தானே கேழ்கிள ருந்திருக் காருயில்
அடுத்தானே என்பவர் மேல்வினை அடராவே. 8

திருநெல்லிக்கா பண்-இந்தளம் 2-ஆம் திருமுறை

பிறைதான் சடைசேர்த் தியஎந் தைபெம்மான்
இறைதான் இறவாக் கயிலை மலையான்
மறைதான் புனலொண் மதிமல் குசென்னி
நிறைதான் நெல்லிக்கா வுள்நிலா யவனே. 7

திருக்குடவாயில் பண்-இந்தளம் 2-ஆம் திருமுறை

என்றன் னுளமே வியிருந் தபிரான்
கன்றன் மணிபோல் மிடறன் கயிலைக்
குன்றன் குழகன் குடவா யில்தனில்
நின்ற பெருங்கோ யில்நிலா யவனே. 5

---

5. திருக்காருயில் - இது திருவாரூர்க்குத் தெற்கே காவிரியின் தென் கரையில் உள்ளது, இது சப்த விடங்கத்தலங்களுள் ஒன்று. கலையான்-சகல கலைஞானமுடையவன். மலைபவர் - போர்புரியும் திரிபுரர். சிலை - மேருவில்

8. கடுத்தான் - கோபித்து உதைத்தான். காலன் - இயமன். ஏதம் ஆகம்-துன்பம் ஆகுமாறு. கேழ்-ஒளிரும் நிறம், அடரா-தாக்கமாட்டா.

7. நெல்லிக்கா - இது நெல்லி மரத்தைத் தலமரமாக உடையதால் பெற்ற பெயர். இறவாக் கயிலை - என்றும் அழிவில்லாத திருக்கயிலைமலை. புனல் - கங்கை.

5. குடவாயில் - இஃது இறைவன் குடத்தின் வாயிலில் தோன்றித் திருணபிந்து முனிவர்க்குரிய குட்ட நோயைத் தீர்த்தமையால் பெற்ற பெயர். கன்றல் மணி - கன்றிய நீல மணி. கன்றன்-மான் கன்றுடையான் எனினுமாம், குழகன் - இளமையழகு உடையவன்.

திருநெல்வாயில் பண்-இந்தளம் 2-ஆம் திருமுறை

பற்றி னானரக் கன்க யிலையை
ஒற்றி னானொரு கால்வி ரலுற
நெற்றி யாரநெல் வாயி லார்தொழும்
பெற்றி யாரெம துச்சி யாரே. 8

திருக்கருவூரானிலை பண்-இந்தளம் 2-ஆம் திருமுறை

கடுத்த வாளரக் கன்க யிலையை
எடுத்த வன்தலை தோளுந் தாளினால்
அடர்த்த வன்கரு வூரு ளானிலை
கொடுத்த வன்அருள் கூத்தன் நல்லனே. 8

திருவையாறு: திருவிராகம் பண்-இந்தளம் 2-ஆம் திருமுறை

திருத்திகழ் மலைச்சிறுமி யோடுமிகு தேசர்
உருத்திகழ் எழிற்கயிலை வெற்பிலுறை தற்கே
விருப்புடைய அற்புதர் இருக்குமிடம் ஏரார்
மருத்திகழ் பொழிற்குலவு வண்திருவை யாறே. 1

---

8. நெல்வாயில் - இது சிதம்பரத்திற்குத் தென்கிழக்கே ஒன்றரை மைலில் உள்ளது; தற்போது சிவபுரி என வழங்குகிறது. நெற்றிஆர :- (இராவணனது) உச்சியில் பொருந்த. பெற்றியார் - தன்மையர். உச்சியார் - இத் தலத்து இறைவன் பெயர்.

8. கருவூர் - இது தலத்தின் பெயர். ஆன் நிலை - கோயிலின் பெயர்; காமதேனு பூசித்தது. கடுத்த - கோபித்த. தாள் - திருவடி. அருள் கொடுத்தவன் என்க.

1. ஐயாறு - இது தஞ்சாவூருக்கு வடக்கே ஏழு மைலில் உள்ளது. திரு - அழகு. மலைச் சிறுமி - பார்வதி தேவியார். தேசர் - ஒளி வடிவினர். உரு - (வெண்மை) வடிவம், ஏர் - அழகு. மரு - வாசனை. வண் - வளமை.

திருக்ஷேத்திரக்கோவை பண்-இந்தளம் 2-ஆம் திருமுறை

அண்ணாமலை ஈங்கோயும் அத்தி முத்தாறு
அகலா முதுகுன் றங்கொடுங் குன்றமுங்
கண்ணார் கழுக்குன்றங் கயிலை கோணம்
பயில்கற் குடிகா ளத்திவாட் போக்கியும்
பண்ணார் மொழிமங்கை யோர்பங் குடையான்
பரங்குன் றம்பருப் பதம்பேணி நின்றே
எண்ணாய் இரவும்பகலும்...............
இடும்பைக் கடல்நீந் தலாங்கா ரணமே. 2

திருவலஞ்சுழி பண்-நட்டராகம் 2-ஆம் திருமுறை

குயிலி னேர்மொழிக் கொடியிடை
வெருவுறக் குலவரைப் பரப்பாய
கயிலை யைப்பிடித் தெடுத்தவன்
கதிர்முடி தோளிரு பதுமூன்றி
மயிலின் னேரன சாயலோடு
அமர்ந்தவன் வலஞ்சுழி எம்மானைப்
பயில வல்லவர் பரகதி
காண்பவர் அல்லவர் காணாரே. 8

---

2. அத்தி - திருவானைக்கா. முத்தாறு - மணிமுத்தா நதி. கொடுங் குன்றம் - பிரான் மலை. பருப்பதம் - ஸ்ரீசைலம்; இது மல்லிகார்ச்சுனம் எனவும் வழங்கும். இத்தலம் முதல் மருது ஆகும். இடும்பைக் கடல் - துன்பக் கடல்.

8. வலஞ்சுழி - பிலத்துள் சென்ற காவிரி வெளிப்படும் வண்ணம் ஏரண்ட முனிவர் பிலத்துள் இறங்க, காவிரி வெளிவந்து வலமாகச் சுழித்துக்கொண்டு சென்றதால் இப் பெயர்பெற்றது. நேர் - ஒத்த. எடுத்தவன் - இராவணன். வல்லவர் காண்பர் என்க.

திருப்பூந்தராய் பண்-காந்தாரபஞ்சமம் 3-ஆம் திருமுறை

காசைசேர்குழலாள் கயலேர்தடங்
கண்ணிகாம்பன தோள்கதிர்மென்முலைத்
தேசுசேர்மலை மாதமருந்திரு மார்பகலத்(து)
ஈசன்மேவும் இருங்கயிலை எடுத்தானை
அன்றடர்த்தான் இணைச்சேவடி
பூசைசெய்பவர் சேர்பொழிற்பூந்தராய் போற்றுதுமே. 8

திருக்கோட்டாறு பண்-காந்தாரபஞ்சமம் 3-ஆம் திருமுறை

இரவம ருந்நிறம் பெற்றுடை யவிலங் கைக்கிறை
கரவம ரக்கயி லையெடுத் தான்வலி செற்றவன்
குரவம ரும்மலர்ச் சோலைசூழ்ந் ததிருக் கோட்டாற்றுள்
அரவம ருஞ்சடை யானடி யார்க்கருள் செய்யுமே. 8

திருக்கொள்ளிக்காடு பண்-காந்தாரபஞ்சமம் 3-ஆம் திருமுறை

எடுத்தனன் கயிலையை இயல்வ லியினால்
அடர்த்தனர் திருவிர லால்அ லறிடப்
படுத்தனர் என்றவன் பாடல் பாடலும்
கொடுத்தனர் கொற்றவாள் கொள்ளிக் காடரே. 8

---

8 பூந்தராய் - இது சீகாழியின் பன்னிரு திருநாமங்களுள் ஒன்று; இரணியனைக்கொன்றவ ராகமூர்த்தி பூசித்தமையால் இப்பெயர்பெற்றது. காசை - காயாம்பூ. கயல் ஏர் - மீனைப்போன்ற. காம்பு - மூங்கில். மலை மாது - உமை. திருமார்பகலம் - திருமார்பு. இரும் - பெரிய. இணை - இரண்டு.

8. கோட்டாறு - இது காவிரி தென் கரையில் உள்ளது; தற்போது கொட்டாரம் என வழங்குகிறது. இரவம்-இரவு: இருள். கரவு-வஞ்சகம், குரவு - ஒரு வகை மரம்.

8. கொள்ளிக்காடு - இஃது அக்கினி தேவன் வழிபட்டதால் பெற்ற பெயர், கொள்ளி - அக்கினி, இயல் - தனக்கு உள்ள. அலறிட அடர்த்தனர் என்க. படுத்தனர் என்று - (நம்மைச் சிவன்) வருத்தினன் என்று தன்னுள் நினைந்து. அவன், இராவணன்.

திருமழபாடி பண்-கொல்லி 3-ஆம் திருமுறை

கரத்தினால் **கயிலையை** எடுத்தகார் அரக்கன
சிரத்தினை ஊன்றலுஞ் சிவனடி சரண்எனா
இரத்தினாற் கைந்நரம் பெடுத்திசை பாடலும்
வரத்தினான் மருவிடம் மாமழ பாடியே. 8

திருமுதுகுன்றம் பண்-கொல்லி 3-ஆம் திருமுறை

காரினார் அமர்தருங் **கயிலைநன் மலையினை**
ஏரினார் முடி இரா வணன்எடுத் தானிற
வாரினார் முலையொடும் மன்னினார் மருவிடம்
சீரினார் திகழ்தருந் திருமுது குன்றமே. 8

திருக்கயிலாயம்: திருவிராகம் பண்-சாதாரி 3-ஆம் திருமுறை

வாளவரி கோளபுளி கீளதுரி
தாளின்மிசை நாளு மகிழ்வர்
ஆளுமவர் வேளநகர் போளயில
கோளகளி றாளி வரவில்
தோளமரர் தாளமதர் கூளியெழ
மீளிமிளிர் தூளி வளர்பொன்
காளமுகில் மூளுமிருள் கீளவிரி
தாளகயி **லாய மலையே.** 1

---

8. மழபாடி - இது மழவர் (சேரர் கிளையினர்) பாடி செய்திருந்தமையால் பெற்ற பெயர். பாடி - பாசறை. இறைவன் மழு ஏந்தி நடனம் செய்தமையால் மழுவாடி என்பது மழபாடி ஆயிற்று என்பர். அரக்கன சிரம் - அரக்கனுடைய தலைகள். இரத்து - யாசித்து; கெஞ்சிக் கேட்டு. வரத்தினான்-வரம் அருளியவன். மருவிடம்-எழுந்தருளிய இடம்.

8. காரினார் - மேகம் போன்று வரையாது பக்குவ ஆன்மாக்களுக்கு அருள்பவர். இற - நசுங்க. வார் - கச்சு. சீரினார் - பெரியோர்கள். திகழ்தரும் - விளங்கி வாழ்கின்ற.

1. வாள - ஒளி பொருந்திய. வரி - கோடு. கோள - கொல்லும் தொழிலையுடைய. கீளது - கிழித்ததாகிய. உரி - தோல். தாள் - திருவடி. வேள் - விரும்புகின்ற. போள் - போழ் (எதிர்த்த விலங்குகளைக்) கிழிக்கும். அயில - கூரிய கொம்புகளையுடைய. கோள - திரண்ட வடிவுடைய. ஆளி - அடக்கி ஆண்டவர். வர வில் - சிறந்த வில்லைத் தாங்கிய. கூளி - பேய்கள். மீளி - வலியவர். தூளி - விபூதியைப் பூசியவர். கீள - ஓட்ட. தாள : அடிவாரத்தையுடைய.

புற்றரவு பற்றியகை நெற்றியது
மற்றொருகண் ஒற்றை விடையன்
செற்றதெயில் உற்றதுமை யற்றவர்கள்
நற்றுணைவன் உற்ற நகர்தான்
சுற்றுமணி பெற்றதொளி செற்றமொடு
குற்றமில தெற்றென வினைக்
கற்றவர்கள் சொற்றொகையின் முற்றுமொளி
பெற்றகயி லாய மலையே. 2

சிங்கவரை மங்கையர்கள் தங்களன
செங்கைநிறை கொங்கு மலர்தூய்
எங்கள்வினை சங்கையவை இங்ககல
அங்கமொழி யெங்குமுள வாய்த்
திங்களிருள் நொங்கவொளி விங்கிமிளிர்
தொங்கலொடு தங்க அயலே
கங்கையொடு பொங்குசடை எங்கள்இறை
தங்குகயி லாய மலையே. 3

முடியசடை பிடியதொரு வடியமழு
வுடையர்செடி யுடைய தலையில்
வெடியவினை கொடியர்கெட இடுசில்பலி
நொடியமகிழ் அடிக ளிடமாம்

---

2. நெற்றியது - நெற்றியிலுள்ளது. மற்றொரு கண் - அக்கினிக் கண். உற்றது - உடம்பில் பொருந்தியது. அற்றவர்கள் - பற்று நீங்கியவர்கள். உற்ற - தங்கிய. எற்று என - எதனால் என்று. வினை - வினவி. சொல் தொகையின் - சொல்லும் புகழோடு.

3. சிங்கம் - சிங்கங்களையுடைய. வரை - மலையில் வாழும். மங்கையர்கள் - வித்தியாதர மகளிர் முதலியோர். தங்களன - தங்களுடைய. கொங்கு - வாசனை. தூய் - தூவி. சங்கையவை - துன்பங்களும். அங்கம்- அங்கமாக, மொழி - துதிக்கும் தோத்திரங்கள். நொங்க - கெட. விங்கி- மிகுந்து. தொங்கல் - மாலை. இறை - இறைவன்.

4. பிடியது - கையில் பிடிப்பதாகிய. வடிய - கூரிய. செடியுடைய - புதர் போன்ற. வெடிய - வெறுக்கத்தக்க, சில் - சில. நொடிய -

கொடியகுர லுடையவிடை கடியதுடி
யடியினொடும் இடியி னதிரக்
கடியகுரல் நெடியமுகில் மடியவதர்
அடிகொள்கயி லாய மலையே. 4

குடங்கையின் நுடங்கெரி தொடர்ந்தெழ
விடங்கிளர் படங்கொ ளரவம்
மடங்கொளி படர்ந்திட நடந்தரு
விடங்கன திடந்தண் முகில்போய்த்
தடங்கடல் தொடர்ந்துடன் நுடங்குவ
விடங்கொளமி டைந்த குரலால்
கடுங்கலின் முடங்களை நுடங்கர
வொடுங்குகயி லாய மலையே. 5

ஏதமில பூதமொடு கோதைதுணை
ஆதிமுதல் வேத விகிர்தன்
கீதமொடு நீதிபல வோதிமற
வாதுபயில் நாதன் நகர்தான்
தாதுபொதி போதுவிட வூதுசிறை
மீதுதுளி கூதல் நலியக்
காதல்மிகு சோதிகிளர் மாதுபயில்
கோதுகயி லாய மலையே. 6

சில வார்த்தைகளைப் பேசவும். துடியடியினொடு - யானைகளுடன். மடிய - ஒலி கெட. அடி-அடிவாரத்தில். அதர்கொள்-சிறு வழியினைக்கொண்ட.

5. குடங்கை - உள்ளங்கை. நுடங்கு - ஒசிந்து. மடங்கு - ஏனைய ஒலிகள் அடங்கும். நடம் தரு - ஆடும். விடங்கன் - பேரழகுடையவன்; சிவபெருமான். நுடங்குவ - தவழ்வன. மிடைந்த - நெருங்கிய. முடங்கு - வளைவான. அளை - வளையிலே. நுடங்கு அரவு - மெலிந்த பாம்பு.

6. ஏதம் இல - குற்றம் இல்லாத- கோதை - உமாதேவிக்கு. வேத விகிர்தன் - வேதத்திலே புகழ்ந்து பேசும் மேலானவன். தாது - மகரந்தப் பொடிகளை. போது - அரும்புகள்- விட - மலர. துளி - தேன் துளி. கூதல் - குளிர். நலிய - வருத்தவும். காதல் - அன்பு. மாது பயில் - அழகு விளங்கும். கோது - (குயில்கள் தளிர்களைக்) கோதுகின்ற.

சென்றுபல வென்றுலவு புன்றலையர்
துன்றலொடும் ஒன்றி யுடனே
நின்றமர ரென்றும்இறை வன்றனடி
சென்றுபணி கின்ற நகர்தான்
துன்றுமலர் பொன்றிகழ்செய் கொன்றைவிரை
தென்றலொடு சென்று கமழக்
கன்றுபிடி துன்றுகளி றென்றிவைமுன்
நின்றகயி லாய மலையே. 7

மருப்பிடை நெருப்பெழ தருக்கொடு
செருச்செய்த பருத்த களிறின்
பொருப்பிடை விருப்புற விருக்கையை
ஒருக்குடன் அரக்கன் உணரா(து)
ஒருத்தியை வெருக்குற வெருட்டலும்
நெருக்கென நிருத்த விரலால்
கருத்தில வொருத்தனை எருத்திற
நெரித்தகயி லாய மலையே. 8

பரியதிரை பெரியபுனல் வரியபுலி
உரிய துடை பரிசை யுடையான்
வரியவளை அரியகணி யுருவினெடு
புரிவினவர் பிரிவில் நகர்தான்

---

7. சென்று - (மனிதர், முனிவர் முதலியோர்) போய். புன் தலையர் - பூத கணங்களின்- துன்றலோடும் - கூட்டத்தொடும். துன்று மலர் - கொத்தாக மலர்ந்த மலர்கள். விரை - வாசனை. கன்று - யானைக் கன்று. பிடி - பெண் யானைகள்.

8. மருப்பிடை - கொம்பிலே. தருக்கொடு - செருக்குடன். பொருப்பிடை - மலையில். ஒருக்கு - ஒருங்கு. ஒருத்தியை - உமாதேவியை. வெருக்குற - அச்சம் உண்டாகும்படி. நிருத்த விரலால் - நடம் புரியும் விரல் ஒன்றினால். கருத்து இல - அறிவு இல்லாத. ஒருத்தனை - இராவணனை. எருத்து - கழுத்து.

9. பரிய - பருத்த. வரிய - வரிகளையுடைய, பரிசையுடையான் - தன்மையுடையான். வளை - வளையல்கள் அணிந்த. அரிய - செவ்வரியினை

பெரியஎரி யுருவமது தெரியவுரு
பரிவுதரும் அருமையதனுல்
கரியவனும் அரியமறை புரியவனும்
மருவுகயி லாயமலையே. 9

அண்டர்தொழு சண்டிபணி கண்டடிமை
கொண்டவிறை துண்டமதியோடு
இண்டைபுனை வுண்டசடைமுண்டதர
சண்டஇருள் கண்டரிடமாம்
குண்டமண வண்டரவர் மண்டைகையில்
உண்டுளறி மிண்டுசமயம்
கண்டவர்கள் கொண்டவர்கள் பண்டுமறி
யாதகயி லாயமலையே. 10

அந்தண்வரை வந்தபுனல் தந்ததிரை
சந்தனமொ டுந்தியகிலும்
கந்தமலர் கொந்தினெடு மந்திபல
சிந்துகயி லாயமலைமேல்
எந்தையடி வந்தணுகு சந்தமொடு
செந்தமி ழிசைந்தபுகலிப்
பந்தனுரை சிந்தைசெய வந்தவினை
நைந்துபர லோகமெளிதே. 11

யுடைய. கணி - கண்ணி. பரிவு - துன்பம். கரியவன் - திருமால். மறைபுரியவன் - வேதத்தை விரும்புகின்ற பிரமன். மருவு - பொருந்திய.

10. அண்டர் - தேவர்கள். சண்டி - சண்டேசுவர நாயனர். பணி - சிவ வழிபாடு. இறை - சிவபெருமான். இண்டை - இண்டை மாலை. முண்டம் - நகுவெண்டலை. தர - தரித்தவரும். சண்டஇருள் - நிறைந்த இருள். குண்டு - மூர்க்கத்தனம். அமண வண்டர் - சமணராகிய கீழ் மக்கள். பண்டும் - அக் காலத்திலும்.

11. அம்தண் - அழகிய குளிர்ந்த. உந்தி - தள்ளி. கொந்தினெடு - கொத்தோடு. மந்தி - குரங்குகள். சிந்து - சிதறும். சந்தமொடு - திருவிராகமாகிய சந்த இசையோடு. புகலி - சீகாழி. பந்தன் - திருஞான சம்பந்தன். உரை - பாடல்களை. நைந்து - கெட்டு. எளிது - எளிமை யாகக் கிடைக்கும்.

திருமாணிகுழி : திருவிராகம் பண்-சாதாரி 3-ஆம் திருமுறை

எண்ணமது வின்றிஎழி லார்கயிலை
மாமலையெ டுத்ததிறலார்
திண்ணியஅ ரக்கனைநெ ரித்தருள்பு
ரிந்தசிவ லோகனிடமாம்
பண்ணமரு மென்மொழியி னார்பணைமு
லைப்பவள வாயழகதார்
ஒண்ணுதல்ம டந்தையர்கு டைந்துபுன
லாடுதவி மாணிகுழியே. 8

திருச்சேறை : திருவிராகம் பண்-சாதாரி 3-ஆம் திருமுறை

கட்டுர மதுகொடு கயிலைநன் மலைமலி கரமுடை
நிட்டுரன் உடலொடு நெடுமுடி ஒருபது நெரிசெய்தார்
மட்டுர மலரடி அடியவர் தொழுதெழ அருள்செயும்
சிட்டர்தம் வளநகர் செறிபொழில் தழுவிய சேறையே. 8

திருக்கயிலாயமும் திருவானைக்காவும் திருமயேந்திரமும்
திருவாரூரும் பண்-பழம்பஞ்சுரம் 3-ஆம் திருமுறை

கூடற் சதுக்கம்

மண்ணது வுண்டரி மலரோன்காணு
வெண்ணாவல் விரும்புமயேந்திரரும்
கண்ணது வோங்கிய கயிலையாரும்
அண்ணலா ரூராதி ஆனைக்காவே. 1

---

8. மாணி குழி - இது பிரமசாரி (வாமன) வடிவுகொண்டு மாவலிச் சக்கரவர்த்தியிடம் சென்று மண் யாசித்த திருமால் பூசித்த தலம். மாணி - பிரமசாரி. குழி - இடம். எண்ணம் அது இன்றி - முன் யோசனை சிறிதும் இன்றி. நெரித்து - நசுக்கி. பண் - இசை. பணை - பருத்த. உதவி மாணிக்குழி - இது தலத்தின் பெயர்.

8. திருச்சேறை - இது தற்போது உடையார் கோயில் என வழங்குகின்றது. உரம் - உடல் வலிமை. நிட்டுரன் - இங்கு இராவணன். மட்டு - வாசனை. உரம் - வளம் மிக்க. சிட்டர் - மேலானவர்; சிவபெருமான்.

1. கூடற் சதுக்கம் - இஃது ஒவ்வொரு பாடலிலும் நான்கு தலங்கள் குறிக்கப்பட்டதால் இப்பெயர் பெற்றது. உண்ட+அரி—உண்டரி. அரி - திருமால். வெண்ணாவல் - வெண்ணாவல் மரம். மயேந்திரம் - மகேந்திர மலை, கண் - இடம். அண்ணலார் - தலைமையுடையார்.

வந்துமா லயனவர் காண்பரியார்
வெந்தவெண் ணீறணி மயேந்திரரும்
கந்தவார் சடையுடைக் **கயிலையாரும்**
அந்தணு ரூராதி ஆனைக்காவே. 2

மாலயன் தேடிய மயேந்திரரும்
காலனை உயிர்கொண்ட **கயிலையாரும்**
வேலைய தோங்கும்வெண் ணுவலாரும்
ஆலையா ரூராதி ஆனைக்காவே. 3

கருடனை யேறரி அயனோர்காணர்
வெருள்விடை யேறிய மயேந்திரரும்
கருடரு கண்டத்தெங் **கயிலையாரும்**
அருளனு ரூராதி ஆனைக்காவே. 4

மதுசூதனன் நான்முகன் வணங்கரியார்
மதியது சொல்லிய மயேந்திரரும்
கதிர்முலை புல்கிய **கயிலையாரும்**
அதியனு ரூராதி ஆனைக்காவே. 5

சக்கரம் வேண்டுமால் பிரமன்காணு
மிக்கவர் கயிலை மயேந்திரரும்
தக்கனைத் தலையரி தழலுருவர்
அக்கணி யவராரூர் ஆனைக்காவே. 6

---

2. அயன் - பிரமன். கந்தம் - வாசனை பொருந்திய. வார் - நீண்ட. அம்தண் ஆரூர் - அழகிய குளிர்ந்த திருவாரூர்.

3. காலனை - இயமனை. வேலையது ஓங்கும் - என்றும் கடல்போல நீர் பொங்கப்பெற்ற. ஆலை ஆரூர் - கருப்பங் கழனிகளையுடைய திருவாரூர்.

4. காணர் - காணதவராகிய. வெருள் - பகைவர் அஞ்சத்தக்க. விடை - இடபம். கருள்தரு - கருமை பொருந்திய. அருளன் - அருளையே திருமேனியாக உடையவர்.

5. மது சூதனன் - மது என்ற அசுரனை அழித்த திருமால். வணங்க + அரியார். மதியது சொல்லிய - ஆகமங்களை உபதேசித்தருளிய. கதிர் முலை - உமாதேவியார். அதியன் - யாவர்க்கும் மேலான சிவன்.

6. வேண்டும் - விரும்பிப் பெற்ற. காணு - காணப்படாத. மிக்கவர் - மேலானவராகிய. தக்கன் - தக்ஷன். அக்கு அணியவர் - உருத்திராக்கங்களை ஆபரணமாகக் கொண்டவர்.

கண்ணனும் நான்முகன் காண்பரியார்
வெண்ணுவல் விரும்பு மயேந்திரரும்
கண்ணப்பர்க் கருள்செய்த கயிலையெங்கள்
அண்ணலா ரூராதி ஆனைக்காவே. 7

கடல்வண்ணன் நான்முகன் காண்பரியார்
தடவரை அரக்கனைத் தலைநெரித்தார்
விடமது வுண்டவெம் மயேந்திரரும்
அடல்விடையா ரூராதி ஆனைக்காவே. 8

ஆதிமால் அயனவர் காண்பரியார்
வேதங்கள் துதிசெயு மயேந்திரரும்
காதிலோர் குழையுடைக் கயிலையாரும்
ஆதியா ரூரெந்தை ஆனைக்காவே. 9

அறிவில் அமண்புத்தர் அறிவுகொள்ளேல்
வெறியமான் கரத்தாரூர் மயேந்திரரும்
மறிகட லோனயன் தேடத்தானும்
அறிவரு கயிலையோன் ஆனைக்காவே. 10

ஏனமால் அயனவர் காண்பரியார்
கானமார் கயிலைநன் மயேந்திரரும்
ஆனஆ ரூராதி ஆனைக்காவை
ஞானசம் பந்தன் தமிழ்சொல்லுமே. 11

---

7. கண்ணன் - கருநிறமுடைய திருமால். கண்ணப்பர் - சிவனடியார் அறுபத்து மூவரில் ஒருவர்; காளத்தி வேடர்.

8. கடல் வண்ணன் - திருமால். வரை - மலையின் கீழ். அரக்கன் - இராவணன். அடல் விடை - வலிமையுடைய இடபம்.

9. ஆதி - தொன்றுதொட்டு. அயன் அவர் - பிரமன் முதலியோர். ஆதி ஆரூரர் - ஆதி காலத்திலே தோன்றிய திருவாரூர். ஆதி - முதன்மையுமாம்.

10. வெறிய - மருண்டு நோக்கும். ஆரூர் - ஆரூரரும். மறி - மடக்கி வீசும் அலைகளையுடைய. கடலோன் - பாற் கடலில் துயில்கொள்ளும் திருமால். அறிவு அரு - அறிவுக்கும் எட்டுதற்கு அரிய.

11. ஏனம் மால் - வராக உருவமெடுத்த திருமால். கானம் ஆர் - காடுகள் நிறைந்த. தமிழ் சொல்லுமே - தமிழைப் பாடுவீர்களாக.

திருக்கழுமலம்: திருவியமகம் பண்-பழம்பஞ்சுரம் 3-ஆம் திருமுறை

இலங்கை அரக்கர் தமக்கிறையே இடந்துகயிலை யெடுக்கிறையே
புலன்கள் கெடவுடன் பாடினனே பொறிகள் கெடவுடன் பாடினனே
இலங்கியமேனி இராவணனே எய்துபெயரும் இராவணனே
கலந்தருள் பெற்றது மாவசியே காழி அரனடி மாவசியே. 10

திருவீழிமிழலை: திருவியமகம் பண்-பழம்பஞ்சுரம் 3-ஆம் திருமுறை

தான வக்குலம்வி ளக்கியே தாரகைச் செலவி ளக்கியே
வான டர்த்தகயி லாயமே வந்து மேவுகயி லாயமே
தானெ டுத்தவல் லரக்கனே தடமுடித் திரள ரக்கனே
மேன டைச்செலவி ருப்பனே மிழலை நற்பதிவி ருப்பனே. 8

திருவீழிமிழலை பண்-புறநீர்மை 3-ஆம் திருமுறை

கடுத்தவாள் அரக்கன் கைலையன் றெடுத்த
கரமுரஞ் சிரநெரிந் தலற
அடர்த்ததோர் விரலால் அஞ்செழுத் துரைக்க
அருளினன் தடமிகு நெடுவாள்

---

10. அரக்கர் தமக்கு இறை - இராவணன். இடந்து - பெயர்த்து. எடுக்க இறையே - எடுக்கும் சிறிதளவிலே. கெட - மயங்கிச் சோர. கெட - செருக்கு நிலை அழிந்து (பக்திநிலை அடைய). உடன்பாடினனே - (அவர் பாடலுக்கு) உடன்பட்டவராகி. இராவணனே - இராவணனுக்கு. எய்து பெயரும் - அதனால் உண்டாகிய பெயரும். இராவணன் - அழுதவன். மா வசி - சிறந்த வாளாயுதம். (வசி - வாள்) மாவசி - சிறந்த வசீகரம் உடையது.

8. தானவக் குலம் - அசுர குலத்தை. விளக்கி - (சிவனைப் பகைத்தவர் அழிவர் என்பதை) விளக்கினீர். செலவு - ஒளி வீசுவதை. வான் - தேவர்களை. அடர்த்த - மோதிய. கையில் ஆயம் - கையின் வலிமை மிகுதியினால். முடித்திரள் - தலையின் கூட்டங்கள். மேல் - விமானத்தில் (இன்றி). விருப்பன் - விரும்பி எழுந்தருளியவன்.

8. கடுத்த - சினங்கொண்ட. உரம் - மார்பு. அலற - வாய்விட்டுக் கதற. அஞ்செழுத்து உரைக்க - (இராவணன்) திருவைந்தெழுத்தை

படித்தநான் மறைகேட் டிருந்தபைங் கிளிகள்
பதங்களை ஓதப்பா டிருந்த
விடைக்குலம் பயிற்றும் விரிபொழில் வீழி
மிழலையான் எனவினை கெடுமே. 8

திருவோமாம்புலியூர் பண்-புறநீர்மை 3-ஆம் திருமுறை

தலையொரு பத்துந் தடக்கைய திரட்டி
தானுடை அரக்கனொண் கயிலை
அலைவது செய்த அவன்திறல் கெடுத்த
ஆதியார் உறைவிடம் வினவில்
மலையென ஓங்கும் மாளிகை நிலவு
மாமதில் மாற்றல ரென்றும்
உலவுபல் புகழார் ஓமமாம் புலியூர்
உடையவர் வடதளி யதுவே. 8

திருச்சிற்றம்பலம்

மனத்தினால் சொல்ல. படித்த - (அந்தணச் சிறுவர்கள்) ஓதிய.: பதங்களை - வேத பதங்களை. பாடி இருந்த - முல்லை நிலத்தில் இருந்த. விடை - எருதுகள். வினை - பாவம்.

8. புலியூர் - இது வியாக்கிரபாதர் பூசித்த தலமாதலால் இப் பெயர் பெற்றது. ஓமாம் என்பது அடைமொழி ; வேள்விச் சிறப்புடைய புலியூர் என்பதாம். ஓமாம் புலியூர் - இஃது ஊரின் பெயர். (பத்து) இரட்டி - இருபது. அலைவு அது செய்த - எடுத்து அசைக்கத் தொடங்கிய. ஆதியார் - சிவபெருமான். மலை என - மலைபோல. மாற்றலர் - பகைவர் (அடையாத). உலவு - (எங்கும்) விளங்குகின்ற. வடதளி, கோயிலின் பெயர். (தளி - கோயில்).

சிவசிவ

திருச்சிற்றம்பலம்

திருநாவுக்கரசு சுவாமிகள்

தேவாரம்

திருக்கச்சியேகம்பம் பண்-காந்தாரம் 4-ஆம் திருமுறை

அடுத்தானை உரித்தானை அருச்சுனற்குப் பாசுபதம்
கொடுத்தானைக் குலவரையே சிலையாகக் கூரம்பு
தொடுத்தானைப் புரமெரியச் சுனைமல்கு **கயிலாயம்**
எடுத்தானைத் தடுத்தானை என்மனத்தே வைத்தேனே. 10

பொது-தசபுராணம் பண்-பழம்பஞ்சுரம் 4-ஆம் திருமுறை

கடுகிய தேர்செ லாது **கயிலாய மீது**
கருதேலுன் வீர மொழிநீ
முடுகுவ தன்று தன்ம மெனநின்று பாகன்
மொழிவானை நன்று முனியா
விடுவிடு வென்று சென்று விரைவுற் றரக்கன்
வரையுற் றெடுக்க முடிதோள்
நெடுநெடு இற்றுவீழ விரலுற்ற பாதம்
நினைவுற்ற தென்றன் மனனே. 11

---

10. அடுத்த ஆனை - தன்னை எதிர்த்து வந்த யானையை. பாசுபதம் - பசுபதி சம்பந்தமுடையது: சிறந்த அம்பு. குலவரை - மேருமலை. அம்பு - திருமாலாகிய அம்பு. சுனை - மானச தடாகம் முதலிய சுனை. எடுத்தான் - எடுக்க முயன்ற இராவணன்.

11. தசபுராணம் - இப் பதிகம் ஒவ்வொரு பாட்டிலும் சிவபுராணம் பத்திலும் ஒவ்வொரு சரிதத்தை எடுத்துக் கூறுவது. கடுகிய தேர்...... தன்மம் - இத்தொடர் தேர்ப்பாகன் இராவணனை நோக்கிக் கூறியது. முனியா - கோபித்து. விடுவிடு - இஃது இராவணன் பாகனை நோக்கி அதிகாரத் தொனியுடன் கூறியது. முடிதோள் நெடுநெடு - நெடு முடி நெடுந்தோள். பாதம் - திருவடி.

பொது-பாவநாசம் பண்-பழம்பஞ்சுரம் 4-ஆம் திருமுறை

ஆனைக் காவில் அணங்கினை ஆரூர் நிலாய அம்மானைக்
கானப் பேரூர்க் கட்டியைக் கானூர் முளைத்த கரும்பினை
வானப் பேரார் வந்தேத்தும் வாய்மூர் வாழும் வலம்புரியை
மானக் கயிலை மழகளிற்றை மதியைச் சுடரை மறவேனே. 2

திருப்பழனம் திருநேரிசை 4-ஆம் திருமுறை

குடையுடை அரக்கன் சென்று குளிர்கயி லாய வெற்பின்
இடைமட வரலை அஞ்ச எடுத்தலும் இறைவன் நோக்கி
விடையுடை விகிர்தன் தானும் விரலினால் ஊன்றி மீண்டும்
படைகொடை அடிகள் போலும் பழனத்தெம் பரமனாரே. 10

திருச்சோற்றுத்துறை திருநேரிசை 4-ஆம் திருமுறை

மற்றுநீர் மனம்வை யாதே மறுமையைக் கழிக்க வேண்டில்
பெற்றதோர் உபாயந் தன்னாற் பிரானையே பிதற்று மின்கள்
கற்றுவந் தரக்க னோடிக் கயிலாய மலையெ டுக்கச்
செற்றுகந் தருளிச் செய்தார் திருச்சோற்றுத் துறைய னாரே. 10

---

2. அணங்கு - தெய்வம்; அகிலாண்ட நாயகி. அணங்கினை - அகிலாண்ட நாயகியால் பூசிக்கப்பட்டவரை. கட்டி – வெல்லக்கட்டி போன்றவன். முளைத்த கரும்பு - இது முளை நாதர் என்பதைக் குறிக்கும்: சுயம்பு. மானம் - பெருமை பொருந்திய. மழ - இளமை.

10. பழனம் - வயல் சூழ்ந்த தலம். இது திருவையாற்றினை உள்ளிட்ட சத்தத்தானம் என்னும் ஏழு ஊர்களுள் ஒன்று. குடை-பூச் சக்கரக் குடை. மடவரல் - உமை. விகிர்தன் - மேலானவன்.

10. சோற்றுத்துறை - இது திருவையாற்றினை உட்கொண்ட சத்தத் தானங்களுள் ஒன்று; கௌதம ஆச்சிரமம் எனவும் பெயர் பெறும். பஞ்சத்தில் வந்தடைந்த சிவனடியார்களைத் தன்னிடம் வைத்து அன்னமளித்ததால் இப் பெயர் பெற்றது. மற்று - வேறு ஒன்றினாலும். மறுமை - மறு பிறவி. உபாயம் - இங்கு மனம் வாக்குக் காயம் என்பது. பிதற்றுதல் - எக்காலமும் பலவாறு சொல்லுதல். செற்று - வருத்தி.

திருக்கயிலாயம் **திருநேரிசை** **4-ஆம் திருமுறை**

கனகமா வயிர முந்து மாமணிக் **கயிலை** கண்டும்
உனகனாய் அரக்க னோடி எடுத்தலும் உமையாள் அஞ்ச
அனகனாய் நின்ற ஈசன் ஊன்றலும் அலறி வீழ்ந்தான்
மனகனாய் ஊன்றி னானேல் மறித்துநோக் கில்லை யன்றே. 1

கதித்தவன் கண்சி வந்து **கயிலை**நன் மலையை யோடி
அதிர்த்தவன் எடுத்தி டலும் அரிவைதான் அஞ்ச ஈசன்
நெதித்தவன் ஊன்றி யிட்ட நிலையழிந் தலறி வீழ்ந்தான்
மதித்திறை யூன்றி னானேல் மறித்துநோக் கில்லை யன்றே. 2

கறுத்தவன் கண்சி வந்து **கயிலை**நன் மலையைக் கையால்
மறித்தலும் மங்கை அஞ்ச வானவர் இறைவன் நக்கு
நெறித்தொரு விரலால் ஊன்ற நெடுவரை போல வீழ்ந்தான்
மறித்திறை யூன்றி னானேல் மறித்துநோக் கில்லை யன்றே. 3

கடுத்தவன் கண்சி வந்து **கயிலை**நன் மலையை யோடி
எடுத்தலும் மங்கை அஞ்ச இறையவன் இறையே நக்கு
நொடிப்பள விரலால் ஊன்ற நோவதும் அலறி யிட்டான்
மடித்திறை யூன்றி னானேல் மறித்துநோக் கில்லை யன்றே. 4

கன்றித்தன் கண்சி வந்து **கயிலை**நன் மலையை யோடி
வென்றித்தன் கைத்த லத்தால் எடுத்தலும் வெருவ மங்கை
நன்றுத்தான் நக்கு நாதன் ஊன்றலும் நகழ வீழ்ந்தான்
மன்றித்தான் ஊன்றி னானேல் மறித்துநோக் கில்லை யன்றே.5

---

1. கனகம் - பொன். உனகனாய் - (பின் வருவனவற்றை) நினையாதவனாய். அனகன் - குற்றமில்லாதவன். மனகனாய் - நினைத்து. மறித்து - மீண்டு. நோக்கு-இங்குப் பிழைத்தல்; உயிருடன் இருத்தல்.

2. கதித்து - கோபித்து. அரிவை - உமை. நெதித்து - நெரித்து. மதித்து - கருதி. இறை - சிறிது.

3. கறுத்தல் - கோபித்தல், கையால் - இருபது கைகளால். மறித்தல் - நிலைகுலையச் செய்தல். நக்கு - சிரித்து. நெடுவரைபோல - பெருமலைபோல.

4. இறையே - சிறிது. நொடிப்பு அள - நொடிப் பொழுது அளவில். நோவதும் - வருத்தமுற்று! மடித்து - மீண்டு.

5. கன்றி - கோபித்து. வென்றி - வெற்றியையுடைய. வெருவ - அஞ்ச. நாதன் - சிவபெருமான். நகழ - அலறிக்கொண்டு. மன்றித்தான் - நிலையாக.

களித்தவன் கண்சி வந்து **கயிலைநன் மலையை** யோடி
நெளித்தவன் எடுத்தி டலும் நேரிழை அஞ்ச நோக்கி
வெளித்தவன் ஊன்றி யிட்ட வெற்பினால் அலறி வீழ்ந்தான்
மளித்திறை யூன்றி னானேல் மறித்துநோக் கில்லை யன்றே. 6

கருத்தனாய்க் கண்சி வந்து **கயிலைநன் மலையைக்** கையால்
எருத்தனாய் எடுத்த வாறே ஏந்திழை அஞ்ச ஈசன்
திருத்தனாய் நின்ற தேவன் திருவிரல் ஊன்ற வீழ்ந்தான்
வருத்துவான் ஊன்றி னானேல் மறித்துநோக் கில்லை யன்றே. 7

கடியவன் கண்சி வந்து **கயிலைநன் மலையை** யோடி
வடிவுடை மங்கை அஞ்ச எடுத்தலும் மருவ நோக்கிச்
செடிபடத் திருவிரலால் ஊன்றலுஞ் சிதைந்து வீழ்ந்தான்
வடிவுற வூன்றி னானேல் மறித்துநோக் கில்லை யன்றே. 8

கரியத்தான் கண்சி வந்து **கயிலைநன் மலையைப்** பற்றி
இரியத்தான் எடுத்திடலும் ஏந்திழை அஞ்ச ஈசன்
நெரியத்தான் ஊன்றா முன்னம் நிற்கிலா தலறி வீழ்ந்தான்
மரியத்தான் ஊன்றி னானேல் மறித்துநோக் கில்லை யன்றே. 9

கற்றனன் **கயிலை** தன்னைக் காண்டலும் அரக்கன் ஓடிச்
செற்றவன் எடுத்த வாறே சேயிழை அஞ்ச ஈசன்
உற்றிறை யூன்றா முன்னம் உணர்வழி வகையால் வீழ்ந்தான்
மற்றிறை யூன்றி னானேல் மறித்துநோக் கில்லை யன்றே. 10

---

6. களித்து - செருக்குக்கொண்டு. நெறித்து - அசைத்து. நேரிழை - உமாதேவியார். வெளித்தவன் - தூய்மையான இறைவன். மறித்து - மீண்டு.

7. கருத்தனாய் - (வேறு) எண்ணத்தை உடையவனாய். எருத்தனாய் - வலியுடையவனாய். வருத்துவான் - வருத்தும்பொருட்டு.

8. கடியவன் - விரைந்து வந்தவனாய். வடிவுடை - அழகுடைய, செடிபட-துன்பமுற. வடிவுற - மிகப்பொருந்த.

9. கரிதல் - கோபித்தல், இரியத்தான் - சிதைந்து வீழ. ஊன்றா முன்னம் - ஊன்றாத முன்னே. மரிய - மடிய.

10. கற்றனன் அரக்கன் - சகல கலைகளையும் கற்றவனாகிய இராவணன். செற்றல் - கோபித்தல். உணர்வு அழி வகையால் - உணர்ச்சி அழிந்து போகும் முறையில்.

திருஆப்பாடி **திருநேரிசை** **4-ஆம் திருமுறை**

திண்டிறல் அரக்க னோடிச் சீகயி லாயந் தன்னை
எண்டிறல் இலனு மாகி எடுத்தலும் ஏழை அஞ்ச
விண்டிற நெரிய வூன்றி மிகக்கடுத் தலறி வீழப்
பண்டிறல் கேட்டு கந்த பரமர்ஆப் பாடி யாரே. 10

திருக்குறுக்கை வீரட்டம் **திருநேரிசை** **4-ஆம் திருமுறை**

எடுத்தனன் எழிற்கயிலை இலங்கையர் மன்னன் தன்னை
அடுத்தொரு விரலால் ஊன்ற அலறிப்போய் அவனும் வீழ்ந்து
விடுத்தனன் கைந ரம்பால் வேதகீ தங்கள் பாடக்
கொடுத்தனர் கொற்ற வாணாள் குறுக்கைவீ ரட்ட னாரே. 10

திருவலம்புரம் **திருநேரிசை** **4-ஆம் திருமுறை**

வாளெயி றிலங்க நக்கு வளர்கயி லாயந் தன்னை
ஆள்வலி கருதிச் சென்ற அரக்கனை வரைக்கீ ழன்று
தோளொடு பத்து வாயுந் தொலைந்துடன் அழுந்த வூன்றி
ஆண்மையும் வலிமையுந் தீர்ப்பார் அவர்வலம் புரவ னாரே. 10

திருஅவளிவணல்லூர் **திருநேரிசை** **4-ஆம் திருமுறை**

நிலைவலம் வல்ல னல்லன் நேர்மையை நினைய மாட்டான்
சிலைவலங் கொண்ட செல்வன் சீரிய கயிலை தன்னைத்
தலைவலங் கருதிப் புக்குத் தாக்கினான் தன்னை யன்று
அலைகுலை யாக்கு வித்தார் அவளிவ ணல்லூ ராரே. 4

---

10. ஆப்பாடி - சண்டேசுவர நாயனார் பசுக்களை மேய்த்த இடம். (ஆ - பசு. பாடி - இடம்) திண்டிறல் - மிகுந்த வலிமை. ஏழை - உமை. விண்டு இற-நசுங்கி வருந்த. பண் திறல்-சாம வேதப் பண்ணின் ஒலியை.

10. எடுத்தனன் - எடுத்தவனாகிய, அவனும் - அவ்விராவணனும். வாள்+நாள்=வாணாள். நாள் - ஆயுள் நாள்.

10. வலம்புரம் - இது திருமால் வழிபட்டு வலம்புரிச் சங்கைப்பெற்ற தலம்; தற்போது மேலப் பெரும்பள்ளம் என வழங்குகிறது; பல்லவனீச்சுரத்திற்கு அண்மையில் உள்ளது. வாள் எயிறு - வாள் போன்ற பற்கள். ஆள்வலி - ஆண்மை. வரை - கயிலை மலை. ஆண்மை - வீரம்.

4. அவளிவணல்லூர் - (அவள்+இவள்+நல்லூர்) நல்லூர் - ஊர்ப் பெயர். நிலைவலம் - நிலைமையின் வலிமையை. சிலைவலங்கொண்ட செல்வன் - இராவணன். அலைகுலை - நடுங்கும்படி.

திருக்கோவலூர் வீரட்டம் திருநேரிசை 4-ஆம் திருமுறை

விரிகடல் இலங்கைக் கோனை வியன்**கயி லாயத் தின்கீழ்**
இருபது தோளும் பத்துச் சிரங்களும் நெரிய வூன்றிப்
பரவிய பாடல் கேட்டுப் படைகொடுத் தருளிச் செய்தார்
குரவொடு கோங்கு சூழ்ந்த கோவல்வீ ரட்ட னாரே. 10

திருவீழிமிழலை திருவிருத்தம் 4-ஆம் திருமுறை

கறுக்கொண் டரக்கன் **கயிலையைப்** பற்றிய கையும்மெய்யும்
நெறுக்கென் றிறச்செற்ற சேவடி யாற்கூற்றை நீறுசெய்தீர்
வெறிக்கொன்றை மாலை முடியீர் விரிநீர் மிழலையுள்ளீர்
இறக்கின்று நும்மை மறக்கினும் என்னைக் குறிக்கொண்மினே. 10

திருநல்லூர் திருவிருத்தம் 4-ஆம் திருமுறை

படவேர் அரவல்குற் பாவைநல் லீர்பக லேயொருவர்
இடுவா ரிடைப்பலி கொள்பவர் போலவந் தில்புகுந்து
நடவார் அடிகள் நடம்பயின் றாடிய கூத்தர்கொலோ
வடபாற் கயிலையுந் தென்பால்நல் லூருந்தம் வாழ்பதியே. 3

---

10. திருக்கோவலூர் வீரட்டம்-இஃது அந்தகாசுரனை அழித்த தலம்; அட்ட வீரட்டத்துள் ஒன்று. தற்போது திருக்கோயிலூர் என வழங்குகிறது. பரவிய பாடல் - சாம வேதப் பாடல். குரவு - ஒரு மரம்.

10. கறுக்கொண்ட - கடுங் கோபங்கொண்ட. மெய்யும் - உடலும். நெறுக்கு - இஃது ஒலிக்குறிப்பு. கூற்றை - இயமனை. நீறு செய்தீர் ; அழித்தீர். வெறி - வாசனை. இறக்கின்று - சாகும்நாள். குறிக்கொண்மின் - ஞாபகப்படுத்திக்கொள்வீராக.

3. நல்லூர் - இது ஆண்டான் கோயில் என வழங்குகிறது. படம் படம் போன்ற. ஏர் - அழகு. இடுவார் இடை - பிச்சை அளிப்பாரிடத்தில். இல் - வீட்டில். நடவார் அடிகள் - உலாவிய பெரியார் ஈற்றடி கயிலையை ஒத்தது நல்லூர் என்பதாம்.

திருவாரூர் திருவிருத்தம் 4-ஆம் திருமுறை

கரப்பர்கள் மெய்யைத் தலைபறிக் கச்சுக மென்னுங் குண்டர்
உரைப்பன கேளாதிங் குய்யப்போந் தேனுக்கும் உண்டுகொலோ
திருப்பொலி ஆரூர்த் திருமூலட் டானன் திருக்கயிலைப்
பொருப்பன் விருப்பமர் தொண்டர்க்குத் தொண்டராம் புண்ணியமே. 8

திருத் தூங்கானைமாடம் திருவிருத்தம் 4-ஆம் திருமுறை

கடவுந் திகிரி கடவா தொழியக் கயிலையுற்றான்
படவுந் திருவிரல் ஒன்றுவைத் தாய்பனி மால்வரைபோல்
இடபம் பொறித்தென்னை ஏன்றுகொள் ளாயிருஞ் சோலைதிங்கள்
தடவுங் கடந்தையுள் தூங்கானை மாடத்தெந் தத்துவனே. 10

சரக்கறை திருவிருத்தம் 4-ஆம் திருமுறை

வேலைக் கடல்நஞ்சம் உண்டாய்என் விண்ணப்பம் மேலிலங்கு
காலற் கடந்தான் இடங்கயி லாயமுங் காமர்கொன்றை
மாலைப் பிறையும் மணிவாய் அரவும் விரவியெல்லாம்
சாலக் கிடக்குஞ் சரக்கறை யோவென் தனிநெஞ்சமே. 5

---

8. கரப்பார்கள் மெய்யை - ஆடையின்றி உடலைப் பாயினால் மூடுவார்கள். தலை பறிக்கச் சுகம் என்னும் - தன் தலைமயிரைப் பிடுங்கும்போது ("இப் - துக் - பிற் - சுக்"—இப்போது துக்கம்; பின்னால் சுகம்) என்று கூறும். குண்டர் - கீழ் மக்கள்; சமணர். திருப்பொலி - சகல செல்வங்களும் நிறைந்த. மூலட்டானம் - இறைவன் எழுந்தருளிய இடத்தின் பெயர்; கயிலைப் பொருப்பன் விருப்பமர் - இறைவனுக்கு விருப்பமானவற்றையே விரும்பும். தொண்டராம் - தொண்டராதல்.

10. தூங்கானை மடம் - திருப்பெண்ணாகடத்தின் கோயிலின் பெயர். இஃது ஒரு யானை படுத்திருப்பதுபோல் அமைந்துள்ளது. கடவும் - செலுத்தும். திகிரி - தேர். கயிலை உற்றான் - கயிலை மலையைப் பேர்த்து எடுக்க முயன்ற இராவணன். படவும் - படும்படி. பனிமால்வரைபோல் இடபம் - வெள்ளிய இடபம். ஏன்றுகொள்ளாய் - ஏற்றுக்கொள்வாயாக. தடவும் - தவழும். கடந்தை - பெண்ணாகடம்; மருஉ.

5. இப்பதிகம் இறைவனை நேர்பட நோக்கிப் பன்முறையும் அழைத்து விண்ணப்பிக்கும் பதிகம் ஆகும். காலன் - இயமன். காமர் - அழகு. சரக்கறை - பண்டங்கள் நிறைந்துள்ள அறை. தனி - ஒப்பற்ற.

விண்டார் புரமூன்றும் எய்தாய்என் விண்ணப்பம் மேலிலங்கு
தொண்டா டியதொண் டடிப்பொடி நீறுந்தொழுது பாதம்
கண்டார்கள் கண்டிருக் குங்கயி லாயமுங் காமர்கொன்றைத்
தண்தார் இருக்குஞ் சரக்கறை யோ!என் தனிநெஞ்சமே. 7

திருமீயச்சூர் இளங்கோயில் திருக்குறுந்தொகை 5-ஆம் திருமுறை

கடுக்கண் டன்கயி லாய மலைதனை
எடுக்க லுற்றஇ ராவணன் ஈடற
விடுக்க ணின்றி வெகுண்டவன் மீயச்சூர்
இடுக்கண் தீர்க்கநின் றூர்இளங் கோயிலே. 10

திருநின்றியூர் திருக்குறுந்தொகை 5-ஆம் திருமுறை

எளிய னெமொழி யாஇலங் கைக்கிறை
களியி னாற்கயி லாயம் எடுத்தவன்
நெளிய வூன்றவ லானமர் நின்றியூர்
அளியி னாற்றெழு வார்வினை அல்குமே. 10

---

7. விண்டார் - பகைவர்; திரிபுரர். புரம் மூன்றும் - முப்புரம். விண்ணப்பம் – வேண்டுகோள். பொடி நீறு – தூளியாகிய பொடி. கண்டிருக்கும் - கண்டுகொண்டிருக்கும். தண் - குளிர்ந்த. தார் - மாலை.

10. கடுக்கண்டன்-விஷத்தைக் கழுத்திலேஉடைய சிவபெருமானின். ஈடு-பெருமை. இளங்கோயில்-இது திருமீயச்சூர் சிவாலயத்துள் வடக்குப் பிராகாரத்தில் உள்ள ஒரு சிவாலயம். இது காளியால் பூசிக்கப்பட்டது. இது பாலாலயம் செய்த கோயிலாகும்.

10. நின்றியூர் - இஃது ஒரு சோழ அரசன் கொண்டுவந்து ஏற்றிய திரி நின்று அவிந்தபோது இறைவர் இலிங்கத்தினின்றும் சோதியாகத் தோன்றிய ஊர் என்ற காரணத்தால் பெற்ற பெயர். மொழியா - கூறாத. களி - கர்வம். அளியினால் - அன்பினால். அல்கும் - குறைந்துபோகும்.

திருமயிலாடுதுறை திருக்குறுந்தொகை 5-ஆம் திருமுறை

நிலைமை சொல்லுநெஞ் சே!தவ மென்செய்தாய்
கலைகள் ஆயவல் லான்கயி லாயநன்
மலையன் மாமயி லாடு துறையன்நம்
தலையின் மேலும் மனத்துளுந் தங்கவே. 6

திருவேகம்பம் திருக்குறுந்தொகை 5-ஆம் திருமுறை

அரக்கன் தன்வலி உன்னிக் கயிலையை
நெருக்கிச் சென்றெடுத் தான்முடி தோள்நெரித்
திரக்க இன்னிசை கேட்டவன் ஏகம்பம்
தருக்க தாகநாஞ் சார்ந்து தொழுதுமே. 10

திருமாற்பேறு திருக்குறுந்தொகை 5-ஆம் திருமுறை

கருத்த னாய்க்கயி லாய மலைதனைத்
தருக்கி னாலெடுத் தானைத் தகரவே
வருத்தி யாரருள் செய்தவன் மாற்பேறு
அருத்தி யால்தொழு வார்க்கில்லை அல்லலே. 10

---

6. மயிலாடுதுறை - மாயூரம். நிலைமை - நடைமுறை. கலைகள் - சகல கலைகள். தங்கவே என் தவம் செய்தாய் என்க. தவம் செய்தவரே இறைவனை வணங்கவும் நினைக்கவும் இயலும்.

10. உன்னி - நினைத்து. இரக்க - வருந்த. இன்னிசை - சாம வேத இசை. தருக்கு-அடியோம் என்ற பெருமித நினைப்பு. சார்ந்து-அடைந்து.

10. மால் பேறு - இது திருமால் பூசித்துப் பேறு பெற்ற தலம் என்பது வரலாறு. கருத்தனாம் - (வேறு எதனையோ) கருதியவனாய். தகவே - தக்கபடி. வருத்தி ஆர் அருள் செய்தவன் - முன்னே வருத்திப் பின்னே இரங்கி நிறைந்த கருணைபுரிந்த சிவபெருமானின். அருத்தியால் - ஆசையால். அல்லல் - துன்பம்.

திருத்தென்குரங்காடுதுறை திருக்குறுந்தொகை 5-ஆம்திருமுறை

கடுத்த தேரரக் கன்**கயி லைம்மலை**
எடுத்த தோள்தலை இற்றல றவ்விரல்
அடுத்த லும்மவன் இன்னிசை கேட்டருள்
கொடுத்த வன்குரங் காடு துறையனே. 11

திருக்கோழம்பம் திருக்குறுந்தொகை 5-ம் திருமுறை

கயிலை நன்மலை யாளுங் கபாலியை
மயிலி யல்மலை மாதின் மணாளனைக்
குயில்ப யில்பொழிற் கோழம்ப மேயஎன்
உயிரி னைநினைந் துள்ளம் உருகுமே. 2

திருவலஞ்சுழி திருக்குறுந்தொகை 5-ஆம் திருமுறை

ஓத மார்கட லின்விட முண்டவன்
பூத நாயகன் **பொற்கயி லைக்கிறை**
மாதொர் பாகன் வலஞ்சுழி யீசனைப்
பாத மேத்தப் பறையும்நம் பாவமே. 1

கயிலை நாதன் கறுத்தவர் முப்புரம்
எயில்கள் தீயெழ வெல்வல **வித்தகன்**
மயில்க ளாலும் வலஞ்சுழி யீசனைப்
பயில்கி லார்சிலர் பாவித் தொழும்பரே. 2

---

11. தென் குரங்காடு துறை - இது ஆடுதுறை ஆகும். இத்தலம் வாலி, அநுமன் இவர்களால் பூசிக்கப்பெற்றதாகும். கடுத்த - வேகமாகச் செல்லும். இற்று - நசுங்கி.

11. கபாலி - கபாலத்தை ஏந்திய இறைவனை. மயில் இயல் - மயிலின் சாயலையுடைய. குயில்பயில் - குயில்கள் வாழும். உள்ளம் - மனம். உருகும் - உருகி நிற்கும்.

1, ஓதம் - குளிர்ச்சி. கடல் - பாற்கடல். பூத நாயகன் - பஞ்சபூதங்களுக்கும் தலைவன். ஏத்த - துதிக்க. நம் பாவம் பறையும் - நமது பாவம் நீங்கும்,

2. கறுத்தவர் - பகைவர்; திரிபுரர். எயில்கள் - மதில்கள். ஆலும் - ஆடும். பயில்கிலார் - பலவாறு போற்றுதவர். தொழும்பர் ஆளானவர்.

திருமங்கலக்குடி திருக்குறுந்தொகை 5-ஆம் திருமுறை

மங்க லக்குடி யான்கயி லைம்மலை
அங்க லைத்தெடுக் குற்ற அரக்கர்கோன்
தங்க ரத்தொடு தாள்தலை தோள்தகர்ந்
தங்க லைத்தழு துய்ந்தனன் தானன்றே. 10

திருமணஞ்சேரி திருக்குறுந்தொகை 5-ஆம் திருமுறை

கடுத்த மேனி அரக்கன் கயிலையை
எடுத்த வன்னெடு நீண்முடி பத்திறப்
படுத்த லும்மணஞ் சேரி யருளெனக்
கொடுத்த னன்கொற்ற வாளொடு நாமமே. 10

உள்ளத்தொகை திருக்குறுந்தொகை 5-ஆம் திருமுறை

வெறுத்தான் ஐம்புல னும்பிர மன்தலை
அறுத்தா னைஅரக் கன்கயி லாயத்தைக்
கறுத்தா னைக்காலி னில்விர லொன்றினால்
ஒறுத்தா னைக்கண்டு கொண்டதெ னுள்ளமே. 10

---

10. அங்கு - அங்கே. அலைத்து - அசைத்து. அரக்கர்கோன் தம் - இராவணனின். தகர்ந்து - நசுங்கி. அங்கலைத்து - அங்கலாய்த்து - கலங்கி. உய்ந்தனன் - பின் அருள் பெற்றனன்.

10. கடுத்த மேனி-கோபித்த வடிவுடைய. நெடுநீள் - மிகப் பெரிய. கொற்ற வாள் - வெற்றியையுடைய வாள். நாமம் - இராவணன் என்னும் பெயர்.

10. வெறுத்தான் - வென்றவன். கறுத்தானை - கோபித்து எடுத்த இராவணனை. ஒறுத்தானை - தண்டித்தானை. உள்ளம் - மனம். என் உள்ளம் கண்டு கொண்டது என்றதனால் இப்பதிகம் 'உள்ளத்தொகை' என்ற பெயர் பெறலாயிற்று.

கோயில் புக்க திருத்தாண்டகம் 6 ஆம் திருமுறை

காதார் குழையினர் கட்டங் கத்தர்
　　கயிலாய மாமலையார் காரோ ணத்தார்
மூதாயர் மூதாதை இல்லார் போலும்
　　முதலும் இறுதியுந் தாமே போலும்
மாதாய மாதர் மகிழ அன்று
　　வன்மதவேள் தன்னுடலங் காய்ந்தார் இந்நாள்
போதார் சடைதாழப் பூதஞ் சூழப்
　　புலியூர்ச்சிற் றம்பலமே புக்கார் தாமே. 6

திருஅதிகை வீரட்டானம் 5-ஆம்திருமுறை

காப்புத்திருத்தாண்டகம்

தீர்த்தப் புனற்கெடில வீரட் டமுந்
　　திருக்கோவல் வீரட்டம் வெண்ணெய் நல்லூர்
ஆர்த்தருவி வீழ்சுனைநீர் அண்ணா மலை
　　அறையணி நல்லூரும் அரநெ றியும்
ஏத்துமின்கள் நீரேத்த நின்ற ஈசன்
　　இடைமரு தின்னம்பர் ஏகம்பமும்
கார்த்தயங்கு சோலைக் **கயிலா யமுங்**
　　கண்ணுதலான் தன்னுடைய காப்புக் களே. 2

---

6. கோயில்-சிதம்பரம். கட்டங்கம் - மழு. மூதாயர் - பாட்டியார். மூதாதை - பாட்டன். வல் - யாவற்றிலும் வல்ல. மதவேள் - மன்மதன். போதார் - கொன்றை முதலிய புட்பங்கள் நிறைந்த. புலியூர் - சிதம்பரம்; இது வியாக்கிரமபாதர் பூசித்ததால் பெற்ற பெயர். ஒவ்வொரு பாசுரந் தோறும் "புக்கார் தாமே" என்று முடிவதால், புக்க திருத்தாண்டகம் எனப் பெயர் பெற்றது.

2. காப்புத் திருத்தாண்டகம் - இது காப்புக்களே என்று பாசுரந் தோறும் முடிவுபெறுதலால் இப்பெயர் பெற்றது. காப்பு - காவலுள் நிற்பது. தாண்டகம் - ஒரு வகைச் செய்யுள். தீர்த்தப் புனல் - தூய்மை யான நீர்; புண்ணிய நீர். ஆர்த்து - ஆரவாரித்து. அர நெறி - ஆரூர் அர நெறி. கார் - மேகம். தயங்கு - தவழும். கண்ணுதலான் - சிவபெருமான்.

GOVERNMENT ORIENTAL MANUSCRIPTS LIBRARY
3 AUG 1957
MADRAS

திருநீர்ப் புனற்கெடில வீரட் டமுந்
திருவளப்பூர் தெற்கேறு சித்த வடமும்
வருநீர் வளம்பெருகு மாநிரு பமும்
மயிலாப்பில் மன்னினார் முன்னி யேத்தும்
பெருநீர் வளர்சடையான் பேணி நின்ற
பிரமபுரஞ் சுழியல் பெண்ணா கடம்
கருநீல வண்டரற்றுங் காளத் தியுங்
கயிலாயந் தம்முடைய காப்புக் களே. 12

திருக்காளத்தி — திருத்தாண்டகம் — 6-ஆம் திருமுறை

மனத்தகத்தான் தலைமேலான் வாக்கி னுள்ளான்
வாயாரத் தன்னடியே பாடுந் தொண்டர்
இனத்தகத்தான் இமையவர்தஞ் சிரத்தின் மேலான்
ஏழண்டத் தப்பாலான் இப்பாற் செம்பொன்
புனத்தகத்தான் நறுங்கொன்றைப் போதி னுள்ளான்
பொருப்பிடையான் நெருப்பிடையான் காற்றி னுள்ளான்
கனத்தகத்தான் கயிலாயத் துச்சியுள் ளான்
காளத்தி யானவனென் கண்ணு ளானே. 5

திருநல்லூர் — திருத்தாண்டகம் — 6-ஆம் திருமுறை

வில்லருளி வருபுருவத் தொருத்தி பாகம்
பொருத்தாகி விரிசடைமே லருவி வைத்தார்
கல்லருளி வரிசிலையா வைத்(து)ஆ ரூராக்
கயிலாய மலைவைத்தார் கடலூர் வைத்தார்

---

12. சித்த வடம் - திருவதிகைத் தலத்தின் சமீபம் உள்ள ஓர் இடம். மயிலாப்பு - திருமயிலாப்பூர். பேணி - விரும்பி. பிரமபுரம் - சீகாழி.

5. தொண்டர் இனத்தகத்தான் - சிவத்தொண்டர் கூட்டத்தினுள் எப்பொழுதும் இருப்பவன். போது - புட்பம். பொருப்பு - மலை. கனம் - மேகம்; ஆகாயம். இங்குக் காளத்தி கயிலாயமே என்று குறிப்பிடப் பெற்றுள்ளது.

4. வில்லருளி வருபுருவத் தொருத்தி - வில்போன்ற திருப்புருவ முடைய உமாதேவியார். அருவி - கங்கை. கல் - மேரு மலை. அறம் -

சொல்லருளி அறநால்வர்க் கறிய வைத்தார்
சுடுசுடலைப் பொடிவைத்தார் துறவி வைத்தார்
நல்லருளால் திருவடியென் தலைமேல் வைத்தார்
நல்லூரெம் பெருமானார் நல்ல வாறே. 4

விண்ணிரியுந் திரிபுரங்கள் எரிய வைத்தார்
வினைதொழுவார்க் கறவைத்தார் துறவி வைத்தார்
கண்ணெரியாற் காமனையும் பொடியா வைத்தார்
கடிக்கமல மலர்வைத்தார் கயிலை வைத்தார்
திண்ணெரியுந் தண்புனலு முடனே வைத்தார்
திசைதொழுது மிசையமரர் திகழ்ந்து வாழ்த்தி
நண்ணரிய திருவடியென் தலைமேல் வைத்தார்
நல்லூரெம் பெருமானார் நல்ல வாறே. 5

திருஇடைமருதூர் திருத்தாண்டகம் 6-ஆம் திருமுறை

தோலிற் பொலிந்த வுடையார் போலுஞ்
சுடர்வா யரவசைத்த சோதி போலும்
ஆலம் அமுதாக வுண்டார் போலும்
அடியார்கட் காரமுத மானார் போலும்
காலனையுங் காய்ந்த கழலார் போலும்
கயிலாயந் தம்மிடமாக் கொண்டார் போலும்
ஏலங் கமழ்குழலாள் பாகர் போலும்
இடைமருது மேவிய ஈச னாரே. 8

அறம், பொருள், இன்பம், வீடு என்ற பொருளை. நால்வர் - சனகாதி முனிவர் நால்வர். நல்லவாறே - நன்மை எனக்குளதாம்.

5. விண் இரியும் - ஆகாயத்தில் திரியும். தொழுவார்க்கு வினை அற - வணங்குவோர்க்குத் தீவினைகள் நீங்க. துறவி - துறவு நிலை. கடி - வாசனை. நண்ணரிய - அடைதற்கரிய.

8. தோல் - புலித்தோல். சுடர்வாய் - பல்லொளி பொருந்திய. ஆலம் - விஷம். ஏலம் - வாசனை. வட நாட்டில் உள்ள மல்லிகார்ச்சுனத்திற்கும் (சீ சைலத்திற்கும்) பாண்டி நாட்டில் உள்ள புடைமருதூருக்கும் இடையில் உள்ளதால் இத் தலம் இடைமருது எனப் பெயர் பெற்றது. மருது - ஒரு தல மரம்.

திருவிடைமருதூர் திருத்தாண்டகம் 6-ஆம் திருமுறை

காவார் சடைமுடியர் காரோ ணத்தார்
கயிலாயம் மன்னினர் பன்னு மின்சொல்
பாவார் பொருளாளர் வாளார் கண்ணி
பயிலுந் திருவுருவம் பாகம் மேயார்
பூவார் புனலணவு புன்கூர் வாழ்வர்
புரமூன்றும் ஒள்ளழலாக் காயத் தொட்ட
ஏவார் சிலைமலையர் எங்குந் தாமே
இடைமருது மேவி இடங்கொண் டாரே. 8

திருஆக்கூர் திருத்தாண்டகம் 6-ஆம் திருமுறை

மால்யானை மத்தகத்தைக் கீண்டார் போலும்
மான்தோல் உடையா மகிழ்ந்தார் போலும்
கோலானைக் கோவழலாற் காய்ந்தார் போலும்
குழவிப் பிறைசடைமேல் வைத்தார் போலும்
காலனைக் காலாற் கடந்தார் போலும்
கயிலாயந் தம்மிடமாக் கொண்டார் போலும்
ஆலானைந் தாடல் உகப்பார் போலும்
ஆக்கூரில் தான்றோன்றி அப்ப னாரே. 7

---

8. கா ஆர் - (கங்கைக்குப்) பாதுகாவலாகப் பொருந்திய. காரோணம் - இது காயாரோகணம் என்பதன் மரூஉ. (காயம் - உடல். ஆரோகணம் . ஏற்றுக்கொள்ளல்) இறைவர் தம் திருமேனியினுள் ஒரு முனிவரை ஏற்றுக்கொண்டமையால் பெற்ற பெயர். இப்பெயர் நாகைக் காரோணம், குடந்தைக் காரோணம் முதலியவற்றைக் குறிக்கும். பாவார் வெல்லப் பாகு போன்ற. புன்கூர் - திருப்புன்கூர் என்ற தலம். ஏ - அம்பு. எங்கும் தாமே என்பது - சர்வ வியாபகர்.

7. கீண்டார் - கிழித்தார். கோலானை - மலரம்புடைய மன்மதனை. கோல் - அம்பு. கோ அழல் - நெற்றிக் கண்ணின் தீயினால். ஆல் - கல்லால விருட்சம். ஆன் ஐந்து - பஞ்சகௌவியம், தான்தோன்றி - திருக்கோயிலின் பெயர்.

திருமறைக்காடு திருத்தாண்டகம் 6-ஆம் திருமுறை

வேலைசேர் நஞ்சம் மிடற்றான் கண்டாய்
விண்தடவு **பூங்கயிலை** வெற்பன் கண்டாய்
ஆலைசேர் வேள்வி அழித்தான் கண்டாய்
அமரர்கள் தாமேத்தும் அண்ணல் கண்டாய்
பால்நெய்சேர் ஆனஞ்சும் ஆடி கண்டாய்
பருப்பதத்தான் கண்டாய் பரவை மேனி
மாலையோர் கூறுடைய மைந்தன் கண்டாய்
மறைக்காட் டுறையும் மணாளன் தானே. 7

திருஆரூர் திருத்தாண்டகம் 6-ஆம் திருமுறை

ஏனத் திளமருப்புப் பூண்டார் போலும்
இமையவர்க ளேத்த இருந்தார் போலும்
கானக்கல் லாற்கீழ் நிழலார் போலும்
கடல்நஞ்ச முண்டிருண்ட கண்டர் போலும்
வானத் திளமதிசேர் சடையார் போலும்
வான்கயிலை வெற்பின் மகிழ்ந்தார் போலும்
ஆனத்து முன்னெழுத்தாய் நின்றார் போலும்
அணியாரூர்த் திருமூலட் டான ரே. 5

---

7. வேலை - பாற்கடல். தடவும் - அளாவும். ஆலை சேர் - சாலை பொருந்திய. வேள்வி - தட்ச யாகம். பால் நெய் சேர் ஆன் அஞ்சு - பசுவினது பால், நெய், தயிர், கோசலம், கோமயம் என்ற பொருள் ஐந்து; பஞ்சகவ்வியம். பருப்பதம் - ஸ்ரீபர்வதம். பரவை மேனி - கடல்போன்ற திருமேனியுடைய. மாலை - திருமாலை. மாலையோர் கூறுடைய மைந்தன்- (சங்கர நாராயண மூர்த்தி) கேசவார்த்த மூர்த்தி. மணாளன் - மணவாளக் கோலத்துடன் இருப்பவர்.

5. ஏனம் - பன்றி. மருப்பு - கொம்பு. கானம் - அழகிய. வான் - சிறந்த. ஆனத்து முன் எழுத்தாய் - ஆ என்ற எழுத்துக்கு முன்னுள்ள அகர உயிர் போன்றவராய். இங்கு "அகர வுயிர்போல் அறிவாகி எங்கும், நிகரிலிறை நிற்கும் நிறைந்து" எனவரும் திருவருட்பயன் குறள் வெண்பா உன்னற்பாலது. நின்றார் - இருந்தவர். திருமூலட்டானம் - இறைவர் (வன்மீகநாதர்) எழுந்தருளிய இடம்.

திருஆரூர்அரநெறி திருத்தாண்டகம் 6-ஆம் திருமுறை

கற்பகமும் இருசுடரும் ஆயி னானைக்
காளத்தி கயிலாய மலையு ளானை
விற்பயிலும் மதனழிய விழித்தான் தன்னை
விசயனுக்கு வேடுவனாய் நின்றான் தன்னைப்
பொற்பமரும் பொழிலாரூர் மூலட் டானம்
பொருந்தியஎம் பெருமானைப் பொருந்தார் சிந்தை
அற்புதனை அரநெறியில் அப்பன் தன்னை
அடைந்தடியேன் அருவினைநோய் அறுத்த வாறே. 2

திருவையாறு திருத்தாண்டகம் 6-ஆம் திருமுறை

கச்சியே கம்பனே என்றேன் நானே
கயிலாயா காரோணா என்றேன் நானே
நிச்சன் மணாளனே என்றேன் நானே
நினைப்பார் மனத்துளாய் என்றேன் நானே
உச்சம்போ தேறேறீ என்றேன் நானே
உள்குவார் உள்ளத்தாய் என்றேன் நானே
அச்சம் பிணிதீர்க்கும் ஐயா றன்னே
என்றென்றே நானரற்றி நைகின் றேனே. 9

---

2. இரு சுடர் - சூரியன் சந்திரன். காளத்தி கயிலாயம் - திருக்காளத்தியும் கயிலை ஆகும். மதன் - மன்மதன். விசயன் - அருச்சுனன். பொற்பு - அழகு. அற்புதன் - இத்தன்மையன் என்று சொல்லமுடியாதவன். அர நெறி - இது திருவாரூர் ஆலயத்தினுள் இரண்டாம் பிரகாரத்தில் மேற்கு முகமாகிய சிறு சிவாலயம்; நமிநந்தியடிகள் பேறு பெற்ற தலம்.

9. நிச்சன்-நித்தன் - அழியாதவன். உச்சம்போது-உச்சிப்பொழுது, ஏறு ஏறீ - இடபத்தில் ஏறி நின்று அருள்புரிபவனே. அச்சம்-பிறவற்றால் வரும் பயம், பிணி - பிறவிப் பிணி. ஐயாறன் - ஐயாறப்பர்.

திருவையாறு **திருத்தாண்டகம்** 6-ஆம் திருமுறை

வானுற்ற மாமலைகள் ஆனாய் நீயே
வடகயிலை மன்னி இருந்தாய் நீயே
ஊனுற்ற ஒளிமழுவாட் படையாய் நீயே
ஒளிமதியோ டரவுபுனல் வைத்தாய் நீயே
ஆனுற்ற ஐந்தும் அமர்ந்தாய் நீயே
அடியானென் றடியென்மேல் வைத்தாய் நீயே
தேனுற்ற சொல்மட வாள்பங்கன் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதீ. 4

திருநெய்த்தானம் **திருத்தாண்டகம்** 6-ஆம் திருமுறை

வகையெலா முடையாயும் நீயே யென்றும்
வான்கயிலை மேவினாய் நீயே யென்றும்
மிகையெலாம் மிக்காயும் நீயே யென்றும்
வெண்காடு மேவினாய் நீயே யென்றும்
பகையெலாந் தீர்த்தாண்டாய் நீயே யென்றும்
பாசூர் அமர்ந்தாயும் நீயே யென்றும்
திகையெலாந் தொழச்செல்வாய் நீயே யென்றும்
நின்றநெய்த் தானாஎன் நெஞ்சு ளாயே. 1

---

4. வான் உற்ற - வானத்தை அளாவிய. வட கயிலை மன்னியிருத்தல் - வட கயிலைக் காட்சியோடு இங்கு நிலைபெற்று இருத்தல். ஊன் - தசை. ஆன் உற்ற - பசுவினிடத்து உதித்த. ஐந்து - பஞ்ச கவ்வியம். தேன் உற்ற - தேன் போன்ற. சொல் மடவாள் - உமாதேவியார். செம்பொற் சோதி - இறைவர் திருநாமம்.

1. நெய்த்தானம் - இஃது இறைவன் நெய்யாடுதல் என்னும் ஒரு வகை விழாவின் சிறப்பினால் பெற்ற பெயர்; திருவையாறு உள்ளிட்ட ஏழு தலங்களுள் ஒன்று. வகை எலாம் (ஆன்மாக்களுக்கு) இன்பம் அளிக்கும் வகைகள் யாவும். மிகையெலாம், மிக்கவற்றுள் எல்லாம். பகை - ஆணவ மலப் பகை. பாசூர் - ஒரு சிவத்தலம். திகை - திசை - ஆகு பெயர்.

ஆர்த்த எனக்கன்பன் நீயே யென்றும்
ஆதிக் கயிலாயன் நீயே யென்றும்
கூர்த்த நடமாடி நீயே யென்றும்
கோடிகா மேய குழகா என்றும்
பார்த்தற் கருள்செய்தாய் நீயே யென்றும்
பழையனூர் மேவிய பண்பா என்றும்
தீர்த்தன் சிவலோகன் நீயே என்றும்
நின்றநெய்த் தானாஎன் நெஞ்சு ளாயே. 2

அல்லாய்ப் பகலானாய் நீயே யென்றும்
ஆதிக் கயிலாயன் நீயே யென்றும்
கல்லால் அமர்ந்தாயும் நீயே யென்றும்
காளத்திக் கற்பகமும் நீயே யென்றும்
சொல்லாய்ப் பொருளானாய் நீயே யென்றும்
சோற்றுத் துறையுறைவாய் நீயே யென்றும்
செல்வாய்த் திருவானாய் நீயே யென்றும்
நின்றநெய்த் தானாஎன் நெஞ்சு ளாயே. 3

மின்னே ரிடைபங்கன் நீயே யென்றும்
வெண்கயிலை மேவினாய் நீயே யென்றும்
பொன்னேர் சடைமுடியாய் நீயே யென்றும்
பூத கணநாதன் நீயே யென்றும்
என்னு விரதத்தாய் நீயே யென்றும்
ஏகம்பத் தென்னீசன் நீயே யென்றும்
தென்னூர்ப் பதியுளாய் நீயே யென்றும்
நின்றநெய்த் தானாஎன் நெஞ்சு ளாயே. 4

---

2. ஆர்த்த - (அன்பினால்) கட்டிய. கூர்த்த - மிகுந்த. கோடிகா மேய குழகா - கோடிக் குழகா. பார்த்தன் - அர்ச்சுனன். பழையனூர் - திருவாலங்காடு பழையனூர். தீர்த்தன் - பரிசுத்தன்.

3. அல் - இரவு. சொல்லாய்ப் பொருளானாய் – சொல்லும் பொருளு மானாய். அர்த்தநாரீச்சுரர் வடிவம்: சொல் சத்தி. பொருள் சிவம் ஆகும். செல் - ஈண்டு வறுமை. திரு ஆனாய் - அருட்டிருவானாய்.

4. மின்னேர் இடை - உமாதேவியார். வெண் கயிலை - வெள்ளிய பனியால் மூடிய கயிலை. ஏர் - ஒத்த. ஏகம்பம் - கச்சி ஏகம்பம்.

முந்தி யிருந்தாயும் நீயே யென்றும்
முன்கயிலை மேவினாய் நீயே யென்றும்
நந்திக் கருள்செய்தாய் நீயே யென்றும்
நடமாடி நள்ளாறன் நீயே யென்றும்
பந்திப் பரியாயும் நீயே யென்றும்
பைஞ்ஞீலி மேவினாய் நீயே யென்றும்
சிந்திப் பரியாயும் நீயே யென்றும்
நின்றநெய்த் தானாஎன் நெஞ்சு ளாயே. 5

தக்கா ரடியார்க்கு நீயே யென்றும்
தலையார் கயிலாயன் நீயே யென்றும்
அக்காரம் பூண்டாயும் நீயே யென்றும்
ஆக்கூரில் தான்தோன்றி நீயே யென்றும்
புக்காய ஏழுலகும் நீயே யென்றும்
புள்ளிருக்கு வேளூராய் நீயே யென்றும்
தெக்கார மாகோணத் தானே யென்றும்
நின்றநெய்த் தானாஎன் நெஞ்சு ளாயே. 6

புகழும் பெருமையாய் நீயே யென்றும்
பூங்கயிலை மேவினாய் நீயே யென்றும்
இகழுந் தலையேந்தி நீயே யென்றும்
இராமேச் சுரத்தின்பன் நீயே யென்றும்
அகழும் மதிலுடையாய் நீயே யென்றும்
ஆலவாய் மேவினாய் நீயே யென்றும்
திகழும் மதிசூடி நீயே யென்றும்
நின்றநெய்த் தானாஎன் நெஞ்சு ளாயே. 7

---

5. முந்தி - முன்னே. முன் - ஆதி. நந்தி - திருநந்தி தேவர். பந்தி - வரிசை. பரியாயும் - குதிரைச் சேவகனும். பைஞ்ஞீலி - ஒரு சிவத்தலம். சிந்திப்பு - எண்ணுதற்கு.

6. தக்கார் - எல்லாத் தகுதியும் உடையாராகிய. அக்கு ஆரம் - உருத்திராட்ச மாலை; என்பு மாலை. தெக்காரமாக்கோணம்- திருக்கோணமலை என்பர்.

7. பூங்கயிலை . அழகிய கயிலைமலை. இகழும் - இகழ்தற்குரிய. தலை - நகுவெண்டலை. ஏந்தி - ஏந்தியவன். அகழும் மதில் - தோண்டப்பட்ட கட்லாகிய மதில்; அண்டச் சுவருமாம். ஆலவாய் - மதுரையிலுள்ள சிவாலயத்தின் பெயர்.

வானவர்க்கு மூத்திளையாய் நீயே யென்றும்
வானக் **கயிலாயன்** நீயே யென்றும்
கான நடமாடி நீயே யென்றும்
கடவூரில் வீரட்டன் நீயே யென்றும்
ஊனார் முடியறுத்தாய் நீயே யென்றும்
ஒற்றியூ ராரூராய் நீயே யென்றும்
தேனாய் அமுதானாய் நீயே யென்றும்
நின்றநெய்த் தானாஎன் நெஞ்சு ளாயே. 8

தந்தைதா யில்லாதாய் நீயே யென்றும்
தலையார் **கயிலாயன்** நீயே யென்றும்
எந்தாயெம் பிரானானாய் நீயே யென்றும்
ஏகம்பத் தென்னீசன் நீயே யென்றும்
முந்திய முக்கணாய் நீயே யென்றும்
மூவலூர் மேவினாய் நீயே யென்றும்
சிந்தையாய் தேனூராய் நீயே யென்றும்
நின்றநெய்த் தானாஎன் நெஞ்சு ளாயே. 9

மறித்தான் வலிசெற்றாய் நீயே யென்றும்
வான்**கயிலை** மேவினாய் நீயே யென்றும்
வெறுத்தார் பிறப்பறுப்பாய் நீயே யென்றும்
வீழி மிழலையாய் நீயே யென்றும்
அறத்தாய் அமுதீந்தாய் நீயே யென்றும்
யாவர்க்குந் தாங்கொணா நஞ்ச முண்டு
பொறுத்தாய் புலனைந்தும் நீயே யென்றும்
நின்றநெய்த் தானாஎன் நெஞ்சு ளாயே. 10

---

8. மூத்து இளையாய் - முன்னும் பின்னும் உள்ளவன். கானம் - சுடுகாடு. ஊனார் முடி - பிரமனது தசை பொருந்திய தலை.

9. தந்தை தாய் இல்லாதாய் - பிறப்பு இறப்பு இல்லாதவன். தலையார் - முதன்மையான. முந்திய - முதன்மையான. மூவலூர் - இஃது ஒரு தலம். தேனூர் - இஃது ஒரு தலம்.

10. மறித்தான் - எதிர்த்தவர்களாகிய அரக்கர்களின். வெறுத்தார் - உலகப் பற்றை நீக்கியவரின். அறத்தாய் - அறம் உரைத்தவனே.

திரு-ஆவடுதுறை திருத்தாண்டகம் 6-ஆம் திருமுறை

உழையுரித்த மானுரிதோ லாடை யானே
உமையவள்தம் பெருமானே இமையோர் ஏறே
கழையிறுத்த கருங்கடல்நஞ் சுண்ட கண்டா
கயிலாய மலையானே உன்பால் அன்பர்
பிழைபொறுத்தி என்பதுவும் பெரியோய் நின்றன்
கடனன்றே பேரருளுன் பால தன்றே
அழையுறுத்து மாமயில்க ளாலுஞ் சோலை
ஆவடுதண் டுறையுறையும் அமர ரேறே. 7

திருவலிவலம் திருத்தாண்டகம் 6-ஆம் திருமுறை

நிலையவன்காண் தோற்றவன்காண் நிறையா னுன்காண்
நீரவன்காண் பாரவன்காண் ஊர்மூன் றெய்த
சிலையவன்காண் செய்யவாய்க் கரிய கூந்தல்
தேன்மொழியை ஒருபாகஞ் சேர்த்தி னுன்காண்
கலையவன்காண் காற்றவன்காண் காலன் வீழக்
கறுத்தவன்காண் **கயிலாய மென்னுந் தெய்வ**
மலையவன்காண் வானவர்கள் வணங்கி யேத்தும்
வலிவலத்தான் காணவனென் மனத்து ளானே. 6

திருக்கோகரணம் திருத்தாண்டகம் 6-ஆம் திருமுறை

கையாற் **கயிலை** யெடுத்தான் தன்னைக்
கால்விரலால் தோள்நெரிய வூன்றி னுன்காண்
மெய்யின் நரம்பிசையாற் கேட்பித் தாற்கு
மீண்டே யவற்கருள்கள் நல்கி னுன்காண்

---

7. உழை உரித்த - மாயப் பசுவை அழித்த. உழை - பசு. ஏறு - ஆண் சிங்கம். கழை இறுத்த - கரும்பையும் பின்னடையும்படி செய்யும். கருங் கடல் - பெரிய பாற்கடல். கடன் - கடமை. அழை உறுத்தும் - வருக என்று குறிப்பிடும். ஆலும் - ஆடும்.

6. வலிவலம் - வலியன் (கரிக்குருவி) பூசித்த தலம். நிலையவன் - என்றும் உள்ளவன். பார் - பூமி. ஊர் மூன்று - திரிபுரம். கலையவன் - சகல கலைகளையும் உடையவன். கறுத்தவன் - கோபித்தவன்.

10. கோகரணம் - இராவணன் சிவலிங்கப் பெருமானைப் பெயர்த்தெடுக்க முயன்றபோது சிவலிங்கம் பசுவின் காதுபோலக் குழைந்தமையால்

பொய்யர் மனத்துப் புறம்பா வான்காண்
போர்ப்படையான் காண்பொருவா ரில்லா தான்காண்
மைகொள் மணிமிடற்று வார்சடை யான்காண்
மாகடல்சூழ் கோகரணம் மன்னி னானே. 10

திருவீழிமிழலை திருத்தாண்டகம் 6-ஆம் திருமுறை

வானவர்கோன் தோளிறுத்த மைந்தன் தன்னை
வளைகுளமும் மறைக்காடும் மன்னி னானை
ஊனவனை உயிரவனை ஒருநாட் பார்த்தன்
உயர்தவத்தின் நிலையறிய லுற்றுச் சென்ற
கானவனைக் கயிலாயம் மேவி னானைக்
கங்கைசேர் சடையானைக் கலந்தார்க் கென்றும்
தேனவனைத் திருவீழி மிழலை யானைச்
சேராதார் தீநெறிக்கே சேர்கின் றாரே. 8

திருவீழிமிழலை திருத்தாண்டகம் 6-ஆம் திருமுறை

கயிலாய மலையுள்ளார் காரோ ணத்தார்
கந்தமா தனத்துளார் காளத் தியார்
மயிலாடு துறையுளார் மாகா ளத்தார்
வக்கரையார் சக்கரம்மாற் கீந்தார் வாய்ந்த
அயில்வாய சூலமுங் காபா லமும்
அமருந் திருக்கரத்தார் ஆனே றேறி
வெயிலாய சோதி விளங்கு நீற்றார்
வீழி மிழலையே மேவி னாரே. 1

பெற்ற பெயர் ஆகும். மெய்யின் நரம்பு - கையிலுள்ள நரம்பு. பொய்யர் - பொய் பேசுபவர். பொருவார் - எதிர்த்துப் போர் புரிபவர். மை கொள் - கருநிறம் கொண்ட. மணி - அழகிய. கடல் - மேலைக் கடல்.

8. வானவர் கோன் - இந்திரனின். இறுத்த-பிளந்த. வளை குளம் - ஒரு தலம். கானவன் - வேடன். கலந்தார்க்கு - அன்புடன் உள்ளம் கலந்து வழிபட்டவர்க்கு. தீ நெறிக்கே - தீய வழியில்தான்.

1. வக்கரை - திருவக்கரை. மாற்கு - திருமாலுக்கு. அயில் வாய - கூர்மை பொருந்திய. ஆனேறு - வெள்ளிய இடபம் : தருமவிடை.

திருவீழிமிழலை திருத்தாண்டகம் 6-ஆம் திருமுறை

பஞ்சடுத்த மெல்விரலாள் பங்கர் போலும்
பைந்நாகம் அரைக்கசைத்த பரமர் போலும்
மஞ்சடுத்த மணிநீல கண்டர் போலும்
வடகயிலை மலையுடைய மணாளர் போலும்
செஞ்சடைக்கண் வெண்பிறைகொண் டணிந்தார் போலும்
திருவீழி மிழலையமர் சிவனார் போலும்
அஞ்சடக்கும் அடியவர்கட் கணியார் போலும்
அடியேனை ஆளுடைய அடிகள் தாமே. 7

கயிலாய மலையெடுத்தான் கதறி வீழக்
கால்விரலால் அடர்த்தருளிச் செய்தார் போலும்
குயிலாய மென்மொழியாள் குளிர்ந்து நோக்கக்
கூத்தாட வல்ல குழகர் போலும்
வெயிலாய சோதிவிளக் கானார் போலும்
வியன்வீழி மிழலையமர் விகிர்தர் போலும்
அயிலாய மூவிலைவேற் படையார் போலும்
அடியேனை ஆளுடைய அடிகள் தாமே. 11

திருப்புள்ளிருக்குவேளூர் திருத்தாண்டகம் 6-ஆம் திருமுறை

நெருப்பனைய திருமேனி வெண்ணீற் றானை
நீங்காதென் னுள்ளத்தி னுள்ளே நின்ற
விருப்பவனை வேதியனை வேத வித்தை
வெண்காடும் வியன்துருத்தி நகரும் மேவி

---

7. பஞ்சு அடுத்த - செம்பஞ்சு பூசிய. மஞ்சு அடுத்த - கருநிறம் பொருந்திய. அஞ்சு அடக்கும் - ஐம்புலன்களை அடக்கி நிற்கின்ற.

11. எடுத்தான் - எடுத்தவனாகிய இராவணன். குயில் ஆய - குயில் மொழி போன்ற. குழகர் - அழகிய இளமையுடையவர். விகிர்தர் - மேலானவர்.

7. புள்ளிருக்கு வேளூர் - இது சடாயுவும், இருக்கு வேதமும், முருகனும் பூசித்துப் பேறு பெற்ற தலம் ஆகும். (புள் - சடாயு. வேள் - முருகன்). நெருப்பு அனைய திருமேனி - செம்மேனி. வேத வித்தை - வேதத்

இருப்பவனை இடைமருதோ டீங்கோய் நீங்கா
இறைவனை எனையாளுங் கயிலை யென்னும்
பொருப்பவனைப் புள்ளிருக்கு வேளூ ரானைப்
போற்றாதே ஆற்றநாள் போக்கி னேனே. 7

திருக்கயிலாயம் போற்றித் திருத்தாண்டகம் 6-ஆம் திருமுறை

வேற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி
மீளாமே ஆளென்னைக் கொண்டாய் போற்றி
ஊற்றாகி உள்ளே ஒளித்தாய் போற்றி
ஓவாத சத்தத் தொலியே போற்றி
ஆற்றாகி அங்கே அமர்ந்தாய் போற்றி
ஆறங்கம் நால்வேத மானாய் போற்றி
காற்றாகி யெங்குங் கலந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 1

பிச்சாடல் பேயோ டுகந்தாய் போற்றி
பிறவி யறுக்கும் பிரானே போற்றி
வைச்சாடல் நன்று மகிழ்ந்தாய் போற்றி
மருவியென் சிந்தை புகுந்தாய் போற்றி
பொய்ச்சார் புரமூன்று மெய்தாய் போற்றி
போகாதென் சிந்தை புகுந்தாய் போற்றி
கச்சாக நாகம் அசைத்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 2

திற்கு மூலமாய் இருப்பவனை. துருத்தி - குத்தாலம். ஈங்கோய் - திருவீங்கோய் மலை. ஆற்ற நாள் - அத்துணை நாளை.

1. வேற்றாகி - யாவற்றிலும் வேறுமாகி. மீளாமே - மீண்டும் உலகில் வந்து பிறவாமே, ஓவாத - இடைவிடாத. சத்தத்தொலி - நாதவொலி. ஆறு அங்கம் - சிட்சை, வியாகரணம், நிருத்தம், சோதிடம், கற்பம், சந்தோபிசிதம் என்று வேதாங்கம் ஆறு.

2. பிச்சு ஆடல் - பித்துக்கொண்டு ஆடுதல். பேயோடு-சுடுகாட்டில் பேய் பூதங்களுடன். வைச்சு - வைத்து. மருவி - பொருந்தி. பொய்ச்சார் - (ஒழுக்கம்) பொய்த்தவர் - திரிபுரர். கச்சு – அரைப்பட்டி; வார். அசைத்தல்-கட்டுதல்.

மருவார் புரமூன்று மெய்தாய் போற்றி
மருவியென் சிந்தை புகுந்தாய் போற்றி
உருவாகி யென்னைப் படைத்தாய் போற்றி
உள்ளாவி வாங்கி யொளித்தாய் போற்றி
திருவாகி நின்ற திறமே போற்றி
தேசம் பரவப் படுவாய் போற்றி
கருவாகி யோடும் முகிலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 3

வானத்தார் போற்றும் மருந்தே போற்றி
வந்தென்றன் சிந்தை புகுந்தாய் போற்றி
ஊனத்தை நீக்கு முடலே போற்றி
ஓங்கி அழலாய் நிமிர்ந்தாய் போற்றி
தேனத்தை வார்த்த தெளிவே போற்றி
தேவர்க்குந் தேவனாய் நின்றாய் போற்றி
கானத்தீ யாட லுகந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 4

ஊராகி நின்ற உலகே போற்றி
ஓங்கி அழலாய் நிமிர்ந்தாய் போற்றி
பேராகி யெங்கும் பரந்தாய் போற்றி
பெயராதென் சிந்தை புகுந்தாய் போற்றி
நீராவி யான நிழலே போற்றி
நேர்வா ரொருவரையும் இல்லாய் போற்றி
காராகி நின்ற முகிலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 5

---

3. மருவார் - பகைவர்; திரிபுரர். உருவாகி - (குறைவில்லாத) உருவாக; ஆவி; உயிர். திருவாகி - திருவருட் செல்வமாகி. பரவ - துதிக்க. கருவாகி - கருக்கொண்டு; கருநிறம் பெற்று.

4. வானத்தார் - தேவர் கந்தர்வர் முதலியோர். மருந்து - பிறவிப் பிணியைப் போக்கும் மருந்து. ஊனம் - குற்றம். அழலாய் நிமிர்தல் - சோதி வடிவம். தேனத்தை - தேனை. கானத்தீ - சுடுகாட்டுத் தீ.

5. பேர் - பெயர். பரத்தல் - பரவி நிற்றல். நேர்வார் - ஒப்பாவார்; எதிர்த்துப் போர் புரிபவர். காராகி - கருநிறமாகி.

சில்லுருவாய்ச் சென்று திரண்டாய் போற்றி
தேவ ரறியாத தேவே போற்றி
புல்லுயிர்க்கும் பூட்சி புணர்த்தாய் போற்றி
போகாதென் சிந்தை புகுந்தாய் போற்றி
பல்லுயிராய்ப் பார்தோறும் நின்ருய் போற்றி
பற்றி யுலகை விடாதாய் போற்றி
கல்லுயிராய் நின்ற கனலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 6

பண்ணின் இசையாகி நின்ருய் போற்றி
பாவிப்பார் பாவம் அறுப்பாய் போற்றி
எண்ணும் எழுத்துஞ்சொல் லானுய் போற்றி
என்சிந்தை நீங்கா இறைவா போற்றி
விண்ணும் நிலனுந்தீ யானுய் போற்றி
மேலவர்க்கும் மேலாகி நின்ருய் போற்றி
கண்ணின் மணியாகி நின்ருய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 7

இமையா துயிரா யிருந்தாய் போற்றி
என்சிந்தை நீங்கா இறைவா போற்றி
உமைபாக மாகத் தணைத்தாய் போற்றி
ஊழி யேழான ஒருவா போற்றி
அமையா வருநஞ்ச மார்ந்தாய் போற்றி
ஆதி பூராணனுய் நின்ருய் போற்றி
கமையாகி நின்ற கனலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 8

---

6. சில் உரு-மிகச் சிறிய வடிவம். புல் உயிர்-புல்பூண்டு முதலியன. பூட்சி - உணவு; இருப்பு. பல் உயிராய் - சகல சீவராசியாய். பார்-பூமி. அண்டமுமாம்.

7. பண்ணின் இசை - பண்களுடன் கூடிய இசை. பாவிப்பார் - நினைப்பவர்; சிவோகம் பாவனை புரிபவர். எண் - தருக்க நூல். கண்ணின் மணி - கண்ணிலுள்ள மணி. (மணி - கருவிழி)

8. இமையாது உயிராய் இருந்தாய்-இறைவர் கயிலை மலையாக நின்ற கோலம். ஆகம் - உடல், ஊழி - ஊழிக்காலம். ஊழிஏழு - ஊழியில் மீளத் தோன்றும் ஈரேழுலகங்கள். ஒருவா - நீங்காதவனே. புராணன் - சிவபுராணங்களில் புகழ்ந்து பேசப்படுபவன். கமை - பொறுமை.

மூவாய் பிறவாய் இறவாய் போற்றி
முன்னமே தோன்றி முளைத்தாய் போற்றி
தேவாதி தேவர்தொழுந் தேவே போற்றி
சென்றேறி யெங்கும் பரந்தாய் போற்றி
ஆவா அடியேனுக் கெல்லாம் போற்றி
அல்லல் நலிய அலந்தேன் போற்றி
காவாய் கனகத் திரளே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 9

நெடிய விசும்பொடு கண்ணே போற்றி
நீள அகல முடையாய் போற்றி
அடியும் முடியு மிகலி போற்றி
அங்கொன் றறியாமை நின்றாய் போற்றி
கொடிய வன்கூற்றம் உதைத்தாய் போற்றி
கோயிலா என்சிந்தை கொண்டாய் போற்றி
கடிய உருமொடு மின்னே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 10

உண்ணா துறங்கா திருந்தாய் போற்றி
ஓதாதே வேத முணர்ந்தாய் போற்றி
எண்ணா இலங்கைக்கோன் தன்னைப் போற்றி
இறைவிரலால் வைத்துகந்த ஈசா போற்றி
பண்ணா ரிசையின்சொற் கேட்டாய் போற்றி
பண்டேயென் சிந்தை புகுந்தாய் போற்றி
கண்ணா யுலகுக்கு நின்றாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 11

---

9. மூவாய் - மூதிராய். சென்றேறி - இடத்தில் ஏறிச்சென்று. ஆவா - ஆகுமாறு. அல்லல் - துன்பம். நலிய - வருத்த. அலர்ந்தேன் - வருந்தினேன். கனகத்திரள் - பொற்றிரள். (கனகம் - பொன்.)

10. நெடிய - பெரிய. இகலி - மாறுபட்டவனே; அறியாதவனே. வன் கூற்றம் - இயமன். கோயிலா - ஆலயமாக. உரும் - இடி. மின்னே - மின்னல்போன்றவனே.

11. எண்ணா - (பின் வருவனவற்றை) நினையாத. இறை - சிறிது காலம்; இரேகையுமாம். பண்டே - முன்பே. கண்ணாய் - ஆதரவாய்.

திருக்கயிலாயம் போற்றித் திருத்தாண்டகம் 6-ஆம் திருமுறை

பொறையுடைய பூமிநீ ரானாய் போற்றி
பூதப் படையாள் புனிதா போற்றி
நிறையுடைய நெஞ்சி னிடையாய் போற்றி
நீங்காதென் னுள்ளத் திருந்தாய் போற்றி
மறையுடைய வேதம் விரித்தாய் போற்றி
வானோர் வணங்கப் படுவாய் போற்றி
கறையுடைய கண்ட முடையாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 1

முன்பாகி நின்ற முதலே போற்றி
மூவாத மேனிமுக் கண்ணா போற்றி
அன்பாகி நின்றார்க் கணியாய் போற்றி
ஆறேறு சென்னிச் சடையாய் போற்றி
என்பாக எங்கும் அணிந்தாய் போற்றி
என்சிந்தை நீங்கா இறைவா போற்றி
கண்பாவி நின்ற கனலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 2

மாலையெழுந்த மதியே போற்றி
மன்னியென் சிந்தை இருந்தாய் போற்றி
மேலை வினைகள் அறுப்பாய் போற்றி
மேலாடு திங்கள் முடியாய் போற்றி
ஆலைக் கரும்பின் தெளிவே போற்றி
அடியார்கட் காரமுத மானாய் போற்றி
காலை முளைத்த கதிரே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 3

---

1. பொறையுடைய - தாங்கும் வலிமையுடைய. புனிதா - பரிசுத்த மானவனே. நிறையுடைய - உறுதிப்பாடு உடைய. மறை - இரகசியப் பொருள். கறை - விஷம். கண்டம் - கழுத்து.

2. முன்பு - உலகம் தோன்றுவதற்கு முன்பே. அணியாய் - அருகிலிருப்பவனே. ஆறு - கங்கை. கண் பாவி நின்ற கனலே - பரவிய அக்கினிக் கண்ணையுடையனே.

3. மாலை எழுந்த மதி - முழுமதி. மேலை வினைகள் - பழைய வினைகள். மேலாடு - வானில் சஞ்சரிக்கின்ற. காலை முளைத்த கதிர் - இளஞ் சூரியன். ஞாயிறும் திங்களும் இறைவரது திருமேனியுள் ஒவ்வொன்றும்.

உடலின் வினைக ளறுப்பாய் போற்றி
ஒள்ளெரி வீசும் பிரானே போற்றி
படருஞ் சடைமேல் மதியாய் போற்றி
பல்கணக் கூத்தப் பிரானே போற்றி
சுடரில் திகழ்கின்ற சோதி போற்றி
தோன்றியென் னுள்ளத் திருந்தாய் போற்றி
கடலில் ஒளியாய முதலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 4

மைசேர்ந்த கண்ட முடையாய் போற்றி
மாலுக்கும் ஓராழி ஈந்தாய் போற்றி
பொய்சேர்ந்த சிந்தை புகாதாய் போற்றி
போகாதென் னுள்ளத் திருந்தாய் போற்றி
மெய்சேரப் பால்வெண்ணீ றாடி போற்றி
மிக்கார்க ளேத்தும் விளக்கே போற்றி
கைசேர் அனலேந்தி யாடீ போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 5

ஆறேறு சென்னி முடியாய் போற்றி
அடியார்கட் காரமுதாய் நின்றாய் போற்றி
நீறேறு மேனி யுடையாய் போற்றி
நீங்காதென் னுள்ளத் திருந்தாய் போற்றி
கூறேறு மங்கை மழுவா போற்றி
கொள்ளுங் கிழமையே ழானாய் போற்றி
காறேறு கண்ட மிடற்றாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 6

---

4. ஒள் எரி - நிறைந்த அக்கினியின் ஒளியை. பல்கணக் கூத்தப் பிரானே - பல கணங்களுக்கும் இடையே ஆடுகின்ற தலைவனே. சுடர் - அக்கினி. தோன்றி - எழுந்தருளி.

5. மை - கருமை. ; விஷம். ஓராழி - ஒப்பற்ற சக்கரம். மெய்சேர - உடலில் பொருந்திய. மிக்கார்கள் - அன்பில் மிகுந்தவர்கள். விளக்கே - தீபம் போன்றவனே. ஆடி - கூத்தாடியவனே.

6. நீறுஏறுமேனி - விபூதி பூசிய திருமேனி. கூறு ஏறு - இடது பாகத்தில் ஏற்ற. கிழமை ஏழு - நாட் கூறுபாடு. காறு ஏறு - காருஏறு - கருமை நிறம் பொருந்தி. கண்ட - விளங்கிய. மிடறு - கழுத்து.

அண்டமே ழன்று கடந்தாய் போற்றி
ஆதி புராணனாய் நின்றாய் போற்றி
பண்டை வினைக ளறுப்பாய் போற்றி
பாரோர் விண்ணேத்தப் படுவாய் போற்றி
தொண்டர் பரவு மிடத்தாய் போற்றி
தொழில்நோக்கி யாளுஞ் சுடரே போற்றி
கண்டங் கறுக்கவும் வல்லாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 7

பெருகி யலைக்கின்ற ஆறே போற்றி
பேராநோய் பேர விடுப்பாய் போற்றி
உருகிநினை வார்தம் முள்ளாய் போற்றி
ஊனந் தவிர்க்கும் பிரானே போற்றி
அருகி மிளிர்கின்ற பொன்னே போற்றி
ஆருமிகழப் படாதாய் போற்றி
கருகிப் பொழிந்தோடு நீரே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 8

செய்ய மலர்மேலோன் கண்ணன் போற்றித்
தேடி யுணராமை நின்றாய் போற்றி
பொய்யாநஞ் சுண்ட பொறையே போற்றி
பொருளாக வென்னையாட் கொண்டாய் போற்றி
மெய்யாக ஆனஞ் சுகந்தாய் போற்றி
மிக்கார்க ளேத்துங் குணத்தாய் போற்றி
கையானை மெய்த்தோ லுரித்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 9

---

7. பாரோர் விண்-உலகத்தாரும் தேவரும். தொண்டர் பரவும் இடத்தாய். அடியார்கள் துதிக்கும் இடங்கள்தோறும் எழுந்தருளி இருப்பவனே. தொழில் நோக்கி ஆளும்-அவரவர் வினைக்கு ஏற்ப ஆண்டு அருளுகின்ற. கறுக்கவும் - கருநிறம் ஆகவும்.

8. பெருகி அலைகின்ற ஆறே - இமயமலையினின்றும் பெருகி ஓடி வருகின்ற கங்காநதி போன்ற பரிசுத்தமானவனே. பேரா நோய் - நீங்காத பிறவி நோய். ஊனம் - குற்றங்களை. அருகி - கிடைப்பதற்கு அருமையாகி. கருகி - மேகமாகி. பொழிந்து - மழை பெய்து.

9. செய்ய மலர் மேலோன்-செந்தாமரைமலரில்வீற்றிருக்கும்பிரமன். பொறை - பொறுமை. ஆன் அஞ்சு - பஞ்ச கவ்வியம். குணம் - கல்யாண குணம். கையானை - துதிக்கையினையுடைய யானையின். மெய் - உடல்.

மேல்வைத்த வானோர் பெருமான் போற்றி
மேலாடு புரமூன்று மெய்தாய் போற்றி
சீலத்தான் தென்னிலங்கை மன்னன் போற்றிச்
சிலையெடுக்க வாயலற வைத்தாய் போற்றி
கோலத்தாற் குறைவில்லான் தன்னை யன்று
கொடிதாகக் காய்ந்த குழகா போற்றி
காலத்தாற் காலனையும் காய்ந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 10

திருக்கயிலாயம் போற்றித் திருத்தாண்டகம் 6-ஆம் திருமுறை

பாட்டான நல்ல தொடையாய் போற்றி
பரிசை அறியாமை நின்றாய் போற்றி
சூட்டான திங்கள் முடியாய் போற்றி
தூமாலை மத்தம் அணிந்தாய் போற்றி
ஆட்டான தஞ்சும் அமர்ந்தாய் போற்றி
அடங்கார் புரமெரிய நக்காய் போற்றி
காட்டானை மெய்த்தோ லுரித்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 1

---

10. மேலாடுபுரம்-வானத்தில் திரிகின்ற முப்புரம்; பொன், வெள்ளி, இரும்புகளால் ஆகிய அழியாக் கோட்டைகளையுடைய ஊர். சீலத்தான் போற்றி என்க. சீலத்தான் - சகல ஒழுக்கங்களும் உடையவன். சிலை - கயிலைமலை. கோலத்தாற் குறைவில்லான் - மன்மதன். கோலம் - அழகு காய்ந்த - எரிந்த. காலத்தால் - காலால். காய்தல் - கோபித்து அழித்தல்.

1. பாட்டான நல்ல தொடையாய் - பாட்டாக அமைந்த ஆகம நூலை உபதேசித்து அருளியவனே; ஊழியில் நாத கீதங்களை முழக்குபவனே எனினுமாம். பரிசை அறியாமை - இன்ன தன்மையன் என்று அறிய முடியாதவனாய். சூட்டு ஆன - சூடும் பொருளான. தூமாலை - பரிசுத்தமான மாலை: தும்பைமாலையுமாம். மத்தம் - ஊமத்தை. ஆட்டானது - திருமஞ்சனம் ஆடுதற்குரிய. நக்காய் - சிரித்தவனே. காட்டானை - கஜமுகாசுரனை,

அதிரா வினைகள் அறுப்பாய் போற்றி
ஆல நிழற்கீழ் அமர்ந்தாய் போற்றி
சதுரா சதுரக் குழையாய் போற்றி
சாம்பர் மெய்பூசுந் தலைவா போற்றி
எதிரா வுலகம் அமைப்பாய் போற்றி
என்றும் மீளாவருள் செய்வாய் போற்றி
கதிரார் கதிருக்கோர் கண்ணே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 2

செய்யாய் கரியாய் வெளியாய் போற்றி
செல்லாத செல்வ முடையாய் போற்றி
ஐயாய் பெரியாய் சிறியாய் போற்றி
ஆகாய வண்ண முடையாய் போற்றி
வெய்யாய் தணியாய் அணியாய் போற்றி
வேளாத வேள்வி யுடையாய் போற்றி
கையார் தழலார் விடங்கா போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 3

ஆட்சி யுலகை யுடையாய் போற்றி
அடியார்க் கமுதெலாம் ஈவாய் போற்றி
சூட்சி சிறிது மிலாதாய் போற்றி
சூழ்ந்த கடல்நஞ்ச முண்டாய் போற்றி
மாட்சி பெரிது முடையாய் போற்றி
மன்னியென் சிந்தை மகிழ்ந்தாய் போற்றி
காட்சி பெரிது மரியாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 4

---

2. அதிரா-பயமுறுத்தும். சதுரா - சதுரப் பாட்டையுடையவனே. மீளா அருள் - பிறவா நெறி, மோட்சம். கதிரார் - விளங்கும் கதிர்களை யுடைய. கதிருக்கோர் கண் - ஒளிப்பொருளுக்கு ஒளி தருபவன்.

3. செய்யாய் - செந்நிறமுடையாய். செல்லாத செல்வம் - விட்டு நீங்காத பெருஞ் செல்வம். ஐயாய் - தலைவனாய் நின்றவனே. தணி - குளிர்ச்சி. வேளாத - வேள்வி புரியாத. விடங்கா - அழகனே; சுயம்புவே எனினுமாம்

4. ஆட்சி - ஆட்சி புரியும். சூட்சி - வஞ்சம்; பொய். மாட்சி - பெருமை. மன்னி - நிலைபெற்று. காட்சி - காணுதற்கு.

முன்னியா நின்ற முதல்வா போற்றி
மூவாத மேனி யுடையாய் போற்றி
என்னியா யெந்தை பிரானே போற்றி
ஏழின் இசையே உகப்பாய் போற்றி
மன்னிய மங்கை மணாளா போற்றி
மந்திரமுந் தந்திரமு மானாய் போற்றி
கன்னியார் கங்கைத் தலைவா போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 5

உரியா யுலகினுக் கெல்லாம் போற்றி
உணர்வென்னும் ஊர்வ துடையாய் போற்றி
எரியாய தெய்வச் சுடரே போற்றி
ஏசுமா முண்டி யுடையாய் போற்றி
அரியா யமரர்கட் கெல்லாம் போற்றி
அறிவே யடக்க முடையாய் போற்றி
கரியானுக் காழியன் றீந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 6

எண்மேலும் எண்ண முடையாய் போற்றி
ஏறரிய வேறுங் குணத்தாய் போற்றி
பண்மேலே பாவித் திருந்தாய் போற்றி
பண்ணொடி யாழ்வீணை பயின்றாய் போற்றி
விண்மேலும் மேலும் நிமிர்ந்தாய் போற்றி
மேலார்கள் மேலார்கள் மேலாய் போற்றி
கண்மேலுங் கண்ணொன் றுடையாய் பொற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 7

---

5. முன்னியா - முதல் நிற்பவராக. மூவாத - அழியாத; தளராத. என்னியா - என்னுடைய. உகப்பாய் - விரும்புவாய். மந்திரம் - வேதம். தந்திரம் - சிவாகமம். கன்னியார் - கன்னிப் பெண்ணாகிய. கங்கை - கங்கா தேவிக்கு.

6. உரியாய் - உரிமையானவனே. உணர்வு - உணர்ச்சி. ஊர்வது உடையாய் - ஊர்தியாக உடையவனே. ஏசு - பழித்தற்குரிய. மா முண்டி உடையாய் - பெரிய முண்டிதமாக விளங்குபவனே. கரியான் - திருமால்.

7. எண் மேலும் எண்ணம் - எண்ணங்களை எல்லாம் கடந்த எண்ணம். பண்மேலே - இசையின்மீது. மேலார்கள் மேலார்கள் மேலாய் - தேவ தேவர், கண்மேலும் கண் - நெற்றிக் கண்.

முடியார் சடையின் மதியாய் போற்றி
முழுநீறு சண்ணித்த மூர்த்தி போற்றி
துடியா ரிடையுமையாள் பங்கா போற்றி
சோதித்தார் காணாமை நின்றாய் போற்றி
அடியார் அடிமை அறிவாய் போற்றி
அமரர் பதியாள வைத்தாய் போற்றி
கடியார் புரமூன்று மெய்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 8

போற்றிசைத்துன் னடிபரவ நின்றாய் போற்றி
புண்ணியனே நண்ண லரியாய் போற்றி
ஏற்றிசைக்கும் வான்மே லிருந்தாய் போற்றி
எண்ணா யிரநூறு பெயராய் போற்றி
நாற்றிசைக்கும் விளக்காய நாதா போற்றி
நான்முகற்கும் மாற்கும் அரியாய் போற்றி
காற்றிசைக்குந் திசைக்கெல்லாம் வித்தே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 9–10

திருவேகம்பம் திருத்தாண்டகம் 6–ஆம் திருமுறை

அறுத்தான்காண் அயன்சிரத்தை அமரர் வேண்ட
ஆழ்கடலின் நஞ்சுண்டங் கணிநீர்க் கங்கை
செறுத்தான்காண் தேவர்க்குந் தேவன் தான்காண்
திசையனைத்துந் தொழுதேத்தக் கலைமான் கையில்

---

8. முழு நீறு - உடலெங்கும் திருவெண்ணீறு. சண்ணித்த - பூசிய. துடியார் - உடுக்கைபோன்ற. சோதித்தார் - அடி முடி தேடியவராகிய பிரம விஷ்ணுக்கள். கடியார் - காவல் பொருந்திய.

9–10. பரவ – துதிசெய்ய. நண்ணல் - (எளிதில்) அடைதற்கு. ஏற்று இசைக்கும் - புகழ் பொருந்திய. எண் ஆயிரம் நூறு - எண்ணப் படும் நூறு ஆயிரம்; இலட்சம்; அனந்தம் என்றலுமாம்; மாற்கும் திருமாலுக்கும். வித்தே - விதைபோன்றவனே.

11. அயன் - பிரமன். அமரர் வேண்ட-தேவர் வேண்டுகோளின்படி. கலைமான் - ஆண் மான். பொறுத்தான் - தாங்கினான். நால் அஞ்சு -

பொறுத்தான்காண் புகலிடத்தை நலிய வந்து
பொருகயிலை எடுத்தவன்தன் முடித்தோள் நாலஞ்சு
இறுத்தான்காண் எழிலாரும் பொழிலார் கச்சி
ஏகம்பன்காண் அவனென் எண்ணத் தானே. 11

திருவேகம்பம் திருத்தாண்டகம் 6-ஆம் திருமுறை

உமையவளை யொருபாகஞ் சேர்த்தி னான்காண்
உகந்தொலிநீர்க் கங்கைசடை யொழுக்கி னான்காண்
இமய வடகயிலைச் செல்வன் தான்காண்
இல்பலிக்குச் சென்றுழலும் நல்கூர்ந் தான்காண்
சமயமவை யாறினுக்குந் தலைவன் தான்காண்
தத்துவன்காண் உத்தமன்காண் தானே யாய
இமையவன்காண் எழிலாரும் பொழிலார் கச்சி
ஏகம்பன்காண் அவனென் எண்ணத் தானே. 7

பொது-க்ஷேத்திரக்கோவை திருத்தாண்டகம் 6-ஆம் திருமுறை

தில்லைச்சிற் றம்பலமும் செம்பொன் பள்ளி
தேவன்கு டிசிராப் பள்ளி தெங்கூர்
கொல்லிக் குளிரறைப் பள்ளி கோவல்
வீரட்டங் கோகரணங் கோடி காவும்

இருபது. என் எண்ணத்தான் - என்னுடைய நினைவில் இருப்பவன். "எழிலாரும் .... எண்ணத்தானே" இது பதிகத்தின் மகுடம் ஆகும்.

7. உகந்து - விரும்பி. ஒழுக்கினான் - பகீரதன் நிமித்தம் ஒழுக விட்டான். இமய வட கயிலை - இமயத்தில் வட பாரிசத்தில் திகழும் கயிலை மலை. இல்பலிக்கு - இல்லந்தோறும் பிச்சைக்கு. நல்கூர்தல் - வறுமை. சமயம் ஆறினுக்கும் தலைவன் - ஆறு சமயங்களிலும் அவரவர் பக்குவத்திற்கேற்ப விளங்கி அருள்பவன். சமயம் ஆறு - அகச் சமயம் ஆறு. அது சைவம். பாசுபதம். மாவிரதம். காளாமுகம். வாமம். வைரவம் என ஆறு. உத்தமன் - சகல குணங்களும் நிறைந்தவன்.

1. க்ஷேத்திரக் கோவை - இது சிவபெருமான் எழுந்தருளியுள்ள தலங்களை வாழ்த்தியதாகும். அத்தலங்களின் கோயில்களையே சிவனெனக் கண்டு தொழுதல். "ஆலயந் தானும் அரனெனத் தொழுமே" என்பது

முல்லைப் புறவம் முருகன் பூண்டி
முளையூர் பழையாறை சத்தி முற்றங்
கல்லில் திகழ்சீ ரார்கா ளத்தியுங்
கயிலாய நாதனையே காண லாமே. 1

ஆரூர்மூ லட்டானம் ஆனைக் காவும்
ஆக்கூரில் தான்தோன்றி மாடம் ஆவூர்
பேரூர் பிரமபுரம் பேரா வூரும்
பெருந்துறை காம்பீலி பிடவூர் பேணுங்
கூரார் குறுக்கைவீ ரட்டா னமுங்
கோட்டூர் குடமூக்குக் கோழம் பமுங்
காரார் கழுக்குன்றுங் கானப் பேருங்
கயிலாய நாதனையே காண லாமே. 2

இடைமரு தீங்கோய் இராமேச் சுரம்
இன்னம்பர் ஏரிடவை ஏமப் பேறூர்
சடைமுடி சாலைக் குடிதக் களூர்
தலையாலங் காடு தலைச்சங் காடு
கொடுமுடி குற்றாலங் கொள்ளம் பூதூர்
கோத்திட்டை கோட்டாறு கோட்டுக் காடு
கடைமுடி கானூர் கடம்பந் துறை
கயிலாய நாதனையே காண லாமே. 3

சிவஞானபோதம். கொல்லி குளிர் அறப்பள்ளி - கொல்லியறப்பள்ளி- (இது சேலம் நாமக்கல் தாலூகாவில் உள்ளது.) முல்லைப்புறவம் - முல்லை நிலத்தின் அருகுள்ள. முளையூர்-ஒரு வைப்புத்தலம். கல்லில்-மலைகளுள்ளே.

2. பேரூர் - மேலைச் சிதம்பரம்; பேராவூர் - வைப்புத் தலம். பெருந்துறை - திருப்பெருந்துறை. காம்பீலி - வைப்புத்தலம்; நேச நாயனார் அவதாரத் தலம். பிடவூர் - வைப்புத் தலம்; ஞான வுலாவைத் தமிழ் நாட்டில் வெளியிட்ட மா சாத்தனார் எழுந்தருளிய தலமுமாம்; இது திருச்சியை அடுத்த துறையூர் செல்லும் வழியில் உள்ளது.

3. ஏர், இடவை, சடைமுடி, சாலைக்குடி, கோட்டுக்காடு - இவை வைப்புத் தலங்கள். ஏமப் பேறூர் - நமிநந்தியடிகள் அவதாரத் தலம். தக்களூர் - இது திருநள்ளாற்றுக்குச் சமீபத்தில் உள்ளது. கோத்திட்டை - திருப்பரங்குன்றம். கடைமுடி - கீழூர்: இது செம்பொனார் கோயில் சமீபம் உள்ளது.

எச்சில் இளமர் ஏம நல்லூர்
இலம்பையங் கோட்டூர் இறையான் சேரி
அச்சிறு பாக்கம் அளப்பூர் அம்பர்
ஆவடு தண்டுறை அழுந்தூர் ஆறை
கச்சினங் கற்குடி கச்சூர் ஆலக்
கோயில் கரவீரங் காட்டுப் பள்ளி
கச்சிப் பலதளியும் ஏகம் பத்துங்
கயிலாய நாதனையே காண லாமே. 4

கொடுங்கோளூர் அஞ்சைக் களஞ்செங் குன்றூர்
கொங்கணங் குன்றியூர் குரக்குக் காவும்
நெடுங்களம் நன்னிலம் நெல்லிக் காவும்
நின்றியூர் நீடூர் நியம நல்லூர்
இடிம்பா வனமெழுமூர் ஏமூர் தோமூர்
எறும்பியூர் ஏராரு மேம கூடங்
கடம்பை இளங்கோயில் தன்னி லுள்ளுங்
கயிலாய நாதனையே காண லாமே. 5

மண்ணிப் படிக்கரை வாழ்கொளி புத்தூர்
வக்கரை மந்தாரம் வார ணாசி
வெண்ணி விளத்தொட்டி வேள்விக் குடி
விளமர் விராடபுரம் வேட்க ளத்தும்

---

4. எச்சில், இளமர், ஏமநல்லூர், இறையான்சேரி, அளப்பூர் - இவை வைப்புத் தலங்கள். (எச்சில் இளமர் என்பதை ஒன்ருகக் கூறி திருச்சியை அடுத்த மணச்சநல்லூர் என்பர். அளப்பூர் - தரங்கம்பாடி என்பர்.) கச்சிப் பலதளி - காஞ்சிபுரத்திலுள்ள பல சிவாலயங்கள்; கச்சபாலயம் முதலியன.

5. கொடுங்கோளூர் - சேரர் தலை நகரம். அஞ்சைக்களம் - திருவஞ்சைக்களம். செங்குன்றூர் - இது விறன்மிண்ட நாயனார் அவதாரத்தலம் கொங்கணம், நியமநல்லூர், ஏமூர், தோமூர் - இவை வைப்புத்தலம். எழுமூர் - எழும்பூர்; இது சென்னையிலுள்ளது. ஏம கூடம் - கதிர்காமம், கடம்பை இளங்கோயில் - கடம்பூர்த் தலத்திலுள்ள தனிக் கோயில். இது மீயச்சூர் இளங்கோயில்போல் ஆகும்.

6. வக்கரை – திருவக்கரை. மந்தாரம் – இது வைப்புத்தலம் வாரணாசி - காசி. விளத்தொட்டி - விராடபுரம்; இது திருச்சியை அடுத்த

பெண்ணை யருட்டுறை தண்பெண் ணுகடம்
பிரம்பில் பெரும்புலியூர் பெருவே ளூருங்
கண்ணை களர்க்காறை கழிப்பா லையுங்
கயிலாய நாதனையே காண லாமே. 6

வீழி மிழலைவெண் காடு வேங்கூர்
வேதிகுடி விசய மங்கை வியலூர்
ஆழி அகத்தியான் பள்ளி அண்ணா
மலைஆலங் காடும் அரதைப் பெரும்
பாழி பழனம் பனந்தாள் பாதாளம்
பராய்த்துறை பைஞ்ஞீலி பனங்காட் டூர்தண்
காழி கடல்நாகைக் காரோ ணத்துங்
கயிலாய நாதனையே காண லாமே. 7

உஞ்சேனை மாகாளம் ஊறல் ஓத்தூர்
உருத்திர கோடி மறைக்காட் டுள்ளும்
மஞ்சார் பொதியின்மலை தஞ்சை வழுவூர்
வீரட்டம் மாதானங் கேதா ரத்தும்
வெஞ்சமாக் கூடல் மீயச்சூர் வைகா
வேதீச்சுரம் விவீசுரம் வெற்றி யூருங்
கஞ்ச னூர் கஞ்சா று பஞ்சாக் கையுங்
கயிலாய நாதனையே காண லாமே. 8

பெரம்பலூர் தாலுகாவில் உள்ளது. பிரம்பில் - (திருச்சி) பெரம்பலூர் என்பர். கண்ணை, காறை - இவை வைப்புத் தலங்கள்.

7. வேங்கூர் - இது வைப்புத் தலம்; திருச்சியின் அருகு உள்ளது. ஆழி - கடலை அடுத்த. பழனம் - திருப்பழனம். காழி - சீகாழி. நாகைக் காரோணம் - நாகப்பட்டினம்.

8. உஞ்சேனை மாகாளம், உருத்திரகோடி - இவை வைப்புத் தலம். ஓத்தூர் - திருவோத்தூர். ஓத்து - வேதம். தஞ்சை - இது தஞ்சை தளிக்குளம் என்பர். மாதானம், வேதீச்சுரம், விவீசுரம், தெற்றியூர். கஞ்சாறு. பஞ்சாக்கை - இவை வைப்புத் தலங்கள். கஞ்சாறு - ஆன தாண்டவபுரம் என்னும் ஊர்; இது மானக்கஞ்சாற நாயனார் அவதாரத் தலம்.

திண்டீச்சரஞ் சேய்ஞலூர் செம்பொன் பள்ளி
தேவூர் சிரபுரஞ் சிற்றேமம் சேறை
கொண்டீச்சரங் கூந்தலூர் கூழையூர் கூடல்
குருகாவூர் வெள்ளடை குமரி கொங்கு
அண்டர் தொழும் அதிகை வீரட்டானம்
ஐயா றசோகந்தி ஆமாத் தூருங்
கண்டியூர் வீரட்டங் கருகா வூருங்
கயிலாய நாதனையே காண லாமே. 9

நறையூரிற் சித்தீச் சரம்நள் ளாறு
நாரையூர் நாகேச் சரம் நல்லூர் நல்ல
துறையூர் சோற்றுத்துறை சூல மங்கை
தோணிபுரந் துருத்தி சோமீச் சரம்
உறையூர் கடலொற்றி யூர்ஊற் றத்தூர்
ஓமாம் புலியூர் ஓர்ஏட கத்துங்
கறையூர் கருப்பறியல் கன்றாப் பூருங்
கயிலாய நாதனையே காண லாமே. 10

புலிவலம் புத்தூர் புகலூர் புன்கூர்
புறம்பயம் பூவணம் பொய்கை நல்லூர்
வலிவலம் மாற்பேறு வாய்மூர் வைகல்
வலஞ்சுழி வாஞ்சியம் மருகல் வன்னி

---

9. திண்டீச்சரம் - திண்டுக்கல் என்றும், திண்டிவனம் என்றும் கூறுவர். திண்டீச்சரம், கூந்தலூர், கூழையூர், குமரி கொங்கு, அசோகந்தி - இது வைப்புத் தலங்கள். கூடல் - நான்மாடக்கூடல்; மதுரை. குமரி கொங்கு - குமரித்துறை; காவிரித்துறை, இதனைக் கொங்கு நாட்டிலுள்ள மோகனூர் என்பர். குமரி - தென் குமரியுமாம்.

10. சூலம்ங்கை - இது பசுபதி கோயிலை அடுத்த சூலமங்கலம். சோமீச்சரம் - இதனை வடநாட்டிலுள்ள சோமீசம் என்றும் கும்பகோணத்திலுள்ள சோமீச்சரம் என்றும் கூறுகின்றனர். கடல் - கடலையடுத்த. ஊற்றத்தூர் - இது பிரம்பலூர் தாலுகாவை அடுத்த ஊட்டத்தூர். கறையூர் - பாண்டிக் கொடுமுடி.

11. புலிவலம். பொய்கைநல்லூர் - இவை வைப்புத்தலங்கள். (புலிவலம் - இது திருச்சி முசிரித்தாலுக்காவில் உள்ளது.) வன்னி - வன்னி

நிலமலி நெய்த்தானத்தோ டெத்தா னத்தும்
நிலவுபெருங் கோயில்பல கண்டால் தொண்டீர்
கலிவலிமிக் கோனைக்கால் விரலாற் செற்ற
கயிலாய நாதனையே காண லாமே. 11

அடைவு **திருத்தாண்டகம்** 6-ஆம் திருமுறை

கந்தமா தனங்கயிலை மலைகே தாரங்
காளத்தி கழுக்குன்றங் கண்ணார் அண்ணா
மந்தமாம் பொழிற்சா ரல்வட பர்ப்பதம்
மகேந்திரமா மலைநீலம் ஏம கூடம்
விந்தமா மலைவேதஞ் சைய மிக்க
வியன்பொதியின் மலைமேரு வுதயம் மத்தம்
இந்துசே கரனுறையும் மலைகள் மற்றும்
ஏத்துவோம் இடர்கெடநின் றேத்து வோமே. 9

கயிலாய மலையெடுத்தான் கரங்க ளோடு
சிரங்களுரம் நெரியக்கால் விரலாற் செற்றோன்
பயில்வாய பராய்த்துறை தென்பா லைத்துறை
பண்டெழுவர் தவத்துறை வெண்துறை பைம்பொழிற்
குயிலாலந் துறைசோற்றுத் துறைபூந் துறை
பெருந்துறையுங் குரங்காடு துறையி னோடு
மயிலாடு துறைகடம் பந்துறை ஆவடு
துறைமற்றுந் துறையனைத்தும் வணங்கு வோமே. 11

யூர். எத்தானத்தும்-எவ்விடத்தும். கலி-ஆரவாரம். பெருங் கோயில்பல கண்டால்கயிலாய நாதனையே (உறுதியாகக்) காணலாம் என்பது கருத்து.

9. அடைவு - புகலாக அடைதற்குரிய இடம். பிறவித் துன்பத்திற்கு அஞ்சிய உயிர்கள் வந்தடையும் இடங்கள் சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் தலங்களாம். இப் பாடல் இறைவன் எழுந்தருளிய மலைகளைக் குறிப்பதாகும். அண்ணா - திருவண்ணாமலை. மகேந்திர மாமலை - கயிலாயம் என்பர். ஏமகூடம் - கதிர்காமம். வேதமலை - திருக்கழுக்குன்றம். சையம் - காவிரி பிறக்கும் மலை. பொதியின் மலை - பொதிகை. உதயம்-உதயகிரி. அத்தம்-அத்தமனகிரி. இந்து சேகரன்-சிவபெருமான்.

11. இப் பாடல் துறை என்ற பெயருடைய தலங்களைத் தொகுத்துக் கூறுகின்றது. எழுவர் தவத்துறை - இது லால்குடி என வழங்குகிறது.

திருநாரையூர் **திருத்தாண்டகம்** 6-ஆம் திருமுறை

செம்பொன்னை நன்பவளந் திகழும் முத்தைச்
செழுமணியைத் தொழுமவர்தஞ் சித்தத் தானை
வம்பவிழும் மலர்க்கணைவேள் உலக்க நோக்கி
மகிழ்ந்தானை மதிற்கச்சி மன்னு கின்ற
கம்பனையெங் **கயிலாய மலையான்** தன்னைக்
கழுகினொடு காகுத்தன் கருதி யேத்தும்
நம்பனையெம் பெருமானை நாதன் தன்னை
நாரையூர் நன்னகரிற் கண்டேன் நானே. 4

திருக்குடந்தைக் கீழ்க்கோட்டம் 6-ஆம் திருமுறை

திருத்தாண்டகம்

சொன்மலிந்த மறைநான்கா றங்க மாகிச்
சொற்பொருளுங் கடந்தசுடர்ச் சோதி போலும்
கன்மலிந்த **கயிலைமலை** வாணர் போலும்
கடல்நஞ்ச முண்டிருண்ட கண்டர் போலும்
மன்மலிந்த மணிவரைத்திண் தோளர் போலும்
மலையரையன் மடப்பாவை மணாளர் போலும்
கொன்மலிந்த மூவிலைவேற் குழகர் போலும்
குடந்தைக்கீழ்க் கோட்டத்தெங் கூத்த னாரே. 1

---

4. நாரையூர்-இது நாரை பூசித்துப்பேறுபெற்றதால் பெற்றபெயர். சித்தம் - மனம். வம்பு - வாசனை. மலர்க்கணை வேள் - மன்மதன். உலக்க-அழிய. கம்பன்-ஏகம்பன். கழுகு-நாரை. காகுத்தன்-இராமன். நம்பனை - நம்பி வழிபடத் தக்கவனை.

1. குடந்தைக் கீழ்க்கோட்டம் - இது கும்பகோணத்திலுள்ள நாகேசுவர சுவாமி கோயில் ஆகும். சொற்பொருள் - சொல்லும் பொருளும். கல் மலிந்த - கற்கள் நிறைந்த. வாணர் - வாழ்நர். மன்மலிந்த - வலிமை மிகுந்த. கொன் - அச்சம்; பெருமை. கூத்தர் - இஃது இத் தலத்து இறைவர் திருநாமம்.

திருப்புத்தூர் **திருத்தாண்டகம்** 6-ஆம் திருமுறை

வாராரும் முலைமங்கை பங்கத் தான்காண்
மாமறைக ளாயவன்காண் மண்ணும் விண்ணும்
கூரார்வெங் தழலவனுங் காற்றும் நீரும்
குலவரையும் ஆயவன்காண் கொடுநஞ் சுண்ட
காராருங் கண்டன்காண் எண்தோ ளன்காண்
கயிலைமலைப் பொருப்பன்காண் விருப்போ டென்றும்
தேராரும் நெடுவீதித் திருப்புத் தூரில்
திருத்தளியான் காண்அவனென் சிந்தை யானே. 2

திருவாலங்காடு **திருத்தாண்டகம்** 6-ஆம் திருமுறை

காரார் கடல்நஞ்சை உண்டார் தாமே
கயிலை மலையை உடையார் தாமே
ஊரா ஏகம்ப முகந்தார் தாமே
ஒற்றியூர் பற்றி இருந்தார் தாமே
பாரார் புகழப் படுவார் தாமே
பழனை பதியா வுடையார் தாமே
தீராத வல்வினைநோய் தீர்ப்பார் தாமே
திருவாலங் காடுறையுஞ் செல்வர் தாமே. 9

மாலைப் பிறைசென்னி வைத்தார் தாமே
வண்**கயிலை மாமலையை** வந்தி யாத
நீலக் கடல்சூழ் இலங்கைக் கோனை
நெரிய விரலால் அடர்த்தார் தாமே

---

2. வார் - கச்சு. கூர் ஆர் - மிகுந்த. கொடு - கொடிய. எண் தோளன் - எட்டுத் திருத்தோள்களையுடையவன். தேர் ஆரும் - தேர் பொருந்திய. திருத்தளி - திருக்கோயிலின் பெயர். (தளி - கோயில்)

9. கார் ஆர் - கரு நிறம் பொருந்திய. ஊர் ஆ - தம் ஊராக. உகந்தார் - விரும்பினர். பாரார் - உலகிலுள்ளோர். பழனை - பழையனூர்; மரூஉ. தீராத - வேறு எவற்றாலும் தீர்க்க முடியாத. வல்வினை நோய் - ஆணவ மல நோய்.

10. வந்தியாத - வணங்காத. நெரிய - நசுங்க. பால் ஒத்த -

பாலொத்த மேனி நிறத்தார் தாமே
பழனை பதியா வுடையார் தாமே
சீலத்தார் ஏத்துந் திறத்தார் தாமே
திருவாலங் காடுறையுஞ் செல்வர் தாமே. 10

திருத்தலையாலங்காடு திருத்தாண்டகம் 6-ஆம் திருமுறை

கைத்தலங்கள் இருபதுடை அரக்கர் கோமான்
கயிலைமலை அதுதன்னைக் கருதா தோடி
முத்திலங்கு முடிதுளங்க வளைக ளெற்றி
முடுகுதலுந் திருவிரலொன் றவன்மேல் வைப்பப்
பத்திலங்கு வாயாலும் பாடல் கேட்டுப்
பரிந்தவனுக் கிராவணனென் றீந்த நாம
தத்துவனைத் தலையாலங் காடன் தன்னைச்
சாராதே சாலநாள் போக்கி னேனே. 10

திருமாற்பேறு திருத்தாண்டகம் 6-ஆம் திருமுறை

பாரானைப் பாரினது பயனா னானைப்
படைப்பாகிப் பல்லுயிர்க்கும் பரிவோன் தன்னை
ஆராத இன்னமுதை அடியார் தங்கட்கு
அனைத்துலகு மானானை அமரர் கோனைக்
காராருங் கண்டனைக் கயிலை வேந்தைக்
கருதுவார் மனத்தானைக் காலற் செற்ற
சீரானைச் செல்வனைத் திருமாற் பேற்றெஞ்
செம்பவளக் குன்றினைச்சென் றடைந்தேன் நானே. 1

(வெண்ணீறு பூசியதால்) பால் போன்ற. சீலத்தார் - ஒழுக்கமுடைய முனிவர்கள், ஏத்தும் - துதிக்கும்.

10. தலையாலங்காடு - இது தாருகாவனத்து முனிவர் ஏவிய முயலகன் மீது இறைவர் நடனம் செய்த தலம். வளைகள் - வீர வளையல்கள். எற்றி - நெரிய. பரிந்து - இரக்கங்கொண்டு. இராவணன் - இஃது அழுதவன் என்ற காரணப் பெயர். தத்துவன் - மேலானவன். சாலநாள் - மிகுந்த நாள் : வீண் காலம்.

1. பாரான் - நில வடிவாய் இருப்பவன். பரிவோன் - அன்புடையோன். ஆராத - நீங்காத. வேந்தை - தலைவனை. கருதுவார் மனத்தான் - நினைப்பவர் மனத்துள் இருப்பவன். காலன் - இயமன். செற்ற - அழித்த. சீரான் - சிறப்புடையவன்.

திருக்கோடிகா **திருத்தாண்டகம்** 6-ம் திருமுறை

படமாடு பன்னகக்கச் சசைத்தான் கண்டாய்
பராய்த்துறையும் பாசூரும் மேயான் கண்டாய்
நடமாடி ஏழுலகுந் திரிவான் கண்டாய்
நான்மறையின் பொருள்கண்டாய் நாதன் கண்டாய்
கடமாடு களிறுரித்த கண்டன் கண்டாய்
கயிலாயம் மேவி இருந்தான் கண்டாய்
குடமாடி இடமாகக் கொண்டான் கண்டாய்
கோடிகா அமர்ந்துறையுங் குழகன் தானே. 8-10

திருச்சாய்க்காடு **திருத்தாண்டகம்** 6-ஆம் திருமுறை

கானிரிய வேழம் உரித்தார் போலும்
காவிரிப்பூம் பட்டினத் துள்ளார் போலும்
வானிரிய வருபுரமூன் றெரித்தார் போலும்
வடகயிலை மலையதுதம் மிருக்கை போலும்
ஊனிரியத் தலைகலனு உடையார் போலும்
உயர்தோணி புரத்துறையும் ஒருவர்போலும்
தேனிரிய மீன்பாயுந் தெண்ணீர்ப் பொய்கைத்
திருச்சாய்க்காட் டினிதுறையுஞ் செல்வர் தாமே. 3

திருப்பாசூர் **திருத்தாண்டகம்** 6-ஆம் திருமுறை

வேந்தன்நெடு முடியுடைய அரக்கர் கோமான்
மெல்லியலாள் உமைவெருவ விரைந்திட் டோடிச்
சாந்தமென நீறணிந்தான் கயிலை வெற்பைத்
தடக்கைகளால் எடுத்திடலுந் தாளா லூன்றி

8-10. கோடிகா - இது மூன்று கோடி இருடியர் பூசித்த காரணத்தால் பெற்ற பெயர். பன்னகம் - பாம்பு. நாதன் - தலைவன். கடம் ஆடும் - மதம் ஒழுகும். குடமாடி - திருக்குடமூக்கு; கும்பகோணம்.

3. கான் இரிய - காட்டில் ஓடுகின்ற. ஊன் இரிய - தசைப்பற்று இல்லாத. தலை - பிரம கபாலம். தோணிபுரம் - சீகாழி. சாய்க்காடு - சாயாவனம்.

10. பாசூர் - இஃது இறைவன் மூங்கிலின் அடியில் முளைத்து எழுந்ததனுல் பெற்ற பெயர். (பாசு - மூங்கில்.) வேந்தன் - தலைவன். வெருவ

ஏந்துதிரள் திண்தோளுந் தலைகள் பத்தும்
இறுத்தவன்தன் இசைகேட்டு இரக்கங் கொண்ட
பாந்தளணி சடைமுடியெம் பாசூர் மேய
பரஞ்சுடரைக் கண்டடியேன் உய்ந்த வாறே. 10

திருச்செங்காட்டங்குடி திருத்தாண்டகம் 6-ஆம் திருமுறை

துங்கநகத் தாலன்றித் தொலையா வென்றித்
தொகுதிறலவ் விரணியனை ஆகங் கீண்ட
அங்கனகத் திருமாலும் அயனுந் தேடும்
ஆரழலை அனங்கனுடல் பொடியாய் வீழ்ந்து
மங்கநகத் தான்வல்ல மருந்து தன்னை
வண்கயிலை மாமலைமேல் மன்னி நின்ற
செங்கனகத் திரள்தோளெஞ் செல்வன் தன்னைச்
செங்காட்டங் குடியதனிற் கண்டேன் நானே. 2

திருமுண்டீச்சரம் திருத்தாண்டகம் 6-ஆம் திருமுறை

மூவன்காண் மூவர்க்கும் முதலா னான்காண்
முன்னுமாய்ப் பின்னுமாய் முடிவா னான்காண்
காவன்காண் உலகுக்கோர் கண்ணா னான்காண்
கங்காளன் காண்கயிலை மலையினான்காண்

- அஞ்ச. நீறணிந்தான் - திருவெண்ணீறு அணிந்த இறைவனின். இறுத்தவன் தன் - நசுங்கியவனுடைய. பாந்தள் - பாம்பு.

2. துங்கம் - உயர்வு. இரணியன் - பொன்னிறமான அரக்கன். ஆகம் - உடல். கீண்ட - கிழித்த. ஆரழல் - சோதி வடிவானவன். அனங்கன் - மன்மதன். மங்க - அழிய. வண் - வளமான. செங்கனகம் - ஆடகம் என்னும் பொன்.

4. முண்டீச்சரம் - இது தற்போது திருக்கிராமம் என வழங்குகிறது; திருவெண்ணெய் நல்லூருக்குக் கிழக்கே உள்ள தலம். மூவன் - முதிர்ந்தவன். காவன் - பாதுகாப்பவன். கண்ணானன் - ஆதரவானவன். கங்

ஆவன்காண் ஆவகத்தஞ் சாடி னான்காண்
ஆரழலாய் அயற்கரிக்கு மறிய வொண்ணாத்
தேவன்காண் திருமுண்டீச் சரத்து மேய
சிவலோகன் காண் அவனென் சிந்தையானே. 4

திருக்கஞ்சனூர் திருத்தாண்டகம் 6-ஆம் திருமுறை

தலையேந்து கையானை என்பார்த் தானைச்
சவந்தாங்கு தோளானைச் சாம்ப லானைக்
குலையேறு நறுங்கொன்றை முடிமேல் வைத்துக்
கோணாகம் அசைத்தானைக் குலமாங் கைலை
மலையானை மற்றொப்பார் இல்லா தானை
மதிகதிரும் வானவரும் மாலும் போற்றுங்
கலையானைக் கஞ்சனூர் ஆண்ட கோவைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டுய்ந் தேனே. 2

திருச்சிற்றம்பலம்

காளன் - என்பு அணிந்தவன். ஆ அகத்து அஞ்சு - பஞ்சகௌவியம். சிவலோகன் - சிவலோகத்தில் இருப்பவன்.

2. தலை - பிரம கபாலம். என்பு ஆர்த்தானை - என்பு மாலை அணிந்தவனை. குலை ஏறு - கொத்தாகப் பொருந்திய. கோணாகம் - கொல்லும் வலிமையுடைய பாம்பு. மதி கதிரும் - சந்திரனும் சூரியனும், கலையானை சகல கலைகளைத் தன்னிடத்தே உடையவனை, கோவை - தலைவனை,

உ

சிவசிவ

திருச்சிற்றம்பலம்

சுந்தரமூர்த்தி சுவாமிகள்

தேவாரம்

திருப்பழமண்ணிப்படிக்கரை பண்-நட்டராகம் 7-ஆம் திருமுறை

கடுத்தவன் தேர்கொண்டோடிக் **கயிலாயநன் மாமலையை**
எடுத்தவன் ஈரைந்துவா யரக்கன்முடி பத்தலற
விடுத்தவன் கைநரம்பால் வேதகீதங்கள் பாடலுறப்
படுத்தவன் பால்வெண்ணீற்றன் பழமண்ணிப் படிக்கரையே. 7

ஊர்த்தொகை பண்-பழம்பஞ்சுரம் 7-ஆம் திருமுறை

துருத்திச் சுடரே நெய்த்தா
னத்தாய் சொல்லாய் கல்லாலா
பருத்தி நியமத்(து) உறைவாய்
வெயிலாய்ப் பலவாய்க் காற்றானாய்
திருத்தித் திருத்தி வந்தென்
சிந்தை யிடங்கொள் **கயிலாயா**
அருத்தித்(து) உன்னை அடைந்தார்
வினைகள் அகல அருளாயே. 8

---

7. கடுத்தவன் - மிக வேகங் கொண்டவனாய். தேர் - புட்பக விமானம். முடி - சிரம். விடுத்தவன் - செய்தவன். பாடலுறப்படுத்தவன் - பாடும்படி செய்தவன். பால் - பால் போன்ற. பழமண்ணி - காவிரியின் கிளை நதி.

8. ஊர்த்தொகை - சிவத்தலங்களின் தொகுப்பு. துருத்தி - ஆற்றிடைக்குறை; குத்தாலம். சுடரே - சோதி வடிவானவனே. கல் ஆலா - கல்லால விருட்சத்தின் கீழ் இருப்பவனே. பருத்தி நியமம் . பருதி நியமம். திருத்தித் திருத்தி - பல முறையும் அறியாமையை நீக்கித் திருத்தம் செய்து. அருத்தித்து - அன்பு பூண்டு. வினைகள் - பழவினைகள்.

திருநள்ளாறு பண்-தக்கேசி 7-ஆம் திருமுறை

இலங்கை வேந்தன் எழில்திகழ் கயிலை
எடுப்ப ஆங்கிம வான்மகள் அஞ்சத்
துலங்கும் நீண்முடி ஒருபதுந் தோள்கள்
இருப துந்நெரித் தின்னிசை கேட்டு
வலங்கை வாளொடு நாமமுங் கொடுத்த
வள்ள லைப்பிள்ளை மாமதிச் சடைமேல்
நலங்கொள் சோதிநள் ளாறனை அமுதை
நாயி னேன்மறந் தென்னினைக் கேனே. 9

திருநன்னிலத்துப்பெருங்கோயில் 7-ஆம் திருமுறை

பண்-பஞ்சமம்

கருவரை போலரக்கன் கயிலைம்மலைக் கீழ்க்கதற
ஒருவிர லாலடர்த்(து)இன் னருள்செய்த உமாபதிதான்
திரைபொரு பொன்னிநன்னீர்த் துறைவன்திகழ் செம்பியர்கோன்
நரபதி நன்னிலத்துப் பெருங்கோயில் நயந்தவனே. 10

---

9. இமவான் - மேருமலை அரசன். இமவான் மகள் - பார்வதி தேவியார். வலம் - வெற்றியையுடைய. நாமம் - இராவணன் என்ற பெயர். வள்ளல் - இங்குச் சிவபெருமான். பிள்ளை மாமதி - மூன்றும் பிறைச்சந்திரன்.

10. கருவரை - கருமலை. உமாபதி - உமையுடன் கூடிய சிவபெருமான். திரை - அலை. பொரு - மோதுகின்ற. பொன்னி - காவிரி. செம்பியர்கோன் - சோழவரசன். நரபதி - மக்கட்கு அரசன் (கட்டிய). நயந்தவன் - விரும்பிய சிவபெருமான்,

திருநொடித்தான் மலை பண்-பஞ்சமம் 7-ஆம் திருமுறை

தானெனை முன்படைத்தா னதறிந்துதன் பொன்னடிக்கே
நானென பாடலந்தோ நாயினேனைப் பொருட்படுத்து
வானெனை வந்தெதிர்கொள்ள மத்தயானை யருள்புரிந்து
ஊனுயிர் வேறுசெய்தான் நொடித்தான்மலை உத்தமனே. 1

ஆனை யுரித்தபகை யடியேனொடு மீளக்கொலோ
ஊனை யுயிர்வெருட்டி யொள்ளியானை நினைந்திருந்தேன்
வானை மதித்(து)அமரர் வலஞ்செய்தெனை ஏறவைக்க
ஆனை யருள்புரிந்தான் நொடித்தான்மலை உத்தமனே. 2

மந்திர மொன்றறியேன் மனைவாழ்க்கை மகிழ்ந்தடியேன்
சுந்தர வேடங்களால் துரிசேசெயுந் தொண்டனெனை
அந்தர மால்விசும்பில் அழகானை யருள்புரிந்த
துந்தர மோநெஞ்சமே நொடித்தான்மலை உத்தமனே. 3

வாழ்வை உகந்தநெஞ்சே மடவார்தங்கள் வல்வினைபட்டு
ஆழ முகந்தஎன்னை யதுமாற்றி அமரரெல்லாம்
சூழ அருள்புரிந்து தொண்டனேன்பர மல்லதொரு
வேழ மருள்புரிந்தான் நொடித்தான்மலை யுத்தமனே. 4

---

1. தான்-இங்குச் சிவபெருமான். எனை-எனக்கு. முன் படைத்தான் - தனுகரணங்களைப் படைப்பித்தான். தன் பொன் அடிக்கு - அவன் திருவடிகளுக்கு. நாயினேனை - நாயினும் கீழ்ப்பட்ட என்னை. வான் - ஆகாயம். மத்தயானை - வெள்ளை யானை. ஊன் உயிர் வேறு செய்தான்- ஊனின் தன்மையும் உயிரின் தன்மையும் வேறாகச் செய்தான். நொடித்தான் மலை - கயிலை மலை: இது சங்கார மூர்த்தியின் மலை. (நொடித்தல் - அழித்தல்). உத்தமன் - மேலானவன்; இறைவன்.

2. அடியேனொடு மீள-உன் அடியவனுடன் முடிவடையும்படி. ஒள்ளியானை - உள்ளொளியாக இருக்கும் சிவனை. அமரர் - திருமால், பிரமன், இந்திரன் முதலிய தேவர்கள்.

3. சுந்தர வேடங்கள் - அழகிய குண்டலம் முதலிய சின்னங்கள். துரிசே செய்யும் - குற்றங்களையே புரியும். மால் - பெரிய. உம் தரமோ - உமக்குத் தகுதியோ. நெஞ்சமே - ஏ மனமே!

4. வாழ்வு - உலக வாழ்க்கை. ஆழமுகந்த - அழுந்தித் துன்பங்களில் உழன்ற. பரம் - தகுதி. வேழம் - வெள்ளை யானை.

மண்ணுல கிற்பிறந்து நும்மை வாழ்த்தும் வழியடியார்
பொன்னுல கம்பெறுதல் தொண்டனேன் இன்றுகண்டொழிந்தேன்
விண்ணுல கத்தவர்கள் விரும்பவெள்ளை யானையின்மேல்
என்னுடல் காட்டுவித்தான் நொடித்தான்மலை உத்தமனே. 5

அஞ்சினை ஒன்றிநின்று அலர்கொண்டடி சேர்வறியா
வஞ்சனை என்மனமே வைகிவானநன் னாடர்முன்னே
துஞ்சுதல் மாற்றுவித்துத் தொண்டனேன்பர மல்லதொரு
வெஞ்சின ஆனைதந்தான் நொடித்தான்மலை உத்தமனே. 6

நிலைகெட விண்அதிர நிலமெங்கும் அதிர்ந்தசைய
மலையிடை யானையேறி வழியேவரு வேனெதிரே
அலைகட லாலரையன் அலர்கொண்டுமுன் வந்திறைஞ்ச
உலையணை யாதவண்ணம் நொடித்தான்மலை உத்தமனே. 7

அரவொலி ஆகமங்கள் அறிவாரறி தோத்திரங்கள்
விரவிய வேதஒலி விண்ணெலாம்வந் தெதிர்ந்திசைப்ப
வரமலி வாணன்வந்து வழிதந்தெனக் கேறுவதோர்
சிரமலி யானைதந்தான் நொடித்தான்மலை உத்தமனே. 8

---

5. நும்மை - உம்மை. வழி அடியார் - தொன்றுதொட்டு வழிபட்டு வரும் சிவனடியார். கண்டொழிந்தேன் - நேரில் கண்டேன். என்னுடல் - எனது பூத உடலை. காட்டுவித்தான் - ஏற்றுவித்தான்.

6. அஞ்சினை ஒன்றி நின்று - பஞ்சாட்சரம் செபித்தலினால் மனம் ஒன்றுபட்டு; பஞ்சேந்திரியங்களை அடக்கி நின்று எனினுமாம். அலர் - புட்பம். துஞ்சுதல் மாற்றுவித்து - இறப்பினை ஒழித்து. பரம் அல்லது - எனக்கு உரியதாகக்கூடியது அல்லாத. வெம் சினம்-கடுங் கோபமுடைய. ஆனை - வெள்ளை யானை.

7. நிலை கெட - தன் நிலை மாறி. மலையிடை - மலையில். அலை கடலால் அரையன் - கடல் அரசன்; வருணன். அலர் கொண்டு – மலர் ஏந்தி. உலையணையாத வண்ணம் - கேடு அடையாதபடி (அருள் புரிந்தான்).

8. அர ஒலி - அர அர என்னும் ஒலிகள். ஆகமங்கள் - சிவாகமத் துதிகள். அறிவார் - அறிவுடையோர். வரமலி வாணன் - இறைவன். வழி வந்து - திருவருள் நெறியைக் காட்டி நின்று. சிரம் மலி-முதன்மையான. தந்தான் - அருளினான்.

இந்திரன் மால்பிரமன் எழிலார்மிகு தேவரெல்லாம்
வந்தெதிர் கொள்ளஎன்னை மத்தயானை யருள்புரிந்து
மந்திர மாமுனிவ ரிவனாரென எம்பெருமான்
நந்தமர் ஊரன்என்றான் நொடித்தான்மலை உத்தமனே. 9

ஊழிதோ றூழிமுற்றும் உயர்பொன்நொடித் தான்மலையைச்
சூழிசை யின்கரும்பின் சுவைநாவல வூரன்சொன்ன
ஏழிசை யின்தமிழால் இசைந்தேத்திய [1]பத்திவையும்
ஆழி கடலரையா அஞ்சையப்பர்க் கறிவிப்பதே. 10

திருச்சிற்றம்பலம்

திருக்கயிலைத் திருமுறை

முற்றிற்று

---

9. எழிலார் மிகு - அழகு மிகுந்த. மந்திர மாமுனிவர் - அஞ்செழுத்தை இடைவிடாது செபிக்கும் தவசிகள். நம் தமர் ஊரன் - நம்மைச் சேர்ந்த உறவினனாகிய ஆரூரன்.

10. ஊழி - உலக முடிவு. உயர் பொன் - உயர்ந்த பொன்னிறமான. சூழ் இசை - புகழுடன் கூடிய. நாவலவூரன் - திருநாவலூரில் அவதரித்தவர்; சுந்தரமூர்த்தி சுவாமிகள். ஏழிசையின் தமிழ் - இசைத் தமிழ். ஆழி - வட்டமான. அஞ்சையப்பர்க்கு - திருவஞ்சைக்களத்தில் எழுந்தருளிய சிவபெருமானுக்கு.

1. பாடம்: பத்தினையும்.

உ

சிவசிவ

திருச்சிற்றம்பலம்

இமயமலையிலுள்ள வேறு சிவத்தலங்கள்

திருஞானசம்பந்த சுவாமிகள்

தேவாரம்

திருஅனேகதங்காவதம் பண்-இந்தளம் 2-ஆம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

நீடல்மே வுநிமிர் புன்சடை மேலொர்நி லாமுளை
சூடல்மே வுமறை யின்முறை யாலொர்சு லாவழல்
ஆடல்மே வுமவர் மேயஅ னேகதங் காவதம்
பாடல்மே வுமனத் தார்வினை பற்றறுப் பார்களே. 1

சூலமுண் டுமழு வுண்டவர் தொல்படை சூழ்கடல்
ஆலமுண் டபெரு மான்றன்அ னேகதங் காவதம்
நீலமுண் டதடங் கண்ணுமை பாகம்நி லாயதோர்
கோல முண்டள வில்லைகு லாவிய கொள்கையே. 2

செம்பினா ருமதில் மூன்றெரி யச்சின வாயதோர்
அம்பினால் எய்தருள் வில்லிஅ னேகதங் காவதம்
கொம்பின் நேரிடை யாளொடுங் கூடிக்கொல் லேறுடை
நம்பன்நா மநவி லாதன நாவென லாகுமே. 3

---

1. நீடல் - நீளுதல். புன்சடை - மெல்லிய சடை ; பொன்னிறமான சடையுமாம். நிலா முளை - பிறைச்சந்திரன். மறையின் முறை - வேத விதிப்படி. சுலாவு - வலமாச் சுழலுகின்ற. அனேக தங்காவதம் - இஃது இமயமலையில் திருக்கேதாரம் செல்லும் வழியில் கடல் மட்டத்துக்கு 6,000 அடி உயரத்தில் உள்ளது. இதற்குக் கௌரி குண்டம் எனவும் பெயர் உண்டு. இங்கு வெந்நீர் ஊற்று இருக்கிறது. மேவும் - விரும்பும். வினைப்பற்று - வினையால் வரும் பாசபந்தம்,

2. தொல்படை - பழமையாகிய படை; அது சூலம் மழு என்பதாம். நீலம் உண்ட - நீலோற்பலத்தின் நிறத்தைக்கொண்ட. நிலாயதோர் கோலம் - சோதி மபமாக எழுந்தருளிய திருக்கோலம். குலாவிய - பொருந்திய.

3. சினம் வாய் அது - எரிதல் பொருந்திய முனையை உடையதாகிய. நேரிடையாள் - உமாதேவியார். கொல் ஏறு - கொல்லும் இடபம், நம்பன் - உயிர்கள் நம்பி வழிபடுதற்குரியவன்; சிவன் நாமம் - பஞ்சாட்சரம்.

தந்தத்திந் தத்தட மென்றரு வித்திரள் பாய்ந்துபோய்ச்
சிந்தவெந் தகதி ரோனொடு மாசறு திங்களார்
அந்தமில் லவளவில்லஅ **னேகதங் காவதம்**
எந்தைவெந் தபொடி நீறணி வார்க்கிட மாவதே. 4

பிறையுமா சில்கதி ரோனறி யாமைப்பெ யர்ந்துபோய்
உறையுங்கோ யில்பசும் பொன்னணி யாரசும் பார்புனல்
அறையுமோ சைபறை போலும்அ **னேகதங் காவதம்**
இறையெம் மீசனெம் மானிட மாகவு கந்ததே. 5

தேனையே றுநறு மாமலர் கொண்டடி சேர்த்துவீர்
ஆனையே றுமணி சாரல்அ **னேகதங் காவதம்**
வானையே றுநெறி சென்றுண ருந்தனை வல்லிரேல்
ஆனையே றுமுடி யானருள் செய்வதும் வானையே. 6

வெருவிவே ழமிரி யக்கதிர் முத்தொடு வெண்பளிங்
குருவிவீ ழவயி ரங்கொழி யாவகி லுந்திவெள்
அருவிபா யுமணி சாரல்அ **னேகதங் காவதம்**
மருவிவா ழும்பெரு மான்கழல் சேர்வது வாய்மையே. 7

ஈரமே துமில னாகியெ ழுந்தஇ ராவணன்
வீரமே துமில னாகவி ளைத்தவி லங்கலான்
ஆரம்பாம் பதணி வான்றன்அ **னேகதங் காவதம்**
வாரமா கிநினை வார்வினை யாயின மாயுமே. 8

---

4. தந்தத்திந்தத்தடம் - இது அருவி பாயும் ஒலிக்குறிப்பு. வெந்த கதிர் - சூரியன். அந்தம் - முடிவு. அளவு - எல்லை. எந்தை - எமது சிவபெருமான். வெந்த பொடி நீறு - விபூதி.

5. மாசில் - குற்றம் இல்லாத. அறியாமை - (கோயிலின் உயர்ச்சியினை) அறியமுடியாமல். அசும்பார் - துளிகளையுடைய. புனல் - நீர். பறை - வாத்தியம்.

6. தேனை ஏறும் - தேன் பொருந்திய. சேர்த்துவீர் - தூவி வழிபடுவீர். ஆனை - யானை. வான் - வீட்டுலகம். நெறி - சரியை முதலிய நெறிகள். ஆன் ஐ - பஞ்ச கவ்வியம். வானையே - மோட்சத்தையே.

7. வெருவி - பயந்து. இரிய - ஓட. கதிர் முத்து - வெள்ளிய முத்து. உருவி - ஊடுருவி. அகில் - ஒரு வாசனை மரம். மருவி - பொருந்தி. வாய்மை - உண்மை நெறி.

8. ஈரம் - அன்பு. ஏதும் - ஒன்றும். சிறிதும்; விலங்கலான் - கயிலை மலையில் எழுந்தருளிய சிவபெருமான். ஆரம் - மாலை. வாரம் - அன்பு. மாயும் - அழியும்.

GOVERNMENT ORIENTAL
3 - AUG 1957
MADRAS

கண்ணன்வண் ணமல ரானொடுங் கூடியோர்க் கையமாய்
எண்ணும்வண் ணமறி யாமையெ ழுந்ததோ ராரழல்
அண்ணல்நண் ணுமணி சாரல்அ னேகதங் காவதம்
நண்ணும்வண் ணமுடை யார்வினை யாயின நாசமே. 9

மாப தம்மறி யாதவர் சாவகர் சாக்கியர்
ஏப தம்பட நின்றிறு மாந்துழல் வார்கள்தாம்
ஆப தம்மறி வீருளி ராகில்அ னேகதங்
காப தம்மமர்ந் தான்கழல் சேர்தல்க ருமமே. 10

தொல்லையூ ழிப்பெயர் தோன்றிய தோணிபு ரத்திறை
நல்லகேள் வித்தமிழ் ஞானசம் பந்தன்நல் லார்கள்முன்
அல்லல்தீ ரவுரை செய்தஅ னேகதங் காவதம்
சொல்லநல் லஅடை யும்மடை யாசுடு துன்பமே. 11

திருச்சிற்றம்பலம்

---

9. கண்ணன் - இங்குத் திருமால். மலரான் - பிரமன். ஐயம் - சந்தேகம். ஆர் அழல் - பெருஞ் சோதி; அக்கினித் தம்பம். அண்ணல் - சிவபெருமான். நண்ணும் - பொருந்தும். மணி - அழகிய. நண்ணும் - சேர்ந்து வழிபாடு செய்யும். வண்ணம் - வகை.

10. மாபதம் - பெரும் பதவி. சாவகர், சாக்கியர் - புத்தர்கள். ஏ பதம் - இகழ்ச்சிச் சொல். ஆ பதம் - ஆன்மாவின் தன்மையை. கருமம் - இன்றியமையாத கடன்.

11. தொல்லை - பழைய. தோணிபுரம் - சீகாழி. நல்லார்கள் - சிவனடியார்கள். அல்லல் தீர - துன்பம் நீங்க. சொல்ல - நாடோறும் கூற. நல்ல - நல்லன. சுடு துன்பம் - வருத்தும் பழ வினைகள்.

திருக்கேதாரம் பண்-செவ்வழி 2-ஆம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

தொண்டரஞ்சு களிறும் மடக்கிச் சுரும்பார்மலர்
இண்டைகட்டி வழிபாடு செய்யு மிடமென்பரால்
வண்டுபாட மயிலால மான்கன்று துள்ளவரிக்
கெண்டைபாயச் சுனைநீல மொட்டலருங் கேதாரமே. 1

பாதம்விண்ணோர் பலரும் பரவிப் பணிந்தேத்தவே
வேதநான்கும் பதினெட்டொ டாறும் விரித்தார்க்கிடம்
தாதுவிண்ட மதுவுண்டு மிண்டிவரு வண்டினம்
கீதம்பாட மடமந்தி கேட்டுகளுங் கேதாரமே. 2

முந்திவந்து புரோதாய மூழ்கி முனிகள்பலர்
எந்தைபெம்மா னெனநின் றிறைஞ்சு மிடமென்பரால்
மந்திபாயச் சரேலச் சொரிந்தும் முரிந்துக்கபூக்
கெந்தநாறக் கிளருஞ் சடையெந்தை கேதாரமே. 3

---

1. தொண்டர் - சிவத்தொண்டர். அஞ்சுகளிறும் - ஐம்புலனாகிய யானைகளை. மடக்கி - தம் வழியில் செல்லாது இறைவழிபாட்டில் திருப்பி. சுரும்பு - வண்டு. இண்டை - இண்டை மாலை; தலைக்கணியும் மாலை. ஆல - ஆட, வரி - கோடுகளையுடைய. சுனை - மலையிலுள்ள நீர் நிலை. நீலம் - நீலோற்பலம். மொட்டு - அரும்பு. ஆல் - அசை. கேதாரம் - இஃது இமயத்திலுள்ள ஒரு சிவத்தலம்; இத்தலம் கடல் மட்டத்துக்கு 11,750 அடி உயரத்தில் அமைந்துள்ளது. இத் தலத்திற்கு ஹரத்துவாரின் வழியே மோட்டார்வண்டி மூலம் 95 மைலும், கால் நடையாக 48 மைலும் இமயத்தை நோக்கிச் செல்லவேண்டும்.

2. பாதம் - திருவடிகளையே. பரவி - துதித்து. ஏத்த - வழிபட, பதினெட்டு - புராணங்கள் பதினெட்டு. ஆறு - வேதாங்கம் ஆறு. விரித்தார்க்கு - உபதேசித்த இறைவர்க்கு. தாது - மகரந்தம். மது - தேன். மிண்டி - செருக்கொடு. மடம் - அறியாமை. மந்தி - பெண் குரங்கு. உகளும் - குதிக்கும்.

3. முந்தி வந்து - யாவர்க்கும் முற்பட வந்து. புரோதாயம் - உதயத்திற்கு முன்னே. மூழ்கி - நீரில் ஸ்நானம் செய்து. இறைஞ்சும் - வணங்குகின்ற. சரேல - சரேலென்று. முரிந்து - (பூங்கிளைகள்) முரிந்து. உக்க - சிதறிய. கெந்தம் - நறுமணம். கிளரும் - விளங்குகின்ற - சடை எந்தை - சிவன்.

உள்ளமிக்கார் குதிரைம் முகத்தார் ஒருகாலர்கள்
எள்கலில்லா இமையோர்கள் சேரும் மிடமென்பரால்
பிள்ளை துள்ளிக் கிளைபயில்வ கேட்டுப் பிரியாதுபோய்க்
கிள்ளையேனற் கதிர்கொணர்ந்து வாய்ப்பெய்யுங் கேதாரமே. 4

ஊழியூழி யுணர்வார்கள் வேதத்தினொண் பொருள்களால்
வாழியெந்தை யெனவந்தி றைஞ்சும் மிடமென்பரால்
மேழிதாங்கி உழுவார்கள் போலவ்விரைதேரிய
கேழல்பூழ்தி கிளைக்க மணிசிந்துங் கேதாரமே. 5

நீறுபூசி நிலத்துண்டு நீர்மூழ்கி நீள்வரைதன்மேல்
தேறுசிந்தை யுடையார்கள் சேரும் மிடமென்பரால்
ஏறிமாவின் கனியும்பலா வின்னிருஞ் சுளைகளும்
கீறிநாளும் முசுக்கிளையொ டுண்டுகளுங் கேதாரமே. 6

மடந்தைபாகத் தடக்கிம் மறையோதி வானோர்தொழத்
தொடர்ந்த நம்மேல் வினைதீர்க்க நின்றார்க் கிடமென்பரால்
உடைந்தகாற்றுக் குயர்வேங்கை பூத்துதிரக்கல் லறைகண்மேல்
கிடந்தவேங்கை சினமாமுகஞ் செய்யுங் கேதாரமே. 7

---

4. உள்ளம் மிக்கார் - மிக ஊக்கம் உடையவர்களாகிய. குதிரை முகத்தார் - குதிரை முகத்தையுடைய கந்தர்வர்கள். எள்கல் - இகழ்ச்சி. பிள்ளை - குஞ்சுகள். கிளை பயில்வ - கிளை முதலிய ஏழு சுரங்களைப் பழகும் வகைகளை. கிள்ளை - தாய்க்கிளி. ஏனல் - தினை. பெய்யும் – ஊட்டும்.

5. உணர்வார்கள் - திரிகாலங்களையுணரும் முனிவர்கள். ஒண் பொருள் - மந்திரம். இறைஞ்சும் - வணங்கும். மேழி - கலப்பை. உழுவார்கள் போல் - உழவர்கள் போல். கேழல் - பன்றி. கிளைக்க - உழ. மணி - நவரத்தினங்கள்.

6. நீறு - விபூதி. நிலத்து உண்டு - நிலத்தில் உண்ணுதல் முதலிய நியமம் பூண்டு. மாவின் கனி - மாங்கனி. இன் - இனிய. இரும்-பெரிய. சுளை - பலாச் சுளைகளை. முசு - குரங்கு. கிளையொடு - சுற்றத்தாருடன். உகளும் - துள்ளிக் குதிக்கும்.

7. மடந்தை - உமாதேவியார். மறை - வேதங்களை. தொடர்ந்த நம் மேல்வினை - நம்மைந் தொடர்ந்து வரும் சஞ்சித ஆகாமிய வினைகள். உடைந்த - மோதும்; வேங்கை - வேங்கை மரம். கிடந்த வேங்கை - படுத்திருக்கும் வேங்கைப் புலியின் இனத்தை. சினம் - கோபமுடைய. செய்யும் - தோற்றுவிக்கும்.

அரவமுந்நீ ரணியிலங்கைக் கோனையரு வரைதனால்
வெருவவூன்றி விரலால் அடர்த்தார்க் கிடமென்பரால்
குரவங்கோங்கங் குளிர்பிண்டி ஞாழல்சுர புன்னைமேல்
கிரமமாக வரிவண்டு பண்செய்யுங் கேதாரமே. 8

ஆழ்ந்துகாணார் உயர்ந்தெய்த கில்லார் அலமந்தவர்
தாழ்ந்துதந்தம் முடிசாய நின்றார்க் கிடமென்பரால்
வீழ்ந்துசெற்று நிழற்கிறங்கும் வேழத்தின்வெண் மருப்பினைக்
கீழ்ந்துசிங்கங் குருகுண்ண முத்துதிருங் கேதாரமே. 9

கடுக்கள்தின்று கழிமீன் கவர்வார்கள் மாசுடம்பினர்
இடுக்கணுய்ப்பார் அவரெய்த வொண்ணா இடமென்பரால்
அடுக்கநின்றவ் வறவுரைகள் கேட்டாங் கவர்வினைகளைக்
கெடுக்கநின்ற பெருமான் உறைகின்ற கேதாரமே. 10

வாய்ந்தசெந்நெல் விளைகழனி மல்கும்வயற் காழியான்
ஏய்ந்தநீர்க்கோட் டிமையோர் உறைகின்ற கேதாரத்தை
ஆய்ந்துசொன்ன அருந்தமிழ்கள் பத்தும்மிசை வல்லவர்
வேந்தராகி உலகாண்டு வீடுகதி பெறுவரே. 11

திருச்சிற்றம்பலம்

---

8. அரவம் - ஒலியையுடைய. முந்நீர் - கடல். வெருவ - அஞ்சும் படியாக. குரவம் கோங்கம் - ஒரு வகை மரங்கள். பிண்டி - அசோகு. ஞாழல் - புலி நகக் கொன்றை. பண் செய்யும் - பாடும்.

9. ஆழ்ந்து - அகழ்ந்து சென்று. காணார் - அடியைக் காணமாட்டாத திருமால். எய்தகில்லார் - முடியை அடைய முடியாதவராகிய பிரமன். அலமந்து - மனம் சுழன்று. தம்தம் - தங்கள் தங்கள். நின்றார்க்கு - அக்கினி வடிவாக நின்ற சிவபெருமானுக்கு. இறங்கும் - இறங்கிய யானையின்மேல். மருப்பு - தந்தம். கீழ்ந்து - பிடுங்கி. குருகு - அதன் குருத்தை.

10. கடுக்கள் - கடுக்காய்களை. கழி - உப்பங்கழியிலுள்ள. கடுக்காய், மீன் இவை உண்ணுதல் பௌத்தர் வழக்கம். மாசுடம்பினர் - நீராடாமையால் அழுக்கு ஏறிய உடம்பை உடைய சமணர். இடுக்கண் - துன்ப வழியில். அடுக்க நின்ற - நமக்குப் பொருந்தியதாய் உள்ள. அறவுரை - சைவ சமய நெறிகளின் உரைகளை.

11. வாய்ந்த - பொருந்திய. கழனி - வயல். காழியான் - திருஞான சம்பந்தர். நீர்க்கோடு-சுனைக்கரை. வீடு கதி பெறுவர்-மோட்சமடைவர்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள்

தேவாரம்

திருக்கேதாரம் | பண்-நட்டபாடை | 7-ஆம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

வாழ்வாவது மாயம்மிது மண்ணாவது திண்ணம்
பாழ்போவது பிறவிக்கடல் பசிநோய்செய்த பறிதான்
தாழாதறஞ் செய்மின்தடங் கண்ணான்மல ரோனும்
கீழ்மேலுற நின்றான் திருக்கேதாரமெ னீரே. 1

பறியேசுமந் துழல்வீர்பறி நரிகீறுவ தறியீர்
குறிகூவிய கூற்றங்கொளும் நாளால்அறம் உளவே
அறிவானிலும் அறிவான்நல நறுநீரொடு சோறு
கிறிபேசிநின் றிடுவார்தொழு கேதாரமெ னீரே. 2

கொம்பைப்பிடித் தொருக்காலர்கள் இருக்கால்மலர் தூவி
நம்பன்நமை யாள்வானென்று நடுநாளையும் பகலும்
கம்பங்களிற் றினமாய்நின்று சுனைநீர்களைத் தூவிச்
செம்பொற்பொடி சிந்துந்திருக் கேதாரமெ னீரே. 3

---

1. வாழ்வு - உலக வாழ்க்கை; இன்ப வாழ்க்கை. மாயம் - பொய். பாழ் போவது - பாழடையவேண்டியது. பறிதான் - கொள்ளை. தாழாது - தாமதிக்காமல். தடங்கண்ணான் - திருமால். கீழ் மேல் உற நின்றான் - அடி முடியைத் தேடும்படி நின்றவனாகிய சிவபெருமான். எனீர், என்னீர் - என்று சொல்லுங்கள்.

2. பறியே - உடலையே; பொன்னையே. பறி நரி கீறுவது - உடலை நரி தோண்டிக் கிழிப்பதை. குறி - இலட்சியம். நாளாய் - நாளில். அறிவானினும் அறிவான் - அறிகின்றவனிடத்தும் உடனிருந்து அறிகின்றவன். நல - நல்ல. சோறு - உணவு. கிறி பேசி - பரிகாசத்தைப் பேசி.

3. கொம்பு - யோகதண்டம். ஒருக்காலர்கள் (ஒருக்கு காலர்கள்) - பிராண வாயுவை நிறுத்தியவர்கள். மனத்தை அடக்கிய மகான்கள் (கால் - வழி). இருக்கால் - இருக்கு வேத மந்திரங்களால். நமை - நம்மை. நடு நாள் - நள்ளிரவு. கம்பம் - கட்டுத்தறி. பொன் பொடி - பொற்றூள்.

உழக்கேயுண்டு படைத்(து)ஈட்டிவைத் திழப்பார்களுஞ் சிலர்கள்
வழக்கேயெனிற் பிழைக்கேமென்பர் மதிமாந்திய மாந்தர்
சழக்கேபறி நிறைப்பாரொடு தவமாவது செயன்மின்
கிழக்கேசல மிடுவார்தொழு கேதாரமெ னீரே. 4

வாளோடிய தடங்கண்ணியர் வலையிலழுந் தாதே
நாளோடிய நமனார்தமர் நணுகாமுனம் நணுகி
ஆளாயுய்ம்மின் அடிகட்கிட மதுவேயெனி லிதுவே
கீளோடர வசைத்தானிடங் கேதாரமெ னீரே. 5

தளிசாலைகள் தவமாவது தம்மைப்பெறி லன்றே
குளியீருளங் குருக்கேத்திரங் கோதாவிரி குமரி
தெளியீருளஞ் சீபர்ப்பதந் தெற்குவடக் காகக்
கிளிவாழையொண் கனிகீறியுண் கேதாரமெ னீரே. 6

பண்ணின்தமி ழிசைபாடலின் பழவேய்முழ வதிரக்
கண்ணின்னொளி கனகச்சுனை வயிரம்மவை சொரிய
மண்ணின்றன மதவேழங்கள் மணிவாரிக்கொண் டெறியக்
கிண்ணென்றிசை முரலுந்திருக் கேதாரமெ னீரே. 7

---

4. உழக்கே உண்டு - உழக்கரிசிச் சோற்றையே புசித்து. படைத்து - பணம் சம்பாதித்து. ஈட்டி வைத்து - சேர்த்து வைத்து. வழக்கே எனில் - தருமம் செய் என்றால். மதிமாந்திய - அறிவு மயங்கிய. சழக்கு - அறியாமை. பறி - பொன். கிழக்கே ; கீழ்த்திசை நோக்கி. சலமிடுவார் - அனுட்டானம் புரிபவர்; உவப்பிக்கு முறையால் நீரைச் சொரிபவர்.

5. வாள் ஓடிய - ஒளி வீசும். தடங்கண்ணியர் - பெண்கள். நாள் ஓடிய - காலம் விரைவாகச் செல்ல. நமனார் தமர் - எம தூதர்கள். கீள் - கீளுடை ; கௌபீனம்.

6. தளி - கோயில்கள். சாலை - அறச் சாலைகள். தம்மைப் பெறில் - இறைவனை (அடைக்கலமாகப்) பெற்றால். தவம் ஆவது - தவத்தின் பயன் ஆகும். குருக்கேத்திரம் - குருக்ஷேத்திரம். குமரி - கன்னியாகுமரி. உள் குளியீர் - மூழ்குவீர். அம் - அழகிய. உளம் தெளியீர் - மனம் தெளிவடைவீர். சீபர்ப்பதம் - ஸ்ரீசைலம்.

7. பண்ணின் தமிழிசைப் பாடல் - பண்ணோடு கூடிய இனிய தமிழ் இசைப் பாட்டுக்கள். பழ வேய் - முதிர்ந்த மூங்கிலால் செய்த குழல். முழவு - மத்தளம். கிண்ணென்று - இது ஒலிக்குறிப்பு. முரலும் - ஒலிக்கும்.

முளைக்கைப்பிடி முகமன்சொலி முதுவேய்களை யிறுத்துத்
துளைக்கைக்களிற் றினமாய்நின்று சுனைநீர்களைத் தூவி
வளைக்கைப்பொழி மழைகூர்தர மயில்மான்பிணை நிலத்தைக்
கிளைக்கமணி சிந்துந்திருக் கேதாரமெ னீரே. 8

பொதியேசுமந் துழல்வீர்பொதி அவமாவதும் அறியீர்
மதிமாந்திய வழியேசென்று குழிவீழ்வதும் வினையால்
கதிசூழ்கடல் இலங்கைக்கிறை மலங்கவரை யடர்த்துக்
கெதிபேறுசெய் திருந்தானிடங் கேதாரமெ னீரே. 9

நாவின்மிசை அரையன்னொடு தமிழ்ஞானசம் பந்தன்
யாவர்சிவ னடியார்களுக் கடியானடித் தொண்டன்
தேவன்திருக் கேதாரத்தை ஊரன்உரை செய்த
பாவின்தமிழ் வல்லார்பர லோகத்திருப் பாரே. 10

திருச்சிற்றம்பலம்

GOVERNMENT ORIENTAL ... LIBRARY
3 - AUG 1957
MADRAS

8. முளைக்கை - முளைபோல் வளைந்த துதிக்கை. பிடி - பெண் யானை. முகமன் - உபசார வார்த்தை. முது வேய் - முதிர்ந்த மூங்கில்களை. இறுத்து - ஒடித்து. வளை - வளைந்த. மான்பிணை - பெண் மான்கள். கிளைக்க - கீறுதலால்.

9. பொதி - உடலின் பாரம். அவமாவதும் - வீணாக அழிவதும். குழி - படுகுழி; பாவச் செயல். கதி சூழ் - விரைந்து செல்லும் அலைகள் சூழ்ந்த. மலங்க - மனங் கலங்க. வரை - கயிலை மலை. கதி பேறு - நற்கதி.

10. நாவின் மிசை அரையன் - திருநாவுக்கரசர். தமிழ் - தமிழ்ப் பாடல் பாடும். யாவர் - எவர். இவ்விருவர்களும் ஆகிய. அடியான் - அடியவன். தேவன் - சிவபெருமான். ஊரன் - நாவலூரன்; சுந்தரர். பா இன் தமிழ் - இனிய தமிழ்ப் பா. பர லோகம் - சிவலோகம்.

திருக்கேதார மகிமை

அறம்பொருள்கள் இன்பம்வீ(டு) அருள்நந்தி ஆரூரர்
ஆதியோர் மேவுகயிலை
யங்கிரிக் குத்தெற்கு இலக்கமே இருபதுடன்
ஐயாயி ரம்படியெனும்
நிறைந்தமலை உண்(டு)அவையுள் முதல்மலைஇ(து); ஆதலால்
நின்னைக்க வானில்வைத்து
நீள்மந்திர சிங்கா தனத்(து)அம்மை யுடன்மேவும்
நிருமலன் வெள்ளிவெற்பில்
பிறந்திறந் துழலாமல் ஆனந்த அமுதுண்டு
பெருவாழ்வு பெற்றிருக்கப்
பேராசை யுற்றோர்ச ரீரத்து டன்வரப்
பெரியவருள் முத்திவாய்தல்
திறந்திருக் குஞ்சிவன் **கேதாரம்** வாழ்முருக!
சிறுதேர் உருட்டியருளே!
தேகம்விட்(டு) உன்சந்நி திக்கடிய னேன்வரச்
சிறுதேர் உருட்டியருளே.

— க்ஷேத்திரக்கோவைப் பிள்ளைத் தமிழ்

வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க;
மலிவளம் சுரக்க: மன்னன்
கோன்முறை அரசு செய்க;
குறைவிலாது உயிர்கள் வாழ்க;
நான்மறை அறங்கள் ஓங்க;
நற்றவம் வேள்வி மல்க;
மேன்மைகொள் சைவ நீதி
விளங்குக உலக மெல்லாம்.

— கந்த புராணம்

செந்திலாண்டவன் துணை

திருப்பனந்தாள்

ஸ்ரீ காசிமடத்துத் தலைவராக எழுந்தருளியிருக்கும்

ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள்

அவர்கள்

தமிழ்க்கல்வி, சைவசித்தாந்தம், தேவாரத் திருமுறைகள், இசைத் தமிழ், அன்னதானம், வைத்தியம் இவற்றின் அபிவிருத்திக்காகவும் போது மக்களின் அனுகூலத்துக்காகவும் மனமுவந்து அமைத்திருக்கும் பேரறக் கட்டளைகள்.

தொடர் எண்	தரும விவரம்	மூலதனம் ரூபாய்
1	சிவஞான-சித்தியார் உபந்நியாசக் கட்டளை அண்ணாமலைப் பல்கலைக் கழகம் ...	15,000
2	கொட்டையூரில் நடுத்தரக் கல்விச்சாலை ஏற்படுத்த ...	11,500
3	திருவாங்கூர் மகாராஜா தேவாரப் பரிசு ...	5,000
4	சேரமான் பெருமாள் தேவாரப் பரிசு, கொச்சி	5,000
5	மூவர் தேவாரப் பரிசு சீகாழி, திருவாரூர், திருவையாறு, திருப்பனந்தாள், ஆடுதுறை ...	10,000
6	ஸ்ரீகாசிப் பல்கலைக் கழகத்தில் சைவசித்தாந்தப் போதகாசிரியர் நியமிக்க (62 எண் பார்க்க) ...	60,000
7	அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் சைவ சித்தாந்த உபகாரச் சம்பளம் அளிக்க ...	30,000
8	திருப்பனந்தாளில் தமிழ்க் கல்லூரி நிறுவ நிலப் பெறுமானம் ...	1,50,000
9	இசைத் தமிழ்க்கல்விக்கு நிலப் பெறுமானம் ...	1,00,000
10	திருப்பனந்தாளில் கால்நடை வைத்தியசாலை ஏற்படுத்தவும், குடந்தைக் கல்லூரியில் உபகாரச் சம்பளமளிக்கவும் நிலப்பெறுமானம் ...	20,000

11	ஸ்ரீ காசியில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவு நாள் அன்னதானம் (வைகாசி அமர பக்ஷம் திருதியை)	...	10,000
12	இராமேசுவரத்தில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவு நாள் அன்னதானம் (வைகாசி அமரபக்ஷம் திருதியை)	...	10.000
13	திருநள்ளாற்றில் ஆவணி மூல அன்னதானம்	...	3 000
14	ஸ்ரீ காசியில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவு மார்கழி மாத அன்னதானம்	...	17,000
15	திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரி மாணவர் உணவு நிதி நிலப்பெறுமானம்	...	1.00,000
16	திருப்பனந்தாளில் ஜன வைத்தியசாலை நிறுவ நிலப் பெறுமானம்	...	66,000
17	திருப்பனந்தாள் மண்ணியாற்றங்கரையில் கேதார கட்டம்	...	2,900
18	திருப்பனந்தாள் மண்ணியாற்றங்கரையில் அரிச்சந்திர கட்டம்	...	3,300
19	கும்பகோணத்தில் மணிக்கூண்டு	...	25,000
20	தஞ்சையில் காசநோய் வைத்தியசாலை	...	29,500
21	ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீ குமரகுருபரர் நினைவு நாள் அன்னதானம் (வைகாசி அமர பக்ஷம் திருதியை)	...	9,000
22	மைசூர் மகாராஜா தேவாரப் பரிசு	...	5.000
23	தருமை ஸ்ரீ குரு ஞானசம்பந்த சுவாமிகள் நினைவுத் தேவாரப் பரிசு, மாயூரம்	...	5,000
24	சென்னை விவேகானந்தா கல்லூரியில் ராஜாஜி சைவசித்தாந்தக் கட்டளை	...	10,000
25	ஸ்ரீ காசிப் பல்கலைக் கழகத்தில் சர். எஸ். ராதாகிருஷ்ணன் சைவசித்தாந்தக் கட்டளை	...	20,000

26	ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவுத் தேவாரப் பரிசு, ஸ்ரீவைகுண்டம்	...	5,000
27	மதுரைத் திருமலை நாயக்கர் தேவாரப் பரிசு	...	10,000
28	ஸ்ரீ செந்திலாண்டவன் அன்னதானம் ஸ்ரீவைகுண்டம், திருச்செந்தூர், திருநெல் வேலி மாணவிகளுக்கு நிலப்பெறுமானம்	...	1,00,000
29	ஸ்ரீ காசியில் மகாத்மா காந்தியடிகள் நினைவு அன்னதானம் (ஜனவரித் திங்கள் 30-ம் நாள்)	...	5,000
30	ஸ்ரீ செந்திலாண்டவன் அன்னதானம் ஸ்ரீ காசி, மதுரை, குடந்தை மாணவிகட்கு நிலப் பெறுமானம்	...	1,50,000
31	டாக்டர் சாமிநாத ஐயர் நினைவுத் திருக் குறட் பரிசு, சென்னை	...	3,500
32	குடந்தையில் காந்தியடிகள் பசுப் பரிசு	...	1,000
33	காந்தியடிகள் நினைவு அரியநாயகிபுரத்தில் ஹரிஜன மாணவ உபகார நிதி	...	3 000
34	ஸ்ரீவைகுண்டத்தில் ஸ்ரீ குமரகுருபர சுவா மிகள் நித்திய மகேசுவர பூசைக் கட்டிடம்	...	10,000
35	திருப்பனந்தாள் ஸ்ரீ அருண ஜடேசுவர சுவாமிக்கு வெள்ளிக் கவசம்	...	5,400
36	விஷ்ணுபுரத்தில் மகாத்மா காந்தி நினைவு ஹைஸ்கூல் படிப்பக நிதி	...	1,000
37	குடந்தையில் ராஜாஜி அபிராமி அந்தாதிப் பரிசு	...	3,500
38	திருநெல்வேலியில் ஸ்ரீ அரியநாயகமுதலியார் நினைவு அபிராமி அந்தாதிப் பரிசு	...	3,500
39	திருப்பனந்தாளில் அப்பூதி அடிகள் நினைவு தண்ணீர்ப் பந்தல் தருமம்	...	3.500
40	ஸ்ரீவைகுண்டத்தில் படிப்பக நிதி	...	3,500

41	சிதம்பரம் உயர்தரப் பாடசாலை மாணவர்களுக்கு உணவு நிதி ...	35,000
42	சிதம்பரத்தில் மார்கழித் திருவாதிரை, ஆனி உத்தர நாட்களில் அன்னதானம் ...	12,000
43	இராமேசுவரத்தில் ஆடி, தை அமாவாசைகளில் அன்னதானம் ...	3,500
44	ஸ்ரீவைகுண்டத்தில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நூல் நிலையக் கட்டிடம் ...	26,025
45	பஞ்சாப் அகதிகளுக்கு நன்கொடை ...	5,000
46	அரியநாயகிபுரத்தில் நூல் நிலைய நிதி ...	3,500
47	ஸ்ரீகாசி கேதாரீசுவரர் கோயிலில் ஸ்ரீ குமாரசாமி அன்னதானம் நவராத்திரி விஜயதசமி நாட்களில் ...	5,000
48	ஸ்ரீவில்லி புத்தூரில் ஸ்ரீ குருஞானசம்பந்தர் நினைவுத் தேவாரப் பரிசு ...	3,500
49	திருப்பனந்தாள் ஸ்ரீ அருணஜடேசுவர சுவாமி கோவிலில் மின்சார தீபம் போட ...	7,500
50	காஞ்சியில் மூவர் தேவாரப் பரிசு ...	5,000
51	திருவஞ்சைக்களத்தில் ஆடிச் சுவாதியில் சேரமான் பெருமாள் நினைவு அன்னதானம் ...	7,000
52	28-வது ஸ்ரீ செந்திலாண்டவன் அன்னதானம் ஸ்ரீவைகுண்டம் நான்காண்டு உதவி நிதி ...	30,000
53	30-வது ஸ்ரீசெந்திலாண்டவன் அன்னதானம் ஸ்ரீ காசிப் பல்கலைக் கழகத்திற்கு ஆறு ஆண்டு மூலதனம் ...	42,000
54	28-வது ஸ்ரீசெந்திலாண்டவன் அன்னதானம் திருச்செந்தூர் மூன்றாண்டு உதவி மூலதனம் ...	20,500
55	ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் படிப்பகப் பராமரிப்புக்காகக் கட்டிடமும் நிலமும் ...	15,000

56	மாளவியாஜி பெயரால் கல்கத்தா, டெல்லி, அலகபாத், லக்னோ, ஆக்ரா, அலிகார் முதலிய பல்கலைக் கழகங்களில் சைவசித்தாந்த உபந்நியாசகக் கட்டளை	...	5.000
57	செந்திலாண்டவன் அன்னதானம் சிதம்பரம் மதுரை, திருச்செந்தூர் (ஆவணி மூலத்தில்) நிலப்பெறுமானம்	...	60,000
58	திருப்பனந்தாள் மண்ணியாற்றங்கரையில் சோமேசர் ஸ்நான கட்டம் நிறுவ	...	2,275
59	ஸ்ரீவைகுண்டத்தில் பெண்கள் உயர்நிலைப் பள்ளி நிறுவ	...	45,000
60	ஸ்ரீவைகுண்டம் தேவார மாணவர்கள் காசி யாத்திரை நிதி	...	5,000
61	பனைசக் கல்லூரியில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவுப் பரிசு	...	5,000
62	(6) ஸ்ரீ காசிப் பல்கலைக் கழகத்தில் சைவசித்தாந்த நிதிக்கு அதிகப்படியாக அளித்தது	...	16,000
63	30-வது ஸ்ரீ செந்திலாண்டவன் அன்னதானம் மதுரை இரண்டாண்டு உதவி மூலதனம்	...	14,000
64	ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் உயர்நிலைப்பள்ளி மாணவிகள் ஹாஸ்டல் ஏற்படுத்த நன்செய் நிலக் கிரயம்	...	14,000
65	28-வது ஸ்ரீசெந்திலாண்டவன் அன்னதானம் ஸ்ரீவைகுண்டம் வகையறு திருநெல்வேலி மூன்றாண்டு உதவி மூலதனம்	...	15,000
66	30-வது ஸ்ரீசெந்திலாண்டவன் அன்னதானம் ஸ்ரீ காசி வகையறு கும்பகோணம் இரண்டாண்டு உதவி மூலதனம்	...	14,000
67	ஸ்ரீ வைகுண்டம் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் ஆண்கள் உயர்நிலைப் பள்ளிக்கு நன்கொடை	...	20,000

68	ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் மடத்திற்கு அச்சகம் வாங்க நன்கொடை கட்டிடம் உள்பட ...	27,975
69	ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பெண்கள் உயர்நிலைப்பள்ளி மாணவிகளுக்கு உபகாரச் சம்பளமளிக்க நெல்லை ஜில்லா போர்டாரிடம் ...	10,000
70	ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் ஆண்கள் உயர்நிலைப் பள்ளிக்கு விளையாட்டு இடம் வாங்க நன்கொடை ...	11.000
71	ஸ்ரீ காசியில் தை மாதத்தில் இந்தியக் குடியரசு தினம் அன்னதானம் ...	10.000
72	ஸ்ரீவைகுண்டத்தில் ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் நினைவு மாணவர்கள் உணவு நிதி நிலைப்பெறுமானம் ...	1,50.000
73	ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் மடத்திற்குப் பன்னிரு திருமுறைகள் அச்சிட நிலைப்பெறுமானம் ...	50,000
74	சண்டேசுவர நாயனார் நினைவுத் தண்ணீர்ப் பந்தல் தருமம் திருவாப்பாடி ...	3.500
75	காஞ்சிபுரத்தில் ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் நினைவு உபகாரச் சம்பள நிதி ...	7,000
76	திருச்செந்தூரில் ஸ்ரீ செந்திலாண்டவன் தேவாரப் பரிசு நிதி ...	5,000
77	சென்னையில் ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் நினைவுத் திருக்குறள் பதிப்பு நிதி ...	35,000
78	ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பெண்கள் உயர்நிலைப்பள்ளியில் மங்கையர்க்கரசியார் நினைவுப் பரிசு நிதி ...	3,500
79	கும்பகோணம் தாலூகா மேலச் சூரியமூலை கண்டியன் பழவாற்றின்மீது பாலம் கட்ட ...	8,390

80	ஸ்ரீவைகுண்டத்தில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவுத் தண்ணீர்ப் பந்தல் நிதி	...	3,500
81	பழுத்த தமிழ்ப்புலவர் காசி யாத்திரை நிதி செந்தமிழ்க் கல்லூரி திருப்பனந்தாள்	...	5.000
82	திருச்செங்காட்டங்குடியில் சிறுத்தொண்டர் நினைவு அன்னதானம் சித்திரைப் பரணியில்	...	7,000
83	திருவஞ்சைக்களத்தில் ஸ்ரீ சேரமான், ஸ்ரீ சுந்தரமூர்த்தி நாயனார் நினைவு வாசக சாலை நிறுவ	...	5,000
84	திருநாரையூரில் ஸ்ரீ நம்பியாண்டார் நம்பிகள் நினைவுத் திருமுறை நிதி	...	35,000
85	இராமநாதபுரத்தில் ஸ்ரீ தாயுமானவர் சன்மார்க்க சங்க நூல் நிலைய நிதி	...	5,000
86	லால்குடியில் ஸ்ரீ காரைக்கால் அம்மையார் நினைவு மாணவிகள் உபகாரச் சம்பள நிதி	...	15,000
87	அவிநாசியில் முந்நூல் அணியும் கலியாண நிதி திருப்பனந்தாளில் சுந்தரமூர்த்தி சுவாமிகள் நினைவுப் பரிசு நிதி	...	5,000
88	குடந்தையில் ஸ்ரீ ஆதிகுமரகுருபர சுவாமிகள் நினைவு நீதிநெறி விளக்கப் பரிசு	...	5,000
89	திருப்பூந்துருத்தியில் அப்பர் நினைவு அன்னம் பாலிப்பு-சித்திரைச் சதயத்தில்	...	15,000
90	திருநெல்வேலி ஜில்லாவில் ஸ்ரீ ஆதி குமர குருபர சுவாமிகள் நினைவுத் தமிழ்ப் பரிசு	...	5,000
91	ஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்தர் நினைவுப் பரிசு ஸ்ரீவைகுண்டம்	...	3.500
92	ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவு மார்கழி மாத அன்னதானம் இராமேசுவரம்	...	3.500
93	ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவு அன்னதானம் சென்னபுரி அன்னதான சமாஜம் சென்னை (வைகாசி அமரபக்ஷம் திருதியை)	...	5,000

94	காசியில் ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் நினைவு அன்னதானம் (ஆனி மகத்தில்)	...	5,000
95	திருச்செந்தூரில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவு அன்னதானம் (வைகாசி அமரபக்ஷம் திருதியை)	...	5,000
96	திருச்சிராப்பள்ளியில் ஸ்ரீ தாயுமான சுவாமிகள் நினைவுப்பரிசு நகராட்சி மன்றத்தில்	...	5,000
97	திருநாரையூரில் ஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள் நினைவுக் கட்டிடம் நிறுவ	...	7,000
98	திருச்சிராப்பள்ளியில் ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் நினைவு நீதிநெறி விளக்கப் பரிசு	...	5,000
99	தஞ்சை கலைக்கூடத்திற்கு நன்கொடை	...	5,000
100	மணிக்குடியில் கடலூர்க் கலயர் புனற்பந்தர் நிதி	...	3,500
101	காசியில் ஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞான சம்பந்த சுவாமிகள் நினைவு மாசி மாத அன்னதானம்	...	5,000
102	திருவாங்கூர்ப் பல்கலைக் கழகத்தில் திருவள்ளுவர் நினைவுப் பரிசு	...	5,000
103	ஸ்ரீ காசியில் பங்குனி மாதத்தில் கமலை ஞானப்பிரகாசர் நினைவு அன்னம் பாலிப்பு	...	5,000
104	திருச்செந்தூரில் ஐக்கிய வேளாள சங்கப் படிப்பக நிதி	...	5,000
105	காசியில் சித்திரை மாதத்தில் அப்பர் நினைவு அன்னம் பாலிப்பு	...	7,000
106	ஆடுதுறையில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் உயர்நிலைப் பள்ளி நிதி	...	50,000
107	செந்திலாண்டவன் திருவருள் பாலிப்பு நிதி நிலப் பெறுமானம்	...	50,000
108	திருச்செந்தூரில் ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் நினைவு நித்திய மகேசுவர பூஜை நிதி	...	12,000

109	ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் நினைவு நீதிநெறி விளக்கப் பரிசு-திருச்செந்தூர், ஸ்ரீவைகுண்டம் உயர்நிலைப் பள்ளிகளில்	...	7,000
110	ஸ்ரீ காசியில் கச்சியப்ப சிவாசாரியர் நினைவு அன்னம் பாலிப்பு கார்த்திகை மாதத்தில்	...	7,000
111	சென்னைக் கல்லூரிகளில் ஸ்ரீ குருஞான சம்பந்த சுவாமிகள் நினைவு சிவபோக சாரம் பரிசு நிதி	...	5,000
112	தஞ்சையில் ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் நினைவுத் திருவாசகப் பரிசு	...	5,000
113	மதுரையில் ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் நினைவுத் திருவாசகப் பரிசு	...	5,000
114	திருநாவுக்கரசர் தண்ணீர்ப் பந்தல் தருமநிதி தத்துவாஞ்சேரி	...	3.500
115	காஞ்சிபுரத்தில் கச்சியப்ப சிவாசாரியர் நினைவு அன்னம் பாலிப்பு மாசி-மிருகசீருஷம்	...	7,000
116	திருக்காளத்தியில் கண்ணப்பர் நினைவு அன்னம் பாலிப்பு	...	5,000
117	ஸ்ரீ காசியில் சுந்தரர் நினைவு ஆடி மாத அன்னம் பாலிப்பு சேமவைப்பு	...	7,000
118	ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் சகலகலாவல்லி மாலைப் பரிசு-அரசினர் பெண்கள் உயர் நிலைப்பள்ளி மாயூரம்	...	1,000
119	சிதம்பரத்தில் ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் நினைவுத் திருவாசகப் பரிசு	...	5,000
120	வெள்ளியம்பலவாண முனிவர் நினைவு முதுமொழிமேல் வைப்புப்பரிசு—திருவாங்கூர்ப் பல்கலைக் கழகத்தில்	...	3,500
121	காசியில் ஜாபள்ளி ஜமீன்தார் அன்னம் பாலிப்புச் சேமவைப்பு	...	6,000
122	மதுரையில் கமலை வெள்ளியம்பலவாணர் நினைவு முதுமொழிமேல் வைப்புப் பரிசு	...	5,000

123	திருவாதவூரில் ஸ்ரீ மாணிக்கவாசகர் நினைவு அன்னம் பாலிப்பு நிதி ...	5,000
124	சீகாழியில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவுப் பால் நிதி ...	3.500
125	திருவண்ணுமலையில் ஸ்ரீ மாணிக்க வாசக சுவாமிகள் நினைவுத் திருவாசகப் பரிசு ...	5,000
126	கல்கத்தா சர்வகலாசாலையில் ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் தமிழ்ப் பரிசு நிதி ...	3,500
127	தில்லையில் பல்லாண்டு விளக்கு நிதி (கட்டிடம்)	5 000
128	ஸ்ரீ காசியில் அரிமர்த்தன பாண்டியன் நினைவு ஆவணித் திங்கள் அன்னம் பாலிப்பு ...	7,000
129	ஸ்ரீ காசியில் திருமூலர் நினைவு ஐப்பசித் திங்கள் அன்னம் பாலிப்பு ...	7,000
130	காஞ்சிபுரத்தில் ஸ்ரீ கமலை வெள்ளியம்பல வாண முனிவர் முதுமொழிமேல் வைப்புப் பரிசுச் சேமவைப்பு ...	5,000
131	திருப்பனந்தாள் ஸ்ரீ அருணஜடேசுவரர் கொள்ளிடத் தீர்த்த விழாநிதி (கட்டிடம்) ...	12,000
132	இராமேசுவரத்தில் கார்வேட் நகர் ராஜா ஸ்ரீ பொம்மராஜு ஸ்ரீ மகாராஜுலிங்காரு நினைவு அன்னதானம் ...	5,000
133	கும்பகோணத்தில் கார்வேட் நகர் ராஜா ஸ்ரீ வெங்கடப்பெருமாள் ராஜுலிங்காரு நினைவு அன்னதானம் (மாசி மகத்தில்) ...	3,500
134	திருவண்ணுமலை (பராசக்தியம்மன் சந்நிதியில்) திருவெம்பாவை சலவைக்கல் பதிப்பு ...	2,500
135	சிதம்பரத்தில் திருப்பல்லாண்டு சிவபுராணம் சலவைக்கல் பதிப்பு, திருவெம்பாவை எழுத்து தேர்ச்சிலைகள், தேர்க்கொட்டகை, ஒலிபெருக்கி வகையரு ...	14,500

136	(கும்பகோணம்) திருப்புறம்பயம் சாட்சி நாத சுவாமி தேவஸ்தானம் திருப்பணி, மின்விளக்கு, தேர்ச்சீலை வகையரு, ...	7,700
137	சுவாமிமலை, திருச்செந்தூர், மதுரை திருத் தணிகை, மைலாப்பூர், திருவண்ணுமலை, திருநெல்வேலி, கச்சியேகம்பம், கச்சிக்குமர கோட்டம், திருப்பனந்தாள் அருணசடே சுவரர் தேவஸ்தானம், கும்பகோணம், திருப்பரங்குன்றம், திருவேட்டிசுவரன் பேட்டை, தென்காசி, திருவொற்றியூர், திருக்கழுக்குன்றம், வைத்தீஸ்வரன் கோயில், சீகாழி, திருக்கடவூர், திருவையாறு, தரும புரம், திருச்சிராப்பள்ளி, திருவானைக்கா, திருவாதவூர், விருத்தாசலம் ஆகிய தலங் களில் "சிவ சிவ" ஒளிவளர் விளக்கு அமைக்க ...	10,000
138	தில்லையில்(சிதம்பரத்தில்)இராஜராஜ அபய குலசேகர சோழன் நினைவு தேவார வைப்பு நிதி (கட்டிடங்கள்) ...	16.000
139	திருப்பனந்தாளில் ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி ஆதி குமரகுருபர சுவாமிகள் மகேசுவர பூசை நிதி (வைகாசி அமர பக்ஷம் திருதியை) நிலப் பெறுமானம் ...	1,00,000
140	காஞ்சிபுரத்தில் ஸ்கந்த ஷஷ்டி விழாவில் கந்தபுராணப் பிரசங்க நிதி ...	3,500
141	திருப்பனந்தாள் ஸ்ரீகாசி மடத்தில் ஸ்ரீ-ல-ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் நினைவு நித்திய மகேசுவர பூசை நிதி நிலப்பெறுமானம் ...	2,00,000
142	காசியில் காளத்தி ராஜா நினைவு காள ஹஸ்தி பதீச்சுர பூசை நிதி ...	5,000
143	நாகர்கோவிலில் ஸ்ரீ தாணுமாலயப் பெரு மான் நூல்நிலையப் படிப்பக நிதி ...	3,500

144	காசியில் ஞானசம்பந்தர் நினைவு வைகாசித் திங்கள் அன்னம்பாலிப்பு ...	7,000
145	திருவாரூரில் ஸ்ரீ கமலை வெள்ளியம்பலவாண முனிவர் முதுமொழி மேல்வைப்புப் பரிசுநிதி ...	3,500
146	திருப்பனந்தாளில் ஸ்ரீ செந்திலாண்டவன் அருளிப்பாடு நிதி நிலப் பெறுமானம் ...	2,00,000
147	திருவிடைமருதூரில் தைப்பூச அன்னம் பாலிப்பு ...	5,000
148	தில்லையில் பெரிய புராணப் பிரசங்க நிதி ...	7,000
149	ஸ்ரீ காசியில் ஆதி குமரகுருபர சுவாமிகள் நினைவு அன்னதானம் ஆனி மாதம் முழுதும் ...	7,000
150	இராமேசுவரத்தில் ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் நினைவு அன்னதானம் ஆடிமாதம் முழுவதும் ...	3,500
151	மதுரையில் திருவிளையாடற் புராணப் பிரசங்க நிதி ...	7.000
152	ஸ்ரீ காசியில் ஆதி குமரகுருபர சுவாமிகள் நினைவு அன்னம் பாலிப்பு நிதி புரட்டாசி மாதத்தில் ...	7;000
153	காசியில் ஸ்ரீ-ல-ஸ்ரீ சாமிநாத சுவாமிகள் நினைவு நாள் அன்னம்பாலிப்பு ...	3,500
154	காசியில் கோச்செங்கட் சோழர் நினைவு அன்னம் பாலிப்பு மாசி மாதம் ...	3,500
155	மதுரையில் பெரிய புராணப் பிரசங்க நிதி ...	7,000
156	மதுரையில் கந்தபுராணப் பிரசங்க நிதி ...	3,500
157	சிதம்பரத்தில் தில்லைவாழந்தணர் அன்னம் பாலிப்பு ...	1,50.000
158	கல்கத்தா பல்கலைக்கழகத்தில் ஸ்ரீ காசிவாசி சுவாமிநாத சுவாமிகள் நினைவுத் தமிழ்ப் பரிசு நிதி ...	3,500
159	சிதம்பரத்தில் திருவாசகப் பிரசங்க நிதி ...	7,000

160	திருக்கழுக்குன்றத்தில் மாணிக்கவாசகர் நினைவு அன்னம் பாலிப்பு ஆனி மகம்	...	5,000
161	சீகாழிச் சட்டைநாதர் புழுகு நெய் சாத்து நிதி (தை முதல் வெள்ளி)	...	3,500
162	மதுரையில் ஸ்ரீ-ல-ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவுப் பசு நிதி	...	3,500
163	ஸ்ரீ காசியில் காரைக்கால் அம்மையார் நினைவு அன்னம் பாலிப்பு (பங்குனி மாதத்தில்)	...	5,000
164	ஸ்ரீ காசியில் இசை ஞானியார் நினைவு அன்னம் பாலிப்பு (சித்திரை மாதத்தில்)	...	5,000
165	ஸ்ரீ காசியில் திருநீலகண்ட நாயனர் நினைவு அன்னம் பாலிப்பு (வைகாசி மாதத்தில்)	...	3,000
166	ஸ்ரீ காசியில் நன்பாட்டுப் புலவர் நினைவு ஆனி மாத அன்னம்பாலிப்புச் சேமவைப்பு	...	3,000
167	இராமேச்சுரத்தில் ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி சாமிநாத சுவாமிகள் நினைவு நாள் அன்னம் பாலிப்புச் சேமவைப்பு	...	3,500
168	ஸ்ரீ காசியில் மும்மையால் உலகாண்ட மூர்த்தி நினைவு ஆடி மாச அன்னம் பாலிப்பு சேமவைப்பு	...	3,000
169	திருவாரூரில் மனுநீதிச் சோழர் நினைவுப் பசுப் பரிசு நிதி	...	3,500
170	ஸ்ரீ காசியில் குங்குலியக் கலயர் நினைவு ஆவணித் திங்கள் அன்னம் பாலிப்பு	...	3 000
171	திருப்பனந்தாளில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவு பிரசவ விடுதி கட்டுவதற்கு நன்கொடை	...	5,000
172	ஸ்ரீ காசியில் உருத்திர பசுபதியார் நினைவுப் புரட்டாசி மாத அன்னம் பாலிப்பு முதற் பொருள்	...	3,000

7

173	ஸ்ரீ காசியில் நெடுமாற நாயனார் நினைவு ஐப்பசி மாத அன்னம் பாலிப்பு முதற் பொருள் ...	3,000
174	ஸ்ரீ காசியில் ஆனாய நாயனார் நினைவு கார்த்திகை மாத அன்னம்பாலிப்பு முதற் பொருள் ...	3,000
175	இராமேசுவரத்தில் கார்வேட் நகர் ஸ்ரீ பொம்மராஜு நினைவு அன்னம்பாலிப்பு முதற் பொருள் ...	6,000
176	ஸ்ரீ காசியில் ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி இராம லிங்க சுவாமிகள் நினைவு மாசிமாத அன்னம் பாலிப்பு நிதி ...	3,500
177	வட திருவாலங்காட்டில் காரைக்கால் அம்மையார் நினைவு அன்னம் பாலிப்பு முதற் பொருள் ...	5,000
178	காஞ்சிபுரத்தில் ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி சாமிநாத சுவாமிகள் நினைவு நாள் அன்னம் பாலிப்புச் சேமவைப்பு ...	5,000
179	காஞ்சிபுரத்தில் கச்சியப்ப சிவாசாரியர் நினைவுப் பசுப் பரிசு நிதி ...	3,500
180	காஞ்சிபுரத்தில் திருக்கச்சியேகம்பன் உருத் திராக்கத் தேவார நிதி (கட்டடம்முதலியன)...	50,000
181	சுவாமிமலையில் அப்பர் நினைவு புனற்பந்தர் நிதி ...	3,500
182	திருப்பனந்தாள் சிவசிவ கால்நடை வைத்திய சாலைக்குப் புதிய கட்டிடம் கட்டுவதற்கு நன்கொடை ...	3,000
183	சிவன் கோயில்களில் தேவாரப் பாசுரங் களைப் பிற தெய்வப் பாடல்களோடு கொண்ட கல்லெழுத்துப் பதிப்பு:—மதுரை,	

திருக்கழுக்குன்றம், மைலாப்பூர், திருச்செந்தூர், திருநெல்வேலி, காஞ்சிபுரம், திருவாரூர், திருக்குற்றாலம், திருப்பனந்தாள், திருப்புன்கூர், சீகாழி, வேதாரண்யம், திருவையாறு, அவிநாசி, திருவெண்ணெய் நல்லூர், திருவதிகை, திருமருகல், சுவாமி மலை, வைத்தீஸ்வரன் கோவில், திருச்சிராப்பள்ளி, திருவோத்தூர், திருவிடைக்கழி, சிதம்பரம், திருவண்ணாமலை, வடதிருமுல்லை வாயில், பழனி, திருத்தெளிச்சேரி, திருக்கோலக்கா ... 36,300

184 மதுரைச் சொக்கலிங்கம் சந்தன மெய்ப்பூச்சு நிதி ... 7,000

185 சிதம்பரம் நடராஜா சபையில் கீழ்ப்புறம் மேற்புறம் அருகால் கதவு வெள்ளித்தகடு நகாஸ் வேலை செய்ய வெள்ளிக் கிரையம் கூலி வகையரு பூராவுக்கும் நன்கொடை ... 11,000

186 மதுரைத் தேவார நிதி(கட்டடம் முதலியன)... 50,000

187 திருச்சிராப்பள்ளியில் தாயுமானவர் காவிரித் திருமஞ்சன நிதி ... 7,000

188 திருப்பனந்தாளில் குடிதண்ணீர் வசதிக்கு நான்கு குழாய்கள் நிறுவ அன்பளிப்பு ... 4,500

189 இராமேசுவரத்தில் காளத்தி ராஜா ஸ்ரீ வெங்கடப்ப நாயுடு பகதூர் வாறு நினைவு அன்னதானம் ... 10,000

190 இராமேசுவரத்தில் கார்வேட் நகர ராஜா ஸ்ரீ பொம்ம ராஜு பகதூர் அவர்களின் நினைவு அன்னதானம் ... 12,000

191 ஸ்ரீ காசியில் காளத்தி ராஜா வெங்கடப்ப நாயனிம்வாரு நினைவு அன்னம் பாலிப்பு ... 8,500

192	ஸ்ரீவைகுண்டத்தில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவு சகலகலாவல்லிமாலைப் பரிசு ...	2,000
193	கும்பகோணத்தில் கார்வேட் நகர் ராஜா வெங்கடப்பெருமாள் ராஜலிங்காரு நினைவு அன்னம் பாலிப்பு நிதி ...	12,000
194	திருச்செந்தூரில் ஸ்ரீ செந்திலாண்டவன் நினைவுத் தண்ணீர்ப் பந்தர் நிதி ...	3,500
195	இராமேசுவரம் உயர்நிலைப் பள்ளிக்கு நன்கொடை ...	4,200
196	திருலோக்கி ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் தொடக்கப்பள்ளி கட்டிடத்திற்கு ...	5,000
197	சிதம்பரத்தில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவு, நித்திய மகேசுவர பூசை நிதி (நிவம்)...	1,00,000
198	திருநெல்வேலி ஜில்லா பழைய பாபநாசத்தில் அகத்தியர் கோவிலில் மண்டபம் கட்டுவதற்கு நன்கொடை ...	3.500
199	திருவாதவூர்ப் பெரிய கோவிலில் நடராஜர் விமானத்தைப் புதுப்பிக்க நன்கொடை ...	3 000
200	ஹரத்துவாரில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவு நாள் அன்னம் பாலிப்பு வைகாசி கிருஷ்ணபக்ஷம் திருதியை ...	8,000
201	கன்னியாகுமரியில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவு நாள் அன்னம் பாலிப்பு வைகாசி கிருஷ்ணபக்ஷம் திருதியை ...	7,000
202	ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் தொடக்கப் பள்ளி கட்டடத்துக்கு நன்கொடை ...	4,000
203	ஸ்ரீ காசியில் குமரகுருபர சுவாமிகள் நினைவு கேதாரீச்சுரர் திருக்கோயில் நிதி (கட்டடங்கள் முதலியன) ...	1,00 ,000

204	இராமேசுவரத்தில் கோச்செங்கட் சோழர் நினைவு மாசி மாத அன்னம் பாலிப்பு ...	4,000
205	மைலாப்பூரிலும், குன்றத்தூரிலும் திருவள்ளுவர் சேக்கிழார் நினைவு அன்னம் பாலிப்பு ...	20,000
206	திருச்செந்தூரில் ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் நினைவு கோ சம்வர்த்தன நிதி ...	35,000
207	சிதம்பரத்தில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவு நாள் அன்னம் பாலிப்பு வைகாசி அமரபக்ஷம் திருதியை ...	20,000
208	சுவாமி மலையில் ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் நினைவு கோ சம்வர்த்தன நிதி ...	30,000
209	திருவாரூர் போர்டு உயர்நிலைப் பள்ளியில் பெண்கள் தங்குமிடம் அமைக்க நன்கொடை ...	3,000
210	திருப்பூந்துருத்தியில் அப்பர் திருமடத்துக்கு நன்கொடை ...	10,000
211	நாகர் கோவில் இந்துக் கல்லூரியில் ஸ்ரீகுமரகுருபர சுவாமிகள் வழிபாட்டு மண்டபம் அமைக்க ரூ. 30,000/-த்தில் இதுவரை அளித்தது ...	15,000
212	ஸ்ரீ காசியில் திருஞானசம்பந்தர் நினைவு அன்னம் பாலிப்பு ...	7,000
213	திருப்பூந்துருத்தியில் அப்பர் திருமடத்தில் அப்பர் நினைவு நூல் நிலையம் ...	6,500
214	ஸ்ரீ காசியில் மங்கையர்க்கரசியார் நினைவு அன்னம் பாலிப்பு ...	7,000
215	ரிஷிகேசத்தில் சாதுக்களுக்கு (அடியார்களுக்கு) அன்னம் பாலிப்பு ...	7,000
216	தஞ்சாவூர் ராஜா சரபோஜி ஆர்ட்ஸ் கல்லூரிக்கு நன்கொடை ...	5,000

217	திரைலோக்கிய சுந்தரர் நினைவு மகாசிவராத்ரி கட்டளை நிதி ...	1,000
218	டாக்டர் உ. வே. சாமிநாதையர் நினைவு ஹைஸ்கூல் மாணவிகள் திருக்கழுக்குன்றம் யாத்திரை நிதி ...	3,000
219	மதுரையில் ஸ்ரீமூர்த்தி நாயனார் நினைவு விழா நிதி	2,500
220	காஞ்சிபுரத்தில் ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் நினைவு நாள் அன்னம் பாலிப்பு நிதி ...	7,000
221	பழைய பாபநாசத்தில் அகஸ்தியர் தேவார நிதி ...	25,000
222	மதுரையில் இன்னிசைத் தேவார நிதி (வைகாசி அமரபட்சம் திருதிகையில் திருமுறை விழா நடத்த) ...	25,500
223	வாரணாசியில் சேதுகாவலர் நினைவு அன்னம் பாலிப்பு சேமவைப்பு ...	5,000
224	திருக்கேதாரத்தில் ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் நினைவு நாள் அன்னம் பாலிப்பு ...	7,000
225	இராமேச்சுரத்தில் உமாபதி சிவாசாரியர் நினைவு அன்னம் பாலிப்பு நிதி ...	6,500
226	திருக்குற்றால நாதர் தேவார நிதி ...	26,500
227	சிதம்பரம் ஸ்ரீ நடராஜப் பெருமான் கோவில் ஆயிரக்கால் மண்டபத் திருப்பணிக்கு நன்கொடை ...	5,000
228	சிதம்பரம் ஸ்ரீ நடராசப் பெருமானுக்கு உபயம் தங்கத் தாம்பாளம் ...	4,500
229	சென்னைப் பல்கலைக் கழக நூற்றாண்டு விழாவை முன்னிட்டு ஷை பல்கலைக் கழகத்தில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவாக ஆராய்ச்சி மாணவர்கள் தங்கும் அறை கட்ட நன்கொடை ...	2,500

230 இராமேசுவரத்தில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவு நித்திய மகேசுவர பூசை நிதி (நிலம் கட்டடம் முதலியன) ... 1,00.000

231 வாரணசியில் காவேரி - திருவேங்கடநாத ராஜு நினைவு அன்னம் பாலிப்பு நிதி ... 6.000

232 ஸ்ரீ காசியில் காரி நாயனர் நினைவு மாசி மாச அன்னம் பாலிப்பு நிதி ... 5,000

233 ஸ்ரீ காசியில் தண்டியடிகள் நினைவு பங்குனி மாச அன்னம் பாலிப்பு நிதி ... 5,000

234 திருப்பரங்குன்றத்தில் ஸ்ரீ சோமசுந்தரக் கடவுள் தண்ணீர்ப் பந்தல் நிதி ... 4,000

235 வாரணசியில் திருக்குறிப்புத் தொண்டர் நினைவு சித்திரை மாச அன்னம்பாலிப்பு நிதி ... 3,000

236 வாரணசியில் முருக நாயனர் நினைவு வைகாசி மாச அன்னம் பாலிப்பு நிதி ... 5,000

237 வாரணசியில் சண்டேசுவர நாயனர் நினைவு தை மாச அன்னம் பாலிப்பு நிதி ... 5,000

சிவ சிவ

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்துத் தலைவர்
ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி
அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் நிறுவிய
தருமங்கள்

			முதற் பொருள் ரூபா
1.	திருமுறை வளர்ச்சிக்கு ஆக 27 தருமங்கள்	...	4,06,000
2.	கல்வி அபிவிருத்திக்கு ஆக 48 தருமங்கள்	...	6,04,200
3.	சைவசித்தாந்தம் பரப்ப 7 தருமங்கள்	...	1,56,000
4.	அன்னதானம் செய்ய 96 தருமங்கள்	...	21,12,000
5.	வைத்தியம் செய்ய 5 தருமங்கள்	...	1,22,500
6.	பொது தருமங்கள் - ஸ்நான கட்டம், அகதி நன்கொடை, தண்ணீர்ப் பந்தல், ஒளிவளர் விளக்குகள், பசுப் பரிசு, கல்லெழுத்து முதலிய 54 தருமங்கள்	...	5,05,745
	ஆகத் தருமங்கள் 237-க்கு	ரூ.	39,06,445

		ரூ. அ.
30	திருக்குறள்—பொருட்பால்	2 8
31	திருக்குறள்—காமத்துப்பால்	1 0
	ஷ 29, 30, 31 திருக்குறள் மூன்று புத்தகமும் சேர்த்து வாங்கினல் ...	4 0
32	திருக்குறள் தமிழ்மறை K. M. வேங்கடராமையா M.A., B.O.L., அவர்கள் குறிப்புரையுடன் ...	0 12
33	திருக்குறள்—பொருட்பால் பரிமேலழகர் உரை இலக்கணக் குறிப்பின் விளக்கம்	0 2
34	முதுமொழிமேல்வைப்பு	0 12
35	திருவுசாத்தானக் கல்லெழுத்துக்கள்	0 6
36	திருச்செந்தூர்க் கந்தர் கலிவெண்பா—மதுரை மீனுட்சியம்மை பிள்ளைத்தமிழ்—மதுரைக் கலம்பகம்—நீதிநெறி விளக்கம்—மதுரை மீனுட்சியம்மை இரட்டைமணி மாலை—மதுரை மீனுட்சியம்மை குறம்	2 12
37	திருவாரூர் நான்மணி மாலை—முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ் ...	1 4
38	சிதம்பர மும்மணிக்கோவை—சிதம்பரச் செய்யுட்கோவை—தில்லைச் சிவகாமி யம்மை இரட்டைமணி மாலை	1 0
39	பண்டார மும்மணிக்கோவை—காசிக் கலம்பகம் சகலகலாவல்லி மாலை	1 0
40	சிதம்பரச் செய்யுட்கோவை	0 12
41	முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ்	1 0
42	தமிழிசைப் பாக்கள்	0 8
43	பெரியபுராணம் உரைநடை	2 0
44	திருவிளையாடற் புராணம் (உரை நடை) ...	2 4
45	குமரகுருபர சுவாமிகள் சரித்திரப் பட விளக்கம்...	0 8
46	அபிராமி பட்டர் பிரபந்தம்	0 5

மேலே கண்ட நூல்கள் கிடைக்குமிடங்கள் :—

1. ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் கலைக்கோயில், ஸ்ரீவைகுண்டம்.
2. ஸ்ரீ K. சுப்பிரமணிய அய்யர் அவர்கள்,
"தியாகராஜ விலாசம்"
53, பிள்ளையார் கோவில் தெரு. திருவட்டீஸ்வரன் திருவல்லிக்கேணி, சென்னை. [பேட்டை.
3. பன்னிரு திருமுறை மன்றம், தெற்கு ஆடி வீதி, மதுரை.

குறிப்பு :—ஷ விற்பனைத் தொகை "குமரகுருபரன்" பத்திரிகையைச் சாரும்.

உ

"குமர குருபரன்"

[தமிழ்த் திங்கள் வெளியீடு]

ஸ்ரீவைகுண்டம்

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் மடாலயத்திலிருந்து

மாதந்தோறும் வெளிவருகிறது

★

இது

சைவசித்தாந்தம், ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பிரபந்தம்,

பன்னிரு திருமுறை ஆராய்ச்சி, இலக்கியம்,

பிற மொழிகள், கலாசாரம் சம்பந்தமான

கட்டுரைகள் கொண்டது

★

நிர்வாக ஆசிரியர் :

T. M. குமரகுருபரன் பிள்ளை, B.A., B.L,

(நிரந்தரத் தலைவர், குமரகுருபரன் சங்கம்)

மானேஜிங் டிரஸ்டி, ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் மடம்

ஸ்ரீவைகுண்டம்

வருட சந்தா ரூ. 1—8—0 தனிப் பிரதி ரூ. 0—2—0

தியோடர் பிரஸ், திருச்சிராப்பள்ளி.

T. 2318
GOVERNMENT ORIENTAL MSS. LIBRARY, MADRAS
3 - AUG 1957

திரு

அபிராமி பட்டர் பிரபந்தங்கள்

[மூலம்]

★

0-5-0

வெளியீடு:

குமரகுருபரன் சங்கம்

ஸ்ரீவைகுண்டம் :: திருநெல்வேலி ஜில்லா

1957

திருமுறை வெளியீடுகள்

		ரூ.	அ.
1	விநாயகர் திருமுறை	0	1
2	ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பிரபந்தத் திரட்டு டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் குறிப்புரையுடன்	6	0
3	சிவக்கொழுந்து தேசிகர் பிரபந்தம்	3	0
4	திருஞானசம்பந்தர் தேவாரம்	2	0
5	திருநாவுக்கரசர் தேவாரம்	1	0
6	சுந்தரர் தேவாரம்	1	0
7	திருவாசகம்	0	6
8	திருக்கோவையார்—பேராசிரியர் உரை ...	2	0
9	ஒன்பதாம் திருமுறை — திருவிசைப்பா திருப்பல்லாண்டு	0	9
10	திருமந்திரம்—செய்யுள்	2	8
11	பதினோராந் திருமுறை	1	4
12	திருக்கைலாய ஞானவுலா உரையுடன் ...	0	8
13	பெரிய புராணம்—செய்யுள்	2	8
14	பெரிய புராணம்—வசனம்	2	0
15	அகத்தியர் தேவாரத் திரட்டு—குறிப்புரை ...	0	6
16	திருவிளையாடற் புராணம்—செய்யுள் ...	3	0
17	திருவிளையாடற் புராணம்—வசனம்	2	4
18	தாயுமான சுவாமிகள் பாடல்	1	4
19	கந்த புராணச் சுருக்கம்—செய்யுள்	1	12
20	கந்த புராணம்—முதல் மூன்று காண்டங்கள் ஆராய்ச்சிக் குறிப்புடன்	2	12
21	௸ யுத்த காண்டம், தேவகாண்டம்	2	0
22	௸ தக்ஷ காண்டம் குறிப்புரை	1	8
23	கந்த புராணம் வசனம்	2	8
24	கந்தர் அலங்காரம் குறிப்புரை	0	4
25	கந்தர் அனுபூதி ௸	0	2
26	கந்தர் கலிவெண்பா—ஆங்கிலமும் ஹிந்தியும் கூடியது	0	6
27	கந்தர் கலிவெண்பா—மூலம் மட்டும்	0	1

T.2318

ஸ்ரீவைகுண்டம் குமரகுருபரன் சங்க வெளியீடு

GOVERNMENT ORIENTAL MANUSCRIPTS LIBRARY
3-AUG 1957
MADRAS

சிவசிவ

திருக்கடவூர்
அபிராமி பட்டர் பிரபந்தங்கள்

[மூலம்]

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்துத் தலைவர்

ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள்

அவர்கள் ஆதரவு பெற்றது.

Acc No 12845

பதிப்பாசிரியர்:

திரு. T. M. குமரகுருபரன் பிள்ளை, B.A., B.L., அவர்கள்

நிரந்தரத் தலைவர். குமரகுருபரன் சங்கம்

ஸ்ரீவைகுண்டம்

வெளியீடு:

குமரகுருபரன் சங்கம்

ஸ்ரீவைகுண்டம்] [திருநெல்வேலி ஜில்லா

1957

சிவசிவ

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்துத் தலைவர் ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் நிறுவிய தருமங்கள்

1.	திருமுறை வளர்ச்சிக்கு ஆக 27 தருமங்கள்	...	4,06,000
2.	கல்வி அபிவிருத்திக்கு ஆக 48 தருமங்கள்	...	5,92,200
3.	சைவசித்தாந்தம் பரப்ப 7 தருமங்கள்	...	1,56,000
4.	அன்னதானம் செய்ய 89 தருமங்கள்	...	1,98,300
5.	வைத்தியம் செய்ய 5 தருமங்கள்	...	1,22,500
6.	பொது தருமங்கள் - ஸ்நான கட்டம், அகதி நன்கொடை, தண்ணீர்ப் பந்தல், ஒளிவளர் விளக்குகள், பசுப் பரிசு, கல்லெழுத்து முதலிய 50 தருமங்கள்	...	4,89,745
	ஆகத் தருமங்கள் 226-க்கு	...	37,49,445

T. 2318



ஸ்ரீவைகுண்டம் குமரகுருபரன் சங்கம் நிரந்தரத் தலைவர்
திரு. T.M. குமரகுருபரன் பிள்ளை, B.A ,B.L, அவர்களும்
அன்னார் குமாரர் **திரு. K. சுப்பிரமணிய பிள்ளை அவர்களும்**

முன்னுரை

"பொழிந்தொழுகு முதுமறையின் சுவைகண்டும் புத்தமுதம்
வழிந்தொழுகுந் தீந்தமிழின் மழலைசெவி மடுத்தனையே!"

— ஸ்ரீ குமர குருபர சுவாமிகள்

சைவசமயஞ் சார்ந்த ஒவ்வொருவரும் இறைவழிபாட்டில் நிற்றலே மனிதப் பிறவியின் பயனாகும். இறை பணியில் நிற்றற்குச் சிந்தையை உருக்கித் தூய்மைசெய்யும் செந்தமிழ்ப் பாடல்கள் நிறைந்த நூல்கள் பலவற்றைக் கடவுட் பக்தியில் திளைத்து முதிர்ந்த அடியார்கள், யோகிகள், ஞானிகள் முதலியோர் இயற்றியுள்ளனர். திருக்கடவூர் அபிராமி யம்மையின் திருவருள் பெற்ற **அபிராமி பட்டர்** இயற்றிய **கள்ள விநாயகர் பதிகம், அமுதகடேசுவரர் பதிகம், கால சங்கார மூர்த்தி பதிகம், அபிராமி யம்மை பதிகம், அபிராமி யந்தாதி** முதலிய பிரபந்தங்கள் அவற்றைச் சாரும். இச் சிறு நூல்கள் பக்திச்சுவையோடு எளிய செந்தமிழ் நடையில் திகழ்கின்றன.

அபிராமி யந்தாதி மட்டும் பல அன்பர்களால் மூல பாடத்துடனும், குறிப்புரையுடனும், பதவுரை முதலியவற்றுடனும் *வெளியிடப்பெற்றுள்ளது. மற்றை **கள்ளவிநாயகர் பதிகம் முதலிய சிறு நூல்கள்** 1938-ல் திருப்பாதிரிப்புலியூர் ஸ்ரீமத் ஞானியார் மாணவர் **திரு. P. S. வடிவேலு செட்டியார்** அவர்களால் கிடைக்கப் பெற்றவரையிலும் தொகுத்துத் திருக்கடவூர், பிச்சைக் கட்டளை அதிபர், **உயர்திரு க. கைலாசம் பிள்ளை** அவர்களின் நன் முயற்சியால் அச்சிட்டு வெளிவந்தது. தற்போது அபிராமி பட்டர் வழியிலே வந்தவரும், திருச்சி வரதராசப் பெருமாள் கோவில் தெரு, சங்கீத வித்துவான் **திரு. நா. அமிர்த பாரதியார்** அவர்களின் ஏட்டுப் பிரதி, கையெழுத்துப் பிரதிகளோடு ஏனைய அச்சுப் பிரதிகளையும் ஒப்பிட்டு, யாப்புக் கெடாமல், பொருள் விளங்கச் சொற்களைப் பிரித்துச் சிற்சில இடங்களில் காணப்படும் பாட பேதங்களையும் அமைத்து, "**அபிராமி பட்டர் பிரபந்தங்கள்**" என்ற பெயருடன், ஸ்ரீவைகுண்டம் "**குமரகுருபரன் சங்க**" **வெளியீடாகத் துன்முகி மார்கழித் திருவாதிரையில் வெளியிடப்** பெறுகின்றது.

---

* பதவுரை முதலியவற்றுடன் ஸ்ரீ காசிமடத்திலும், தருமபுர ஆதீனத்திலும் அபிராமி யந்தாதி வெளியிடப்பெற்றுள்ளது.

இமயமுதல் கன்னியாகுமரி வரை அருள் ஒளியைப் பரப்பிச் சைவ சமயத்திற்கும் செந்தமிழ் மொழிக்கும் பொதுநலப் பணிக்கும், அன்னதானத்துக்கும் பல லட்சக் கணக்கான ரூபாய்களை மூலதனமாக வைத்துப் பேரறங்கள் பல புரிந்து நடத்தி வருபவர்களும், ஆண்டுதோறும் **திருக்கேதாரம், உத்தர காசி** முதலிய தலங்களைத் தரிசித்தலில் மிக ஈடுபாடு உடையவர்களும் ஆன திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்து அதிபர் **ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி** அருள்நந்தித் **தம்பிரான் சுவாமிகள் அவர்களும்,** அவர்கள் அருள்வழி நின்று அறப்பணிபுரியும் ஸ்ரீ காசிமடம் இளவரசு, **ஸ்ரீமத் வித்துவான் மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அவர்களும்,** இந் நூலைச் சைவ மக்கட்குப் பயன் படுமாறு அச்சிட்டு வெளிப்படுத்தும் பணியை அடியேற்கு அருளினார்கள். அன்றியும் இப் பணியை எளிதில் முற்று விக்கவேண்டிய பொருள் உதவிகளும் **ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி சுவாமிகள்** அவர்களே செய்தருளினார்கள். இங்ஙனம் கருணைபாலித் தருளிய **ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி** சுவாமிகள் அவர்களுக்கு எளியேன் மிகவும் கடப்பாடுடையேன்.

இப்பிரபந்தத்தை நன்முறையில் ஒப்புநோக்கிச் செப்பஞ் செய்த திருச்சி வித்துவான், திருமுறைக் கலைஞர், **திரு. தி. பட்டுச்சாமி ஓதுவார்** அவர்களுக்கும், அச்சிடுங்கால் வேண்டிய பணிகள் புரிந்த திருப்பனந்தாள், சிவநெறிச் செல்வர், திரு. K. M. **வேங்கடராமையா** M.A., B.O.L., அவர் களுக்கும், எனது நன்றி உரித்தாகுக.

அபிராமியின் அருளைப் பெறுதற்கு வாயிலாயமைந்த அபிராமி பட்டர் பிரபந்தங்களை இங்ஙனம் வெளியிடத் திருவுளம்பாலித்தருளிய **ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி சுவாமிகள்** அவர் களுக்குச் சைவ வுலகம் கடப்பாடுடையது. இப் பிரபந்தங் களைக் கற்றுப் பாராயணம் செய்து அம்மையப்பரின் திருவருளைப் பெறுவோமாக!

நிரந்தரத் தலைவர்
குமரகுருபரன் சங்கம்
ஸ்ரீவைகுண்டம்
10—12—56

இங்ஙனம்
T. M. குமரகுருபரன் பிள்ளை,
B.A., B.L.

சிவசிவ

அபிராமி பட்டர் வரலாறு

"சோழவளநாடு சோறுடைத்து" என்று ஔவைப் பிராட்டியால் புகழப்பெற்ற சோழவள நாட்டில் காவிரியின் தென்கரையில் திகழும் திருக்கடவூர் என்னும் திவ்ய தலத்தில் வைதிக அந்தணர் மரபில் கௌசிக கோத்திரத்தில் **அமிர்தலிங்க ஐயர்** என்ற ஒருவர் இருந்தார். அவர் சிறந்த கல்வியாளர்; இசைக்கலையில் வல்லவர்; வைதிகவொழுக்கம் நிறைந்தவர்; சைவசமயப் பற்று மிகுந்தவர்: அபிராமியம்மையையும் அமிர்தகடேசுவரரையும் நாடோறும் வழிபடும் நியமம் பூண்டவர். நீண்ட காலம் புத்திரப்பேறின்றி இருந்து சிவசக்தி வழிபாட்டின் பயனேபோல ஒரு நன்னாளிலே ஓர் ஆண் மகவைப் பெற்றார். அம் மகவுக்குச் **சுப்பிரமணியன்** எனப் பெயரிட்டார். பிறகு, தந்தை மகனுக்கு உரிய காலங்களில் முறையே கல்விப் பயிற்சியும் உபநயனமும் செய்வித்து மகிழ்ந்தார்.

சுப்பிரமணிய ஐயர் வடமொழி தென்மொழிகளை நன்கு பயின்றார்: சங்கீதக் கலையிலும் தேர்ச்சியுற்றார்; பல நூல்களையும் ஆராய்ந்து கல்வி, கேள்வி, அறிவு, ஒழுக்கங்களில் தலை சிறந்து கடவுட் பக்தியிலும் முதிர்ச்சியடைந்தார்; தந்தையிடம் காயத்திரி மந்திரத்தின் அரும் பொருளினையும், தேவியின் ஸ்ரீசக்கர வழிபாட்டு முறையினையும் அறிந்து தேவி வழிபாட்டில் நிலைத்துநின்று கவிதா சக்தியும் இயல்பாகப் பெற்றார். பராசத்தியின் திருவருள் இன்பத்தில் இடைவிடாமல் திளைத்து நிற்கும் சுப்பிரமணிய ஐயர் உலகினர்க்குப் பித்தரைப்போல் காணப்பட்டார். கடவூரிலிருந்த உண்மையறியாச் சில பிராமணர்கள் சுப்பிரமணிய ஐயர்மீது அழுக்காறுகொண்டு, "வைதிகவொழுக்கத்தைக் கைவிட்டவர்; சக்தி உபாசகர்; ஊனும் மதுவும் உண்டு திரிபவர்" என்று மனம் போனவாறு வசைமொழி பேசத் தொடங்கினர்.

ஆனால் உலகினரின் வசைமொழிகள் சுப்பிரமணிய ஐயர் காதில் ஏறவில்லை. "எவரும், தத்தம் மனத்தன பேச எஞ்ஞான்று கொல் சாவதுவே" எனும் திருவாசகத்துக்கு இலக்கியமாய்ப் பார்க்குமிடமெங்கும் திரிபுரையின் திருக்கோலமே கண்டு பெருமிதத்தோடிருந்ததுமன்றி இல்லற நெறியிலும் நின்று வந்தார்.

அப்போது தஞ்சையிலிருந்து அரசுபுரிந்த **சரபோஜி மன்னன்** என்பவன் தை அமாவாசை அன்று காவிரிப்பூம்பட்டினம் சென்று கடல் முழுக்கினை முடித்துக்கொண்டு கடவூரில் அமிர்தகடேசுவரரைத் தரிசிக்க ஆலயத்தினுள் வந்தான். அங்கு, அபிராமியம்மையின் சந்நிதியில் ஆனந்தத்தேன் அருந்திப் பரவசமுற்று அம்மையின் அருள் ஒளி வீச யோகநிலையில் வீற்றிருந்த சுப்பிரமணிய ஐயரின் தோற்றப் பொலிவை அரசன் கண்டு அதிசயித்து, "நாம் இவரோடு அளவளாவ வேண்டும்" என்று கருதி, "இவர் யார்?" என்று அங்கிருந்தோரை வினவினன். சமயம் பார்த்திருந்த கடவூர் வேதியர்கள், "இவர் வேதநெறி பிழைத்தவர்; சக்திவழிபாட்டினர்: மது மாந்தி மயங்கி இருக்கின்றவர்" என்றனர். அரசன், அவர்கள் சொல்லை நம்பாது அவரோடு பேச விரும்பி அருகிற் சென்று, "ஐயா! இன்று அமாவாசை உண்டா? எவ்வளவு நாழிகை இருக்கிறது?" என்று கேட்டான். ஒளி வடிவினளாகிய அம்பிகையைத் தம்முள்ளே தரிசித்து மகிழ்ந்துகொண்டிருந்த சுப்பிரமணிய ஐயருடைய காதில் மன்னனின் வார்த்தை அரைகுறையாக விழுந்தது. உடனே ஐயர், "இன்று பௌர்ணமி" என்றார். அவ்வார்த்தையைக் கேட்ட அரசன் "அந்தணர்கள் கூறியது உண்மைதான்" என்று அலட்சியமாக மதித்து, "ஐயரே! மயக்கமா? இன்று பௌர்ணமி இல்லையாயின் தக்க தண்டனை பெறுவீர்" என்று சினந்து அப்பாற் சென்றான்.

பின்னர், சுப்பிரமணிய ஐயர் நிட்டை தெளிந்து, "நன்றே வருகினும் தீதே விளைகினும் நானறிவது, ஒன்றேயும் இல்லை" என்று எண்ணியவராய், "இனி என் செய்வது? எல்லாம் அம்மையின் திருவருள்" என்று கருதி அபிராமி அம்மையின்

சந்நிதியிலேயே அக்கினி குண்டம் ஒன்று தயாரித்து, அதன் இருபக்கமும் கால்கள் நாட்டி, மேல் விட்டம்போட்டு, அதன் மத்தியிலே அக்கினிக் குண்டத்திற்கு நடுவாக நூறு கயிறு கொண்ட உறி ஒன்று தொங்கவிட்டு, அக்கினியை வளர்த்து, உறியின்மீது ஏறியிருந்து, "அபிராமி தேவி அருள் புரியா தொழியின் இவ் வக்கினியிலேயே வீழ்வேன்" என்று வஞ்சினம் கூறி, தம் அகவடிவில் கண்ட அபிராமியம்மைமீது, "**உதிக்கின்ற செங்கதிர்**" என்று தொடங்கும் **அந்தாதியைப்** பாடத் தொடங்கி ஒவ்வொரு பாட்டின் முடிவிலும் ஒவ்வொரு கயிறாக உறியின் கயிறுகளை அறுத்து வந்தார். 79-ஆம் பாடலாகிய "**விழிக்கே அருள் உண்டு**" என்ற பாடல் முடியத் தேவியும் அவர் முன்னே தோன்றிநின்று தம் தோடுகளுள் ஒன்றைக் கழற்றி ஆகாயத்திலே வீசி நிலவொளியை உண்டாக்கி, "அன்ப! நீ அரசனிடத்தில் கூறியவாறு பூரண சந்திரனைப் பார்" என்றாள். அப்போது ஐயர் அம்மையின் **கருணைத்** திறத்தைக் கண்டு தரிசித்து வியந்து பாராட்டி மற்றைப் பாடல்களையும் பாடி முடித்தார்.

அரசனும் மற்றையோரும் பூரண சந்திரனின் ஒளியைக் கண்டு அஞ்சி அதிசயித்துச் சுப்பிரமணிய ஐயர் சிறந்த ஞானி என்றும், செயற்கரிய செய்யும் சீலர் என்றும் கருதினர். அப்போது அரசன் ஐயரை அவமதித்த செயலுக்கு வருந்தி ஓடிவந்து அவர் திருவடிகளில் வீழ்ந்து வணங்கி, "தங்கள் பெருமை தெரியாமல் செய்த பிழையைப் பொறுத்தருள்க" என்று பன்முறை வேண்டினன். ஐயரும் அம்பிகையின் திருவருளை நினைந்து, "யாம் எவர்மீதும் பகைகொள்ளோம்" என்று கூறினர். அது கேட்ட சரபோஜி மன்னன் அன்பரை மகிழ்ந்து நோக்கி, "இன்றுமுதல் தங்கட்கு **அபிராமி[1]பட்டர்** என்ற திருநாமமும், தங்கள் பரம்பரைக்குப் [2]'**பாரதியார்**' என்ற பட்டமும் வழங்குவதாகுக. அன்றியும், தங்கட்குக் காணிக்கையாக விளைநிலங்கள் அளிக்க விரும்புகின்றேன்; அவற்றைக் கைக்கொள்வீர்களாக" என்று வேண்டிக்கொண்டான்.

---

1. பட்டர் - பூசிப்பவர்; பாடுவோர். 2. பாரதியார் - தேவிக்கு அடியவர்.

அதுபோழ்து அபிராமி பட்டர் "அரசே! இறைவியின் திருவருட் செல்வமே அன்றிப் பிற செல்வம் எமக்கு வேண்டுவ தில்லை" என்று மறுத்தார். அரசன் "தங்கள் சந்ததிக்காவது ஏதாவது ஏற்றுக்கொள்ளவேண்டும்" என்று குறையிரந்தான். பட்டரும் ஒருவாறு அதற்கிணங்க, அரசன் [1]**திருக்கடவூரிலும் திருக்கடவூர்ப் பக்கங்களிலும்** வேலி ஒன்றுக்குக் குறுணி நெல் கள மானியமாகச் சூர்ய சந்திரன் உள்ளவரை எல்லோரும் கொடுத்துவரச் செப்புப் பட்டயம் ஒன்று எழுதி, அபிராமி பட்டர்பால் அளித்துத் தஞ்சை சென்றான்.

பின்னர் அபிராமி பட்டர் வைதிகத் துறவியாகிச் சிவத்தல யாத்திரை சென்றிருந்து ஒரு நன்னாளில் இறைவியின் திருவடி நீழலை அடைந்தார்.

அபிராமி பட்டர் அபிராமியம்மையின்மீது **அபிராமி அந்தாதி** ஒன்று இயற்றியதோடு அல்லாமல் **திருக்கடவூர்க் கள்ளவாரணப் பிள்ளையார் பதிகம், அமுதகடேசுவரர் பதிகம், கால சங்காரமூர்த்தி பதிகம், அபிராமியம்மை பதிகங்கள்** முதலிய நூல்களையும் பக்திச் சுவை ததும்ப இனிய நடையில் இயற்றியுள்ளார்.

அபிராமிப் பட்டர் தஞ்சையை ஆண்ட சரபோஜி மன்னன் காலத்தவர் என்பது வரலாற்றால் அறிவதால், அவர் கி. பி. 18-ஆம் நூற்றாண்டின் கடைப்பகுதியில் நிலவியவர் என்பது பெறப்படும்.

---

1. திருக்கடவூரிலும் திருக்கடவூர்ப் பக்கங்களிலும் என்றது, திருக் கடவூர் வட்டம், ஆக்கூர் வட்டம், திருவிடைக்கழி வட்டம், நல்லாடை வட்டம், திருச்செம்பொன்பள்ளி வட்டம் என்ற ஐந்திடத்தையும் குறிக்கும். திருவிடைக்கழி வட்டம், நல்லாடை வட்டம் என்ற இரண்டு இடங்களில் மட்டுமே அபிராமி பட்டர் சந்ததி வகையினராய சங்கீத வித்துவான் திருச்சிராப்பள்ளி ஸ்ரீ வரதராஜப் பெருமாள் கோவில்தெரு திரு. நா. அமிர்த பாரதியார் என்பவர் நெல் வசூல் செய்து அதனைக் கொண்டு, நவராத்திரி விழா ஒன்பது நாளிலும் திருக்கடவூர் அபிராமி யம்மைக்கு விசேட பூசை நைவேத்தியங்கள் செய்து, அன்பர்களுக்குப் பிரசாதங்கள் வழங்கிவருகின்றார்.

T. 2318

GOVERNMENT ORIENTAL MANUSCRIPTS LIBRARY
3 - AUG 1957
MADRAS

திருக்கடவூர் அபிராமியம்மை

T. 2318

உ

செந்திலாண்டவன் துணை

திருக்கடவூர்

அபிராமி பட்டர் பிரபந்தங்கள்

[மூலம்]

—□—

திருக்கடவூர்

கள்ள விநாயகர் பதிகம்[1]

கட்டளைக் கலிந்துறை

பங்கயத் தாளும் ஒருநான்கு தோளும் படாமுகமும்
திங்களின் கோடும் வளர்மோ தகத்துடன் செங்கையிலே
அங்குச பாசமு மாகிவந்(து) என்றனை ஆண்டருள்வாய்;
வெங்கய மே!கட ஊர்வாழுங் கள்ள விநாயகனே! 1

உண்ணும் பொழுதும் உறங்கும் பொழுதும் ஒருதொழிலைப்
பண்ணும் பொழுதும் பகரும் பொழுதும்நின் பாதத்திலே
நண்ணுங் கருத்துத் தமியேனுக் கென்றைக்கு நல்குவையோ?
விண்ணும் புகழ்க்கட ஊர்வாழுங் கள்ள விநாயகனே! 2

யாதொன்றை யாகிலும் எண்ணிய போ(து)உன் இணைக்கமல
பாதம் பரவிய பேர்கட் கலாது பலித்திடுமோ?
பேதம் தெரிந்த மறையோர் தமது பெருந்தெருவில்
வேதம் பயில்கட ஊர்வாழுங் கள்ள விநாயகனே! 3

அரன்என் பவனையும் அம்புயத் தோனையும் ஆழிசங்கு
கரன்என் பவனையுங் கைதொழ வேண்டிஉன் கால்தொழுவார்;
இரவும் பகலும் இயலிசை நாடக மென்னும் நன்னூல்
விரவுந் தமிழ்க்கட ஊர்வாழுங் கள்ள விநாயகனே! 4

---

1. கள்ள விநாயகர் - இவர் தேவர்களின் உள்ளத்தைக் கவர்ந்தவர் ஆதலின் இப்பெயர் பெற்றார். இவரைச் 'சோர கணபதி' என வட நூல் கூறும்.

துதியேன் எனினும் தொழுகேன் எனினும் தொழும்பர்தமை
மதியேன் எனினும் வணங்கேன் எனினும் வலியவந்து
கதியே தரும்வழி காட்டிடு வாய்;நின் கருணையினால்
விதியே புகழ்க்கட ஊர்வாழுங் கள்ள விநாயகனே! 5

நாகந் துரகம் பலபணி ஆடை நவநிதிகள்
பாகஞ்சு மென்மொழியாள் போகமும் உன்றன் பாதமதில்
மோகந் திகழப் பணிந்தோர்(கு) அலாமல் முயன்றிடுமோ?
மேகம் பயில்கட ஊர்வாழுங் கள்ள விநாயகனே! 6

இளங்குஞ் சரச்செழுங் கன்றே! எனச்சொலி ஏத்திநன்றாய்
உளங்கசிந் தங்கையால் குட்டிக்கொண் டோர்க்கோர் குறையுமுண்டோ?
வளங்கொண்ட மூவர் தமைமறித் தேதமிழ் மாலைகொண்டு
விளங்கும் புகழ்க்கட ஊர்வாழுங் கள்ள விநாயகனே! 7

தண்டா யுதத்தையும் சூலா யுதத்தையும் தாங்கியென்னைக்
கண்டாவி கொள்ள நமன்வரும் வேளையில் காத்திடுவாய்;
வண்டார வாரஞ்செய் மாமலர்ச் சோலை வளப்பமுடன்
விண்டா வியகட ஊர்வாழுங் கள்ள விநாயகனே! 8

மூவரும் தங்கள் தொழிலே புரிந்திட முந்திமுந்தித்
தாவரும் நெற்றியில் தாக்கியுன் நாமத்தைச் சாற்றிடுவார்;
தேவரும் போற்றிய தேவே! உனையன்றித் தெய்வமுண்டோ?
மேவருஞ் சீர்க்கட ஊர்வாழுங் கள்ள விநாயகனே! 9

மைப்பொரு வாரண மாமுக மீதினில் வாய்ந்ததுதிக்
கைப்பொரு ளே!என்று கைதொழு வோர்க்குன் கருணைவைப்பாய்;
[1]பொய்ப்பணி யோர்அறி யாதமு தீசன் புகழுமெங்கள்
மெய்ப்பொரு ளே!கட ஊர்வாழுங் கள்ள விநாயகனே! 10

---

1. பா-ம். அப்பணி யும்அமு தீசர் மகிழ்அபி ராமியம்மை

GOVERNMENT ... LIBRARY
31 AUG 1957
MADRAS

திருக்கடவூர்

அமுதகடேசுவரர்[1] - பதிகம்

[ஆசிரிய விருத்தம்]

சுடர்மணிக் குழையும் மலர்க்கரத் தழலும்
தும்பிகள் இடைவிடா தழையும்
தும்பைமா லிகையும் வம்புவார் சடையும்
துண்டவெண் பிறையுமுந் நூலும்
நடனபங் கயமுங் கிரணகங் கணமும்
நங்கைபங் கமர்ந்தசுந் தரமும்
நயனமூன் றுடைய கோலமுங் கண்டோர்
நமனையுங் காணவல் லவரோ?
கொடிபல தொடுத்த நெடியமா மணிபொற்
கோபுரம் பாரிடந் தொடுத்துக்
கொழுந்துவிட் டெழுந்து வானில வெறிப்பக்
கொண்டல்வந் துலவியே நிலவும்
கடிமலர்த் தடமுஞ் சுருதியோ திடமும்
கன்னிமா மாடமுஞ் சூழ்ந்து
கனவளஞ் [2]செறிந்த [3]கடவையம் பதியாய்!
காலனைக் காய்ந்ததற் பரனே! 1

தண்டமுங் கயிறுஞ் சூலமும் புகைந்த
தழலுமிழ் கண்களும் வளைந்த
தந்தமுஞ் சிவந்த குஞ்சியுங் கரிய
சைலமே அனையமே னியுமாய்
அண்டிய சமனைக் கண்டுள மயங்கி
அறிவழிந் திருவிழி களும்பஞ்(சு)
அடைந்துவாய் புலர்ந்து மெய்ம்மறந் திடும்போ(து)
அம்பிகை தன்னுடன் வருவாய்;
வண்டுகள் முரன்று முகைமுறுக் குடைந்து
மதுமழை பொழிந்துதா தளைந்து
மடல்விரிந் தலர்ந்து பொன்னிறம் பொதிந்த
மண்டலங் கொன்றைவார் சடையாய்!
கண்டவர் உளமுங் கண்ணுமே கவருங்
கனதன வனிதையர் நெருங்கும்
கனவளஞ் செறிந்த கடவையம் பதியாய்!
காலனைக் காய்ந்ததற் பரனே! 2

1. அமுதகடேசுவரர் - இவர் அமுதமே இலிங்கமாக ஆனமையின் இப்பெயர் பெற்றார். அமுதகடோற்பவர், அமுதலிங்கம் எனவும் பெயர் பெறுவர். 2. பா-ம், சிறந்த. 3. கடவை - திருக்கடவூர்.

தனபதி யனைய செல்வமே பெறினும்
சதமகன் போகமே பெறினும்
தாரணி சுமக்குஞ் சேடனே நிகராய்த்
தக்கதோ ரறிவெலாம் பெறினும்
அனகனை யொத்த அழகுதான் பெறினும்
அருமறைக் கிழவனே எனினும்
ஐய! நின் கடைக்கண் அருள்தவ றியபேர்
அங்கையோ டேந்திநின் றுழல்வார்;
பனககங் கணத்தாய்! அளப்பருங் குணத்தாய்!
பார்வதி வாமபா கத்தாய்!
பவளநன் னிறத்தாய்! தவளதூ ளிதத்தாய்!
பரிபுரம் அலம்புபொற் பதத்தாய்!
கனகமுந் துகிலுந் தரளமும் வயிரக்
கலன்களும் நிலந்தொறு மிடைந்த
கனவளஞ் செறிந்த கடவையம் பதியாய்!
காலனைக் காய்ந்ததற் பரனே! 3

தந்தையை மனையை ஒக்கலைத் துணையைத்
தாயைமென் குதலைவாய்ச் சேயைத்
தனத்தையெள வனத்தை இன்பபோ கத்தைத்
தையல்நல் லாள்பெறுந் திறத்தை
அந்தியும் பகலும் விரும்பிமெய் சோம்பி
ஆழ்கடற் படுதுரும் பாகி
அல்க்கழிந் தேனைப் புலப்படத் திருத்தி
ஆட்கொள நினைந்திலாய் அன்றே!
சிந்தைநைந் துருக இன்னிசை படித்துச்
சிலம்பொலி யாரவே நடித்துச்
செழும்புனற் சடைமேற் கரந்தையை முடித்துத்
திருவெண்(று) உடலெலாந் தரித்துக்
கந்தைகோ வணம்தோல் பொக்கணந் தாங்கிக்
கபாலமொன் றேந்திநின் றவனே!
கனவளஞ் செறிந்த கடவையம் பதியாய்!
காலனைக் காய்ந்ததற் பரனே! 4

வஞ்சகக் கிணருய்த் துன்பவா ரிதியாய்
வறுமையென் பதற்கிருப் பிடமாய்
மறம்பொதி குடிலாய் அசத்திய விதையாய்
மயல்விளை கழனியாய்ப் பாவ
சஞ்சித வடிவாய்ச் சருச்சரைப் புரமாய்ச்
சங்கட நோய்க்களஞ் சியமாய்த்
தலைதடு மாறித் திரியுமென் றனக்குன்
தண்ணருள் கிடைக்குமோ ? அறியேன் ;
நஞ்சமும் பகுவாய்ச் சுடிகைமுள் ளெயிற்று
நகைமணிப் பாந்தளஞ் சூழ்ந்த
நளிரிளம் பிறையோ டொளிர்செழுஞ் சடையாய் !
நங்கையர் முழுமதி முகத்தைக்
கஞ்சமென் மலர்கள் கண்டுவா யொடுங்கும்
கந்தமுந் தியதடஞ் சூழும்
கனவளஞ் செறிந்த கடவையம் பதியாய் !
காலனைக் காய்ந்ததற் பரனே ! 5

பிரமனுஞ் சலிக்கத் தாயர்சஞ் சலிக்கப்
பேதையர் கண்(டு)அசங் கதிக்கப்
பிணிகளும் பகைக்க மூப்புவந் தலைக்கப்
பின்றொடர்ந்(து) ஆசைசென் றிழுக்கத்
தருமனும் வெறுக்க நரகமும் ஒறுக்கத்
தாரணி சுமந்துநொந் திளைக்கச்
சகடெனச் சுழலும் கறங்கெனக் கொடிய
சடலம தெடுக்கநான் இலக்கோ ?
குருமணி இமைக்கும் புதுமலர்த் தடத்தில்
கோட்டிள மோட்டுமா மேதிக்
குலங்கள்போய்ப் படிந்து நலங்கிளர் செழுந்தேன்
குவளைமென்(று) ஒழுக்கிய தோற்றம்
கரியமா கடலிற் புகுந்துநீர் அருந்துங்
காளமே கங்களோ வெனவாய்க்
கனவளஞ் செறிந்த கடவையம் பதியாய் !
காலனைக் காய்ந்ததற் பரனே ! 6

மறுகுவெஞ் சினத்தர் தெருமவ குணத்தர்
வஞ்சகம் பொதிந்தநெஞ் சகத்தர்
வழக்கமொன் றில்லாப் பிணக்குறு மூடர்
மதியிலாப் பதிதர்பால் அணுகிப்
பொறுமையில் தருமன் நெறியினில் சேடன்
புலமையில் குறியமா முனிவன்
புரந்தரன் எனவும் நிரந்தரம் புகழ்ந்து
பொழுதவம் போக்கினன் அந்தோ!
வெறிமலர்ப் பிரசஞ் சொரிந்துவண் டினங்கள்
மிடைந்துமா முகிலினைக் கிழித்து
மேலிடத்(து) இரவிப் பசும்புர விகளாய்
விளங்கியே விண்டல முகட்டைக்
கருவினின் றேங்கிச் செறியும்ஐந் தருக்குள்
கற்பகத் தருவினை யொப்பாய்!
கனவளஞ் செறிந்த கடவையம் பதியாய்!
காலனைக் காய்ந்ததற் பரனே! 7

நெஞ்சகங் குழைந்து பணிவிடைக் கிசைந்து
நீறொடு கண்டிகை புனைந்து
நிலவுபொற் கோயி லதைவலம் புரிந்து
நெகிழுமுன் நாண்மலர் எடுத்து
வஞ்சமா மயக்கில் மயங்கும்ஐம் புலனும்
மாற்றலர் வலிமையைக் களைந்துன்
மலர்ப்பதத்(து) இருத்தி அலக்கணைத் துரத்தி
மதிமிகு வாழ்வளித் திடும்ஓம்
சுஞ்சக[1] எனுநற் றூயமூன் றெழுத்தைச்
சுகிர்தமாய்க் கொண்டருச் சனைசெய்
தொண்டர்கள் உறவைக் கொண்டுனைப் பணியச்
சுணங்கனும் எனக்கருள் புரிவாய்;
கஞ்சமென் மலர்மீ(து) அஞ்சமே படரக்
கார்மயில் ஓரமாய் நடிக்கும்
கனவளஞ் செறிந்த கடவையம் பதியாய்!
காலனைக் காய்ந்ததற் பரனே! 8

1. ஓம் சும் சக - இது மிருத்தஞ்சய மந்திரம்.

மைக்கயல் விழியால் மயக்கியுள் ளுருக்கி
மஞ்சளால் முகத்தினை மினுக்கி
மணிநகை பெருக்கி ஆசையுண் டாக்கி
வளரிள முலைத்துகில் இறுக்கிப்
பக்கல்வந் தமர்ந்து மென்மொழி பகர்ந்து
பரவசம் அடைந்துமேல் விழுந்து
படிற்றுளம் உணர்த்தாத சத்திய முரைத்துப்
பறித்திடப் பயிலுபா வையர்க்காய்த்
துக்கசா கரத்தில் அழுந்திநா டோறும்
தோதகப் பட்டபா தகனைத்
துய்யசெங் கமலச் செய்யதா ளிணைக்கே
தொண்டுகொண் டால்குறை யுறுமோ?
கைக்கழுங் காடுந் திறத்தினை நிகராய்க்
கமலமென் மலர்மிசை அறுகால்
களியொடு சுழலுங் கடவையம் பதியாய்!
காலனைக் காய்ந்ததற் பரனே! 9

செயல்பணி விடையாய்ச் செப்பல்ஐந் தெழுத்தாய்த்
திரிதலே வலம்புரி தலுமாய்ச்
சிந்தையின் நினைவே தியானமாய் உண்டு
தெவிட்டல்நை வேதனம் சிறப்பாய்த்
துயிறல்வந் தனையாய்த் திருவுளத் துவந்து
துள்ளுவெள் விடையினில் ஏறித்
தொண்டரும் விசும்பில் அண்டருங் காணத்
தோகையோ(டு) எனக்குவந் தருள்வாய்;
வயல்வரம் புறைந்த கடைசியர் முகத்தை
மதியம்என்(று) அதிசய மிகுந்து
வரும்பக லிடத்தும் இரவினும் குவளை
வாயொடுங் காமலே விளங்கும்
கயனெடுந் தடமுங் கமுகமுங் கமுகைக்
காட்டிய கன்னலும் பொதிந்த
கனவளஞ் செறிந்த கடவையம் பதியாய்!
காலனைக் காய்ந்ததற் பரனே! 10

கால சம்மார மூர்த்தி[1] பதிகம்

[சந்த விருத்தம்]

அந்தரத் தமரர் மந்தரத் தையொலி
அலைக டற்றலை நிறுத்திநின்(று)
அழலுறக் கடைய அதனிடத் துடைய
அமுத முற்றடையும் அண்ணலார்
கந்த ரத்திடை கறுப்பி னர்கவுரி
கண்க ளித்திடு முறுப்பினர்
கால காலகட வூரர் கோலமது
கண்டு தண்டனிட வல்லபேர்
பந்த மாசையவ மான நிந்தையொடு
பழிப்ப சத்திய மனப்பயம்
படிறு வஞ்சனை அனர்த்தமா கொடுமை
பாப மீறுகொலை சஞ்சலம்
தொந்த மோகமவி வேக மாசுசதி
துயர மூடமுழு வைரநீள்
தோதகங் குடிலம் அவகுணங் தவறு
சோகமுங் தவிரு வார்களே. 1

வெங்கயத் துரியர் பங்கயர்க் கரியர்
வேத வாம்பரியர் தீதிலர்
வீரர் விஞ்சுகர் விநோதர் கஞ்சுகர்
வெற்றிமால் மகிழும் அத்தனர்
கங்க ணத்தர்மிகு வெங்க ணத்தலைவர்
களத்தி சைந்தபொரு நிர்த்தனர்
கால காலகட வூரர் கோலமது
கண்டு தண்டனிட வல்லபேர்
திங்கள் வெண்குடை கவிப்ப மும்முரசு
சென்று சென்றெதிர் ஒலிப்பஎண்
திசைபுரக்கு மனர்கை முகிழ்ப்ப இகல்
எவ்வருங் திறைய ளப்பமேல்
மங்கை மார்கவரி காலசைப் பநெடு
மகர தோரண வளப்பமாய்
மத்த யானைமிசை வெற்றி யாளரென
வைய கந்தனில் இருப்பரே. 2

---

1. கால சம்மார மூர்த்தி-இவர் இயமனை உதைத்து அருள்புரிந்தவர்: தெற்கு முகமாக எழுந்தருளி இருப்பவர்; ஆண்டில் ஒரு முறை வீதிக்கு எழுந்தருளுபவர். இவருக்கு ஆண்டில் பதினன்கு முறை திருமஞ்சனம் நடைபெறும்.

திருகு வெள்ளெயிறு வரிநெடுங் கயிறு
செய்ய குஞ்சியொடு நஞ்செனச்
சீறு கோபமுடன் ஏறு தீபவிழி
தெறுமிடிக் குரல்மு ழக்கியே
கரும லைக்குநிகர் எருமையிற் பெரிய
கால்மலைக் குவடு போல்வருங்
கால காலகட வூரர் கோலமது
கண்டு தண்டனிட வல்லபேர்
பொரும ழுப்படை இலங்கு செஞ்சடை
பொருந்து வெள்விடை திருந்துவெண்
பூதி யாகமொடு தோகை பாகமழல்
பொங்கு நாகமணி கங்கணம்
பெருகு கங்கைநதி முடிவிளங் கிவதி
பிஞ்சு மாமதி கொழுந்தழல்
பெய்த பெற்றிபெறும் ஒற்றை நெற்றிவிழி
பெற்றிருப் பர்அடை யாளமே[1]. 3

பெண்ணி டும்பரி புரத்தி ஞரொலி
பிறந்தி டும்பரி புரத்தினர்
பிறைமு டிக்குளணி கங்கை யார்மறைப்
பொருளை வைத்துளணி கங்கையார்
கண்ணி சைந்ததொரு மூன்றி னூரிய
கயிலை தாழநக மூன்றினர்
கால காலகட வூரர் கோலமது
கண்டு தண்டனிட வல்லபேர்
மண்ண ளந்தச ரணர்க்கு மென்முளரி
மாலை யாபர ணர்க்குமோர்
வச்சி ரத்திறை வருக்கு எண்டிகிரி
மாத்தி ரத்துறை வருக்குமே
விண்ண வர்க்குமிகு பண்ண வர்க்குமுயர்
வித்த கர்க்குமதி யொத்துவாழ்
மெய்த்த வத்துநிலை பெற்ற வர்க்குமவர்.
மேலிருப் பர்அடை யாளமே. 4

---

1. இது சிவ சாருப பதவியைக் குறிக்கும்.

உரக குண்டலர் நெருங்கி விண்டலர்
உறைந்த வண்டுமுரல் கொன்றையார்
உத்த ரீகமல ரொப்பி லாதசிலை
ஒத்த நெற்றிமுலை மங்கையார்
கரக பாலர்திரி சூலர் நீலமணி
கண்டர் புண்டரிக ஆடையார்
கால காலகட வூரர் கோலமது
கண்டு தண்டனிட வல்லபேர்
விரக மானதில் உணங்கி டார்;உடல்
வேத னைப்பட அறிந்திலார்;
வெகுளி யானது செறிந்திடார்; உலகை
வேண்டி ஈனரை வணங்கிடார்;
நரக மென்பதினி எய்திடார்; கருமம்
நல்ல(து) அல்லதவர் செய்திடார்;
நமனிருந் ததிசை கண்டிடார்; இறுதி
நாளுமே பகுதி யாவரே. 5

துலைநி றுக்குமொரு வணிக னுக்குமது
சூத னுக்குமநு நீதிசேர்
தொல்புவிக் கரச னுக்கு மிக்கதமிழ்
சொல்லுமோர் புலவ னுக்குமெய்க்
கலைய னுக்குமதி நடுவ னுக்குமுனி
காத லர்க்குமினி தருள்செயுங்
கால காலகட வூரர் மேவிவளர்
கயிலை போலவரு மயிலனார்
முலைய ரும்பிவரு பனசமே இனிய
மொழியும் இன்பமுறு வனசமே
முத்தை யொத்தமணி மூரலே அளிகள்
மொய்த்த தோள்களிள வேரலே
சிலையி ரண்டனைய புருவமே இரதி
தேவி யொத்தவள் உருவமே
திருமிடற் றழகு சங்கமே அமுது
சிந்து மாணடிபு சங்கமே. 6

விதிசி ரத்தையரி பழியர் அஞ்சுகணே
வேனூரத் தையெரி விழியர்மா
மேருவிற் கையினர் நேர்கடுக் கையினர்
வேள்வியிற் பணியும் வள்ளலார்
கதிர வன்றனது தந்தம் அம்புவியில்
உதிர வன்பொடு புடைத்திடும்
கால காலகட வூரர் மேவிவளர்
கயிலை போலவரு மயிலனூர்
மதியில் நஞ்சமு மிருக்குமோ கரிய
மஞ்சு மாலிகை கரிக்குமோ ?
வாளரா அமுத மூறுமோ கனக
வரையிலே புளக மீறுமோ ?
எதிர்க லன்பல திருத்துமோ? இடையில்
இலகுமே கலைபொ ருத்துமோ ?
விளங்கு தோட்கழை வியக்குமோ ? இனிமை
விண்ட சொற்கழை விளங்குமே. 7

இகல றிந்துவரு பகையி னூர்புரம்
எரித்திடுங் கொடிய நகையினூர்
எரிம ழுப்படை வலத்தினூர் முடியில்
ஏறு மீறிய சலத்தினூர்
ககன மண்டலமும் உருவி நின்றுவிதி
காணொ ணதெொரு தாணுவார்
கால காலகட வூரர் மேவிவளர்
கயிலை போலவரு மயிலனூர்
முகம திக்குவமை புகலுவார் அளிகள்
மொய்குழற் குவமை நுவலுவார்
முலையி னுக்குவமை பகருவார் இனிய
மொழியி னுக்குவமை மொழிகுவார்
நகையி னுக்குவமை கூறுவார் சரண
நடையி னுக்குவமை பேசுவார்
நயமறிந் திளமை சொல்லுவார் எவரும்
நடுவறிந் தவர்கள் இல்லையே. 8

சிறைய னத்தநறை யெழுவளத் தறிவர்
தினமனத் திடைதி யானமே
செய்து தங்கள்வரம் எய்துதற் கரிய
தேவ தேவர்பரி பூரணர்
கறைமிடற் றலைவர் அலைகடற் பரியர்
கதிதரும் குரவை வெருவிலார்
கால காலகட வூரர் கோலமது
கண்டு கைதொழுது கொண்டுகாண் ;
எறிதி ரைப்பறை முழக்கி அங்கைதனில்
இக்குவார் சிலைவ ணக்கிநீள்
இருதலைக் குமளி நாணி றுக்கிமுன்
எழுந்து மீசையை முறுக்கிவேள்
வெறிம லர்க்கணை யெடுத்ததுங் கொடிய
வேகமாயது தொடுத்ததும்
மெய்யி னிற்பட விடுத்ததுஞ் செவியில்
விண்டு விண்டுசொல வேணுமோ ? 9

குயில்மொ ழிப்புணர் முலைக்கருங் கணுடு
கோதை பாதியுறை சோதியார்
கொக்க ரித்துவரு தக்க னுருயிர்
குறைத்தெ ழுந்திடு மறத்தினர்
கயிலை நாதர்கண நாதர் பூதியணி
காய தாயகமு மாயினர்
கால காலகட வூரர் கோலமது
கண்டு கைதொழுது வண்டுகாள் ;
அயிலி னுங்கொடிய அம்பினல் மதுர
ஆர வாரமிசை வேயினல்
அந்த ரந்தனில் அசைந்துசின்(று) அடரும்
அம்புலிக் கொடிய தீயினல்
துயில்து றந்துமெய் மறந்து வாடிமிக
சோக மோகம் பிறந்துளத்
தோதகப் படவு நானகப் படுதல்
சொல்லுவீர் மதனை வெல்லவே. 10

திருக்கடவூர்

[1] அபிராமியம்மைப் பதிகம்

காப்பு

தூயதமிழ்ப் பாமாலை சூட்டுதற்கு மும்மதனால்
வாயைங் கரன்றாள் வழுத்துவாம் ;—நேயர்நிதம்
எண்ணும் புகழ்கடவூர் எங்கள் அபி ராமவல்லி
நண்ணும்பொற் பாதத்தில் நன்கு.

நூல்

[ஆசிரிய விருத்தம்]

கலையாத கல்வியும் குறையாத வயதுமோர்
கபடுவா ராத நட்பும்
கன்றாத வளமையுங் குன்றாத இளமையும்
கழுபிணியி லாத உடலும்
சலியாத மனமுமன் பகலாத மனைவியும்
தவறாத சந்தா னமும்
தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்
தடைகள்வா ராத கொடையும்
தொலையாத நிதியமும் கோணாத கோலுமொரு
துன்பமில் லாத வாழ்வும்
துய்யநின் பாதத்தில் அன்பும்உதவி ப்[2]பெரிய
தொண்டரொடு கூட்டு கண்டாய்;
அலையாழி அறிதுயிலு மாயனது தங்கையே !
ஆதிகட வூரின் வாழ்வே !
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி !
அருள்வாமி ! [3]அபிராமி யே ! 1

---

1. அபிராமியம்மையார் - இது திருக்கடவூரில் எழுந்தருளிய இறைவியின் திருநாமம் ஆகும். இவ்வம்மையார் தெளிந்த ஞானத் திருவுருவாய் எழுந்தருளி அன்பர்களுக்கு அருள்புரிகின்றார். 2. பா - ம்; பின்பு. 3. அபிராமி யுமையே.

காரளக பந்தியும் பந்தியின் அலங்கலும்
கரிய புருவச் சிலைகளும்
கர்ணகுண் டலமுமதி முகமண் டலம்நுதற்
கத்தூரிப் பொட்டு மிட்டுக்
கூரணிந் திடுவிழியும் அமுதமொழியுஞ் சிறிய
கொவ்வையின் கனிய தரமும்
குமிழனைய நாசியும் குந்தநிகர் தந்தமும்
கோடுசோ டான களமும்
வாரணிந் திருமாந்த வனமுலையும் மேகலையும்
மணிநூ புரப்பா தமும்
வந்தெனது முன்னின்று மந்தகா சமுமாக
வல்வினையை மாற்று வாயே;
ஆரமணி வானிலுறை தாரகைகள் போலநிறை
ஆதிகட வூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி!
அருள்வாமி! அபிராமி யே! 2

மகரவார் குழல்மேல் அடர்ந்துகுமிழ் மீதினில்
மறைந்து வாளைத் துறந்து
மைக்கயலை வேண்டிநின் செங்கமல விழியருள்
வரம்பெற்ற பேர்க ளன்றோ?
செகமுழுதும் ஒற்றைத் தனிக்குடை கவித்துமேற்
சிங்கா தனத்தி லுற்றுச்
செங்கோலும் மநுநீதி முறைமையும் பெற்றுமிகு
திகிரியுல காண்டு பின்பு
புகர்முகத்(து) ஐராவதப் பாக ராகிநிறை
புத்தேளிர் வந்து போற்றிப்
போகதே வேந்திரன் எனப்புகழ விண்ணில்
புலோமிசை யொடுஞ்சு கிப்பர்;
அகரமுத லாகிவளர் ஆனந்த ரூபியே!
ஆதிகட வூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி!
அருள்வாமி! அபிராமி யே! 3

மறிகடல்கள் ஏழையுந் திகிரியிரு நான்கையும்
மாதிரக் கரியெட் டையும்
மாநாகம் ஆனதையும் மாமேரு என்பதையும்
மாகூர்மம் ஆனதையு மோர்
பொறியரவு தாங்கிவரு புவனமீ ரேழையும்
புத்தேளிர் கூட்டத் தையும்
பூமகளை யுந்திகிரி மாயவனை யும்அரையிற்
புலியாடை உடையா னையும்
முறைமுறைக ளாயீன்ற முதியவர்களாய்ப் பழைமை
முறைகள் தெரியாத நின்னை
மூவுலகி லுள்ளவர்கள் வாலையென்(று) அறியாமல்
மொழிகின்ற தேது சொல்வாய்;
அறிவுநிறை விழுமியர்தம் ஆனந்த வாரியே!
ஆதிகட வூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி!
அருள்வாமி! அபிராமி யே! 4

வாடாமல் உயிரெனும் பயிர்தழைத் தோங்கிவர
அருள்மழை பொழிந்தும் இன்ப
வாரிதியிலே நின்ன தன்பெனுஞ் சிறகால்
வருந்தா மலேய ணைத்துக்
கோடாமல் வளர்சிற் றெறும்புமுதல் குஞ்சரக்
கூட்டமுத லான சீவ
கோடிகள் தமக்குப் புசிக்கும் புசிப்பினைக்
குறையாம லேகொ டுத்து
நீடாழி யுலகங்கள் யாவையும் நேயமாய்
நின்னுதர பந்தி பூக்கும்
நின்மலீ! அகிலங்களுக்(கு) அன்னை என்றோதும்;
நீலியென்(று) ஓது வாரோ?
ஆடாய நான்மறையின் வேள்வியால் ஓங்குபுகழ்
ஆதிகட வூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி!
அருள்வாமி! அபிராமி யே! 5

பல்குஞ் சரந்தொட் டெறும்புகடை யானதொரு
பல்லுயிர்க் குங்கல் லிடைப்
பட்டதே ரைக்கும்அன் றுற்பவித் திடுகருப்
பையுறு சீவ னுக்கும்
மல்குஞ் சராசரப் பொருளுக்கும் இமையாத
வானவர் குழாத்தி னுக்கும்
மற்றுமொரு மூவர்க்கு மியாவர்க்கும் அவரவர்
மனச்சலிப் பில்லா மலே
நல்குந் தொழிற்பெருமை உண்டா யிருந்துமிகு
நவநிதி உனக்கி ருந்தும்
நாஞெருவன் வறுமையிற் சிறியனு னல்அந்
நகைப்புனக் கேஅல்ல வோ ?
அல்கலந் தும்பர்நா டளவெடுக் குஞ்சோலை
ஆதிகட வூரின் வாழ்வே !
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி !
அருள்வாமி ! அபிராமி யே ! 6

நீடுல கங்களுக்(கு) ஆதரமாய் நின்று
நித்தமாய் முத்தி வடிவாய்
நியமமுடன் முப்பத் திரண்டறம் வளர்க்கின்ற
நீமனை வியாய்இ ருந்தும்
வீடுவீ டுகடோறும் ஓடிப் புகுந்துகால்
வேசற்(று) இலச்சை யும்போய்
வெண்டுகில் அரைக்கணிய விதியற்று நிர்வாண
வேடமுங் கொண்டு கைக்கோர்
ஓடேந்தி நாடெங்கும் உள்ளந் தளர்ந்துநின்(று)
உன்மத்த னுகி அம்மா !
உன்கணவன் எங்கெங்கும் ஐயம்புகுந் தேங்கி
உழல்கின்ற தேது சொல்வாய் ;
ஆடுகொடி மாடமிசை மாதர்விளை யாடிவரும்
ஆதிகட வூரின் வாழ்வே !
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி !
அருள்வாமி ! அபிராமி யே ! 7

ஞானந் தழைத்துன் சொரூபத்தை அறிகின்ற
நல்லோர் இடத்தி னிற்போய்
நடுவினி லிருந்துவந் தடிமையும் பூண்டவர்
நவிற்றும் உபதேச முட்கொண்டு
ஈனந்தனைத் தள்ளி எனதுநா னெனுமானம்
இல்லா மலேது ரத்தி
இந்திரிய வாயில்களை இறுகப்பு தைத்துநெஞ்(சு)
இருளற விளக்கேற் றியே
ஆனந்த மானவிழி யன்னமே! உன்னைஎன்
அகத்தா மரைப்போ திலே
வைத்துவே றேகவலை யற்றுமே லுற்றபர
வசமாகி அழியாத தோர்
ஆனந்த வாரிதியில் ஆழ்கின்ற தொன்றுகாண்;
ஆதிகட வூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி!
அருள்வாமி! அபிராமி யே! 8

சலதியுல கத்திற் சராசரங் களையீன்ற
தாயா கினுலெ னக்குத்
தாயல்ல வோ? யான்உன் மைந்த னன்றோ? எனது
சஞ்சலம் தீர்த்து நின்றன்
முலைசுரந் தொழுகுபா லூட்டிஎன் முகத்தைஉன்
முன்தானை யால்து டைத்து
மொழிகின்ற மழலைக் குகந்துகொண் டிளநிலா
முறுவல்இன் புற்றரு கில்யான்
குலவிவிளை யாடல்கொண் டருண்மழைபொழிந்(து)அங்கை
கொட்டி வாவென்(று) அழைத்துக்
குஞ்சரமு கன்கந்தனுக்(கு) இளையன் என்றெனைக்
கூறினுல் ஈனம் உண்டோ ?
அலைகடலி லேதோன்று மாருத அமுதமே!
ஆதிகட வூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி!
அருள்வாமி! அபிராமி யே! 9

கைப்போது கொண்டுன் பதப்போது தன்னில்
கணப்போதும் அர்ச்சிக் கிலேன்;
கண்போதி னாலுன் முகப்போது தன்னையான்
கண்டு தரிசனை புரிகிலேன்;
முப்போதில் ஒருபோதும் என்மனப் போதிலே
முன்னிஉன் ஆல யத்தின்
முன்போது வார்தமது பின்போத நினைகிலேன்;
மோசமே போய்உ ழன்றேன்;
மைப்போத கத்திற்கு நிகரெனப் போதெரு
மைக்கடா மீதேறி யே
மாகோர காலன் வரும்போது தமியேன்
மனங்கலங் கித்தி யங்கும்
அப்போது வந்துன் அருட்போது தந்தருள்
ஆதிகட வூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி!
அருள்வாமி! அபிராமி யே! 10

மிகையுந் துரத்தவெம் பிணியுந் துரத்த
வெகுளி யானதுந் துரத்த
மிடியுந் துரத்தநரை திரையும் துரத்தமிகு
வேதனை களுந்து ரத்த
பகையுந் துரத்தவஞ் சனையுந் துரத்த
பசியென் பதுந்து ரத்த
பாவந் துரத்த பதிமோகந் துரத்த
பலகா ரியமுந் துரத்த
நகையுந் துரத்தஊழ் வினையுந் துரத்த
நாளுந் துரத்த வெகுவாய்
நாவரண் டோடிகால் தளர்ந்திடும் என்னை
நமனுந் துரத்து வானோ?
அகிலஉல கங்கட்கும் ஆதார தெய்வமே!
ஆதிகட வூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி!
அருள்வாமி! அபிராமி யே! 11

அபிராமி அம்மைப் பதிகம்

[ஆசிரிய விருத்தம்]

கங்கையொடு தும்பையும் அணிந்தவர் வியக்குங்
கலாமதியை நிகர்வத னமுங்
கருணைபொழி விழிகளும் விண்முகில்கள் வெளிறெனக்
காட்டிய கருங்கூந் தலுஞ்
சங்கையில் லாதொளிரு மாங்கல்ய தாரணந்
தங்குமணி மிடறு மிக்க
சதுர்பெருகு துங்கபா சாங்குசம் இலங்குகர
தலமுவிர லணியும் அரவும்
புங்கவர்க் கமுதருளு மந்தரகு சங்களும்
பொலியு நவமணி நூபுரம்
பூண்டசெஞ் சேவடியை நாளும் புகழ்ந்துமே
போற்றியென வாழ்த்த விடைமேல்
மங்கள மிகுந்தநின் பதியுடன் வந்தருள்செய்
வளர்திருக் கடவூ ரில்வாழ்
வாமி!சுப நேமி!புகழ் நாமி!சிவ சாமிமகிழ்
வாமி!அபி ராமி உமையே! 1

சந்திர சடாதரி! முகுந்த சோதரி! துங்க
சலசலோ சனமா தவி!
சம்ப்ரம பயோதரி! சுமங்கலி! சுலட்சணி!
சாற்றருங் கருணா கரி!
அந்தரி! வராகி!சா ம்பவி!அமர தோதரி!
அமலை!செக சால சூத்ரி!
அகிலாத்ம காரணி! விநோதசய நாரணி!
அகண்ட சின்மய பூரணி!
சுந்தரி! நிரந்தரி! துரந்தரி! வரைராச
சுகுமாரி! கௌமாரி! உத்
துங்ககல் யாணி!புஷ் பாஸ்திராம் புயபாணி!
தொண்டர்கட் கருள்சர் வாணி!
அந்தரி! மலர்ப்பிரம ராதிதுதி வேதவொலி
வளர்திருக் கடவூ ரில்வாழ்
வாமி!சுப நேமி!புகழ் நாமி!சிவ சாமிமகிழ்
வாமி!அபி ராமி! உமையே! 2

வாசமலர் மருவளக பாரமும் தண்கிரண
மதிமுகமும் அயில்விழி களும்
வள்ளநிகர் முலையுமான் நடையுநகை மொழிகளும்
வளமுடன் கண்டு மின்னார்
பாசபந் தத்திடை மனங்கலங் கித்தினம்
பலவழியும் எண்ணி யெண்ணிப்
பழிபாவம் இன்னதென் றறியாமல் மாயப்ர
பஞ்சவாழ் வுண்மை என்றே
ஆசைமே லிட்டிவீ ணுகநாய் போல்திரிந்(து)
அலைவதல் லாமல் உன்றன்
அம்புயப் போதெனுஞ் செம்பதந் துதியாத
அசடன்மேற் கருணை வருமோ ?
மாசிலா தோங்கிய குஞ்சரி பவானிசீர்
வளர்திருக் கடவூ ரில்வாழ்
வாமி!சுப நேமி!புகழ் நாமி!சிவ சாமிமகிழ்
வாமி!அபி ராமி! உமையே ! 3

நன்றென்று தீதென்று நவிலுமிவ் விரண்டினுள்
நவின்றதே உலகி லுள்ளோர்
நாடுவார் ஆதலின் நானுமே அவ்விதம்
நாடினேன் நாடி னும்
இன்றென்று சொல்லாமல் நினதுதிரு வுள்ளம(து)
இரங்கி யருள்செய்கு வாயேல்
ஏழையேன் ஆய்குவேன்; மெய்யான மொழியிஃதுன்
இதயமறி யாத துண்டோ ?
குன்றமெல் லாம்உறைந்து என்(றும்)அன் பர்க்கருள்
குமார தேவனை அளித்த
குமரி!மர கதவருணி! விமலி!பை ரவி!கருணை
குலவுகிரி ராச புத்ரி!
மன்றல்மிகு நந்தன வனங்கள்சிறை யளிமுரல
வளர்திருக் கடவூ ரில்வாழ்
வாமி!சுப நேமி!புகழ் நாமி!சிவ சாமிமகிழ்
வாமி!அபி ராமி! உமையே ! 4

ஒருநாள் இரண்டுநாள் அல்லநான் உலகத்து
உதித்தஇந் நாள்வ ரைக்கும்
ஒழியாத கவலையால் தீராத இன்னல்கொண்(டு)
உள்ளந் தளர்ந்து மிகவும்
அருநாண் இயற்றிட்ட விற்போல் இருக்குமிவ்
வடிமைபாற் கருணை கூர்ந்து
அஞ்சேலெ னச்சொல்லி யாதரிப் பவர்கள்உனை
அன்றியிலை உண்மை யாக
இருநாழி கைப்போதும் வேண்டாது நிமிடத்தில்
இவ்வகில புவனத் தையும்
இயற்றி யருளுந்திறங் கொண்டநீ ஏழையேன்
இன்னல்தீர்த் தருளல் அரிதோ?
வருநாவ லூரர்முத லோர்பரவும் இனியபுகழ்
வளர்திருக் கடவூ ரில்வாழ்
வாமி!சுப நேமி!புகழ் நாமி!சிவ சாமிமகிழ்
வாமி!அபி ராமி! உமையே! 5

GOVERNMENT ORIENTAL MANUSCRIPTS
AUG 1957

எண்ணிக்கை இல்லாத துன்பங்கள் மேன்மேல்
ஏறிட் டொறுக்க அந்தோ!
எவ்விதம் உளஞ்சகித் துய்குவேன்; இப்பொழுது
எடுத்திட்ட சன்மம் இதனில்
நண்ணியென் னளவுசுக மானதொரு நாளினும்
நான்அனு பவித்த தில்லை
நாடெலாம் அறியுமிது கேட்பதேன்? நின்னுளமும்
நன்றாய் அறிந்தி ருக்கும்;
புண்ணியம் பூர்வசன னத்தினிற் செய்யாத
புலைய னானாலும் நினது
பூரண கடாட்சவீட் சண்ணியஞ் செய்தெனது
புன்மையை அகற்றி யருள்வாய்;
மண்ணவர்கள் விண்ணவர்கள் நித்தமும் பரவுமிசை
வளர்திருக் கடவூ ரில்வாழ்
வாமி!சுப நேமி!புகழ் நாமி!சிவ சாமிமகிழ்
வாமி!அபி ராமி! உமையே! 6

தெரிந்தோ அலாதுதெரி யாமலோ இவ்வடிமை
செய்திட்ட பிழையி ருந்தால்
சினங்கொண்ட தோர்கணக் காகவை யாதுநின்
திருவுளம் இரங்கி மிகவும்
பரிந்துவந் தினியேனும் பாழ்வினையில் ஆழ்ந்(து)இனற்
படாது நல்வரம் அளித்துப்
பாதுகாத் தருள்செய்ய வேண்டும்அண் டாண்டவுயிர்
பரிவுடன் அளித்த முதல்வி!
புரந்தரன் போதன்மா தவனுதி யோர்கள் துதி
புரியும் பாதாம் புயமலர்ப்
புங்கவி! புராந்தகி! புரந்தரி! புராதனி!
புராணி!திரி புவனே சுவரி!
மருந்தினும் நயந்தசொற் பைங்கிளி வராகி!எழில்
வளர்திருக் கடவூ ரில்வாழ்
வாமி!சுப நேமி!புகழ் நாமி!சிவ சாமிமகிழ்
வாமி!அபி ராமி! உமையே! 7

வஞ்சகக் கொடியோர்கள் நட்புவேண் டாமலும்
மருந்தினுக் காவேண் டினும்
மறந்துமோர் பொய்ம்மொழி சொலாமலுந் தீமையாம்
வழியினிற் செல்லா மலும்
விஞ்சுநெஞ் சதனிற் பொறுமைதரி யாமலும்
வீண்வம்பு புரியா மலும்
மிக்கபெரி யோர்கள்சொலும் வார்த்தைதள் ளாமலும்
வெகுளியவை கொள்ளா மலும்
தஞ்சமென நின(து)உபய கஞ்சந்து தித்திடத்
தமியேனுக் கருள்பு ரிந்து
சர்வகா லமுமெனைக் காத்தருள வேண்டினேன்:
சலக்கயல்கள் விழியை அனைய
வஞ்சியர்செவ் வாய்நிகரு வாவியாம் பன்மலரும்
வளர்திருக் கடவூ ரில்வாழ்
வாமி!சுப நேமி!புகழ் நாமி!சிவ சாமிமகிழ்
வாமி!அபி ராமி! உமையே! 8

எனதின்னல் இன்னபடி யென்றுவே றொருவர்க்(கு)
இசைத்திடவும் அவர்கள் கேட்(டு)இவ்
வின்னல்தீர்த் துள்ளத்(து)இரங்கிநன் மைகள்செயவும்
எள்ளளவு முடியாது நின்
உனதமரு வுங்கடைக் கண்ணருள் சிறிதுசெயின்
உதவாத நுண்மணல் களும்
ஓங்குமாற் றுயர்சொர்ண மலையாகும்; அதுவன்றி
உயுரகில புவனங் களைக்
கனமுடன் அளித்துமுப் பத்திரண் டறங்களுங்
கவின்பெறச் செய்யு நின்னைக்
கருதுநல் லடியவர்க் கெளிவந்து சடுதியிற்
காத்துரட் சித்த தோர்ந்து
வனசநிகர் நின்பாதம் நம்பினேன்; வந்தருள்செய்;
வளர்திருக் கடவூ ரில்வாழ்
வாமி!சுப நேமி!புகழ் நாமி!சிவ சாமிமகிழ்
வாமி!அபி ராமி! உமையே! 9

கருநீல வடிவமார் மாடேறி உத்தண்ட
கனதண்ட வெம்பா சமுங்
கைக்கொண்டு சண்டமா காலன்முன் எதிர்க்கமார்க்
கண்டன் வெருண்டு நோக்க
இருநீல கண்டனெனும் நின்பதியை உள்ளத்தில்
இன்புகொண் டருச்சனை செய
ஈசனவ் விலிங்கம் பிளப்பநின் றொருதோன்றி
யமனைச் சூலத்தி லூன்றிப்
பெருநீல மலையென நிலத்தில்அன் னவன்விழப்
பிறங்கு தாளால் உதைத்துப்
பேசுமுனி மைந்தனுக் கருள்செய்த(து) உனதரிய
பேரருளின் வண்ண மலவோ?
வருநீல மடமாதர் விழியென்ன மலர்வாவி
வளர்திருக் கடவூ ரில்வாழ்
வாமி!சுப நேமி!புகழ் நாமி!சிவ சாமிமகிழ்
வாமி!அபி ராமி! உமையே! 10

சகலசெல் வங்களுந் தரும்இமய கிரிராச
தனயைமா தேவி! நின்னைச்
சத்யமாய் நித்யமுள் ளத்தில்து திக்குமுத்
தமருக்(கு) இரங்கி மிகவும்
அகிலமதில் நோயின்மை கல்விதன தானியம்
அழகுபுகழ் பெருமை இளமை
அறிவுசந் தானம்வலி துணிவுவாழ் நாள்வெற்றி
ஆகுநல் லூழ்நு கர்ச்சி
தொகைதரும் [1]பதினாறு பேறும்தந் தருளிநீ
சுகானந்த வாழ்வளிப் பாய்;
சுகிர்தகுண சாலி!பரி பாலி!அநு கூலி!திரி
சூலி!மங் களவி சாலி!
மகவுநான்; நீதாய் அளிக்கொ ணாதோ?மகிமை
வளர்திருக் கடவூ ரில்வாழ்
வாமி!சுப நேமி!புகழ் நாமி!சிவ சாமிமகிழ்
வாமி!அபி ராமி! உமையே! 11

---

1. இப்பதினாறு பேற்றை, “துதிவாணி வீரம் விசயம்சந் தானம் துணிவுதனம், அதிதா னியம்சவு பாக்கியம் போகம் அறி(வு) அழகு. புதிதாம் பெருமை அறம்குலம் நோயின்மை பூண்வயது, பதினாறு பேறும் தருவாய் மதுரைப் பராபரனே” எனவரும் காளமேகப் புலவர் பாடலாலும் அறியலாம்.

திருக்கடவூர்

அபிராமி அந்தாதி

காப்பு

[கட்டளைக் கலித்துறை]

தார்அமர் கொன்றையும் சண்பக மாலையும் சாத்துந்தில்லை
ஊரர்தம் பாகத்(து) உமைமைந்த னே!உல(கு) ஏழும்பெற்ற
சீர்அபி ராமிஅந் தாதிஎப் போதும்என் சிந்தையுள்ளே
காரமர் மேனிக் கணபதி யே!நிற்கக் கட்டுரையே.

நூல்

உதிக்கின்ற செங்கதிர் உச்சித் திலகம் உணர்வுடையோர்
மதிக்கின்ற மாணிக்கம் மாதுளம் போது மலர்க்கமலை
துதிக்கின்ற மின்கொடி மென்கடிக் குங்கும தோயமென்ன
விதிக்கின்ற மேனி அபிராமி! என்றன் [1]விழுத்துணையே. 1

துணையும் தொழுந்தெய்வ மும்பெற்ற தாயும் சுருதிகளின்
பணையும் கொழுந்தும் பதிகொண்ட வேரும் பனிமலர்ப்பூங்
கணையும் கருப்புச் சிலையுமென் பாசாங் குசமும்கையில்
அணையும் திரிபுர சுந்தரி ஆவ(து) அறிந்தனமே. 2

அறிந்தேன் எவரும் அறியா மறையை அறிந்துகொண்டு
செறிந்தேன் உனது திருவடிக் கேதிரு வே!வெருவிப்
பிறிந்தேன்நின் அன்பர் பெருமைஎண் ணாத கருமநெஞ்சால்
மறிந்தே விழுநர குக்குற வாய மனிதரையே. 3

மனிதரும் தேவரும் மாயா முனிவரும் வந்துசென்னி
குனிதரும் சேவடிக் கோமள மே!கொன்றை வார்சடைமேல்
பனிதரும் திங்களும் பாம்பும் பகீரதி யும்படைத்த
புனிதரும் நீயும்என் புந்திஎந் நாளும் பொருந்துகவே. 4

பொருந்திய முப்புரை செப்புரை செய்யும் புணர்முலையால்
வருந்திய வஞ்சி மருங்குல் மனோன்மணி! வார்சடையோன்
அருந்திய நஞ்சமு(து) ஆக்கிய அம்பிகை! அம்புயமேல்
திருந்திய சுந்தரி! அந்தரி! பாதம்என் சென்னியதே. 5

சென்னிய(து) உன்பொற் றிருவடித் தாமரை சிந்தையுள்ளே
மன்னிய(து) உன்திரு மந்திரம் சிந்துர வண்ணப்பெண்ணே!

பா - ம்: 1. விழித்துணையே.

முன்னிய நின்அடி யாருடன் கூடி முறைமுறையே
பன்னிய(து) என்றும்உன் றன்பர மாகம பத்ததியே. 6

ததியுறு மத்திற் சுழலும்என் ஆவி தளர்விலதோர்
கதியுறு வண்ணம் கருதுகண் டாய்கம லாலயனும்
மதியுறு வேணி மகிழ்நனும் மாலும் வணங்கிஎன்றும்
துதியுறு சேவடி யாய்!சிந்து ரானன சுந்தரியே! 7

சுந்தரி எந்தை துணைவிஎன் பாசத் தொடரைஎல்லாம்
வந்தரி சிந்துர வண்ணத்தி னுள்மகி டன்தலைமேல்
அந்தரி நீலி அழியாத கன்னிகை ஆரணத்தோன்
கந்தரி கைத்தலத் தாள்மலர்த் தாள்என் கருத்தனவே. 8

கருத்தன எந்தைதன் கண்ணன வண்ணக் கனகவெற்பிற்
பெருத்தன பாலழும் பிள்ளைக்கு நல்கின பேரருள்கூர்
திருத்தன பாரமும் ஆரமும் செங்கைச் சிலையும்அம்பும்
முருத்தன மூரலும் நீயும்அம் மே!வந்தென் முன்நிற்கவே. 9

நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் நினைப்பதுன்னை
என்றும் வ்ணங்குவ(து) உன்மலர்த் தாள்எழு தாமறையின்
ஒன்றும் அரும்பொரு ளே!அரு ளே!உமை யே!இமயத்(து)
அன்றும் பிறந்தவ ளே!அழி யாமுத்தி ஆனந்தமே! 10

ஆனந்த மாய்என் அறிவாய் நிறைந்த அமுதமுமாய்
வானந்த மான வடிவுடை யாள்மறை நான்கினுக்கும்
தானந்த மான சரணா ரவிந்தம் தவளநிறக்
கானந்தம் ஆடரங் காம்எம்பி ரான்முடிக் கண்ணியதே. 11

கண்ணிய(து) உன்புகழ் கற்பதுன் நாமம் கசிந்துபத்தி
பண்ணிய(து) உன்இரு பாதாம் புயத்தில் பகலிரவா
நண்ணிய(து) உன்னை [1]நயந்தோர் அவையத்து நான்முன்செய்த
புண்ணியம் ஏதென்அம் மே!புவி ஏழையும் பூத்தவளே! 12

பூத்தவ ளே!புவ னம்பதி னான்கையும் பூத்தவண்ணம்
காத்தவ ளே!பின் கரந்தவ ளே!கறைக் கண்டனுக்கு
மூத்தவ ளே!என்றும் மூவா முகுந்தற்(கு) இளையவளே!
மாத்தவ ளே!உன்னை அன்றிமற் றோர்தெய்வம் வந்திப்பதே. 13

பா - ம்: 1. நயந்தோரை வையத்து.

வந்திப் பவர்உன்னை வானவர் தானவர் ஆனவர்கள்
சிந்திப் பவர்நற் றிசைமுகர் நாரணர் சிந்தையுள்ளே
பந்திப் பவர்அழி யாப்பர மானந்தர் பாரிலுன்னைச்
சந்திப் பவர்க்கெளி தாம்எம்பி ராட்டிநின் தண்ணளியே 14

தண்ணளிக்(கு) என்றுமுன் னேபல கோடி தவங்கள்செய்வார்
மண்ணளிக் கும்செல்வ மோபெறு வார்மதி வானவர்தம்
விண்ணளிக் கும்செல் வமும்அழி யாமுத்தி வீடுமன்றோ ?
பண்ணளிக் கும்சொற் பரிமள யாமளைப் பைங்கிளியே ! 15

கிளியே ! கிளைஞர் மனத்தே கிடந்து கிளர்ந்தொளிரும்
ஒளியே! ஒளிரும் ஒளிக்கிட மே!எண்ணில் ஒன்றுமில்லா
வெளியே! வெளிமுதற் பூதங்க ளாகி விரிந்தஅம்மே !
அளியேன் அறிவள விற்கள வான(து) அதிசயமே. 16

அதிசயமான வடிவுடை யாள்!அர விந்தமெல்லாம்
துதிசய வானன சுந்தர வல்லி ! துணைஇரதி
பதிசய மான(து) அபசய மாகமுன் பார்த்தவர்தம்
மதிசய மாகஅன் றோ?வாம பாகத்தை வவ்வியதே. 17

வவ்விய பாகத்(து) இறைவரும் நீயும் மகிழ்ந்திருக்கும்
செவ்வியும் உங்கள் திருமணக் கோலமுஞ் சிந்தையுள்ளே
அவ்வியந் தீர்த்தென்னை ஆண்டபொற் பாதமும் ஆகிவந்து
வெவ்விய காலன்என் மேல்வரும் போது வெளிநிற்கவே. 18

வெளிநின்ற நின்திரு மேனியைப் பார்த்தென் விழியுநெஞ்சும்
களிநின்ற வெள்ளங் கரைகண்ட தில்லை கருத்தினுள்ளே
தெளிநின்ற [1]ஞானந் திகழ்கின்ற(து) என்ன திருவுளமோ?
ஒளிநின்ற கோணங்கள் ஒன்பது மேவி உறைபவளே ! 19

உறைகின்ற நின்திருக் கோயில்நின் கேள்வர் ஒருபக்கமோ?
அறைகின்ற நான்மறை யின்அடி யோ?முடி யோ?அமுதம்
நிறைகின்ற வெண்திங்க ளோகஞ்ச மோஎன்றன் நெஞ்சகமோ?
மறைகின்ற வாரிதி யோ?பூர ணாசல மங்கலையே ! 20

மங்கலை செங்கல சம்முலை யாள்மலை யாள்வருணச்
சங்கலை செங்கைச் சகல கலாமயில் தாவுகங்கை

பா-ம். 1. ஞானத் திருநின்ற தென்ன.

பொங்கலை தங்கும் புரிசடை யோன்[1]புடை யாள்உடையாள்
பிங்கலை நீலிசெய் யாள்வெளி யாள்பசும் [2]பொற்கொடியே. 21

கொடியே! இளவஞ்சிக் கொம்பே! எனக்குவம் பேபழுத்த
படியே! மறையின் பரிமள மே!பனி மால்இமயப்
பிடியே! பிரமன் முதலாய தேவரைப் பெற்றஅம்மே!
அடியேன் இறந்திங்(கு) இனிப்பிற வாமல்வந்(து) ஆண்டுகொள்ளே.

கொள்ளேன் மனத்தில்நின் கோலமல்லாதன்பர் கூட்டந்தன்னை
விள்ளேன்! பரசம யம்விரும் பேன்வியன் மூவுலகுக்(கு)
உள்ளே அனைத்தினுக் கும்புறம் பேஉள்ளத் தேவிளைந்த
கள்ளே! களிக்கும் களியே! அளியஎன் கண்மணியே! 23

மணியே! மணியின் ஒளியே! ஒளிரும் மணிபுனைந்த
அணியே! அணியும் அணிக்கழ கே!அணு காதவர்க்குப்
பிணியே! பிணிக்கு மருந்தே! அமரர் பெருவிருந்தே!
பணியேன் ஒருவரை நின்பத்ம பாதம் பணிந்தபின்னே. 24

பின்னே திரிந்துன் அடியாரைப் பேணிப் பிறப்பறுக்க
முன்னே தவங்கள் முயன்றுகொண் டேன்முதல் மூவருக்கும்
அன்னே! உலகுக்(கு) அபிராமி என்னும் அருமருந்தே!
என்னே இனிஉன்னை யான்மற வாமல்நின்(று) ஏத்துவனே. 25

ஏத்தும் அடியவர் ஈரேழ் உலகினை யும்படைத்தும்
காத்தும் அழித்தும் திரிபவ ராம்கமழ் பூங்கடம்பு
சாத்தும் குழலணங் கே!மண நாறும்நின் தாளிணைக்கென்
நாத்தங்கு புன்மொழி ஏறிய வாறு நகையுடைத்தே. 26

உடைத்தனை வஞ்சப் பிறவியை உள்ளம் உருகுமன்பு
படைத்தனை பத்ம பதயுகம் சூடும் பணிஎனக்கே
அடைத்தனை நெஞ்சத்(து) அழுக்கைஎல் லாம்நின் அருட்புனலால்
துடைத்தனை சுந்தரி! நின்னருள் ஏதென்று சொல்லுவதே? 27

சொல்லும் பொருளும் எனநட மாடும் துணைவருடன்
புல்லும் [3]பரிமளப் பூங்கொடி யே!நின் புதுமலர்த்தாள்
அல்லும் பகலும் தொழுமவர்க் கேஅழி யாஅரசும்
செல்லும் தவநெறி யும்சிவ லோகமும் சித்திக்குமே. 28

பா. ம். 1. புலியூருடையாள், 2. பெண்கொடியே, 3. புரிகுழற்.

சித்தியும் சித்தி தரும்தெய்வ மாகித் திகழும்பரா
சத்தியும் சத்தி தழைக்கும் சிவமும் தவம்முயல்வார்
முத்தியும் முத்திக்கு வித்தும்வித் தாகி முளைத்தெழுந்த
புத்தியும் புத்தியின் [1]உள்ளே புரக்கும் புரத்தைஅன்றே. 29

அன்றே [2]தடுத்தென்னை ஆண்டுகொண் டாய்கொண்ட தல்லஎன்கை
நன்றே உனக்கினி நான்என் செயினும் நடுக்கடலுள்
சென்றே விழினும் கரைஏற் றுகைநின் திருவுளமே
ஒன்றே! பலவுரு வே!அரு வே!என் உமையவளே! 30

உமையும் உமைஒரு பாகனும் ஏக உருவில்வந்திங்(கு)
எமையும் தமக்கன்பு செய்யவைத் தார்இனி எண்ணுதற்குச்
சமையங் களும்இல்லை ஈன்றெடுப் பாள்ஒரு தாயுமில்லை
அமையும் அமையுறு தோளியர் மேல்வைத்த ஆசையுமே. 31

ஆசைக் கடலில் அகப்பட்(டு) அருளற்ற அந்தகன்கைப்
பாசத்தில் அல்லற் படஇருந் தேனைநின் பாதமென்னும்
வாசக் கமலம் தலைமேல் வலியவைத்(து) ஆண்டுகொண்ட
நேசத்தை என்சொல்லு வேன்ஈசர் பாகத்து நேரிழையே! 32

இழைக்கும் வினைவழி யேஅடுங் காலன் எனைநடுங்க
அழைக்கும் பொழுதுவந்(து) அஞ்சல்என் பாய்அத்தர் சித்தமெல்லாம்
குழைக்கும் களபக் குவிமுலை யாமளைக் கோமளமே!
உழைக்கும் பொழு(து)உன்னை யேஅன்னை யே!என்பன் ஓடிவந்தே. 33

வந்தே சரணம் புகுமடி யாருக்கு வானுலகம்
தந்தே பரிவொடு தான்போய் இருக்கும் சதுர்முகமும்
பைந்தேன் அலங்கற் பருமணி ஆகமும் பாகமும்பொற்
செந்தேன் மலரும் அலர்கதிர் ஞாயிறும் திங்களுமே. 34

திங்கட் பதுவின் மணநாறும் சீறடி [3]சென்னிவைக்க
எங்கட்(கு) ஒருதவம் எய்திய வாஎண் ணிறந்தவிண்ணோர்
தங்கட்கும் இந்தத் தவம்எய்து மோதரங் கக்கடலுள்
வெங்கட் பணிஅணை மேல்துயில் கூரும் விழுப்பொருளே! 35

பொருளே! பொருள்முடிக் கும்போக மே!அரும் போகம்செய்யும்
மருளே! மருளில் வருந்தெரு ளே!என் மனத்துவஞ்சத்(து)

பா-ம் 1. உள்ளருள் பூரிக்கும். 2. தனித்தென்னை. 3. சிந்தைவைக்க.

இருளேதும் இன்றி ஒளிவெளி யாகி இருக்குமுன்றன்
அருளே(து) அறிகின்றிலேன்அம்பு யாதனத்(து) அம்பிகையே!

கைக்கே அணிவது கன்னலும் பூவும் கமலமன்ன
மெய்க்கே அணிவது வெண்முத்து மாலை விடஅரவின்
பைக்கே அணிவது பன்மணிக் கோவையும் பட்டும்எட்டுத்
திக்கே அணியும் திருவுடை யானிடம் சேர்பவளே! 37

பவளக் கொடியிற் பழுத்தசெவ் வாயும் பனிமுறுவல்
தவளத் திருநகை யும்துணை யாஎங்கள் சங்கரனைத்
துவளப் பொருது துடிஇடை சாய்க்கும் துணைமுலையாள்
அவளைப் பணிமின்;கண் டீர்!அம ராபதி ஆளுகைக்கே. 38

ஆளுகைக்(கு) உன்றன் அடித்தாமரைகளுண்(டு) அந்தகன்பால்
மீளுகைக்(கு) உன்றன் விழியின் கடையுண்டு மேலிவற்றின்
மூளுகைக்(கு) என்குறை நின்குறை யேஅன்று முப்புரங்கள்
மாளுகைக்(கு) அம்பு தொடுத்தவில் லான்பங்கில் வாணுதலே!

வாணுதற் கண்ணியை விண்ணவர் யாவரும் வந்(து) இறைஞ்சிப்
பேணுதற்(கு) எண்ணிய எம்பெரு மாட்டியைப் பேதைநெஞ்சில்
காணுதற்(கு) அண்ணியள் அல்லாத கன்னியைக் காணுமன்பு
பூணுதற்(கு) எண்ணிய எண்ணமன் றோ?முன்செய் புண்ணியமே.

புண்ணியம் செய்தன மேமன மே!புதுப் பூங்குவளைக்
கண்ணியும் செய்ய கணவரும் கூடிநம் காரணத்தால்
நண்ணிஇங் கேவந்து தம்அடி யார்கள் நடுவிருக்கப்
பண்ணிநம் சென்னியின் மேற்பத்ம பாதம் பதித்திடவே. 41

இடங்கொண்டு விம்மி இணைகொண்(டு) இறுகி இளகிமுத்து
வடங்கொண்ட கொங்கை மலைகொண்(டு) இறைவர் வலியநெஞ்சை
நடங்கொண்ட கொள்கை நலங்கொண்ட நாயகி! நல்லரவின்
படங்கொண்ட அல்குற் பணிமொழி வேதப் பரிபுரையே! 42

பரிபுரச் சீறடிப் பாசாங் குசைபஞ்ச பாணிஇன்சொல்
திரிபுர சுந்தரி சிந்துர மேனியள் தீமைநெஞ்சில்
புரிபுர வஞ்சரை அஞ்சக் குனிபொருப் புச்சிலைக்கை
எரிபுரை மேனி இறைவர்செம் பாகத்(து) இருந்தவளே! 43

தவளே இவள்எங்கள் சங்கர னார்மனை மங்கலமாம்
அவளே அவர்தமக்(கு) அன்னையும் ஆயினள் ஆகையினால்
இவளே கடவுளர் யாவர்க்கும் மேலை இறைவியுமாம்
துவளேன் இனிஒரு தெய்வமுண் டாகமெய்த் தொண்டுசெய்தே.

தொண்டுசெய் யாதுநின் பாதம் தொழாது துணிந்திச்சையே
பண்டுசெய் தார்உள ரோ?இல ரோ?அப் பரிசுஅடியேன்
கண்டுசெய் தால்அது கைதவ மோ?அன்றிச் செய்தவமோ?
மிண்டுசெய் தாலும் பொறுக்கைநன் றேபின் வெறுக்கையன்றே.

வெறுக்கும் தகைமைகள் செய்யினும் தம்அடி யாரைமிக்கோர்
பொறுக்கும் தகைமை புதியதன் றேபுது நஞ்சையுண்டு
கறுக்கும் திருமிடற் றான்இடப் பாகம் கலந்தபொன்னே!
மறுக்கும் தகைமைகள் செய்யினும் யான்உன்னை வாழ்த்துவனே.

வாழும் படிஒன்று கண்டுகொண் டேன்மனத் தேஒருவர்
வீழும் படிஅன்று விள்ளும் படிஅன்று வேலைநிலம்
ஏழும் பருவரை எட்டும்எட் டாமல் இரவுபகல்
சூழும் சுடர்க்கு நடுவே கிடந்து சுடர்கின்றதே. 47

சுடரும் கலைமதி துன்றும் சடைமுடிக் குன்றில்ஒன்றிப்
படரும் பரிமளப் பச்சைக் கொடியைப் பதித்துநெஞ்சில்
இடரும் தவிர்த்(து)இமைப் போதிருப் பார்பின்னும் எய்துவரோ?
குடரும் கொழுவும் குருதியும் தோயும் குரம்பையிலே. 48

குரம்பை அடுத்துக் குடிபுக்க ஆவிவெங் கூற்றுக்கிட்ட
வரம்பை அடுத்து மறுகுமப் போது வளைக்கைஅமைத்(து)
அரம்பை அடுத்த அரிவையர் சூழவந்(து) அஞ்சல்என்பாய்
நரம்பை அடுத்த இசைவடி வாய்நின்ற நாயகியே! 49

நாயகி நான்முகி நாரா யணிகை நளினபஞ்ச
சாயகி சாம்பவி சங்கரி சாமளை சாதிநச்சு
வாயகி மாலினி வாராகி சூலினி மாதங்கிஎன்
[1]தாயகி யாதி உடையாள் சரணம் அரண்நமக்கே. 50

அரணம் பொருள்என்(று)அருள்ஒன்(று)இலாதஅசுரர்தங்கள்
முரண்அன்(று) அழிய முனிந்தபெம் மானும் முகுந்தனுமே

பா - ம்: 1. தாயகிலாதி.

சரணம் சரணம் எனநின்ற நாயகி தன்அடியார்
மரணம் பிறவி இரண்டும்எய் தார்இந்த வையகத்தே. 51

வையம் துரகம் மதகரி மாமகு டம்சிவிகை
பெய்யும் கனகம் பெருவிலை ஆரம் பிறைமுடித்த
ஐயன் திருமனை யாள்அடித் தாமரைக்(கு) அன்புமுன்பு
செய்யுந் தவமுடை யார்க்குள வாகிய சின்னங்களே. 52

சின்னஞ் சிறிய மருங்கினிற் சாத்திய செய்யபட்டும்
பென்னம் பெரிய முலையுமுத் தாரமும் பிச்சிமொய்த்த
கன்னங் கரிய குழலும்கண் மூன்றும் கருத்தில்வைத்துத்
தன்னந் தனிஇருப் பார்க்(கு)இது போலும் தவமில்லையே. 53

இல்லாமை சொல்லி ஒருவர்தம் பாற்சென்(று) இழிவுபட்டு
நில்லாமை நெஞ்சில் நினைகுவி ரேல்நித்தம் நீடுதவம்
கல்லாமை கற்ற கயவர்தம் பால்ஒரு காலத்திலும்
செல்லாமை வைத்த திரிபுரை பாதங்கள் சேர்மின்களே. 54

மின்ஆ யிரம்ஒரு மெய்வடி வாகி விளங்குகின்ற(து)
அன்னாள் அகமகிழ் ஆனந்த வல்லி அருமறைக்கு
முன்னாய் நடுவெங்கு மாய்முடி வாய முதல்விதன்னை
உன்னா(து)ஒழியினும்உன்னினும் வேண்டுவ(து)ஒன்றில்லையே.

ஒன்றாய் அரும்பிப் பலவாய் விரிந்(து)இவ் வுலகெங்குமாய்
நின்றாள் அனைத்தையும் நீங்கிநிற் பாள்என் றன்நெஞ்சினுள்ளே
பொன்றாது நின்று [1]புரிகின்ற வாவிப் பொருள்அறிவார்
அன்றால் இலையில் துயின்றபெம் மானும்என் ஐயனுமே. 56

ஐயன் அளந்த படிஇரு நாழிகொண்(டு) அண்டமெல்லாம்
உய்ய அறம்செயும் உன்னையும் போற்றி ஒருவர்தம்பால்
செய்ய பசுந்தமிழ்ப் பாமாலை யும்கொண்டு சென்றுபொய்யும்
மெய்யும் இயம்பவைத் தாய்இது வோ?உன்றன் மெய்யருளே.

அருணம் புயத்தும்என் சித்தாம் புயத்தும் அமர்ந்திருக்கும்
தருணம் புயமுலைத் தையல்நல் லாள்தகை சேர்நயனக்
கருணம் புயமும் வதனம் புயமும் கராம்புயமும்
சரணம் புயமுமல் லால்கண்டி லேன்ஒரு தஞ்சமுமே. 58

பா - ம்; 1. புரிகின்ற வாறிப்.

GOVERNMENT ... LIBRARY
3 - AUG 1957
MADRAS

தஞ்சம் பிறிதில்லை ஈதல்ல(து) என்றுன் தவநெறிக்கே
நெஞ்சம் பயில நினைகின்றி லேன்ஒற்றை நீள்சிலையும்
அஞ்சம்பும் இக்கல ராகநின் றாய்அறி யார்எனினும்
பஞ்சஞ்சு மெல்லடி யார்அடி யார்பெற்ற பாலரையே. 59

பாலினும் சொல்லினி யாய்பனி மாமலர்ப் பாதம்வைக்க
மாலினும் தேவர் வணங்கநின் றோன்கொன்றை வார்சடையின்
மேலினும் கீழ்நின்று வேதங்கள் பாடுமெய்ப் பீடமொரு
நாலினும் சாலநன் றோஅடி யேன்முடை நாய்த்தலையே. 60

நாயே னையுமிங்(கு) ஒருபொரு ளாக நயந்துவந்து
நீயே நினைவின்றி ஆண்டுகொண் டாய்நின்னை உள்ளவண்ணம்
பேயேன் அறியும் அறிவுதந் தாய்என்ன பேறுபெற்றேன்
தாயே ! மலைமகளே ! செங்கண் மால்திருத் தங்கைச்சியே! 61

தங்கச் சிலைகொண்டு தானவர் முப்புரம் சாய்த்துமத
வெங்கட் கரிஉரி போர்த்தசெஞ் சேவகன் மெய்அடையக்
கொங்கைக் குரும்பைக் குறிஇட்ட நாயகி கோகனகச்
செங்கைக் கரும்பும் மலருமெப் போதுமென் சிந்தையதே. 62

தேறும் படிசில ஏதுவும் காட்டிமுன் செல்கதிக்குக்
கூறும் பொருள்குன்றிற் கொட்டுந் தறிகுறிக் கும்சமயம்
ஆறும் தலைவி இவளாய் இருப்ப(து) அறிந்திருந்தும்
வேறும் சமயமுண்(டு) என்றுகொண் டாடிய வீணருக்கே. 63

வீணே பலிகவர் தெய்வங்கள் பாற்சென்று மிக்கஅன்பு
பூணேன் உனக்கன்பு பூண்டுகொண் டேன்நின் புகழ்ச்சியன்றிப்
பேணேன் ஒருபொழு துந்திரு மேனிப்ர காசமன்றிக்
காணேன் இருநில முந்திசை நான்கும் ககனமுமே. 64

ககனமும் வானும் புவனமும் காணவிற் காமனங்கம்
தகனமுன் செய்த தவப்பெரு மாற்குத் தடக்கையுஞ்செம்
முகனுமுந் நான்கிரு மூன்றெனத் தோன்றிய மூதறிவின்
மகனுமுண் டாயதன் றோவல்லி நீசெய்த வல்லபமே. 65

வல்லபம் ஒன்றறி யேன்சிறி யேன்நின் மலரடிச்செம்
பல்லவம் அல்லது பற்றொன்றி லேன்பசும் பொற்பொருப்பு

வில்லவர் தம்முடன் வீற்றிருப் பாய்வினை யேன்தொடுத்த
சொல்அவ மாயினும் நின்திரு நாமங்கள் தோத்திரமே. 66

தோத்திரம் செய்து தொழுதுமின் போலும்நின் தோற்றமொரு
மாத்திரைப் போது மனத்தில்லை யாதவர் வண்மைகுலம்
கோத்திரம் கல்வி குணங்குன்றி நாளும் குடில்கள்தொறும்
பாத்திரம் கொண்டு பலிக்குழ லாநிற்பர் பாரெங்குமே. 67

பாரும் புனலும் கனலும்வெங் காலும் படர்விசும்பும்
ஊரும் முருகு சுவைஒளி ஊறொலி ஒன்றுபடச்
சேரும் தலைவி சிவகாம சுந்தரி சீறடிக்கே
சாரும் தவமுடை யார்படை யாத தனமில்லையே. 68

தனம்தரும் கல்வி தரும்ஒரு நாளும் தளர்வறியா
மனம்தரும் தெய்வ வடிவும் தரும்நெஞ்சில் வஞ்சமில்லா
இனம்தரும் நல்லன எல்லாம் தரும்அன்பர் என்பவர்க்கே
கனம்தரும் பூங்குழ லாள்அபி ராமி கடைக்கண்களே. 69

கண்களிக் கும்படி கண்டுகொண் டேன்கடம் பாடவியில்
பண்களிக் கும்குரல் வீணையும் கையும் பயோதரமும்
மண்களிக் கும்பச்சை வண்ணமும் ஆகி மதங்கர்குலப்
பெண்களில் தோன்றிய எம்பெரு மாட்டிதன் பேரழகே. 70

அழகுக்(கு) ஒருவரும் ஒவ்வாத வல்லி அருமறைகள்
பழகிச் சிவந்த பதாம்புயத் தாள்பனி மாமதியின்
குழவித் திருமுடிக் கோமளை யாமளைக் கொம்பிருக்க
இழவுற்று நின்றநெஞ் சே!இரங் கேல்உனக்(கு) என்குறையே.

என்குறை தீரநின்(று) ஏத்துகின் றேன்இனி யான்பிறக்கில்
நின்குறை யேஅன்றி யார்குறை காண்இரு நீள்விசும்பின்
மின்குறை காட்டி மெலிகின்ற நேரிடை மெல்லியலாய்!
தன்குறை தீரஎம் கோன்சடை மேல்வைத்த தாமரையே. 72

தாமம் கடம்பு படைபஞ்ச பாணம் தனுக்கரும்பு
யாமம் வயிரவர் ஏத்தும் பொழுதெமக்(கு) என்றுவைத்த
சேமம் திருவடி செங்கைகள் நான்கொளி செம்மையம்மை
நாமம் திரிபுரை ஒன்றோ(டு) இரண்டு நயனங்களே. 73

நயனங்கள் மூன்றுடை நாதனும் வேதமும் நாரணனும்
அயனும் பரவும் அபிராம வல்லி அடியிணையைப்
பயன்என்று கொண்டவர் பாவையர் ஆடவும் பாடவும்பொற்
சயனம் பொருந்து தமனியக் காவினில் தங்குவரே. 74

தங்குவர் கற்பக தாருவின் நீழலில் தாயரின்றி
மங்குவர் மண்ணில் வழுவாப் பிறவியை மால்வரையும்
பொங்குவர் ஆழியும் ஈரேழ் புவனமும் பூத்தவுந்திக்
கொங்கிவர் பூங்குழ லாள்திரு மேனி குறித்தவரே. 75

குறித்தேன் மனத்தில்நின் கோலமெல் லாம்நின் குறிப்பறிந்து
மறித்தேன் மறலி வருகின்ற நேர்வழி வண்டுகிண்டி
வெறித்தேன் அவிழ்கொன்றை வேணிப் பிரான்ஒரு கூற்றைமெய்யில்
பறித்தே குடிபுகு தும்பஞ்ச பாண பயிரவியே! 76

பயிரவி! பஞ்சமி! பாசாங் குசை!பஞ்ச பாணி!வஞ்சர்
உயிரவி உண்ணும் உயர்சண்டி! காளி! ஒளிரும்கலா
வயிரவி! மண்டலி! மாலினி! சூலி! வராகி! என்றே
செயிரவி நான்மறை சேர்திரு நாமங்கள் செப்புவரே. 77

செப்பும் கனக கலசமும் போலும் திருமுலைமேல்
அப்பும் களப அபிராம வல்லி அணிதரளக்
கொப்பும் வயிரக் குழையும் விழியின் கொழுங்கடையும்
துப்பும் நிலவும் எழுதிவைத் தேன்என் துணைவிழிக்கே. 78

விழிக்கே அருள்உண்(டு) அபிராம வல்லிக்கு வேதம்சொன்ன
வழிக்கே வழிபட நெஞ்சுண்(டு) எமக்(கு)அவ் வழிகிடக்கப்
பழிக்கே சுழன்றுவெம் பாவங்க ளேசெய்து பாழ்நரகக்
குழிக்கே அழுந்தும் கயவர்தம் மோடென்ன கூட்டினியே. 79

கூட்டிய வாஎன்னைத் தன்அடி யாரில் கொடியவினை
ஓட்டிய வாஎன்கண் ஓடிய வாதன்னை உள்ளவண்ணம்
காட்டிய வாகண்ட கண்ணும் மனமும் களிக்கின்றவா
ஆட்டிய வாநடம் ஆடகத் தாமரை ஆரணங்கே! 80

அணங்கே! அணங்குகள் நின்பரி வாரங்கள் ஆகையினால்
வணங்கேன் ஒருவரை வாழ்த்துகிலேன் நெஞ்சில் வஞ்சகரோ(டு)

இணங்கேன் எனதுன(து) என்றிருப் பார்சிலர் யாவரொடும்
பிணங்கேன் அறிவொன் றிலேன்என்கண் நீவைத்த பேரளியே. 81

அளியார் கமலத்தில் ஆரணங் கே!அகி லாண்டமும்நின்
ஒளியாக நின்ற ஒளிர்திரு மேனியை உள்ளுதொறும்
களியாகி அந்தக் கரணங்கள் விம்மிக் கரைபுரண்டு
வெளியாய் விடின்எங்ங னேமறப் பேன்நின் விரகினையே. 82

விரவும் புதுமலர் இட்டுநின் பாத விரைக்கமலம்
இரவும் பகலும் இறைஞ்சவல் லார்இமை யோர்எவரும்
பரவும் பதமும் அயிரா வதமும் பகீரதியும்
உரவும் குலிசமும் கற்பகக் காவும் உடையவரே. 83

உடையாளை ஒல்கு செம்பட்(டு) உடையாளை ஒளிர்மதிச்செஞ்
சடையாளை வஞ்சகர் நெஞ்சடை யாளைத் தயங்குநுண்நூல்
இடையாளை எங்கள் பெம் மான்இடை யாளை இங்கென்னை இனிப்
படையாளை உங்களை யும்படை யாவண்ணம் பார்த்திருமே. 84

பார்க்கும் திசைதொறும் பாசாங்குசமும் பனிச்சிறைவண்(டு)
ஆர்க்கும் புதுமலர் ஐந்தும் கரும்பும்என் அல்லலெல்லாம்
தீர்க்கும் திரிபுரை யாள்திரு மேனியும் சிற்றிடையும்
வார்க்குங் குமமுலை யும்முலை மேல்முத்து மாலையுமே. 85

மாலயன் தேட மறைதேட வானவர் தேடநின்ற
காலையும் சூடகக் கையையுங் கொண்டு கதித்தகப்பு
வேலைவெங் காலனென் மேல்விடும் போது வெளிநில்கண்டாய்
பாலையுங் தேனையும் பாகையும் போலும் பணிமொழியே! 86

மொழிக்கும் நினைவுக்கும் எட்டாத நின்திரு மூர்த்தமென்றன்
விழிக்கும் வினைக்கும் வெளிநின்ற தால்விழி யால்மதனை
அழிக்கும் தலைவர் அழியா விரதத்தை அண்டமெல்லாம்
பழிக்கும் படிஒரு பாகங்கொண்(டு) ஆளும் பராபரையே. 87

பரமென்(று) உனைஅடைந் தேன்தமி யேனுமுன் பத்தருக்குள்
தரமன்(று) இவன்என்று தள்ளத் தகாது தரியலர்தம்
புரம்அன்(று) எரியப் பொருப்புவில் வாங்கிய போதிலயன்
சிரம்ஒன்று செற்றகை யான்இடப் பாகம் சிறந்தவளே, 88

சிறக்கும் கமலத் திருவே! நின் சேவடி சென்னிவைக்கத்
துறக்கம் தருநின் துணைவரும் நீயும் துரியமற்ற
உறக்கம் தரவந்(து) உடம்போ(டு) உயிர்உற(வு) அற்றறிவு
மறக்கும் பொழுதென்முன் னேவரல் வேண்டும் வருந்தியுமே. 89

வருந்தா வகைஎன் மனத்தா மரையினில் வந்துபுகுந்(து)
இருந்தாள் பழைய இருப்பிட மாக இனிஎனக்குப்
பொருந்தா(து) ஒருபொருள் இல்லைவிண் மேவும் புலவருக்கு
விருந்தாக வேலை மருந்தா னதைநல்கும் மெல்லியலே. 90

மெல்லிய நுண்ணிடை மின்னனை யாளை விரிசடையோன்
புல்லிய மென்முலைப் பொன்னனை யாளைப் புகழ்ந்துமறை
சொல்லிய வண்ணம் தொழும்அடி யாரைத் தொழும்அவர்க்குப்
பல்லியம் ஆர்த்தெழ வெண்பக(டு) ஊரும் பதம்தருமே. 91

பதத்தே உருகிநின் பாதத்தி லேமனம் பற்றிஉன்றன்
இதத்தே ஒழுக அடிமைகொண் டாய்இனி யான்ஒருவர்
மதத்தே மதிமயங் கேன்அவர் போன வழியும்செல்லேன்
முதற்றேவர் மூவரும் யாவரும் போற்றும் முகிழ்நகையே. 92

நகையே இஃதிந்த ஞாலமெல் லாம்பெற்ற நாயகிக்கு
முகையே முகிழ்முலை மானே முதுகண் முடிவிலந்த
வகையே பிறவியும் வம்பே மலைமகள் என்பதுநாம்
மிகையே இவள்தன் தகைமையை நாடி விரும்புவதே. 93

விரும்பித் தொழும்அடி யார்விழி நீர்மல்கி மெய்புளகம்
அரும்பித் ததும்பிய ஆனந்த மாகி அறிவிழந்து
சுரும்பிற் களித்து மொழிதடு மாறிமுன் சொன்னவெல்லாம்
தரும்பித்தர் ஆவரென் றால்அபி ராமி சமயநன்றே. 94

நன்றே வருகினும் தீதே விளைகினும் நான்அறிவ(து)
ஒன்றேயும் இல்லை உனக்கே பரம்எனக் குள்ளவெல்லாம்
அன்றே உனதென் றளித்துவிட் டேன்அழி யாதகுணக்
குன்றே! அருட்கடலே! இம வான்பெற்ற கோமளமே! 95

கோமள வல்லியை அல்லியம் தாமரைக் கோயில்வைகும்
யாமள வல்லியை ஏதமி லாளை எழுதரிய

சாமள மேனிச் சகல கலாமயில் தன்னைத்தம்மால்
ஆமள வுந்தொழு வார்எழு பாருக்கும் ஆதிபரே. 96

ஆதித்தன் அம்புலி அங்கி குபேரன் அமரர்தங்கோன்
போதிற் பிரமன் புராரி முராரி பொதியமுனி
காதிப் பொருபடைக் கந்தன் கணபதி காமன்முதல்
சாதித்த புண்ணியர் எண்ணிலர் போற்றுவர் தையலையே. 97

தைவந்து நின்அடித் தாமரை சூடிய சங்கரற்குக்
கைவந்த தீயும் தலைவந்த ஆறும் கரந்ததெங்கே
மெய்வந்த நெஞ்சினல் லால்ஒரு காலும் விரகர்தங்கள்
பொய்வந்த நெஞ்சில் புகவறி யாமடப் பூங்குயிலே! 98

குயிலாய் இருக்கும் கடம்பா டவிஇடைக் கோலவியன்
மயிலாய் இருக்கும் இமயா சலத்திடை வந்துதித்த
வெயிலாய் இருக்கும் விசும்பில் கமலத்தின் மீதன்னமாம்
கயிலா யருக்கன்(று) இமவான் அளித்த கனங்குழையே. 99

குழையைத் தழுவிய கொன்றையந் தார்கமழ் கொங்கைவல்லி
கழையைப் பொருத திருநெடுந் தோளும் கருப்புவில்லும்
விழையப் பொருதிறல் வேரியம் பாணமும் வெண்ணகையும்
உழையைப் பொருதகண் ணும்நெஞ்சில் எப்போதும் உதிக்கின்றவே. 100

நூற்பயன்

ஆத்தாளை எங்கள் அபிராம வல்லியை அண்டமெல்லாம்
பூத்தாளை மாதுளம் பூநிறத் தாளைப் புவியடங்கக்
காத்தாளை [1]அங்கையிற் பாசாங் குசமும் கருப்புவில்லும்
சேர்த்தாளை முக்கண்ணி யைத்தொழு வார்க்கொரு தீங்கில்லையே.

பா - ம்: 1, அங்குச பாசாங் குசமுங் கரும்புமங்கை,

கால சங்கார மூர்த்திப் பின்முடுகு

* வெண்பா

என்று தொழுவேன் எளியேன்; அளிமுரலும்
கொன்றைஅணி தென்கடவூர்க் கோமானே! — துன்றும்
கனற்பொறிகட் பகட்டிலுற்றுக் கறுத்தவெதற்குத்
தனைச்சினத்திட் டுதைத்தபத்மத் தாள். [திசைக்குளுரத்

தொண்டருடன் கூடித் துதித்திரண்டு கண்ணாரக்
கண்டு தொழுவேனோ? கடவூரா! — பண்டோர்
அமுதிருக்குஞ் சிறுகடத்(து)அன்றெழும் உனக்(கு)அன்
எமனையெற்றும் பரிபுரச்செந் தாள். [பரைமருட்டும்

பற்றிப் பணிந்து பரவ வரந்தருவாய்
கற்றைச் சடையா! கடவூரா! — வெற்றிநெடுங்
கொண்டலொக்குங் கண்டசத்தங் கொண்டெதிர்த்(து)அங்
சண்டனைக்கண் டன்றுதைக்கும் தாள். [கங்கருக்கும்

மேகங் கவிந்ததுபோல் மேலெழுந்த காலனைக் கண்(டு)
ஆகந் தளர்ந்துநெஞ்சம் அஞ்சாமுன் — மாகடவூர்ப்
பூதநாதா! வேதகீதா! பூவிதாதா தேடுபாதா!
மாதுபாகா! காலகாலா! வா. 4

அன்றயன்மால் காணா அடிமுடியைக் காண்பதற்குத்
தென்றிசைக்கோன் என்னதவஞ் செய்தானோ? — வென்றிகழ்
ஆடரவாளா! நீறணிதோளா! ஆதிரைநாளா! மாதுமணாளா!
தோடவிர்காதா! மாகடவூரா! சொல். 5

ஆற்றுமோ நெஞ்சத் தடங்குமோ கொண்டமையல்
கூற்றுதைத்த தென்கடவூர்க் கோமானே! — மாற்றுயர்பொற்

---

* இங்குவரும் வெண்பாக்கள் பத்தும் சீரும் தளையும் சிதைந்துவந்துள்ளன: பத்தாவது வெண்பா தவிர மற்றைய வெண்பாக்கள் பெயர் தெரியாத பல வித்துவான்கள் பாடிய தனிப்பாடல் திரட்டிலும் காணப்படுகின்றன. இவை பழம் பாடல் பாதுகாப்புக்காக இங்குச் சேர்க்கப் பெற்றுள்ளன. தருமபுர ஆதீன அபிராமி யந்தாதி — வெளியீடு எண் 158-லும் இவை தரப்பெற்றுள்ளன.

கும்பமுலைத் திங்கள் நுதற் கொந்தளகக் கொம்பைவெறுத்(து)
அம்புதொடுத்(து) அங்கசன்விட் டால். 6

தென்றல் உலவுந் திருக்கடவூர் எம்பெருமான்
மன்றல் செறிந்தே மதுவூறும் - கொன்றைக்காப்
பொன்பரவுந்திண் கொங்கையிரண்டும் புண்பட நொந்தும்
அன்புதிரண்டும்பெண் கொடிநெஞ்சஞ் சும். [துன்பமிகுந்தும்

சுடுமோ இளந்தென்றல் தோகையின்மேல் அம்பு
படுமோமெய் வாதைப் படுமோ—கடவூரா !
நீரணங்கார் வேணிநம்பா ! நீலகண்டா ! மேனியின்பால்
ஆரணங்கார் காலசங்கா ரா. 8

பாலனுக் காவன்று பகடேறி வந்தெதிர்த்த
காலனுக்குக் காலா ! கடவூரா !—மேலோர்
கரும்புகொண்டங்(கு) எதிர்ந்துவந்(து)அங் கசன்பொருஞ்
மருண்டுநெஞ்சங் கலங்குமென்றன் மான். [செஞ்சரங்கள்கண்டு

நீதிநெறி வேதியர்கள் நீங்கா மறைபயிலும்
ஆதிகட வூரிலுறை அம்மானே—பாதம்
பரவியங்கம் புளகி வணங்கும் பொழுதுநெஞ்சங்
கரவுதுஞ்சுஞ் சமனஞ்சுங் காண். 10

அபிராமி பட்டர் பிரபந்தங்கள்

முற்றிற்று

பிழை திருத்தம்

17-வது	பக்,	8-ம்	பாடல் தொன்றுகாண்.	தென்றுகாண் :
20	,,	3	,, விட்டிவீ	விட்டுவீ
,,	,,	4	,, இதங்கி	இரங்கி
,,	,,	,,	,, ஆய்குவேன்	உய்குவேன்
21	,,	6	,, நண்ணியென் னளவுசுக	நண்ணியெள்ளளவுசுக

		ரூ.	அ.
28	நீதிநெறி விளக்கம்—ஆங்கிலமும், ஹிந்தியும் ...	0	8
29	சகலகலாவல்லி மாலை—ஆங்கிலமும், ஹிந்தியும் கூடியது	0	1
30	சிவஞான சித்தியார்—ஆங்கிலமும், ஹிந்தியும் கூடியது (அச்சில்)		
31	ஷை ஹிந்தி மட்டும்	1	0
32	திருக்குறள்—அறத்துப்பால்—ஹிந்தி மொழி பெயர்ப்பு	1	8
33	ஷை பொருட்பால் ஷை	2	8
34	ஷை காமத்துப்பால் ஷை	1	0
	ஷை மூன்று புத்தகங்களும் சேர்ந்து ...	4	0
35	திருக்குறள்—கே. எம். வேங்கடராமையா M.A., B.O.L., அவர்கள் குறிப்புரையுடன் ...	0	12
36	முதுமொழிமேல்வைப்பு—ஸ்ரீ வெள்ளியம்பலவாணத் தம்பிரான் சுவாமிகள்	0	12
37	திருவுசாத்தானக் கல்வெட்டுக்கள்	0	6
38	திருச்செந்தூர்க் கந்தர் கலிவெண்பா—மதுரை மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்—மதுரைக் கலம்பகம்—நீதிநெறி விளக்கம்—மதுரை மீனாட்சியம்மை இரட்டைமணி மாலை—மதுரை மீனாட்சியம்மை குறம்	2	12
39	திருவாரூர் நான்மணி மாலை—முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ் ...	1	4
40	சிதம்பர மும்மணிக்கோவை—சிதம்பரச் செய்யுட்கோவை—தில்லைச் சிவகாமியம்மை இரட்டைமணி மாலை	1	0
41	பண்டார மும்மணிக்கோவை—காசிக் கலம்பகம் சகலகலாவல்லி மாலை	1	0
42	தமிழிசைப் பாக்கள்	0	8
43	குமரகுருபர சுவாமிகள் சரித்திரப் பட விளக்கம்...	0	8

கிடைக்குமிடங்கள் :

1. குமரகுருபர சுவாமிகள் கலைக்கோயில், ஸ்ரீவைகுண்டம்.
2. தியாகராச விலாஸ், 53, பிள்ளையார் கோவில் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-5
3. பன்னிரு திருமுறை மன்றம், தெற்கு ஆடி வீதி, மதுரை

குறிப்பு:—ஷை விற்பனைத் தொகை "குமரகுருபரன்" பத்திரிகையைச் சாரும்.

உ

"குமர குருபரன்"

[தமிழ்த் திங்கள் வெளியீடு]

ஸ்ரீவைகுண்டம்

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் மடாலயத்திலிருந்து

மாதந்தோறும் வெளிவருகிறது

★

இது

சைவசித்தாந்தம், ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பிரபந்தம்,

பன்னிரு திருமுறை ஆராய்ச்சி, இலக்கியம்,

பிற மொழிகள் கலாசாரம் சம்பந்தமான

கட்டுரைகள் கொண்டது

★

நிர்வாக ஆசிரியர் :

T. M. குமரகுருபரன் பிள்ளை, B.A., B.L.,

(நிரந்தரத் தலைவர், குமரகுருபரன் சங்கம்)

மானேஜிங் டிரஸ்டி, ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் மடம்

ஸ்ரீவைகுண்டம்

வருட சந்தா ரூ. 1—8—0 தனிப் பிரதி ரூ. 0—2—0

தியோடர் பிரஸ், திருச்சிராப்பள்ளி.